தன்வந்திரி'

# குழந்தை வாகடம்



க. லலிதாம்பிகா

# தன்வந்திரி
# குழந்தை வாகடம்

பதிப்பாசிரியர் :

க. லலிதாம்பிகா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.

## Bibliographical Data


| | | |
|---|---|---|
| Title of the book | : | Danvantiri Kuḻanthaivākadam |
| Editor | : | Pulavar G. LALITHAMBIGA, B.Lit. |
| Publisher | : | International Institute of Tamil Studies T.T.T.I. Tharamani, Madras-600 113. |
| Publication Number | : | 95 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | September 1984 |
| Edition | : | First |
| Paper used | : | 15·2 kg. D/Demy |
| Size of the book | : | 21 × 18 cms |
| Printing type used | : | 10 point |
| Number of pages | : | viii + 232 |
| Number of Copies | : | 2200 |
| Price | : | Rs. 14/- (Fourteen Rupees only) |
| Printers | : | Sri Gomathy Achagam, 7, Chinnappa Rowther Street, Triplicane, Madras-5. |
| Binding | : | Card board |
| Artist | : | Eswari |
| Subject | : | Tamil Medicine of children. |

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600113

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'சுவடியியல் பயிற்சி' தொடங்கிய பின்பு, அச்சில் இதுவரை வெளிவராத பல தமிழ் நூல்களைச் சுவடிகளினின்றும் வெளியிட்டுள்ளது. இதுவரை 16 நூல்களுக்கு மேல் வெளிவந்துள்ளன.

ஓலைச் சுவடிகளைப் படிப்பதற்கும், படிப்பிப்பதற்கும் இப்போது பல மாணாக்கர் முன் வந்துள்ளனர். 83'-'84 கல்வி யாண்டில் சுவடியியல் பயிற்சி பெற்ற செல்வி க. லலிதாம்பிகா என்பவரின் ஆய்வேடு இப்போது அச்சில் வெளிவருகிறது.

செல்வி லலிதாம்பிகா தன்னுடைய தேர்வுக்குத் 'தன்வந்திரி குழந்தை வாகடம்' என்ற சுவடியை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு நன்முறையில் ஆய்வு செய்து சிறப்பாகப் பதிப்பித்துத் தந்துள்ளார். அதோடு அது இதுவரை வெளிவராத சுவடி. முதல் முறையாக இப்போதுதான்வெளிவருகிறது. அந்நிலையில் செல்வி லலிதாம்பிகாவைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

உலகம் முழுவதிலும் இதுவரை அச்சில் வராத 'சித்த வைத்தியச் சுவடிகள்' ஏறத்தாழ மூவாயிரத்திற்கு மேல்உள்ளன. அவைகள் அனைத்தையும் வெளியிட்டால் தமிழரின் பழம்பெரும் செல்வமான 'சித்த வைத்தியம்' பற்றிய அறிவு ஓரளவுக்கு உலகிற்கு உணர்த்த முடியும்.

இதுவரை சித்த வைத்தியச் சுவடிகள் என்ற நிலையில் 'கண் மருத்துவம்', 'கருவூரார் பல திரட்டு' என்ற இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இரண்டு நூலும் தமிழக அரசின் பரிசைப் பெற்றவை. மூன்றாவது நூலாக 'தன்வந்திரி குழந்தை வாகடம்' என்ற நூல் வெளிவருகிறது. இந்நூல் குழந்தை மருத்துவத் துறையில் பல செய்திகளைத் தருகின்றது. உறுதியாகத் தமிழ் மக்களுக்குப் பல நிலைகளில் இந்நூல் பயன்படும்.

இந்நிறுவன ஆக்கப் பணிகள் அனைத்திற்கும் ஊக்கம் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களுக்கு மிக்க நன்றி உடையேம்.

குறிப்பிட்ட காலத்தில் சிறந்த முறையில் இந்நூலை அச்சிட்டுத்தந்த கோமதி அச்சகஉரிமையாளர் திரு. சரவணகுமார் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

அன்புள்ள,

14-8-1984 ச. வே. சுப்பிரமணியன்

1

# முகப்பு

நூலின் அமைப்பு
நன்றி
உள்ளுரை

# நூலின் அமைப்பு

1. நூலின் முகப்பு, நன்றியோடு தொடங்குகிறது.

2. ஆய்வுரையும் பதிப்புமுறையும் நூலாசிரியர் வரலாற்றோடு கொண்டுள்ளது நுழைவுப் பகுதி.

3. மூன்றாவது இயல் மூல நூல்.

4. நோய்வாரியாகப் பிரிக்கப்பட்ட பாடல்களின் தொகுப்புரை நான்காவதாக அமைகிறது.

5. மூலிகை, கடைச்சரக்கு என வகைப்படுத்தப்பட்ட மருந்துப் பொருள்களின் விளக்கமும் சான்றுப் பாடல்களும் ஐந்தாம் இயலாகின்றன.

6. மூலிகைகளைத் திரட்டி எடுக்கப்பட்ட புகைப்படங்கள், கையால் வரைந்த படங்கள் ஆகியவை விளக்கத்திற்குத் துணையாக நிற்கின்றன.

6. பாட்டு முதற்குறிப்பு, நூலுள் காணும் நோய்களின் பெயர், சொல்லகராதி, பயன்பட்ட நூல்கள் ஆகியவை இணைப்புகளாக அமைய நூல் நிறைவுறுகிறது.

# நன்றி

''பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது''.

சுவடிஇயல் பயிற்சி வகுப்பில் சேர இசைவளித்து, இச்சுவடிப் பதிப்பினை மேற்கொள்ள ஊக்கமளித்து உதவிசெய்து வரும் இந்நிறுவன இயக்குநர் என் வணக்கத்திற்குரிய, டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் உரித்தாக்குகிறேன்.

இதுவரை பதிப்பிக்கப்பெறாத இச்சுவடியினைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து உதவியவர்கள் எனக்குச் சுவடிப்பயிற்சியளித்த ஆசிரியர் உயர்திரு. மு. கோ. ராமன் அவர்கள்.

நூலின் வரலாறு, எழுத்துவரலாறு கண்டறிய வழிகாட்டி உதவியர்கள் பேராசிரியர் டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள்.

ஆய்வுரை, மூலிகைவிளக்கம் ஆகியவற்றிற்கான செய்திகள் திரட்டுவதிலும் படங்கள் வரைவதிலும் உறுதுணையாக இருந்தவர்கள் நிறுவன ஆய்வு உதவியாளர் திருமதி மா. சத்தியபாமா அவர்கள்.

மூலிகைகள் திரட்டுவதிலும் சொல்லகராதி தயாரிப்பதிலும் பெரிதும் உழைப்பினை நல்கியவர்கள் செல்வன் சு. இளவரசு, செல்வன் சு. இளம்வேள் ஆகியோர்.

மூலிகைகளைப் புகைப்படம் எடுத்தும், ஆய்வேட்டினைத் தட்டச்சு செய்தும், கட்டமைப்பிற்கு அளித்துப் பெற்றுத் தந்தும் உதவி செய்தவர் திரு. சு. இளங்கோ, பி. காம். அவர்கள்.

இப்பதிப்பாய்வேடு முழுமைபெற, படியெடுக்கப்பட்ட பாடல்களைத் திருத்தி அளித்தது முதல் இறுதியான அமைப்பு நிலைவரை வழிகாட்டி, அனைத்துப் பணிகளிலும் துணைநின்றவர்கள் என் அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய பேராசிரியப் பெருந்தகை உயர்திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள்.

அனைத்துப் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தும் கடமையுடையேன்.

சென்னை—600 113.
9—4—1984,

க. லலிதாம்பிகா

# உள்ளுரை


| | | |
|---|---|---|
| 1. முகப்பு : | | பக்கம் |
| | முன்னுரை | iii |
| | நூலின் அமைப்பு | v |
| | நன்றி | vi |
| | உள்ளுரை | vii |
| 2. நுழைவு | | |
| | ஆய்வுரை | 3 |
| | பதிப்புரை | 33 |
| | நூலாசிரியர் வரலாறு | 39 |
| | தன்வந்திரி—படம் | 43 |
| 3. நூல் : | | |
| | தன்வந்திரி குழந்தை வாகடம் | |
| | இரத்தினசுருக்கம் முந்நூறு | 44 |
| 4. தொகுப்பு : | | |
| | குழந்தை நோய்கள் குணமும் மருந்தும் (109—127) | |
| (1) கிரந்தி : | | |
| | செங்கிரந்தி | 109 |
| | கருங்கிரந்தி | 109 |
| (2) தோஷம் : | | |
| | எட்சி தோஷம் | 110 |
| | பட்சி ,, | 111 |
| | பெண் பட்சி ,, | 111 |
| | பறவை ,, | 112 |
| | வறப்புள் ,, | 112 |
| | நீர்ப்புள் ,, | 113 |
| | தூங்குபுள் ,, | 113 |
| | கூளிபட்சி ,, | 113 |
| | குழி ,, | 113 |
| | அரிவை ,, | 114 |
| (3) கரப்பான்: | | |
| | பதினெட்டு கரப்பானுக்கும் | 115 |
| | வாலைக் கரப்பான் | 115 |
| | வரிக் கர்ப்பான் | 116 |
| (4) மாந்தம் ; | | |
| | ஊது மாந்தம் | 117 |
| | சிங்கு மாந்தம் | 118 |
| | உள்மாந்தம் | 118 |
| | கிராணி மாந்தம் | 119 |
| | நீர் மாந்தம் | 119 |
| | தலை மாந்தம் | 119 |
| (5) கணம் : | | |

தேரைக்கணம் 121
மூலக்கணம் 121
சூலி கணம் 121
முக்குகணம் 122
மாந்தகணம் 122
ஆம கணம் 122

(6) சுரம் :
சன்னிசுரம் 123

(7) வாதம் :
மலவாதம் 123

(8) வாய்வு :
மச்சகேந்திர வாய்வு 124

(9) அச்சரம் :
நாமுள் 125

(10) குன்மம் : 125

(11) நவமூலம் : 125

(12) பொதுவான குழந்தை மருந்துகள் :
கஸ்தூரிக்குளிகை 125
சஞ்சீவி மாத்திரை 126
சஞ்சீவி லேகியம் 126
கலியாணி லேகியம் 126
குங்குமப்பூ லேகியம் 127
காந்தாதி கியாழம் 127

5. விளக்கம் :
மூலிகை விளக்கம் 130
மூலிகைப் பயன்—சான்றுகள் 161
கடைச்சரக்கு—விளக்கம் 177
கடைச்சரக்கின்பயன்—சான்றுகள் 187

6. துணை :
வரைப்படங்கள் 196
புகைப்படங்கள் 201

7. இணை :
இணைப்பு—1 அளவுகள்—சம அளவுகள் 205
இணைப்பு—2 பாட்டு முதற்குறிப்பு 206
இணைப்பு—3 நோய்களின் பெயர்கள் 211
இணைப்பு—4 மருந்துப் (பெயர்கள்) பொருள்கள் 215
இணைப்பு—5 சொல்லகராதி 221
இணைப்பு—6 தன்வந்திரி நூல்கள் 230
இணைப்பு—7 பயன்படுத்திய நூல்கள் 231

2

# நுழைவு

ஆய்வுரை

பதிப்புரை

தன்வந்திரி - படம்

நூலாசிரியர் வரலாறு

# தன்வந்திரி குழந்தை வாகடம்

## ஆய்வுரை

**1· முன்னுரை:**

மருத்துவ முறைகளில் தமிழ்மருத்துவ முறை இயற்கையானது. அனுபவம் வாய்ந்தது. மிகவும் எளிமையானது. சிக்கனமானது. கிராமப்புறங்களில் இன்றும் பயன்பட்டு வருவது. ஏன் நகர்ப்புறங்களிலும் அனுபவம் மிக்க தமிழர்தம் இல்லங்களில் பயன்படுத்தப்பட்டு வருவதும் தமிழ் மருத்துவமே. இம்மருத்துவ முறையில் இயற்கை அன்னை தந்துள்ள மூலிகைச் செல்வங்களே நோய்தீர்க்கும் நன்மருந்துகளாக அமைந்துள்ளன. பலஇயற்கைப் பொருள்களும் பிணி நீக்கும் பொருள்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இத்தகு அருமைகளை உணர்ந்த தமிழர் இயற்கைப்பொருள்களின் உதவியால் பல வகைப் பிணிகளையும் தீர்க்கும் மருத்துவ முறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். அவர்கள் தம் அனுபவங்களை ஏட்டிலும் எழுதி வைத்துள்ளனர். இருந்தாலும் தமிழ் மருத்துவம் வழக்கற்ற நிலையை அடைந்துள்ளது. இந் நிலைக்குக் காரணங்களாக ஒரு சிலவற்றைக் கூற முடிகிறது.

1. பண்டைத்தமிழர் அரிய மருந்துமுறைகளைப் பூடகமாக மறைத்து வைத்தே பயன்படுத்தினர். அவ்வாறு மறைத்து வைத்ததற்கு தமிழர் கண்ட உளவியல் நோக்கே காரணமாகும். மிகக்கடுமையான நோய் என்று கருதி மருத்துவரிடம் வருகிறார் ஒரு நோயாளி. மிக எளிமையாக வீட்டுத் தோட்டத்திலேயே கிடைக்கும் ஒரு மூலிகையைப் பறித்து வந்து அதனுடன் இரண்டொரு எளிய கடைப்பொருள்களைக் கலந்து கசக்கி அல்லது அரைத்துக் கொடுக்கிறார் மருத்துவர். நோயாளிக்கு அம்மருந்து பற்றிய செய்தி தெரிந்தால்

இதுதானா மருந்து? இந்தத் தழையால் என் நோய் நீங்கிவிடுமா? என்னும் வினாக்கள் அவர் உள்ளத்தைத் தொடுகின்றன. குணமாகாது என்ற எண்ணமே தலை தூக்கி நிற்க, குணம் கண்டாலும் உள்ளம் திருப்தி அடைவதில்லை. இந்நிலையைப் போக்கவே உண்மை மறைக்கப்பட்டு வந்தது.

2. மருத்துவ நூல்கள் பல இயற்றப்பட்டன. ஆனால் அனுபவம் பெறாதவர்களால் கையாளும் நிலை அமையவில்லை. அவை பெரும்பாலும் செய்யுள் நடையிலேயே அமைந்தன. அவற்றுள் கூறப்படும் முறை எளிதில் புரியாமல் இருந்தது. மேலும் எதுகை மோனை போன்ற பாட்டு அமைப்பிற்காக அமைந்த சில சொற்கள் எப்பொருளைக் குறிக்கின்றன என்பதை அறிவதில் மயக்கம் ஏற்பட்டு விட்டது.

3. மருந்துப் பொருள்களின் பெயர்கள், செய்முறைகள் போன்றவை மறைபொருளாக, குழூஉக் குறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

4. இவ்வாறான பல சிக்கல்களிடையே பிறநாட்டு மருத்துவ முறைகள் பல நம் நாட்டில் ஊடுருவலான நிலை தமிழ் மருத்துவத்திற்குப் பேரழிவைத் தேடித் தந்துவிட்டது என்பதும் பேருண்மையாகும்.

## 2. மருத்துவ முறைகள்:

பிறநாட்டு மருத்துவ முறைகளின் தாக்கத்தால் தமிழ் மருத்துவ முறை ஓரளவு மங்கியிருந்தது உண்மையே. ஆயினும், அதன் சிறப்பிற்கு என்றும் அழிவு ஏற்படாது. அதன் சிறப்புணர்ந்த தமிழர் அம்முறையையும் ஒருபுறம் கையாண்டு வந்தனர். இப்போது அந்தத் தமிழ் மருத்துவ முறைக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இக்காலத்துப் பயன்படுத்தப்பட்டு வரும் மருத்துவ முறைகளை ஐந்து பிரிவுகளாகக் காணமுடிகிறது. அவை,

1. சித்த மருத்துவம் (Siddha medicine)
2. ஆயுர் வேதம் (Ayurvedic)
3. யுனானி (Unan)
4. ஓமியோபதி (Homeopathy)
5. அலோபதி (Allopathy)

**1. சித்தமருத்துவம்:**

இது தமிழருக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த மருத்துவ முறையாகும். சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது. மூலிகை வர்க்கம், பாடாணவர்க்கம், உபரசவர்க்கம், உலோகவர்க்கம், வைப்புமுறை போன்ற பிரிவுகளாக வகுத்தளித்த பெருமை சித்தர்களைச் சார்ந்தது.

**2. யுனானி:**

இது முகமதியரின் வருகையால் நம் நாட்டில் பரவிய மருத்துவ முறையாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படுகிறது.[1] இம்முறையில் உயிரினங்களின் தசைச் சத்துகள், தாவர இனங்களின் வித்துகள் ஆகியவையே மிகுதியாக இடம் பெறுகின்றன.[2]

**3. ஓமியோபதி:**

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியதாகக் கருதப்படும் இம்மருத்துவமுறை ஒரு கலப்பு மருத்துவமுறை எனக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டிலும் பரவலாக இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**4. அலோபதி:**

சித்த-ஆயுர்வேத மருத்துவ முறைகளைப் புகைபடிந்த ஓவியத்தைப் போன்று புகழ் குன்றச் செய்த பெருமை அலோபதி மருத்துவ முறைக்கே உரியதாகி விட்டது. இம்முறையில் நோய் விரைவில் குணமாவது போலத் தோன்றினும் நோயின் வேர் அடியோடு அறுக்கப்படுவதில்லை.[3]

**5. ஆயுர்வேதம்:**

ஆயுர்வேதம் என்ற சொல்லிற்கு மருத்துவக்கலை என்றே தமிழ் அகராதிகள் குறிப்பிடுகின்றன. ஆயினும் மனிதனுடைய உடல் ஆரோக்கியத்தைக் கட்டிக்காத்து அவனுடைய ஆயுளை வளர்த்துக் கொள்ள வழிகாட்டிய மருத்துவ சாத்திரம் ஆயுள் வேதம் எனப்பட்டது. அதுவே மருவி ஆயுர்வேதமாயிற்று. யசுர் வேதத்தின் ஒரு பிரிவாக விளங்குவது ஆயுர்வேதம்[4] என்னும் கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன.

---

1. ஆயுர்வேத ஆசான். பக். 21. 2. வீட்டுக்கு உதவும் நாட்டு மருத்துவம். பக். 13. 3. ஷை. பக். 14. 4. ஷை. பக். 14.

## 3. ஆயுர்வேத வரலாறு

1. ஆயுளைப் பேணுகின்ற தன்மை எல்லா மருத்துவ முறைகளுக்கும் பொதுவானதே. அதே போல வேத உணர்வும் இந்தியர்களுக்குப் பொதுவானதாகும். எனவே, இதனை வேதங்களில் ஒன்றாகக் கருதினர்.

"தானான நால்வேதத் தொகுப்பாய் நின்ற
தக்கான ஆயுருவே தத்தோ டைந்தும்

என்பது, ஆயுர்வேதம் என்பது ஐந்தாம் வேதமாகக் கருதப் பட்டதை உணர்த்துகிறது. மேலும்,

2. ஆயுர்வேதம் ஒரு முழுமையான சாத்திரமாகும். அந்த சாத்திரமே மனிதனின்,

1. உள் உறுப்புகளை நன்கு ஆய்வுசெய்கிறது.
2. நுட்பமான மருந்துவகைகளை எடுத்துக்கூறுகிறது.
3. அதோடு அவற்றின் குணங்களையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.
4. நோய்க்கு ஏற்ப மருந்துகளை கொடுக்கும் முறைகளைத் தெளிவாகக் கூறுகிறது.
5. நோய்களின் தன்மைகள், அவற்றின் மூலகாரணங்களை நன்கு புலப்படுத்துகிறது.
6. அக்காரணங்களை வேரோடு அறுப்பதற்குரிய முறையையும் தெளிவுபடுத்துகிறது.[1]
7. நுணுக்கமான சாத்திரப் படைப்புகளை வேதங்கள் என்றனர். அவற்றின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கதாகக் கருதியே ஆயுர்வேதம் என்றனர்[2].

3. நான்கு வேதங்களைப் படைத்த பிரம்மன் அதன் சாரமாக ஆயுர்வேதத்தையும் படைத்தான். அவன் அவ்வேதத்தை சூரியனுக்கு உபதேசித்தான். அவன்வழி தன்வந்திரி, திவோதாசன், காசிராசன், அசுவனிதேவர், நகுலன், சகதேவன்... அகத்தியன் போன்றோர் உணர்ந்து முறையான நூல்களை தந்தனர்.[3]

---

1. இயற்கைதரும் இன்மருந்துகள். பக். A. 5.
2. வீட்டுக்கு உதவும் நாட்டு மருத்துவம். பக். 14.
3. அபிதான சிந்தாமணி. பக். 134

அர்த்தவேதம், ஆயுர்வேதம், காந்தருவவேதம், தனுர் வேதம் என்பன நான்கு உபாங்கங்களாகும். அவற்றுள் ஆயுர் வேதம் என்பது ஹேது, லிங்கம், சிகிச்சை என்னும் முப்பொருளையும் விவரிப்பது. சிவபெருமான் ஆன்மகோடி களின் மீது உள்ள கருணையால் அம்முப்பொருளையும் உமா தேவியாருக்கு உரைத்தார். உமை நந்திதேவருக்கும், நந்திதேவர், தேவர், முனிவர்களுக்கும் உபதேசித்தனர்.[1]

இக்கருத்துகள் அனைத்தையும்,

**"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத்**
**தொடர்புடைய தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்துங்**
**குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்எனில்**
**கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்."[2]**

எனத் தமிழ்மொழியின் பெருமையும் சிறப்பும் தோன்றக்கூறிய கூற்றினைப்போன்று இம்மருத்துவ முறையின் பெருமையும் சிறப்பும் கருதிக் கூறப்பட்ட கருத்துகளாகவே கொள்ளமுடி கிறது.

ஆயுர்வேத மருத்துவ முறையினைத் தோற்றுவித்தவர் தன்வந்திரி பகவான். அவரைத் தொடர்ந்து அசுவனிதேவர் முதலாக சாரபாணி ஈறாகப் பல முனிவர்கள் இதனைக் கூறி வந்தனர். அகத்தியர், தருமசௌமியர், தேரையர் ஆகிய மூவரும் வடமொழி—தென்மொழிகளில் இதனைக் கூறினர்[3] என்னும் கருத்துகளும் வழக்கில் உண்டு.

4. இன்று உள்ள தமிழ் மருத்துவமுறைகளை நோக்கச்சித்த மருத்துவமே மிகப்பழமை வாய்ந்தது என்பதும் அதனைப் பின் பற்றி மிக எளிய முறையில் உருவாக்கப்பட்டதே ஆயுர்வேதம் என்பதும் பரந்துபட்டகருத்துகளாக விளங்குகின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று இணைந்தஒற்றுமைமிகுந்த செயல்முறைகளைக் கொண்டுள்ளன என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். இருப்பினும் அவற்றின் அமைப்புமுறை வளர்ச்சியினை நோக்கும் போது சித்த மருத்துவத்தின் பின்தோன்றியதே ஆயுர்வேதம் என்ற உண்மையை அறியமுடிகிறது. அவற்றிற்கான சில கருத்துகள்:

---

1. ஆயுர்வேத ஆசான். பக். 8.
2. காஞ்சிப் புராணம். 248
3. ஆயுர்வேத ஆசான். பக். 8.

1. இருமுறைகளிலும் பச்சிலை மூலிகைகள், தாவரவர்க்கங்கள், பால், நெய், எண்ணெய் போன்றவையே அடிப்படைப் பொருள்களாகக் கையாளப்படுகின்றன.

2. வீரிய இயல்புடைய சில மூலிகைகள், உலோகங்கள், இரசவர்க்கங்கள், துணை ரசவர்க்கங்கள் போன்றவற்றைக்கொண்டு பஸ்பம், செந்தூரம், சுண்ணம், திராவகம் போன்ற வீரிய மருந்துகளும் செய்யப்படுகின்றன.

3. ஆனால், ஆயுர்வேதத்தின் மூலநூல்களாகக்கருதப்படும் சரகர், சுசுருதர் போன்றோரின் மருத்துவ நூல்களில் இரசவாதம் பற்றிய செய்திகள் கூறப்படவில்லை. நாடியால் நோயறியும் முறையும் அவற்றில் இல்லை.

4. பஸ்பம், செந்தூரம், சுண்ணம், திராவகம் போன்றவற்றைச் செய்யும் இரசவாதமுறைச் செய்திகள் பழைய சித்த மருத்துவ நூல்களிலேயே காணப்படுகின்றன. நாடி பார்த்து நோயறியும் முறையைக் கூறியது சித்த மருத்துவமேயாகும்.

இவற்றை ஆழ்ந்துநோக்க சித்தமருத்துவத்திற்குப் பிந்தியதேஆயுர்வேதமுறை என்பது புலனாகிறது. மேலும், பிற்கால ஆயுர்வேத நூல்களில் காணப்படும் இரசவாதமுறை, நாடியறியும் முறை ஆகியவை சித்தமருத்துவ முறையைப் பின்பற்றியவையாகும் என்பதையும் அறியமுடிகிறது. பொதுவாக எல்லாமுறைகளுமே சித்தமுறையைப் பின்பற்றியதே ஆயுர்வேத முறை என்பது தவறாகாது.

### 4. ஆயுர்வேத மருத்துவ பிரிவுகள்:

சித்த மருத்துவ முறையினின்று கிளைத்ததாயினும் ஆயுர்வேதமுறை சில தெளிவான முறைகளையுடையதாய் விளங்குகிறது. அத்தெளிவு முறையும் வகைப்பாடுகளும் இம்முறையில் தோன்றியதற்குக் காரணமே இதன் முந்தைய முறையில் ஏற்பட்ட அனுபவமே எனலாம். ஒரு நூலுக்கு பல உரைகள் தோன்றுகிறபோது பின்னால் தோன்றியஉரை பல வகையாலும் சிறப்புறவிளங்குவதை அறியலாம். அதுபோன்றதே இம்மருத்துவ முறையின் சிறப்பு அமைப்பு. இம்முறை எட்டுவிதமான மருத்துவப்பெரும் பிரிவுகளால் அமைகிறது. அம்முறைகளும் அவற்றின் விளக்கமும்:

**1. சல்லியம்—சஸ்திரீகம்:**

இப்பிரிவில் சஸ்திரசிகிச்சை, காயசிகிச்சை, இரண சிகிச்சை, ஆயுதப் பிரயோக முறை ஆகியவை அடங்கியுள்ளன.

**2. ஊர்த்துவாங்க சாலக்கியம்:**

கண்டத்துக்கு மேலுள்ள உறுப்புகளின் தன்மை, அவற்றில் ஏற்படும் நோய்களின் விளக்கம், அவற்றுக்கான மருந்துவகைகள் போன்றவற்றை விளக்குவது இப்பிரிவு.

**3. காயசிகிச்சை :**

சுரம், அதிகாரம், உன்மத்தம், குஷ்டம் முதலான, சரீரத்தில் உண்டாகும் பலவகை நோய்களையும் அவற்றுக்கான மருத்துவ முறைகளையும் விளக்கிச் செல்லுகிறது இப்பகுதி.

**4. பூதவயித்தியம் :**

பேய், பிசாசு, பிதுர் தேவதைகள், பிற தேவதைகள் போன்ற தீய கிரகங்களின் சேஷ்டைகளால் உண்டாகும் நோய்களை விளக்குகிறது இப்பகுதி. பெரும்பாலும் மனோவியாதி என்று குறிக்கப்படுவதே இப்பகுதியில் விளக்கப்படுகிறது. அவற்றிற்கான நிவர்த்திகளாக மணிமந்திர ஔஷதங்கள், தீர்த்த ஸ்நானம், தேவதாபூசை, தேவதாபிரார்த்தனைகள்போன்றவை கூறப்படுகின்றன.

**5. கௌமார பிரத்தியம் :**

குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்வகைகள், அவற்றின் குணங்கள், அவற்றிற்கான மருத்துவமுறைகள் போன்றவற்றைக் கூறுவது இப்பிரிவு.

**6. இரசாயன தந்திரம் :**

வாதமுறைகளைக் கூறுவது இப்பிரிவு. ஆயுளை விருத்தி செய்தல், உடம்பை வச்சிரம் போலாக்கும் கற்பமுறைகள், நோய்கள் அணுகாதபடி கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் போன்றவை அடங்கியது.

**7. ஆகதந்திரம் :**

ஆயுர்வேத மருத்துவ, ஞான விஷயங்களை வற்புறுத்துவது இப்பிரிவு.

**8. வசீகரண தந்திரம் :**

கருஉற்பத்தி, கருஉறுப்புகள், வீரிய விருத்தி போன்றவற்றின் விளக்கங்களும் மருந்துமறைகளும் கூறப்படுகின்ற பிரிவு இது.

இவ்வாறான பல பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ள ஆயுர்வேத மருத்துவம் தமிழ் மருத்துவத்துள் ஒன்றாக இணைந்துவிட்டது. இன்றைய வழக்காற்றில் தமிழ் மருத்துவம் என்றாலே சித்தம், ஆயுர்வேதம் ஆகிய இரண்டையுமே குறிக்கும் நிலையில் இரண்டும் ஒன்றிவிட்டன என்று கூறலாம்.

> ''வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
> ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
> பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்''[1]

என்னும் சிலப்பதிகாரக் கூற்று ஆயுர்வேத மருத்துவர் பட்டினப்பாக்கத்தில் நிறைந்திருந்தனர் என்பதை உணர்த்துகிறது. இதனால் இம்மருத்துவமுறையின் பழமை விளங்குவதோடு தமிழகத்தில் வழக்காற்றில் இருந்துவந்துள்ள செய்தியும் புலப்படுகிறது.

**5. தன்வந்திரி குழந்தை வாகடம் :**

'பண்டிதரில் தன்வந்திரி பகவான் ஆவான்'

என்று அகத்தியரால் குறிப்பிடப்பட்ட தன்வந்திரியின் மருத்துவ நூல்கள் தன்வந்திரி—இரத்தினச் சுருக்கம், கருக்கிடை, குறுநூல், சிந்தாமணி, சிமிட்டு, தைலம், வாகடம் என்னும் பெயர்களால் வழங்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்றாகிய **'தன்வந்திரி குழந்தை வாகடம்'** என்னும் நூலே இவ்ஆய்வேட்டின் அடிப்படையாக அமைகிறது. தன்வந்திரி என்னும் பொருள் பற்றிய விளக்கம் நூலாசிரியர் என்னும் தலைப்பில் அமைகிறது. எனவே இப்பகுதி குழந்தை வாகடம் என்னும் சொற்களைப்பற்றி மட்டுமே விளக்குவதாக அமைகிறது.

**1. குழந்தை :**

இது கைப்பிள்ளையைக் குறிக்கும் சொல். பிறந்த குழந்தையைச் சிசு என்றும் பச்சைப்பிள்ளை என்றும் கூறும் வழக்காறும் உள்ளது. இப்பெயர்கள் இருபால் பிள்ளைகளுக்கும்

---

1. சிலப்பதிகாரம். 5-43-45.

வழங்கப்பெறுவனவாகும். செங்கீரை முதலாகிய பருவங்களாக அமைத்து வழங்குவதும், பேதை......பருவங்களாக அமைப்பதும் இலக்கிய வழக்காறுகளாக விளங்குகின்றன. குழந்தை என்ற சொல் குழவி என்றே பெரும்பாலாக இலக்கியங்களில் வழங்கி வருவதைக் காணமுடிகிறது.

| | | |
|---|---|---|
| குழவித் திங்கள்[1] | : | குழவி ஞாயிறு[2] |
| குழவி வேனில்[3] | : | குழவித் தீநீர்[4] |
| குழவிக்கோட்டு இளம்பிறை[5] | : | குழவியஞ்செல்வன்[6] |

குழவிய முல்லை[7]; மடக்கண்குழவி;[8] மோட்டெருமை முழுக் கிழவி;[9] உழவன் யாத்தகுழவி;[10] பால்வார்புகுழவி;[11] துடியடிக் குழவி[12] என்பனவற்றுள் குழவி என்னும்சொல்முறையே திங்கள், ஞாயிறு, வேனில், தீ, நீர், பிறை, சூரியன், முல்லை, பசுங்கன்று, எருமைக்கன்று, யானைக்கன்று போன்றவற்றைக் குறிக்கும் சொல்லாக அமைகிறது. குழவி, மகவு, பிள்ளை, பறழ், பார்ப்பு என்னும் இளமைச் சொற்கள் இவ்வாறான அஃறிணைப்பொருள் களுக்கு வழங்கும் முறையே இலக்கண நூல்களும் குறிப்பிடு கின்றன. ஆயினும் மக்கட் குழந்தைகளுக்குக் குழவி, மகவு என்னும் சொற்களே உரியவாகும் என்பதைத் தொல்காப்பியம்,

> ''குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
> கிழவ வல்ல மக்கட் கண்ணே''[13]

என்றுவரையறை செய்கிறது.

| | |
|---|---|
| ''காவல்—குழவிகொள்பவரின் ஓம்புமதி'' | (புறம்-5) |
| ''குழவியிறப்பினும் ஊன்தடிபிறப்பினும்'' | (புறம் 74) |
| ''ஈன்றோள் நீத்த குழவிபோல'' | ( ,, 230) |
| ''தாயிறூஉங் குழவி போல | ( ,, 379) |
| ''நெஞ்சமர் குழவிபோல நொந்து'' | (அகம். 293) |
| ''வாய்விட்டு—அன்னாயென்னும் குழவிபோல'' | (குறுந். 397) |

1. கலி. 103; சிலம்பு 2-38. 2. பெருங்கதை 1-33.
3. கலி—36. 4. பெரும்பாண் 357
5. சீவகசிந்., 165. 6. சீவகசிந்., 1838.
7. சீவசிந். 1267. 8. குறுந். 64. 9. பட்டினப்.14
10. குறுந். 181. 11. குறுந்.344. 12. புறம்.369.
13. தொல்.மரபு-23.

''குழவியலைப்பினும் அன்னேயென்றோடும்''
(நான்மணிக்கடிகை—25)
''அருள்நினைந்தே அழுங்குழவி அதுவே போன்று''
(பெருமாள் திருமொழி—5:1)

குழவி என்னும் சொல் உயர்திணைக் குழந்தைகளைக் குறிப்பதாக அமையும் இலக்கியத் தொடர்களுள் இவை சில.

**2. வாகடம் :**

வாகடம் என்னும் சொல்லுக்கு வயித்திய நூல் என்றே பொருள் கூறுகின்றன அகராதிகள். வயித்தியர்கள் வாகடர் என்று குறிக்கப்படுகின்றனர்.

''வாகடர் தங்களை இப்பிணியகற்றுதி ரெனலோடும்'' என்பது பிரமோத்திரம்.[1]

பிள்ளைப்பிணி வாகடம், பாலவாகடம், குழந்தைகள் மருத்துவம், பாலர்வயித்தியம் என்னும் பலவகையான பெயர்களில் குழந்தை மருத்துவ நூல்கள் காணப்படுகின்றன.

குழந்தை வாகடம் என்பதே தன்வந்திரிமுனிவரால் நூலுக்கு இடப்பட்ட பெயராக விளங்குகிறது. பன்னீராயிரம் பாடல்களில் விரிந்து அமைந்த தமது நூலினையே மிகவும் அரிய செய்திகளடங்கியதாக முந்நூறு பாடல்களில் சுருக்கி அமைத்ததால் இதற்கு இரத்தினச் சுருக்கம் என்ற சிறப்புப் பெயரினையும் ஆசிரியர் தந்துள்ளார்.

''இதுவான நந்தீசர் கடாட்சத்தாலே—
வெகுநோயின் விபரமதை மனத்தால் கண்டேன்
இதுவான பன்னீரா யிரஞ்சு ருக்கில்—
வேதமுரை சிமிட்டுரதீனச் சுருக்க மிந்நூல்
இதுவான தன்வந்திரி என்றே நானும்—
விரிவகற்றிச் சுருக்கத்தால் என்பே ராச்சே''

என்பன நூலின் அகச்சான்றுகளாகும். (36)

''வழிசிசு நோய்மருந்து வகைவகை உரைப்போ மென்றே'' என்னும் ஆசிரியர் கூற்று இந்நூல் குழந்தை மருத்துவம் என்பதை (பா—4) அகச்சான்றாகக் கொண்டுள்ளது. மேலும் நூலாசிரியர் குழந்தை நோய்களின் பெயர்கள், அவற்றின் தன்மைகள் போன்றவற்றைத் தம் அனுபவத்தாலும், பல நூல்களைச்

1. தமிழ் லெக்ஸிகன் 6-1.

சோதித்து அறிந்தமையாலும் அறிந்து இந்நூலினை இயற்றி யிருக்கிறார் என்பதையும் தம் பாடலில் எடுத்துக் காட்டுகிருர். அப்பாடல்,

''பணிந்துநான் குழந்தை ரோகம் பலபல நாம மெல்லாம்
கணிந்துநா மநிலக் கண்டு கறைகண்டு துறையிலேறி
மொழிந்துமே நூல்கள் தோறும் முறைமுறை சோதித் தேறி
வழிசிசு நோய்ம ருந்து வகைவகை உரைப்போ மன்றே'' (4)

இது நூலின் தோற்றத்தைக்குறிக்கும் பாடலாகவும் அமைகிறது.

''எடுத்தவாறு நந்தீசர் மகிமை யாலே—
இருநூறும் முதுமாந்தம் ஒருநூறும் இயம்பினேன்பார்''
(150)

இவ்அகச் சான்றுகள் பலவற்றாலும் அறியக் கிடப்பனவற்றைச் சுருக்கிக் கூறுவோமாயின்,

1. நந்தீசர் என்பவரின் மாணாக்கரே தன்வந்திரி என்பது புலனாகிறது.
2. தன்வந்திரி பன்னீராயிரம் என்னும் மருத்துவநூல் ஆசிரியரால் செய்யப்பட்டுள்ளது.
3. குழந்தைவாகடம் என்னும்நூல் பன்னீராயிரத்தின் சுருக்கமாக அமைந்துள்ளது.
4. முந்நூறு பாடல்களால் ஆனதே இந்நூல்.
5. தன்வந்திரியார் தம் அனுபவத்தால் பலமுறை ஆய்ந்து நந்தீசர் போன்றோரின் பல நூல்களை முதல் நூல் களாகக் கொண்டு இந்த நூலை இயற்றியுள்ளார் என்பன புலனாகின்றன.

## 6. குழந்தை மருத்துவம் :

குழந்தைகளின் நோயின் தன்மையினை மருத்துவரே முழுமையாக அறிந்தாக வேண்டியிருப்பதால் குழந்தைகளுக்கு மருத்துவம் செய்வது என்பது மிக அரிய கலையாகும். அக் கலைக்கு மிகுதிறனும் அனுபவமும் வேண்டும். எனவேதான் மிகப் பழங்கால மருத்துவத்திலும் குழந்தை மருத்துவத்தினைத் தனியாகப் பிரித்து அமைத்துள்ளனர். குழந்தை மருத்துவ மனைகள் பல இக்காலத்தில் அமைக்கப்படுவதும் இவ் உண்மை யறிந்ததாலேயே ஆகும்.

பொதுவாக மருத்துவமுறையில் நான்குபடிகள் அமைகின் றன. நான்கு படி முறைகளையே நான்கு ஆண்டுக் கல்வியாக

அமைத்துக் கற்பித்துப் பட்டம் வழங்கிவிடுகிறது மருத்துவக் கல்வித்துறை.

1. என்ன நோய் என்பதை அறிதல் முதற்படி. பெரியவர்களாயின் இதனை அவர்கள் மூலமே கேட்டு அறிந்து, சோதனை, அனுபவம் ஆகியவற்றின் மூலம் உறுதிப் படுத்தலாம். குழந்தைகளைப் பொறுத்தவரை இம் முதற்படி மிகவும் அருமையானதும் அவசியமானதும் ஆகிறது.
2. அந்நோய் வந்ததன் காரணம் என்ன என்பதைக் கண்டறிதல் அடுத்தபடியாகும். இதுவும் ஓரளவு பெரியவர்கள் மருத்துவத்தில் எளிமையான ஒன்றாகும். குழந்தைகளைப் பொறுத்தவரை காரணம் கண்டறிவது அனுபவத்தாலேயே அமையக் கூடியதாகும்.
3. நோயின் காரணத்திற்கும் அதன் தன்மைக்கும் ஏற்ப அதனைப் போக்குதற்கான வழிமுறைகளை, மருத்துவ முறைகளை நிதானித்து முடிவெடுப்பது மூன்றாவது படியாகிறது.
4. எடுத்த முடிவிற்கு ஏற்ப நோயாளி, அவன் வயது, தற்போது உள்ள நிலை, மருந்து, அதன் சக்தி, அது செய்யும் செயல் போன்றவற்றை ஆய்ந்து அளிப்பது நான்காவது படியாகும்.

இப்படி முறைகளை,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று சுருங்கக் கூறினார் வள்ளுவர். (948)

நோய் தோன்றுவதற்குரிய காரணங்களாகப் பலவகை காணப்படுகின்றன. ஆயினும் மிக முக்கியமான காரணங்களைச் சுருக்கமாகக் கூறலாம். இக்காரணங்கள் பொதுவானவையாக இருப்பினும் குழந்தை நோய்களுக்கும் இவை பெரும்பான்மை யாகப் பொருந்தும். உணவு உண்ணும் வயதுவராத குழந்தைகளாயின் பாலூட்டும் தாயின் உணவே அடிப்படையாகும். அக்காரணங்களுள் சில :

1. பரம்பரையாக உள்ள உடற்கூறுபாடு.
2. உணவில் ஏற்படும் ஊட்டச்சத்தின் குறைபாடுகள்.

3. அதிக சத்துள்ள உணவு அளவிற்குமீறி உண்டு, போதிய உழைப்பு இன்றி இருத்தல்.
4. குறிப்பிட்ட நேரத்தில் உண்ணாமை.
5. தொற்று நோயாக வருவன சில.
6. ஈ, கொசு, கரப்பான், பேன், நீர்க்கிருமிகள் போன்ற வற்றால் ஏற்படும் நோய்கள் பல.
7. காற்றோட்டமின்மை.
8. மலச்சிக்கல்.
9. மிதமிஞ்சிய காரம், உப்பு, இனிப்பு போன்றவை.
10. திடீர் பருவநிலை மாற்றங்கள்.

இவற்றைத் தவிர ஆசிரியர் கூறும் சிலகாரணங்களையும் குழந்தை நோய்களுக்குக் காரணங்களாகக் கூறமுடிகிறது.

" உரைபெறத் தந்தை தாயின் ஊழ்வினை தொடர்ந்த கூறும்
மறப்பறத் தாயின் ரோகம் மைந்தனைச் சார்ந்த கூறும்
கறைபொத்தித் தீனி யாலும் மகள்தந்தோர்க் கருமத்
தாலும்
பரம்பெறும் தோஷத் தாலும் பட்சியும் கிரகக் கூறே" (5)

" நாறாக் கருமப் பாவிகட்கும் ஞானம் தெரியா மூடருக்கும்
ஏறா இல்லம் அளித்தோர்க்கும் எளியோர் நிந்தை
செய்தோர்க்கும்" (109)

" சண்ணும் சீதள வாய்வுபண்டம் சண்டாளக் கார்த்திகைச்
செவ்வாயில்
விண்ணு மந்நாளில்கொண்டு வின்ற மாத விடாய்ப்
பெண்ணைக்
கண்ணு நிலைமையில் மோகமதாய்க் கண்டு புணர்ந்த
பாவிகட்கும்"

போன்ற கூற்றுகளால், தந்தையின், தாயாரின் ஊழ்வினை, தாயின் ரோகம், பெருந்தீனி, தாயின் பெற்றோர்களும், தோஷ வகைகள், பிறந்த நட்சத்திரத்தால் வரும் கிரகக் கூறுகள், செய்த பாவம், மூடத்தன்மை, எளியோரைப் பழித்தல், நல்ல நாட்களில் ஆகாப் பொருள்களை உண்ணுதல், மாதவிடாய்ப் பெண்ணைக் கூடுதல் போல்வனவும் குழந்தைகளுக்கு நோய் தோன்றும் காரணங்கள் என்பதை அறியமுடிகிறது.

## 7. குழந்தைமருத்துவப் பகுப்பாய்வு :

நூலுள் சுமார் இருநூற்று முப்பது குழந்தை நோய்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆயினும் அவற்றிற்கான மருத்துவ முறைகளைப் பதினோரு வகையாகப் பிரித்துக் காண முடிகிறது. அப்பிரிவுகளாவன :

| | | |
|---|---|---|
| 1. கிரந்தி | 2. தோஷம் | 3. கரப்பான் |
| 4. மாந்தம் | 5. கணம் | 6. சுரம் |
| 7. வாதம் | 8. வாய்வு | 9. நாமுள் |
| 10. குன்மம் | 11. நவமூலம் | |

இவற்றுள் கிரந்தி இரண்டு வகையாகவும், தோஷம் இருபத்து ஐந்து வகையாகவும், கரப்பான் பதினெட்டு வகையாகவும் காணப்படுகின்றன. இவை ஒன்றுக்கொன்று மிகச் சிறு வேறுபாடுகளுடன் காணப்படுவதாலும், மருந்து முறைகளும் அவ்வாறே அமைவதாலும் இந்நூலுள் தன்வந்திரியார் மிகுந்த வேறுபாடும், மருந்து வேறுபாடும் உள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றின் குணமும் மருந்தும் கூறிப் பிறவற்றிற்கும் அவை பொருந்து மாற்றினை விளக்கிச் செல்லுகிறார்.

இவற்றைப் போலவே மாந்தம் இருபத்தொரு வகை, கணம் இருபத்து நான்கு வகை, சுரம் மூன்று வகை எனப் பாகுப்படுத்தப் படுகின்றன. ஆசிரியர் இவற்றின் குணம், மருந்துமுறை ஆகியவற்றையும் அவ்வாறே சுருக்கிக்கூறிச் செல்லுகிறார். இவ் அனைத்து நோய்களின் வகைகளும் மருந்து முறைகளும், இவ் ஆய்வேட்டின்,

**'குழந்தை நோய்கள் - குணமும் மருந்தும்'** என்னும் பகுதியில் எளிய முறையில் தரப்பட்டுள்ளன.

### நோய்களின் பெயர்க் காரணங்கள்:

நோய்களின் குணமும் மருந்தும் கூறும் நூல் அவற்றின் பெயர்க் காரணங்களைக் கூறவில்லை. ஆயினும் நோய்களின் பெயர்கள் நல்ல பல பொருத்தமான காரணங்களோடு அமைவதை உணரமுடிகிறது. அவற்றை தொகுத்துக் கூறுகிறது இப் பகுதி.

குழந்தை தாயின் கருவில் வளரும் சூழ்நிலையையும், திடீரெனப் பிறந்தவுடன் வளரத்தொடங்கும் சூழ்நிலையும் முற்றிலுமாக வேறுபடுகின்றன. இச்சூழ்நிலைகளால் ஏற்படும் நோய்களை 1. அகக் காரண நோய்கள் 2. புறக்காரண நோய்கள்

என இருவகைப் படுத்தலாம். இவற்றுள் கருவில் தோன்றும் நோய்களாக அமைவனவே அகக்காரண நோய்கள் எனப்படும். செங்கிரந்தி, கருங்கிரந்தி என்பன அவ்வாறு கருவிலேயே பாதிக் கப் படுவனவாகும். மாந்தம், தோஷம், கணம் போல்வன அகக் காரண நோய்கள் எனவும், வயிறுவீங்கல், மலக்கட்டு, நீர்கட்டு போல்வன புறக்காரண நோய்கள் எனவும் கூறுவர்.[1]

ஆனால் தோஷம் என்பது புறக்காரணமாகிய தொடுதல், காணல் போன்றவற்றால் ஏற்படுகிறது. மலக்கட்டு, நீர்க்கட்டு போல்வன அகக்காரணத்தாலும் அமையலாம். எனவே நோய் களின் தோற்றக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இப்பாகுபாடுகளை அறிய முடியும்.

சான்று: 'இவ்விருவகைக் கிரந்தி நோய்களும் வளி, அழல், ஐயம் இவற்றில் மிகுதல் காரணமாகவே வருகின்றன'[2] என்ப தனால் கிரந்தி என்னும் நோய் புறக்காரணமாக வருவதாகவும் அறிய முடிகிறது.

1. **கிரந்நி:** செம்மை + கிரந்தி; கிரந்தி என்பது மேகநோயைக் குறிக்கும். சிவந்த நிறத்தோடு இந்நோய் உடல் முழுவதும் பரவு வதாலும் கொப்புளங்கள் தோன்றுவதாலும் இது செங்கிரந்தி எனப்படுகிறது. இதேபோல கருமை நிறத்தில் தோன்றும் நோய் கருங்கிரந்தி எனப்படுகிறது. இது மிகச்சிறுபான்மையாகவே தோன்றும்.

2. **தோஷம்:** தோடம் என்பது தொடுதல் என்று பொருள் படும். கை, கால், உடல் முதலிய உடலுறுப்புகளால் தொடுதல், கண்ணாலாகியபார்வையில்தொடுதல்,நிழல்போன்ற ஊறுகளால் தொடுதல் என்ற வகையில் தொடுதல் நிகழும். மாதவிடாய் ஆகிக் குளித்தபெண், தேரை, போன்றவற்றால் குழந்தைத் தொடப்படுமாயின் தோஷம் தாங்கும். பிள்ளைவிரும்பி குளிசம் கட்டுதல் போன்றவை செய்து கொண்ட பெண், கருச்சிதைவு ஆன பெண், மாதவிடாய் கண்ட பெண் போன்றவர்கள் குளித்து வந்தவுடன் குழந்தையைப் பார்த்தால் தோஷம் தாங்கும். நோய் கொண்ட பறவைகளின் காற்று அல்லது நிழல் காலை மாலை வேளைகளில் படுமாயின் தோஷம் ஏற்படும். தீய எண்ணமுடையோர் கண்டாலே அச்செயல் விளங்காது என்றும் கண் திருஷ்டி என்றும் கூறுவது இந்தத் தோஷ முறையைச் சார்ந்ததேயாகும்.

---

1. பாலவாகடம் பக். 1. 2. மேற்படி பக். 3.

**3. கரப்பான்:** கரப்பான் என்பது ஒருவகைப் புண். முதலில் தோல் கறுத்து அந்நோய் மிகுவதால் கரப்பான் எனப்படுகிறது. புண், தடிப்பு, வெடிப்பு, நீர்க்கசிவு போன்றவற்றோடு தோல் கருமை அடையும் ஒரு வகை நோய் கரப்பான் எனப்படுகிறது. கடி என்றும் வழங்கப்படுகிறது.

**4. மாந்தம்:** மந்தமான இயல்புடைய தன்மையே மாந்தம் எனப் படுகிறது. உடல்நிலையில் ஏற்படும் மந்தம், அகநிலையாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நிலைகளில் ஏற்படும் மந்தம் என வகைப்படுத்தலாம். இந்த நிலை உயர்நிலையாகும். பிறந்தது முதல் மூன்றாண்டு வரையில் உண்டாகும் நோயாகும்.

**5. கணம்:** சூட்டின் மிகுதியால் உடம்பில் ஏற்படும் கணகணப்பி னால் வரும் நோய் ஆதலின் கணம் எனப்பட்டது. மாந்தநிலை முற்றினால் கணமாக மாறும். மாந்த நோயைக் கவனியாமல் விட்டாலும், முற்றிலும் குணமாகாமல் இருக்கும் நிலையில் மருந்தைநிறுத்திவிட்டாலும் உள்ளுக்குள்ளேயே இருந்து முற்றிய நிலையில் இந்நோய் ஏற்படும். மேலும் பலவிததொல்லைகளைத் தருவதால் இந்நோய் கணம் எனப்பட்டது என்பதும் பொருந்தும்.

**6. சுரம்:** உடம்பில் மேலேயே சுர் என அனல் வீசும் தனமையே இதன் முதல் குணம் ஆதலின் சுரம் என்று பெயர் பெற்றது. இது உடலை வெதுப்பி வருத்தும் நோயாகும்.

**7. அச்சரம்:** நாவின் வேக்காட்டைக் குறிக்கும் நோய் அக்கரம் எனவும் வழங்கும். நாவில் முள்போன்று சொர சொரப்பு ஏற்படு வதால் நாமுள் என்றும் வழங்கும். நூலுள் நாய்முள் என்றே குறிக்கப்படுகிறது. உள்அச்சரமும் உண்டு. இது குடலில் ஏற்படும் புண்ணைக் குறிக்கும்.

**8. குழந்தை மருத்துவம் செய்முறை:**

1. மருத்துவம் செய்யும்போது நான்கு அடிப்படைத் தன்மைகள் உள்ளத்தில் கொள்ளப்படவேண்டும்.

1. நோயாளியின் இயல்பு, வயது, வலி, தாங்கும் தன்மை ஆகியவை.

2. நோயின் அளவு, அதன் தொடக்கநிலை, இடைநிலை, உச்சநிலை, நோயின் வன்மைமென்மைகள் ஆகிய தன்மைகள்.

3. நோய் ஏற்பட்டுள்ள காலம், மருத்துவம் செய்யும் காலம், பிறசூழ்நிலைகள் ஆகியவை.

4. ஏற்றமருந்து, அதன்தன்மை, சக்தி, அளவு—நோயாளி போடுமருந்தின் ஒப்புமை ஆகியவை. இவையே அவ்அடிப்படைத் தன்மைகளாகும். இதனையே வள்ளுவர்,

''உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்'' (949) என்பர்.

2. மருந்தும், மருத்துவரும் இருந்துவிட்டால் மட்டும் நோயாளி குணமாகிவிட முடியாது. நோய் முற்றிலுமாகத் தீர்வதற்கு நான்குவகைப் பண்புகள் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். அவை,

1. உற்றவன் பண்பு 2. தீர்ப்பான் பண்பு 3. மருந்தின் வகை 4. இயற்றுவான் திறம் ஆகிய நான்கு பண்புகளாகும். இதனையே,

''உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து'' (950) என்றார் வள்ளுவர்.

இந்த நான்கு வகைப் பண்புகள் ஒன்றுபட்டு நிற்கும் நிலையிலும் ஒவ்வொன்றின் மிக நுண்ணிய தன்மைகளும் திறன்களும் ஒன்றுகூடிய வழியே மருந்தும் முழுப்பயனை அளிக்கும் என்ற உரையாசிரியரின் கூற்று குழந்தை மருத்துவத்தில் மிகமிகப் பொருத்தமும் அவசியமும் ஆகிறது என்பதை உணர முடிகிறது. அந்த நுண்ணிய கூறுபாடுகளாவன:
(பரிமேலழகர் கூற்று)

| | |
|---|---|
| 1. உற்றவன் பண்பு வகை | 1. பொருளுடைமை<br>2. மருத்துவன் வழி நிற்றல்<br>3. நோய்நிலை உணர்த்தல் வன்மை<br>4. மருத்துவத் துன்பம் பொறுத்தல். |
| 2. தீர்ப்பரன் பண்பு வகை | 1. நோய்கண்டு அஞ்சாமை<br>2. கல்வியும்நுண்ணறிவும் உடைமை<br>3. பலகாலும் தீர்த்துவருதல் (அனுபவம்)<br>4. மனம், மொழி, மெய்கள் தூயவாதல். |
| 3. மருந்தின் பண்பு வகை | 1. பலபிணிகளுக்கும் ஏற்றல்<br>2. சுவை, வீரியம், விளைவாற்றல்களால் மேம்படுதல்<br>3. எளிதில் எய்தப்படுதல்<br>4. பகுதியோடு பொருந்துதல். |

| | |
|---|---|
| 4. இயற்றுவான் பண்பு வகை | 1. நோயாளியிடம் அன்புடைமை |
| | 2. மனம், மொழி, மெய்கள் தூய்வாதல் |
| | 3. சொல்லியன அவ்வாறேசெய்தல் வன்மை |
| | 4. அறிவுடைமை. |

இந்நான்கின் நுண்ணிய பண்புகள் பலவும் குழந்தை மருத்துவத்துள் பொருந்திக் காணப்படுவதால் இம்மருத்துவத்தின் சிறப்பும் பயனும் அறியமுடிகின்றன. நூலில் காணும் நுண்ணிய பண்புகளை இப்பகுதியில் காணலாம்.

**1. எளிய முறையும் இறையுணர்வும்:**

குழந்தை மருத்துவமானதால் பச்சிளங்குழந்தைகளுக்குரிய நோய்களில் பலவற்றிற்கு 1. மந்திரம் ஓதுதல் 2. தண்ணீர் ஓதித் தெளித்தல் 3. குளிசம் கட்டுதல் 4. சாந்தி செய்தல் 5. மேல் மருந்து பூசுதல் 6. தேய்த்தல் 7. பற்றுப் போடுதல் போன்ற முறைகளே பெரும்பான்மையாகச் சொல்லிச் செல்லுகிறது. இம்முறை நோயாளியின் வயது முதலிய தன்மைகளின் அடிப்படையில் அமைந்த மருத்துவ முறையாகிறது.

**சான்றுகள் :**

''கூறான முத்தின்மந் திரத்தி னாலே
குளிர்ந்ததண்ணீர் மொண்டுநீ வேப்பிலையால் ஓதி
ஓறான தாய்ப்பிள்ளை இருவ ருக்கும்
ஓதியே இருவேளை சாந்தி செய்யில்'' (81)

''வாடுகிற எருக்கிலையில் சாதம் வைத்து
வளமாக மூவிளக்கு மாவா லேற்றி
நயமாக சாந்திசெய்து குளசங் கட்டு'' (86)

''பேறான எருக்கன்நார் குளிச மாடி
புருஷனென்ற நயவசிம நூற்றெட் டோதி
பூமுலையாள் பாலனுக்குக் கட்டுகட்டு'' (83)

''காணவே செம்போடே தகடு வாங்கிக்
கண்மணியே எண்கோணம் அதின்மேல்வட்டம்...
மைந்தனே சுற்றிநன்றாய்க் குளிச மாடே'' (85)

''தீரவும் நானொரு பற்று சொல்வேன்'' (106)

''வழித்துத் தேய்த்துத் துவாலையிடே'' (114)

இந்த மருத்துவமுறைகளையும் காலம் அறிந்து செய்தல் வேண்டும் என்று கூறுகிறது நூல். அக்காலங்கள் தெய்வவழி பாட்டிற்குரிய நாட்கள் மருந்துண்ணத்தீரும் தன்மையுடைய நாட்கள், சாந்தி செய்தற்குரிய நாட்கள் எனச் சான்றோர் கூறும் நாட்களாக அமைவனவும் இம்முறையில் நோக்கத் தக்கன வாகின்றன. உரிய நாட்களாகக் கூறப்படுவனவற்றிற்குச் சான்று கள்:

''தானே சுக்கிர வாரந்தனில்
மானே காப்பு ஈந்திட்டு'' (89)

''கருத்த செவ்வாய் நாளதுதான்...குளிசமிட்டு'' (92)
''வியாழந் தன்னில் காப்பு கட்டி'' (94)

இம்மருத்துவ முறைகள் அனைத்திற்கும் குருவருளும் இறை யருளுமே துணைகளாகும் என்ற ஆசிரியரின் உள்ளம் சிறந்த மருத்துவருக்கு இருக்கவேண்டிய ஒன்று என்பதற்குச் சான்றா கிறது.

''கரிமுகனை வணங்கியதைக் சுத்திபண்ணி'' (124)
''உத்தமியாள் அம்பிகையின் அத்தம் பாரே'' (51)
''குருவருளால் பிள்ளைதனைக் கீந்தி டாயே'' (131)

இதே நிலையில் எந்த மருந்தைச் செய்தாலும், குழந்தைக்குக் கொடுத்தாலும் தேவி மனோன்மணியை, கணேசனை, வயிர வரைப் பூசித்துச் செய்யவேண்டும், கொடுக்கவேண்டும் என்னும் கூற்றுகளும் ஆசிரியரின் இவ்வருள் உள்ளத்தைப் புலப்படுத்து கின்றன. தன் முயற்சி மட்டும் போதாது இறையருளும் துணை செய்யவேண்டும் என்ற மருத்துவர்களின் கொள்கைக்கு இவை எடுத்துக்காட்டுகளாகின்றன.

''இறக்கியே கணேசன்முதல் வயிரவற்கு
ஏகாந்த வாலைமனோன்மணித் தாயாருக்குத்
துறக்கியேபூசித்துத் தியானம் செய்து'' (168)
''என்மகனே தேவிக்கும் வயிரவற்கும்......
ஏகாந்த சேர்வையதாய்ப் பணிந்து போற்றி'' (173)

என்பன அவ் எடுத்துக்காட்டுகளுள் சில.

## 2. நோயின் தன்மை முதலியன அறிதல் :

தன் நோயின் தன்மை, வலி முதலியவற்றைச் சொல்லும் ஆற்றல் அற்ற குழந்தையின் நோயைக் கண்டறிதற்கான முறை களை, நோயின் குணம் என்ற தலைப்பில் தனிப்பாடலில் சுட்டிக்

காட்டியபின்பே அதற்கான மருந்தும் செய்முறையும் கூறுவது இந்நூலின் அடிப்படை முறையாக அமைந்துள்ளது. இந்நிலை நூலின் எல்லாப் பகுதியிலும் அமைகிறது.

''தலையது நோவாய் முகம்மின்னித்
தண்ணீர் போல மெய்குளிர்ந்து
குலையதும் முகம் உடம்பெல்லாம்
முத்துப் போல நீர்பாயும்'' (223)

''தலையுங் கனத்துக் குடலூ திர்ச்
சரீரந் தனிலே அரிப்புண்டாம்'' (226)

''களித்த பாலன் மேல்வற்றிக் கண்ணின் விழிகள்
நீர்கலங்கி...
வாயால் குடிக்க மிகத்தவிக்கும் மைந்தன்
சோர்ந்து மயங்கிவிழும்'' (93)

இவ்வாறு நோயின் அறிகுறிகளை எடுத்துக்காட்டுவதோடு,

''நய்யடியாம் சிசுவடியின் பருவந் தன்னை
நாட்டமுடன் கண்டறிந்து கருத்தில் பூண்டு''(240)

மருத்துவம் செய்யவேண்டும் என்பதை அடிக்கடி நினைபடுத்தும் ஆசிரியரின் கூற்றும் நினைக்கத் தக்கதாகிறது.

**3. நோய் முதல் நாடுதல் :**

''எந்த நோவும் வரும்விதமும் இனித்த வெல்லமுத்
தினதேங்காய்
சொந்த மவனெடை வழுவிலையும் சொறுகும் வாளை
விறால் கெண்டை
சந்திமேதைப் பாலிறைச்சி சரகு தண்ணீர்ப் புளிமோர்தான்
வந்த பகல்சேர்க் கைகதலி வருகு மாந்த மிதுதன்னால்''
(225)

இப்பாடல் குழந்தைக்கு நோய்வரும் காரணத்தைச் காட்டுகிறது. இது தாயின் உணவாயின் அத்தாயின் பால்குடிக்கும் குழந்தையை மந்தத்தன்மை பாதிக்கும் என்பதை விளக்குகிறது. இது நோய் முதல் நாடும் தன்மையாக அமைவதால் அது தணிக்கும் வாய் நாடுதல் எளிதாகி விடுகிறது. இப்பொருள் களை உண்ணாதவாறு தாய்க்கு எச்சரிப்பது முதல் மருத்துவ மாகிறது. இதுபோன்ற காரணங்கள் நோய் தோன்றும் காரணங்கள் என்ற தலைப்பிலும் கூறப்பட்டன. மேலும் விரிவஞ்சி நிறுத்தப்படுகிறது.

## 4. ஏற்றபொருள்களால் மருந்து :

நோய்க்கு ஏற்ற மருந்தாகத் தேர்ந்தெடுப்பது என்பது மட்டும் குழந்தை மருத்துவத்தில் முக்கியம் அன்று. குழந்தையின் தாங்குசக்திக்கு ஏற்றபொருள்களால்மருந்துகள்அமையவேண்டும் என்பதே மிகவும் முக்கியமாகும். இந்த கருத்து நூல்முழுமையும் கையாளப்படுகிறது என்பதைப் பல சான்றுகளால் நிறுவலாம்.

1. எளிதில் செரிக்கக்கூடியவையுமாகிய மருந்துப் பொருள் களாகப் பயன்படக்கூடியவையுமாகிய ஓமம், சீரகம், சுக்கு, தேன், மிளகு, இஞ்சி, ஈருள்ளி, மல்லி, பூண்டு, மஞ்சள்போன்ற உணவுப்பொருள்கள்;

2. குழந்தை வளர்த்தியாகப் பயன்படும், ஏலம், கசகசா, கடுக்காய், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, கோஷ்டம், சாதிக்காய், சாதிபத்திரி, சாதிலிங்கம், திரிகடுகு, திப்பிலி, மாசிக் காய், வசம்பு போன்ற கடைச்சரக்குகள்;

3. மிகஎளியமுறையில் புகட்டக்கூடியவையும் மிகுந்த நன்மை பயப்பனவுமாகிய பன்னீர், தாய்ப்பால், தேன் முதலிய வற்றில் இழைத்துக் கொடுக்குமாறு செய்யப்படும குளிகை போன்ற செயற்கை வடிவ மருந்துகள்;

4. எளிமையாகக் கிடைக்கக் கூடியனவாகிய, அதிமதுரம், அரத்தை நன்னாரி போன்ற மருந்துப் பொருள்கள்;

5. மேல்பூச்சுகளுக்குப் பயன்படும், மிக வன்மைவாய்ந்த மருந்துப் பொருள்களாகிய கற்பூரம், சந்தனம், சாம்பிராணி, பச்சைக் கற்பூரம் போன்ற மணப்பொருள்கள்;

6. அத்தி, அம்மான் பச்சரிசி, அறுகன், ஆரை, ஆவாரை, கத்தாழை, கரிசலாங்கண்ணி, கீழ்க்காய் நெல்லி, கருந்துளசி, கருவேப்பிலை, கோவை, சுண்டை, தும்பை, தூதுவேளை, நாயுருவி, நெல்லி, புளியாரை, பொன்னாங்காணி, மணத்தக் காணி, மாதுளை, முசுமுசுக்கை, வெட்டிவேர் ஆகியவை போன்ற எளிய மூலிகை வகைகள், உணவுப் பொருள் வகைகள் ஆகியவையே குழந்தை மருத்துவப் பொருள்களாகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்களை நோக்க இவை அனைத்தும் குழந்தைகளின் தாங்கு சக்தியை அடிப்படையாகக் கொண்டே இவை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது வெளிப் படையாகிறது.

தொகுப்புரையாக அமைத்துள்ள பகுதி முழுமையும் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**இறைமூலிகைகள் சில:**

'ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி' என்னும் பழமொழிக்கு உரியது அறுகம்புல். தேவர்கள் அருகம்புல்லால் அருச்சித்து விநாயகனிடம் வரம்பெற்றதாக விநாயகபுராணம் கூறும்.

தேவலோகக் கன்னி என்றுகூறப்படும் தும்பைமலர் விநாயக, சிவ அருச்சனைகளுக்குச் சிறந்ததாகக் கொள்ளப்படுகிறது.

சிவபெருமானின் விருப்பமூலிகைகளாக கருதப்படுவன வில்வமும் தூதுவேளையும் என்பர். செம்பருத்தி மலரும் அத் தகையதே.

'வெள்ளெருக்கஞ்சடை முடியான்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறான் இறைவன்.

இறைவனுக்கு உகந்தனவாகக் கொள்ளப்படும் மூலிகைகளும் மலர்களும் குழந்தை மருத்துவத்தில் மருந்துப் பொருள் களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## 5. அளவும் காலமும்

1. மருந்து செய்முறையில் மருந்துப்பொருள்கள் சேர்ப்பதில் முறையான அளவு முறைகள் கையாளப்படுகின்றது.

2. அவற்றை உருண்டைகளாக, குளிகைகளாக வடிவாக்கு வதில் நுட்பமான அளவுமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. மருந்து கொடுப்பதிலும் சிறந்த முறையில் இவ்அளவு கள் நோயுக்கும் குழந்தையின் வயதுக்கும் ஏற்ப அமைவதை அறியமுடிகிறது.

4. காலஅளவும் இதே முறையில் அமைகின்றன. அதாவது அரைப்பதற்குக் குறிப்பிட்ட காலஅளவு கூறப்படுகிறது.

5. மருந்தைக் காய்ச்சுவதற்குக் காலமும் பக்குவமும் கூறப் படுகிறது.

6. மருந்தை உலர்த்துதல், மருந்து கொடுத்தல் ஆகிய வற்றிற்கும் எவ்வளவு நாள் உண்ணவேண்டும் என்பதற்கான காலஅளவுகள் வரையறுக்கப்படுகின்றன.

இவற்றிற்கு முறையே சில சான்றுகளை நூலிலிருந்து காட்டலாம்.

1. ''உப்பனே சாறதிலே நாழி வாங்கி''
''வகைக்கு அதில் கால்படிச்சார் வாங்குவாங்கே'' (32)
''வாங்கியே எண்ணெய்படி ஒன்றுவிட்டு...
வாங்கியே வகைக்குபலம் நிறுத்துக்கொண்டு'' (33)

''மைந்தனே கால்கழஞ்சாய் நிறுத்துக்கொள்ளே'' (136)

2. ''ஈந்திடாயப் பயிறளவு உருண்டைசெய்து'' (140)

3. ''பணிந்துமே பாக்களவு உள்ளுக் கேற்று'' (55)
''சீரோடு கரண்டிநிறை மண்டலங்கா லாக'' (130)

4. ''மைபோலே சாமம்இரண்டு விடாதே ஆட்டு'' (191)

5. ''மாலையுங் காலையும் மறுமூன்று ஆட்டியே'' (243)

6. ''இறக்கியே இருவேளை அந்தி சந்தி (173)
எடுத்துநீ சுண்டைக்காய் அளவு கொள்ளு''

''காய்ச்சியதை எட்டொன்றாய்
நவநாள்தான் சென்றபின்பு மிளகுபோ லாக்கே'' (146)

இக்கால அளவுமுறைகளைத் தவிர மருந்துகளை மூன்று வேளை அல்லது இரண்டுவேளை, ஒருவேளை கொடுப்பதும் அவற்றை எத்தனைநாள் கொடுக்கவேண்டும் என்பதும் போன்ற அளவு முறைகளுக்கு மேலும் சில சான்றுகளைக் காட்டலாம். அவை:

''வித்தைப்பார் உதயத்தில் எண்ணெய்வாரு'' (35)
''தடித்துமே ஏழுநாள் கொள்ளும்போதில்'' (71)
''சீரகற்றிப் பதின்மூன்று பிராயம் மட்டும்'' (38)
''அழித்துமே ஒருகுளிகை கொடுத்துப்போட்டால்'' (40)
''பாரேதான் கரண்டிநிறை மண்டலமேகொண்டால்'' (48)

## 6. துணைமருந்துகள் :

குழந்தை மருந்தாக எந்த மூலிகையும் அல்லது கடைச்சரக்கு போன்ற பிற எந்தப் பொருளுமே ஒரு மருந்துக்கு உரிய ஒரே பொருளாகக் காணப்படவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களை சேர்த்தே மருந்து செய்யப்படுகிறது. இம்முறையில் மருந்தின் பெயர் ஒரு பொருளின் பெயர் அடிப்படையில் அமையும். ஆனால் அம்மருந்தில் பிற மருந்துப் பொருள்களும் கலந்திருக்கும். இவற்றை முறையே 1. மருந்தின் முக்கியப் பொருள், 2. துணைப்பொருள்கள் எனப் பாகுபடுத்தலாம். சான்றாக,

சஞ்சீவித் தண்டின் சூரணம் இரண்டரைபலம், சாதிக்காய், குங்குமப்பூ, சுக்கு, ஏலம் முதலிய பத்துப் பொருள்கள் வகைக்குக் கால்பலம் சேர்த்துச் செய்யப்படும் லேகியம் 'சஞ்சீவிலேகியம்' என்று பெயர் பெறுகிறது. (பா. 124—126)

கலியாணப்பூசணி, கரும்பு, நெல்லி முதலிய இருபதுக்கு மேற்பட்ட பொருள்களின் சாறு வகைக்கு கால்படியாகச் சேர்த்துச் செய்யப்படுவது கலியாணிலேகியம் என்று பெயர் பெறுகிறது. சஞ்சீவிலேகியம் பொருளின் மிகுதியால் பெற்றது. ஆனால் எல்லாப்பொருள்களும் சமமான அளவு. இது கலியாணி லேகியம் என்று அதில் உள்ள ஒரு மருந்தின் பெயரையே லேகியம் பெறுகிறது. (163) இவற்றினும் மாறான முறையில் மிகக் குறைந்த அளவுள்ள மருந்துப் பொருளால் அம்மருந்து பெயர் பெறுவதையும் கஸ்தூரிக் குளிகை சுட்டுகிறது.

''எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இனிதான குங்குமப்பூ கழஞ்சு இரண்டு
எய்தாமல் கோரோ சனைதான் மூன்று
குருவருளாங் கஸ்தூரி மாத்திரை தானே''
(142—143)

என்பன கஸ்தூரி மாத்திரைக்குள்ள பொருள்களும் அவற்றின் அளவும் சுட்டுகின்றன.

மருந்து செய்வதில் துணைப்பொருள்கள் அமைவது போலவே குழந்தைக்கு மருந்தை புகட்டுவதிலும் துணைமருந்துகள் அமைகின்றன. அத்துணைப் பொருள்களைத் துணைமருந்துகள் என்றே குறிப்பிடலாம். காரணம் ஒரே வகை மாத்திரையை நோயுக்கு ஏற்ப வெவ்வேறு பொருள்களில் சேர்த்துக் கொடுக்குமாறு நூல் கூறிச் செல்லுகிறது. எனவே அத்துணைப்பொருள்கள் ஒவ்வொன்றும் ஒரு நோயைப் போக்கப் பயன்படுவதால் அவை துணைமருந்துகள் ஆகின்றன எனலாம்.

''பதனமாய் முலைப்பாலில் உருண்டை ஈயப்
பறந்திடுமே பழஞ்சுரமும் விடாத காய்ச்சல்''
(138)

''ஆய்ந்திடாய் பயிறளவு உருண்டை செய்து
அரிசிமாசி பத்திரி கியாழத் தூட்டே'' (140)

''அன்னத்தில் பொடித்துண்ண மாந்த மேகும்'' (192)

''மாந்தம்போம் இலவங்கப்பூ கியாழந் தன்னில்
மகத்தான மாந்தசுரம் வாந்தி தீரும்
மாந்தம்போம் முலைப்பாலில் கொடுப்பீ ராகில்
பகைதல்வரும் குடல்பவநீர் பாண்டு தீரும்'' (41)

என்பன முறையே ஒரே துணைப் பொருளுடன் மருந்து கொடுப்பதற்கும் வெவ்வேறு பொருள்களில் தரத் தீரும் நோய்கள் வெவ்வேறாகும் என்பதற்கும் சான்றுகளாகின்றன.

## 7. பத்தியம் :

மருந்து உண்ணும் காலத்தில் கடைப்பிடிக்கவேண்டியமுறைகளில் பத்தியமுறை என்பது ஒருவகை. தமிழ் மருத்துவமுறையில் இது மிகவும் கடுமையாக கடைபிடிக்கப்படுகிறது. பத்தியமுறை என்பது 1. உணவுமுறை 2. நடைமுறை ஆகிய இரு முறைகளில் அமைகிறது. பத்திய உணவு முறையும் அவ்வாறே இருவகையாகக் கையாளப்படுகிறது. ஒன்று—சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவுப்பொருள்கள். இரண்டு சேக்கக்கூடாத பொருள்கள் என அம்முறைக்காம் பொருள்களை இரண்டுவகையாக அறியலாம். இவற்றை மருத்துவ நூல்களும் எடுத்துக்கூறுகின்றன. இப்பத்திய முறை,

1. உண்ணும் மருந்தின் குணத்தைக் குறைக்காத நிலையில் அமைகிறது.
2. மேலும் மருந்தின் வீரியத்தை அதிகப்படுத்தத் துணை செய்கிறது.
3. மருந்தால் ஏற்படும் சில புதிய கோளாறுகளைத்தடுக்கத் துணையாக நிற்கிறது.
4. மருந்தோடு ஆகாத பொருள்கள் சேர்ந்துவிட்டால் நோயாளிக்கு மேலும் துன்பம் தருவதோடு ஆபத்தாகவும் முடியும். அவ்வாறான ஆபத்து நிகழா வண்ணம் பார்த்துக்கொள்ள இப்பத்திய முறை துணை செய்கிறது.

இந்த அடிப்படைக் காரணங்களைக் கொண்டு மருந்தால் தீங்கு ஏற்படாதவாறு தடுத்து மருந்து நல்ல பலனைத் தரத் துணைசெய்வதற்கே இப்பத்திய முறை பயன்படுத்தப் படுகிறது.

''தவறான புளிகசப்பு இறைச்சி மீன்கள்
மடித்தவள் கொள்ளுபா வக்காய் தள்ளு
மற்றதெல்லாம் நோய்க்காகும் மருவிக் கூட்டு'' (71)

''பதறாதே பத்தியந்தான் இச்சா பத்தியம்'' (55)

''கட்டியே தாய்தனக்குக் கவுச்சி யாகா
வையகத்தில் பூசணிக்காய் எள்கொள் ஆகா
தட்டியே எருமைப்பால் நெய்யா காது'' (10)

''இறக்கியதோர் புகையிலையும் பெண்ணுந் தள்ளு'' (173)

குழந்தைகளுக்குரிய மருத்துவத்தில் இப்பத்திய முறைகள், பாலூட்டும் தாய்மார்கள் கடைபிடிக்க வேண்டியவையாகும் என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

## 8. பக்குவமும் பாதுகாப்பும்

மருந்துப் பொருள்களை மருந்தின் சக்தி, பொருளின்வீரியம் இவற்றிற்கேற்ப இளவறுப்பாக வறுத்தெடுப்பதும் (266) கறுக்கி யெடுப்பதும் (232) சுக்குலர்த்தாம் உலர்த்துவதும் (8), அதே போலச் செய்த மருந்துகளை நன்கு உலர்த்துவதும், நிழலுலர்த்த லாய் உலர்த்துவதும் (40, 59, 70) ஆகிய சில பக்குவமுறைகளை கூறிச்செல்லுகிறது நூல். மருந்துப்பொருள்கலை காய்ச்சும்போது கிண்டிக்கொடுத்து குழம்பு பக்குவத்தில் (47), மெழுகு பக்குவத் தில் (172, 183), களிம்பு பக்குவத்தில் (194), கடுகு திரளும் பக்கு வத்தில் (70, 137) இறக்கவேண்டும் என்ற பக்குவ நிலைகளையும் நூலில் காணலாம். தண்ணீர் ஊற்றிக் காய்ச்சி அதை இரண்டில் ஒரு பாகமாக, எட்டில் ஒரு பாகமாக வற்றச்செய்து இறக்க வேண்டும் என்பதும் ஒருவகைப்பக்குவமுறையாகும். குப்பியிலும் செப்பிலும் பதனம் செல்துவைக்கவேண்டும் என்பன பாதுகாப்பு முறைகளாகும். இம்முறைகளுக்குச் சில சான்றுகள்;

''கரண்டகம்போல் கறுக்கியதைக் கொட்டிப்போட்டு'' 23

''இரண்டுபடி தண்ணீர்விட் டெட்டொன் றாக்கி'' 187

''குப்பிக்குள் பதனம் பண்ணே'' 173

மருந்துகளைச்செய்யும்போது காடாக்கினியாய் எரிக்க; குக்குடப் புடம்போட; சீலைமண் செய்ய; குப்பியில் அடைக்க என்னும் செய்முறைகள் சில சொல்லப்படுகின்றன. அவற்றின் விளககம்:

**காடாக்கினி :** இரண்டுவிரல் கனமுள்ள ஐந்துவிறகால் போடப் படும் தீ.

**குக்குடப்புடம் :** பத்து எரு வறட்டியால் போடப்படும் தீ, கோழிப்புடம் என்றும் கூறுவர்.

**சீலைமண் செய்தல்:** மருந்து எரியவைக்கும் பாத்திரங்களையும் அக்கினிப்புடங்கள் கொடுக்கும் குப்பியையும் சந்து தெரியாமல் சீலைமண், செம்மண் போன்றவற்றை அரைத்துச் சீலையின்மீது நன்றாகத் தடவி, அச்சீலையைச் சந்தின்மீது சுற்றி உலர வைப்பது.

**சந்துவாய் பதியவைத்தல்:** ஓட்டு வில்லைகளில் மருந்தைவைத்து சீலைமண் செய்யும்பொழுது இடுக்கு இருந்தால் அதன் வழியாக ஆவியாகி வெளியாகிவிடும். எனவே சந்து இல்லாமல் பொருத்தி வைத்துச் சீலைமண் செய்தல்.

குப்பி : மருந்தை வைத்துப் பாதுகாக்க உதவும் கண்ணாடிப் பாத்திரம் (புட்டி)

**9. நூல் பாடப்பட்டுள்ள முறை:**

1. கணபதியின் திருவடிகளும். நந்திதேவரின் திருவருளும் துணைநிற்க நூல் தொடங்கப்படுகிறது. (1, 2)

2. குழந்தை நோய் மருந்துகளைப் பற்றிய குழந்தை வாகடத்தைச் சொல்லுவோம் என்பதாக நுதலிப்புகுதல் என்னும் உத்திகையாளப்படுகிறது. நூலின் பெயரும் ஆசிரியராலேயே கூறப்படுகிறது.

3. நோய்களையெல்லாம் நன்குஆய்ந்து பின்பே கூறப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

4. மருத்துவரை விளித்துக்கூறுவதுபோல கூறப்படும் சில கூற்றுகள் நீதிநூல்களுள் முன்னிலை அமைத்துக் கூறப்படும் முறையை ஒத்துள்ளது. இம்முறை ஆசிரியர் தம் மாணாக்கருக்கு கூறியதாக கருத இடமுண்டு.

சான்று: ''என் மகனே! மாந்தின் கிஷா யத்தி லிய'' (60)

''கேளப்பா......ஒருபலந்தான் தூக்கே'' (265)

''தானே உரைப்போம் என்மகனே'' (23)

''சார்பிழியே!கிண்டிடுநீ; பூசைசெய்யே; குடிக்கச்சொல்லு.''

5. தம் மருத்துவ நூல் மிகவும் சிறந்த நூலாகும். குழந்தை நோய்களைப் பற்றி மட்டும் சுருக்கிச் சொல்லப்பட்ட இந்நூல் இரத்தினச் சுருக்கம் எனலாம். விரிவு அகற்றிச் செய்யப்பட்ட இவ்வாகடநூல் என் பெயராலேயே நிலைத்தது என்பன ஆசிரியரின் பெருமிதக்கூற்றுகளாகவும் நூலின் சிறப்புகளாகவும் அமைகின்றன.

"பறந்தோடும் வினையதனைப் பகருவோமே" (265)
"விரிவகற்றிச் சுருக்கத்தால் என்பேராச்சே" (36)
"பஞ்சுபோல் பறந்துவிடும் பாரு பாரு
பணிந்துமே இந்நூலைப் பணிய வேணும்" (55)

6. வடமொழிச் சொற்கள் மிகப்பலவால் நூலினுள் கையாளப்பட்டு உள்ளன. இவை மருந்துப் பொருள்கள், மருந்துகள், நோய்கள், செய்முறைக் கூற்றுத்தொடர்கள் போன்றவற்றைக் குறிப்பனவாய் அமைகின்றன.

1. திரிவிடயம், ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், ரோகணி, விஷ்ணுகாந்தி, சிலேத்துமப்பண்டம், வாதபண்டம், பஞ்சவர்ணமலர்.
2. கிஷாயம், சூரணம், லேகியம், சாந்தி.
3. சூக்குமசுரம், சுவாசம், மாந்தம், தோஷம், கணம், விஷக்கட்டி, ரோகம், சிசுரோகம், கிரந்தி,
4. கெசமுகன், மலர்ப்பதம், தெண்டம், நாமம், சோதித்து, பட்சி, கிரகக்கூறு, சிரசு, திரேகம், சாமம்.
5. செனனமிந்த நோயெல்லாம் செனித்தவாறும்
ஏகாட்சரப் பூரணத்தை மனத்தால் போற்றே
ஓங்காரப் பீடத்தின் அதீதப் போக்கி
பாலகனாய் முன்நாளில் ஜென்மிக்கும்போது

இவை வடமொழிச் சொற்கள், தொடர்களுள் சில.

7. இறைவன், தேவி ஆகியோரைப் போற்றிசெய்து மருந்து செய்யவேண்டும், மருந்து கொடுக்கவேண்டும் என்பதும் குளிசம் கட்டுதல், சாந்தி செய்தல் ஆகியமுறைகளும் இறைவழிபாட்டு முறையில் மருத்துவம் செய்யவேண்டும் என்பதை வற்புறுத்தும் முறைகளாக நூலுள் பலவிடத்தும் காணப்படுகின்றன.

8. மருந்துப் பொருள்கள்பொது அடிப்படையில் 1. மூலிகை 2. சமூலம் 3. கடைச் சரக்கு 4. உலோகம் என நான்கு வகைப் படுத்தப்படுகின்றன. அவற்றுள் கடைச்சரக்கு என்ற பொதுச் சொல், சுக்கு, ஏலம், திப்பிலி, சீரகம், கடுக்காய், சாதிக்காய் போன்ற அனைத்து மருந்துப் பொருள்களையும் குறிக்கிறது. கத்தாழைச்சாறு குமரிச்சாறு எனவும், பூண்டு வெள்ளுள்ளி என்றும், நிலத்துளசிச்சாறு தரையிலது வீழ்ச்சிச்சாறு என்றும், துளசிச்சாறுதுழக்கியசாறு எனவும் குழூஉக் குறியாகக் கூறப்படும் முறையும் நூலுள் கையாளப்பட்டுள்ளது.

**10. யாப்பு:** பழைய மருத்துவ நூல்கள் பெரும்பாலும் செய்யுள் நடையிலேயே காணப்படுகின்றன. அவையும் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ள நடை குறிப்பிடத்தக்கதாகும். இப் பாட்டுமுறை, வாய்வழிப்பாடமாக மற்றவருக்குகூறவும், எளிமை யாக மனப்பாடம்செய்யவும், பயன்படுத்தும்போது நூல் எதுவும் தேவைப்படாமல் நினைவிலிருந்தே பாடலாகக் கூறி நினைவு படுத்திச்செயல்படவும் பயன் உள்ளதாக அமைவது பாடல்முறை யாகும். பாடல்களை ஒன்றோடொன்று தொடர்புடையதாக நினைவுபடுத்த அந்தாதி முறைபெரிதும் பயன்படுகிறது. எனவே சோதிடம், கணிதம், ஞானம், தத்துவம் போன்ற பிறதுறை நூல்களைப் போலவே மருத்துவநூல்களும் செய்யுள் நடையில், அந்தாதி அமைப்பில் பாடப்பட்டுள்ளன. அதே முறையில் குழந்தை வாகடமாகிய இந்நூல் அமைகிறது.

நூலுள் அடங்கியுள்ள முந்நூற்றுமூன்று பாடல்களும்விருத்த நடையில் இயன்றுள்ளன. விருத்த நடையே ஓசை இன்பமுடை யதும் எளிதில் மனனம் ஆகும் வாய்ப்புடையதும் ஆகும் ஆதலின் இவ்வடிவம் கையாளப் பட்டுள்ளது. நூலில் காணப்படும் விருத்தப்பாக்கள் நான்கு வகையில் அமைந்துள்ளன:

1. ஈரசைச்சீர்களால் இயன்ற அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் இருபத்து நான்கு பாடல்கள் இயன்றுள்ளன.

2. முதல் இரண்டும் ஈரசைச்சீராகவும் மூன்றாவது மூவகைச் சீராகவும் அமைந்த அரையடியும் அதேபோன்ற மற்றொரு அரையடியுமாக அமைந்த அறுசீர்கழிநெடிலடியால் அறுபத்தாறு பாடல்கள்யாக்கப் பட்டுள்ளன.

3. முதலிரண்டும் மூவகைச்சீராகவும் அடுத்த இரண்டும் ஈரசைச் சீராகவும் அமைய நான்கு சீரில் அரையடியும் மீண்டும் அதே நடையில் அரையடியுமாக எண்சீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் நூற்று ஐம்பத்திரண்டு செய்யுட்கள் இயற்றப் பட்டுள்ளன.

4. ஈரசை நாற்சீரடியால் யாக்கப்பட்ட அறுபத்தொரு கலி விருத்தங்கள் அமைந்துள்ளன.

**11. முடிவுரை:**

1. தமிழ்மருத்துவம் இயற்கையானது, எளிமையானது.
2. அதனாலேயே அதுமறைமுகமாய்க் கையாளப்பட்டு வந்தது.

3. மறைமுகமாய் இருந்ததனால் பரவ இயலாமல் போயிற்று.

4. நூல்கள் இயற்றப்பட்டன; ஆயினும் செய்யுள்நடை, குழூஉக் குறித்தொடர்கள் ஆகியவற்றால் அவையும் பரவமுடியாமல் போயின.

5. பிறநாட்டு மருத்துவமுறை கவர்ச்சியாக அமைய தமிழ் மருத்துவம் தலை தூக்காமலே நின்றது.

6. இப்போது உள்ள மருத்துவமுறைகளில் ஆயுர்வேத முறையும் ஒன்று.

7. சித்த மருத்துவத்தின் வழி தோன்றிய ஆயுர்வேத முறையைச் சார்ந்ததே குழந்தை வாகடம் என்னும் இந்நூல்.

8. இதன் ஆசிரியர் தன்வந்திரி முனிவர் என்பது விளங்குகிறது

9. மிகப்பரந்த மருத்துவ நூலின் சுருக்கமாகவும், பல சிறந்த நூல்களின் வழிநூலாகவும் உயர்ந்த அனுபவ அறிவின் பயனாகவும் பிறந்தது இந்நூல்.

10. கிரந்தி முதல் நவ மூலம் ஈறாகப் பல நோய்களின் குணங்களும் உரிய மருந்துகளும் எளிமையாகக் கூறப்பட்டுள்ளன.

11. குழந்தை மருத்துவத்தில் மந்திரம் ஓதுதல், குளிசம் கட்டுதல், சாந்தி கழித்தல் போல்வனவும் நோய் நீக்கும் வழிகளாகின்றன.

12. தமிழ் மருத்துவ முறைக்கு மிக முக்கியமான பத்திய முறையைத் தாய் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் புலப்படுகிறது.

13. பெரும்பாலும் உணவுப்பொருள்களும் மூலிகைகளுமே மருந்துப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

14. மருந்து செய்வதிலும், மருந்தினை உள்ளுக்குக் கொடுப்பதிலும் துணைப்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

15. பழைய நீதி நூல் முறையில் முன்னிலைகளோடு அமைந்துள்ள பாடல் முறை ஆசிரியர் தம் மாணாக்கருக்குக் கூறிய முறையாக அமைகிறது.

16. சிறந்த ஒலி நயம்மிக்க விருத்தப்பாக்களினால் நூல் ஆக்கப்பட்டுள்ளது. அந்தாதி நடையில் அமைந்துள்ளது.

# பதிப்புரை

ஊரார் உவரிச் சங்கம் வங்கம் கொடுவந்து
காரார் ஓதம் கரைமேல் உயர்த்தும் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா என்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே (சுந்தரர்)

தேவர்கள் அமிழ்தம் கண்ட காலத்துத் தோன்றியவர் என்றும், நந்திதேவரைக் குருவாகக்கொண்டவர் என்றும் கருதப் படும் தன்வந்திரி முனிவரின் காலத்தை வரையறுக்க இயல வில்லை ஆயினும் மிகப் பழங்காலம் என்பதைச் சுட்டலாம். எனவே அவர்தம் நூல் மிகப் பழமை வாய்ந்தது என்பது உறுதி. ஆனால் 'தன்வந்திரி குழந்தை வாகடம்' என்னும் இச்சுவடி சுமார் இருநூறு ஆண்டுகளுக்குட்பட்டதாக கருதமுடிகிறது. எனவே இது பல தலைமுறைகளுக்குப்பின் எழுத்துவடிவம் பெற்ற சுவடி எனலாம். இவ்ஏட்டின் முன் வழி ஏடுகள், மூல ஏடுகள் என்பவை மிகப்பலவாக இருத்தல்கூடும். இவ்ஏடு எழுதப் பட்ட நிலைக்கு, இதன்மேல்வழி ஏடுகள் துணைபுரிந்திருக்கக் கூடும். அவை எவ்வாறு எழுதப்பட்டன என்பதை ஓரளவு ஊகிக்கலாம்.

1. வழிவழி மருத்துவரிடம் மனப்பாடமாக இருந்த இப் பாடல்கள் ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவரால் எழுத்து வடிவம் பெற்றுள்ளன.

2. வடிவம் பெற்ற ஒரு சுவடி மூலச் சுவடியாக அமைய அதனைப் பார்த்து எழுதப்பட்ட நிலையில்சிலசுவடிகள் தோன்றி யுள்ளன.

3. நேரடியாக எழுத்துகளைப் பார்த்து எழுதாமல், ஒருவர் சுவடியைப் பார்த்துச் சொல்ல, சொல்லால் ஏற்படும் ஓசைக்கு ஏற்ப வடிவம் பெற்ற நிலை வேறொருநிலையாகும். அவற்றின் படிகளும் இவ்வாறே வடிவம் பெற்றன.

இவ்வாறு பல நிலைகளிலும் உருவான சுவடிகளின் படியே இக்குழந்தை வாகடச் சுவடியாகிறது. இதன்மொழி, நடைகளை நோக்க இதுவும் ஒருவர் சொல்ல, அதனைக்கேட்டு எழுதப்பட்ட சுவடியாகவே காணமுடிகிறது. நூல் முழுமையும் அதே நடை காணப்படுகிறது எனலாம். சுவடி உருவாகி இருக்கின்ற இந்த கருத்துகளை மனத்திற்கொண்டு இச்சுவடிப் பதிப்புமுறை மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறான பதிப்பின் அமைப்பு ஒருவாறு விளக்க முற்படுகிறது இத்தலைப்பு. **சுவடி:** 28 செ. மீ. நீளமும் 3 செ. மீ. அகலமும் உள்ள 65 ஏடு களால் ஆனது இச்சுவடி. தென்னாற்காடு மாவட்டம், திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் மடத்திலிருந்த இச்சுவடி, உயர்திரு. பூ. சுப்பிரமணியம், உயர்திரு. ஆ. சிவலிங்க னார் ஆகியோரின் முயற்சியால் பெற்று வரப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 202ஆம் எண்ணில் பாதுகாத்து வரப்படுகிறது.

தன்வந்திரி குழந்தை வாகடம், சிமிட்டு ரத்தினச்சுருக்கம் 360 என்று தலைப்பு கொடுத்து எழுதப்பட்டுள்ள இச்சுவடியில் முந்நூற்று மூன்று பாடல்களே உள்ளன. நூல்முற்றிற்று என்ற தொடரோ, முடிந்ததற்கான வேறு அறிகுறிகளோ காணப்பட வில்லை ஆதலின் நூல் முற்றுப்பெறவில்லை என்றே துணியமுடி கிறது. ஒரு பக்கத்திற்கு எட்டு வரிகள் வீதம் ஒரே முறையாக நூற்று முப்பது பக்கங்களும் எழுதப்பட்டுள்ளன.

**நூல் தலைப்பு:** நூலின்பெயர், மருந்துகளின் பெயர் அல்லது நோய்களின் குணம் போன்ற அனைத்துத் தலைப்புகளும் ஏடு களின் இடது ஓரப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவை தெளிவாக இல்லை. ஒரு நோய் பற்றிய தலைப்பு அந்த நோய் பற்றிய ஒன்றிரண்டு பாடலுக்கு முன்போ செய்திக்கு ஒன்றிரண்டு பாடலுக்குப்பின்போ அமையும். பெயர்களும் தவ றாகக் காணப்படும். நூலின் தலைப்பு—

'தந்வந்திரி குழந்தைவாகடம் சிமிட்டு ரத்தினச்சுருக்கம் 360' என்றே காணப்படுகிறது. இது ஏடு எழுதுவோரால் ஏற்பட்ட பிழையே என அறியமுடிகிறது. இத்தவற்றினை எடுத்துக்காட் டாகக்கொண்டு இப்பதிப்பில் செய்யப்பட்ட திருத்தமுறைகள் சிலவற்றை எடுத்துக்காட்டலாம்.

''முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவர் பொற்புலவர்—அன்னோர்
நடையிடையத் தம்வழியே நாட்டி மொழிமாற்றல்
கடையிடையர் மாட்டுவினை காண்''

என்னும் செய்யுளில் கூறியபடி சுவடிகளில் காண்பதைத் தம் மதத்தின்படி திருத்துதல் விபரீத அறிவினையுடைய மத்திமர்க்கும், சந்தேக ஞானத்தையுடைய அதமர்க்கும் உரிய தொழில் என்று உணர்க.

''அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஓர் அகரமாவது மாற்றுதல் பெருந்தவறு என்பது யார்க்கும் உடம்பாடே என்ற கருத்துகளைக் காரணகாரியங்களுடன் நன்கு அறிவோம். என்றாலும் வழிவழியாக ஏடுகள் படியெடுக்க பட்டுக் காப்பாற்றப்பட்டு வந்திருப்பதால் படியெடுப்போரால் பல பிழைகள் நேர்ந்துள்ளன என்பதையும் அறிவோம். இவைஇவை, இன்னஇன்ன சொற்களே படியெடுப்போர் பிழையாக எழுதியுள்ளார். இடத்திற்கேற்ப மிகத்தெளிவாகவும் அறிய முடிகிறது.''[1]

''பதிப்பிக்கும் நூலைச் சிறந்தமுறையில் பொருள்விளங்கிப் பயன்படுத்தும் அளவிற்கு மக்களிடையே முழுமையாக்கித் தருவது பதிப்பாசிரியரின் கடமையாகும்''[2] என்னும் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நூல் தலைப்பு ''தன்வந்திரி குழந்தை வாகடம் சிமிட்டு இரத்தினச் சுருக்கம்'' என்று திருத்தி அமைக்கப்பட்டது. இது போலவே திருத்தப்பெற்ற தொடர்களுள் சிலவற்றைச் சான்றாகக் காட்டுவதனால் திருத்தப்பட்ட முறை சரியே என்பது தெளிவாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பா. | 1. | கெசமுகநடி | — | கெசமுகனடி |
| | 1. | அருளைனோக்கி | — | அருளைநோக்கி |
| | 2. | மலர்ப்பதம்வாளி | — | மலர்ப்பதம் வாழி |
| | 2. | குருவருள்றுணையே | — | குருவருள் துணையே |
| | 7. | திரேகம்ங்கானும் | — | திரேகங்காணும் |
| | 12. | அன்ம்பாயிடித்துச் சார்பிளியே | — | அன்பா...பிழியே |
| | 16. | கொளந்தனாவு | — | குழந்தை நாவு |
| | 36. | விரிவகத்தி | — | விரிவகற்றி |
| | 57. | பண்ம்பாய் | — | பண்பாய் |

1. மனை நூல் பக் XXXIV.
2. மேற்படி பக். XXXVI.

ஒலிகளுக்கு ஏற்ப ஒற்றுகள் மிகுதியாவதும், கொச்சை நடைச் சொற்களே நூலில் அமைந்துவிடுவதும் போன்ற பல பிழைகளும் திருத்தம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒருசில எடுத்துக் காட்டுகள்:

''கண்ங்கள் குளிர்ந்து காணும்'' — கண்கள்...(95)

''கண்ஞ்சுழலும்'' — கண்சுழலும்...(5)

''வதிதம்பார் சிதமுடன் ரெதத்முத்துமதிலொளைச்சல் யாசனுமும் கடுத்து''—(52)

''வதீதம்பார் சீதமுடன் இரத்தம் ஊற்றும் அதில்உளைச்சல் ஆசனமும் கடுத்து.

''அறுவையாதானவயறினுளளெ''—(61)
அரிவையர்தான் வயிற்றுனுள்ளே

கொச்சை சொற்கள் : இவைபோல்வன பலவிடங்களிலும் திருத்தம் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| கொடுத்து என்பது | — | குடுத்து என்றும் |
| எண்ணெய் ,, | — | எண்ணை ,, |
| இதற்காகாது என்பது | — | இதுக்காகாது என்றும் |
| வற்றிய பின் ,, | — | வத்தியபின் ,, |
| தாயின்ரோகம் ,, | — | தாயின்றோகம் ,, |
| னோயெல்லாம் என்பது | — | நோயெல்லாம் என்றும் |
| அடுப்பேற்றிக்காய்ச்சு என்பது | — | அடுப்பேத்திக்காய்ச்சு என்றும் |
| நுணாயிலை என்பது | — | னொனாயிலை என்றும் |

மெய்யின் முன்னும் பாடலின்தொடக்கத்திலும் யகர உயிர்மெய் வருவது மிகப்பலவாக இருந்தன. அவை திருத்தம் பெற்றன.

''விதத்தில் யாருநாள் போட்டிடு'' (ஆறுநாள்)
''தந்தை தாயின் யூழ் வினை'' (ஊழ்)
''வறுத்துமே தூள் யிடித்து'' (இடித்து)

பாடல் தொடக்கம் : யொப்பான (298)
யரைத்திடு (295)
யுற்றுதான் (205)
யோடும்யொக்க (97)
சூரணஞ்சேர்யஞ்சுபலம் (125)

இவ்வாறான பிழைகள் மிகப்பலவாக மலிந்து கிடந்தன. இவற்றைத் தவிர பதிப்பு முறையில்,

1. உரைநடை போலவே தொடர்ந்து எழுதப்பட்டிருந்த பாடல்கள் அடிகளாகப் பிரிக்கப்பட்டுச் சீர்கள் வரையறுக்கப்பட்டன.

2. ஆனால் மாந்தம் என்ற நோய் பல வகைப்படுகிறது. அவ்வகைகள் பலவிடத்தும் கூறப்பட்டுள்ளன. மேலும் ஒரு பாடலில் அந்நோயின் குணமும் பலபாடல்களை அடுத்து அதன் மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அனைத்து நோய்களுக்குமே பாடல்கள் நூலுள் இவ்வாறு அமைந்துள்ளன. நூல் அந்தாதி நடையில் இருப்பதால் அப்பாடல்களை நோய்வாரியாகத் தொகுத்தளிக்க இயலவில்லை.

3. மாறாக நோய்கள் எல்லாவற்றையும் தொகுத்து, அவற்றின் பாடல் எண்களையும் கொடுத்து - நோயின் குணம் அதற்கு மருந்து என்ற முறையில் தொகுப்புரையாக, எளிதில் பயன்படுமாறு தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. இது பதிப்புமுறைகளில் ஒன்றாகக் கையாளப்பட்டுள்ளது.

4. மருந்துப் பொருள்களை ஆய்ந்து,
1. மூலிகைகள் 2. கடைச்சரக்குகள் என இருவகையாகப் பிரித்து அவற்றை அகர வரிசைப்படுத்திக் கூடுமானவரை அவற்றுள் ஒவ்வொன்றினுடைய-
1. வேறுபெயர்கள் 2. ஆங்கில, தாவரப் பெயர்கள்
3. வடிவம், வகை 4. பயன்

ஆகியவற்றைத்தொகுத்து விளக்கம் என்னும்இயலுள் அமைக்கப்பட்டுள்ளது. அப்பயன்களை உடையவை என்பதற்கு மருத்துவ நூல்களிலிருந்து சான்றாக ஒவ்வொரு பாடலும் கொடுக்கப்பட்டுள்ளது.

5. மூலிகைகளுள் 46 மூலிகைகள் திரட்டப்பட்டுள்ளன. அவை நிழற்படமாக எடுக்கப்பட்டு ஆய்வேட்டில் விளக்கத்திற்குரிய 'துணை' என்னும் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பத்து மூலிகைகள் படத்தின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

6. நூலில் காணப்படும் நோய்களின் பெயர்கள், பிறஅரிய சொற்கள், பாட்டுமுதற்குறிப்புகள், தன்வந்திரியின் பிற சுவடிகள்போன்றவற்றிற்கானஅட்டவணைகள்'இணை' என்னும் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

இயன்றவரை நூலைத் தொகுத்தும் வகுத்தும், விளக்கியும் எளிமையாக்கியும் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொண்டு பயன்தரும் வகையில் அமைத்திருக்கிறேன் என்பது எனது துணிபு.

# நூலாசிரியர் வரலாறு

## தன்வந்திரி

"செய்ய மாதுக் கிறைவன் செப்பிய
துய்ய வாயுள் மறையிற் றுலங்கிய
மெய்யை மாதவன் மேதினி வாழ்வுற
ஐயன் தன்வந்தி ரிக்கருள் கூறினான்."[1]

பரமசிவன் உமையம்மைக்குக் கூறியருளின ஆயுர்வேதத்தின் உண்மையான கருத்துக்களை திருமாலானவர் அறிந்து, உலகம் உய்யவேண்டி தன்வந்திரி மகாமுனிவருக்கு அருளிச் செய்தார்.

சங்கு, சக்கரம், மூலிகை, அமிழ்தகுடம் ஆகியவற்றை முறையே நான்கு திருக்கைகளிலும் தாங்கியவராய் விளங்கியவர் தன்வந்திரி முனிவர் என்று அவர் தோற்றத்தை விவரிப்பர் ஆயுர் வேத நூலோர்.[2]

எல்லாவகையான நோய்களையும் அழிக்கும் சக்தி வாய்ந்தவரான தன்வந்திரி முனிவர் திருமாலின் அவதாரமேயாவார் என்பது அவர்தம் கொள்கை.

தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்து அமிழ்தத்தைப் பெற்றபோது அக்கடலிலிருந்து ஒரு அவதார புருஷர் தோன்றினார், அழகும் இளமையும் வாய்ந்தவராக விளங்கினார். அமிழ்தம் நிரம்பிய திருக்கலசம் ஒன்றினை ஏந்தியிருந்தார். அவரே தன்வந்திரி என்று பெயர் பெற்றார். ஆயுர்வேதத்தைக் கண்டறிந்தவர் அவரே என்பனவும் அவர் தோற்றமாகக் கூறப்படும் செய்திகளாகும்.[3]

---

1. தன்வந்திரி வைத்தியம்—பக். 1. 2. இயற்கைதரும் இன் மருந்துகள்—பக். 303 3. மேற்படி பக்—304.

ஆதிதேவர், சங்குசக்கரதாரி, அமிருதகலச அஸ்தர், சல்லிய தந்திரர், கருணாமிருதசாகரர், ஆயுர்வேதப் பிரசாரகர், அஷ்டாங்கயோகி, மகாமேதாவி, புண்டரீகாட்சர் என்பன தன்வந்திரியைக் குறிக்கும் வேறுபெயர்களாகும். இவ்வாறான அவர் திருப்பெயர்களைச் சொல்லி அவரைத் துதிப்பது நோய் தீருவதற்குரிய ஒரு வழியாக ஆயுர்வேத மருத்துவமுறையினர் கருதுகின்றனர்.

திருவரங்கத்திலுள்ள திருவரங்கநாதன் ஆலயத்திலும், காஞ்சிபுரத்திலுள்ள வரதராசப்பெருமாள்ஆலயத்திலும் தன்வந்திரிக்குச் சமாதி உள்ளது. இதற்கு இப்பொழுதும் பூசைநடை பெற்று வருகிறது.

''எடுத்தவாறு நந்தீசர் மகிமையாலே
இருநூறும் முதுமாந்தம் ஒருநூறும்
இயம்பினேன்பார் (150)

''நந்தி குருவருள் துணையே காப்பு'' (2)
''மலர்ப்பாதம் வாழி போற்றி மாநந்தி குருவைப்
போற்றி'' (2)

என்னும் நூல் சான்றுகள் நந்திதேவரைத் தன்வந்திரியின் குருவாகக் கூறுகின்றன. சிவபெருமான் உமைக்குக்கூற, உமை நந்தி தேவருக்கு அருள்புரிய, நந்திதேவர் தன்வந்திரிக்குக் கூறினார் என்னும் வழக்கு இங்கு பொருந்துகிறது.

''இறக்கியே கணேசன்முதல் வயிரவற்கு
ஏகாந்த வாலைமனோன்மணித் தாயாருக்குத்
துறக்கியே பூசித்துத் தியானம் செய்யே''

என்பது போன்ற பல தொடர்களினால் கணபதி, வயிரவர், தேவி வாலை, மனோன்மணி, ஏகாட்சரப்பூரணன் போன்ற கடவுளர் களைப் பூசிக்குமாறு கூறுகின்ற ஆசிரியர் கூற்றுகளையும் நூலுள் காணமுடிகிறது.

5

நூல்

மூலநூல் - 303 பாடல்கள்
தன்வந்திரி குழந்தை வாகடம்
இரத்தினச்சுருக்கம் முந்நூறு

## பகவான் தன்வந்திரி



"ஓம் நமோ பகவதே வாசுதேவாய,
தன்வந் தரயே அமிருதகலச அஸ்தாய,
சர்வ ஆமய நாசனாய,
திரைலோக்கிய நாதாய,
ஸ்ரீமகா விஷ்ணவே நம :"

# தன்வந்திரி குழந்தை வாகடம்
# இரத்தினச் சுருக்கம் முந்நூறு

## (காப்பு)

1. கெசமுக னடிவ ணங்கிக் கேசறப் பொருளைக் கண்டு
வசமென யறிவி லுண்டு வகையற சிசுவின் ரோகம்
கசவற வளித்து வாதம் க்ண்டுநான் உரைக்கவேண்டி
திசைமுனி யருளை நோக்கித் திசைமலர் போற்றி னேனே.

2. மலர்ப்பதம் வாழி போற்றி மாநந்தி குருவைப் போற்றிக்
கலர்கொரு யறிவே போற்றிக் கந்தனுங் கயிலை போற்றித்
திலர்வியோர் முனிகள் போற்றிச் சீர்பட இந்நூல் போற்றிக்
குலமெனக் குருவே நந்தி குருவருள் துணையே காப்பு.

3. வருள்சிசு வாக டத்தை வகுக்கநான் உராயாய்ப் பாடித்
தெருளென வாழி பாதம் சீர்பெறத் தொழுதேன் காப்பு
மருமலர்ச் சேர்ந்தேன் மாத மாபய உலகைச் சூழ்ந்த
திருவடி தனையே நாளும் தெண்டம்நான் பணிந்தேன்
காப்பு.

## (தற்சிறப்புப் பாயிரம்)

4. பணிந்துநான் குழந்தை ரோகம் பலபல நாம மெல்லாம்
கணிந்துநா மநிலக்கண்டு கறைகண்டு துறையி லேறி
மொழிந்துமே நூல்கள் தோறும் முறை முறை சோதித்தேறி
வழிசிசு நோய்ம ருந்து வகைவகை யுரைப்போ மென்றே

5. உரைபெறத் தந்தை தாயின் ஊழ்வினை தொடர்ந்த கூறும்
மறப்பறந் தாயின் ரோகம் மைந்தனைச் சார்ந்த கூறும்
கறைபொத்தி தீனி யாலு மக்ள்தந்தோர்க் கருமத் தாலும்
பரம்பெறுந் தோஷத் தாலும் பட்சியும் கிரகக் கூறே.

6. கூறுடன் வருகும் ரோகம் குறிப்பிது உண்மை உண்மை
வாருடன் இதனைப் பார்த்து வைக்கவே சிசுநோய்
தன்னைப்
பேற்பெறத் திறப்பா னாகில் போல்வரும் தருமம் தருமம்
காருடன் மருந்து ரோகம் கலந்துநான் உரைப்பேன் கேளே.

## பிள்ளைகட்குச் செங்கிரந்தி கறப்பானால் வளரும் நோய் போன்றவை

7. கேளுகருங் கறப்பனொரு செங்க றப்பன்
கேள்மகனே கருங்கிரந்தி செங்கி ரந்தி
தளெவிமன் கறப்பனது சிரசில் காணும்
தன்மையென்ற செவ்வாப்பு நிரேகங் காணும்
கேளுசெங் கிரந்திசெங் கரப்பன் இரண்டில்
செனைமிந்த நோயெல்லாம் செனித்த வாறு
பானிதெல்லாந் தீருதற்கு மருந்து சொல்வேன்
வருணிப்பேன் யெண்ணெய்தனை வளமாய்ப் பாரே.

8. வளமாய்ப்பார் சித்தரெண்ணெய் எண்ணெய் கால்தான்
வகையுடனே பூவரசம் பூவும் காயும்
இளமாப்பாய் இடித்தனைச் சாக்கால் கூட்டி
இளஞ்சிவந்த மணத்தக்கா ளிச்சார் கால்தான்
மளமாம்பார் வோயின் பட்டை போல
மதன்மையென்ற சிவதையொடு கறப்பான மட்டைக்
குளமாம்பார் குமரிச்சார் அரைக்கால் சேர்த்துக்
குஞ்சரமே கடைச்சரக்கு விராக னொன்றே.

9. ஒன்றாக இதுவெல்லாங் கலந்து கொண்டு
உத்தமனே கடைச்சரக்குச் சூர ணித்துத்
தொண்டாகத் தெளித்துநன்றா யடுப்பி லேற்றித்
தேவிமனோன் மனிதனையே தியானம் பண்ணிக்
கண்டாகக் கணபதிக்கு வணங்கிப் போற்றிக்
கடுகெரித்துப் பதம்பார்த்து இறக்கிக் கொள்ளு
துண்டாகத் துட்டிடைதான் மூன்று வேனாள
தொட்டெடுத்து நாவுதனிற் புகட்டிப் போடே.

10. புகட்டியே மேலெல்லாங் கடுகு பூசு
பொல்லாத முன்சொன்ன நோய்க ளோடும்
கட்டியே தாய்தனக்குக் கவுச்சி யாகா
வையகத்தில் பூசணிக்காய் எள்கொள் ளாகா
தட்டியே எருமைப்பால் நெய்யா காது
அன்பாக மற்றதெல்லாங் கூட்டச் சொல்லே
தட்டியே பதினோரு பிராயம் மட்டும்
மங்கைமன்ன னால் விளைந்த நோயுண் டாமே.

## சூலிகணத் தெண்ணெய்

11. உண்டான சூலி கணங்கேளு
உற்ற சுவாச மேலெழும்பித்
தண்டா மிருமல் மிகவுண்டாம்
தண்மை நெஞ்சு வயிறுமட்டும்
தொண்டை நோவு மிகவெந்து
...... ...... ......
வண்டாள் முலையுங் குடியாது
வகையாய் முகமு நாறுமன்றே

12. முகமாம் எண்ணெய்க் காய்படிதான்
முன்னம் துழக்கிய சார்காலாம்
தகமாம் தரையிலது வீழ்ச்சிச்சார்
தன்மை யரைக்கால்படி தான்கூட
வகமாங் கஞ்சாங் கோரையுடன்
வண்மை காட்டி வத்திரியும்
அகமாம் வில்வம் உள்ளியுடன்
அன்பா யிடித்துச் சார்பிழியே.

13. அன்பாய் யரைக்கால் வகைக்குபடி
யளந்து நிறுத்து ஒன்றாக்கி
வன்பாய் மாதிரி கடுகுடனே
வறுத்துச் சூர ணஞ்செய்து
தென்பாய் இரண்டு விராகனெடை
தேனை வார்த்துக் கலந்துகொண்டு
உன்பா யெண்ணெய் அடுப்பேற்றி
உருளுங் கடுகுப் பதந்தனிலே.

14. தனியே இந்தக் கடைமருந்தைத்
தனதாய்ப் போட்டுக் கிண்டிடுநீ
வெளியே யிறக்கிக் கணபதிக்கு
வகையாய்த் தொழுது யடிவணங்கி
மணியே சூலி கணந்தனைக்கு
மைந்தன தாசை சாந்திசெய்து
தொனியே மைந்தன் தொண்டைதனில்
தொடுநீ காசு எடைஇரண்டே.

15. எடையு மஞ்சு மாதமென்றால்
எண்ணெய் அஞ்சு நாள்கொடுப்பாய்
தடையிச் சாபத் தியமிதுதான்
தனதா யப்பிர பஞ்சமட்டும்
இடையா யிருக்கும் சூலிகணம்
இதனைக் கண்டு தீர்த்திடிற்காண்
படைப்பாம் வருஷ மானகணம்
பலிக்க மண்ட லங்கொள்ளே.

முக்குங் கணத்தின் குணம்—எண்ணெய்

16. கொள்ள முக்குங் கணங்கேளு
குழந்தை நாவு மிகவெந்து
தள்ள சுரமுந் தலைவலியும்
தாப முடனே நாவறண்டு
மெள்ள வயிற்றுக் கடுப்புடனே
மேனி கறுத்து ஆசனமும்
விள்ள இரத்த மாயிடுமாம்
விண்டேன் திரேகம் வற்றுமென்றே.

17. வத்த வில்வம் விலாமிச்சை
வகையாய் விஷ்ணு காந்தியுடன்
முத்தம் ஓரிலைத் தாமரையும்
முருங்கை வித்தும் துளசிவிதை
கத்த கோங்குப் பிசினுடனே
கனத்த யாவா ரைப்பிசினும்
முத்த கோஷ்ட மதுரமுடன்
அக்கிரா காரம் தாளிசமே.

18. தாளிச மெண்ணெய் நாழி தள்ளபேர் மருந்தெல் லாந்தான்
வாளிசம் வறுத்தி டித்து வகைக்குநால் பலமே சேரும்
மாளிசம் குமரிச்சார்கால் மங்கைமுறைப் பால்கா லாகும்
பாளிசம் படிய ரைக்கால் யளகுடல் நிம்மச் சாரே.

19. சாரிது எண்ணெய் ஒன்றாய்ச் சடரசங் கலந்து கொண்டு
வாரிது யடுப்பி லேற்றி வகையதாய்த் தீயை மூட்டிக்
காரிது கடுகு கண்டால் கடுகென இறக்கிக் கொண்டு
மாரிது வடுகன் பூசை மனோன்மணி பூசை செய்யே.

20. செய்துநீ யெடுத்துக் கொண்டு செயம்பெறதுட் டெடைதா
னொன்று
வைத்துநீ வாயில் வார்த்து வகைமூன்று நாள்தான் வாரு
கைத்துநீ யிண்டந் தேண்டைக் கண்டாய் நறுக்கிக் கொண்டு
இதனில்நற் சீர கத்தை மலரது பொரித்துக் கேளே.

21. பொரித்துநீ லிண்டம் தண்டைப் பொறுமையாய் ஊதிப்
போட்டுத்
தரித்துநீ அதனில் போட்டுத் தண்ணீர்கால் படிதான்
வார்த்து
வரித்துநீ எட்டொன் றாக்கி வார்ப்பது மூன்று வேளை
தெரித்துமே கண்முன் சொன்ன தவையெல்லாம்
ஓடிப்போமே.

22. ஓடிடும் அஸ்த வேனை உறுதியாய்க் குடிக்கச் சொல்லு
வாடிடு உதய வேளை வ்சனித்த எண்ணெய் ஈய்நீ
ஆடிடு மவிழ்தந் தன்னால் அடக்கிடும் நோயெல் லாந்தான்
தேடிடும் தர்மம் வந்து மக்களை எய்துந்தானே.

## ஊதுமாந்த குணம்—எண்ணெய்

23. தானே ஊதுமாந்த குணம் தானே உரைப்போம் என்மகனே
வானே காலும் கண்ணுடம்பும் வளமாய் வீங்கி
னால்புண்ணும்
மானே கேளாய்ச் சாரமுண்டாம் அன்னந் தண்ணீர்
கொள்ளாது
தானே காலுங் கைசோர்ந்து கனத்த சாவாச மதிகமன்றே.

24. அதிகமாம் ஊதுமாந்தம் மகபதி பனிரெண் டாண்டு
அதிகமாம் அந்நாள் மட்டும் வகையிந்த நோயி னங்கள்
அதிகமாம் மருந்து கேளாய் தன்மையா யுரைப்பேன்
பிள்ளாய்
அதிகமாம் தேவி வாலை கருணையால் உரைப்பேன்கேளாய்.

25. உரைப்பேன் எந்தன் குருவருளால் ஒகோ முள்ளி நீர்முள்ளி
தெரைப்பேன் நிண்டன் வேர்காயும் தேங்காய் நெற்றுப்
பாலுடனே
கரைப்பேன் கையான் கரந்தையுடன் கண்டங் கத்திரி
வசம்பேலம்
நிரைப்பேன் வெட்பா லரிசியுடன் நிசந்த மாதுளைப்
பழச்சாறே.

26. பழமே வட்டத் திப்பிலியும் பற்பா டகமும் முத்தமுடன்
தழமே யோரிலைத் தாமரையும் தண்டா மரையும்
செங்கழுநீர்
வளமே சூரத் தாவாரை வல்லா ரையின் சாறுடனே
மளனே விளாவின் பிசினுடனே மருகா வாரை பிஞ்சுசேரே.

27. சேரே இலவின் பிஞ்சுசேர் செங்கத் தாரி முருக்கஞ்சார்
மாரே மாசிக் காயுடனே மகிமை கடுக்காய் அதிவிடயம்
சீரே வாலின் மிளகோடு சிவந்த சாதிப் பத்திரியும்
வாரே யேலம் வகைக்குக்கால் வளமாய்ப் பொடித்து
ஒன்றாக்கே.

28. பொடித்திந்த மருந்தி னோடே புகழாய்விளக் கெண்ணெய்
வார்த்து
அடுத்ததோர் அடுப்பி லேற்றி அழகதாய்த் தீயை மூட்டி
வடித்ததோர் கடுகு திரண்டால் வளமதாய் இறக்கிக்
கொண்டு
தடுத்ததோர் தேவி மாது தயவுடன் பூசிப் போற்றே.

29. போற்றியே எண்ணெய் தன்னைப் புகழ்ந்துதுட் டிடைதான்
நீயும்
ஆத்தியே மூன்று வேளை அழகதாய்க் கொள்ளச் சொல்லு
வாத்திய புளிப்புந் தள்ளு வகையறப் புகலை யாகா
தேத்திய கணச்சு எள்ளு இதுவெல்லா மாகா தென்றே.

### ஆமைக் குணங்கள்—எண்ணெய்

30. என்ற யாமைக் குணங்கேளு இனிதான் நெஞ்சு
தான்துடிக்கும்
வண்ட சிறு நிறமஞ்சள் வகையாய்ப் போயும் மேல் கடுப்பும்
கண்ட உடம்பு நிறம்வேறாம் கனமாய் வந்து ஒருவேளை
நன்றாய் வெதும்பும் சருவாங்கம் நலமா யிருமல்
மிஞ்சுமென்றே.

31. மிஞ்சும் வயிற்று எரிச்சலுடன் இனிதாய் விட்டுத் துறும்
பெடுக்கும்
கஞ்ச மூக்கு மேலெழும்பிக் கனமாய்ச் சுவாசம்
புகையெழும்பித்
துஞ்ச உடம்பு மேவறண்டு துரும்பு போலே வடிவெடுத்துக்
கெஞ்சு மாமைக் குணமிதுதான் கெணித மிஞ்சோ
ஒன்றுண்டே.

32. உண்டென்ன யிண்டம்வேர் இண்டந் தண்டு
உப்பனே சாறதிலே நாழி வாங்கி
குண்டென்ன குமிழனொடு மாசிப் பத்திரி
புங்கனொடு நிலத்துளசி வெள்ளுள்ளிச் சாறு
தண்டென்ன முடக்கொத்தான் தூத ளஞ்சார்
தனதான நுணாயிலையின் சாற்றினோடு
வண்டென்ன வல்லாரைக் கஞ்சாங் கோரை
வகைக்குஅதில் கால்படிச்சார் வாங்கு வாங்கே.

33. வாங்கியே எண்ணெய்படி ஒன்று விட்டு
வளவான சாதிக்காய் ஏலம் கிராம்பு
வாங்கியே கடுகுரோ கணிக்க டுக்காய்
வால்மிளகு ஓமமுடன் வசம்பு சுக்கு
வாங்கியே வகைக்குபலம் நிறுத்துக் கொண்டு
வறுத்துமே தூள்இடித்து வகையாய்ச் சேரு
வாங்கியே அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொண்டு
வற்றியபின் கடுகுதிரண்டால் இறக்கி டாயே.

34. இறக்கிடாய் மனோன்மணிதாய் பூசை செய்து
ஏகாட்சரப் பூரணத்தை மனத்தால் போற்றி
இறக்கிடாய் நாலஞ்சுக் கரண்டி வீதம்
என்மகனே கொடுத்துவிடு அஞ்ச வேண்டாம்
இறக்கிடாய் முன்சொன்ன தெல்லாந் தீரும்
என்மகனே பறந்தோடும் வித்தை பாரே.

35. வித்தைப்பார் சேத்துமப்பண்டம் வாதப் பண்டம்
இதுவெல்லாம் தள்ளிவிடு இதற்கா காது
வித்தைப்பார் நிலத்துளசிப் பிட்ட வித்து
விதமாகப் பிழிந்தாற்றிக் கொடுத்து வாநீ
வித்தைப்பார் உதயத்தில் எண்ணெய் வாரு
விவரமதாய் யனுகத்திக் கியாழ மேத்து
வித்தைப்பார் பிள்ளைவலி யாமை மாந்தம்
வீரிட்டு ஓடுமையா இதனால் பாரே.

36. இதுவான இன்னூல்தான் முன்னூற் குள்ளே
எடுத்தவித்தை யாகுமிந்த வாலை நாலு
இதுவான நந்தீசர் கடாட்சத் தாலே
வெகுநோயின் விபரமதை மனத்தால் கண்டேன்
இதுவான பன்னீரா யிரஞ்சு ருக்கில்
வேதமுறை சிமிட்டுரத்தினச் சுருக்க மிந்நூல்
இதுவான தன்வந்திரி யென்றே நானும்
விரிவகற்றிச் சுருக்கத்தால் என்பே ராச்சே.

## சிங்கு மாந்தம்

37. பேரான சிங்குமாந்த மதனைக் கேளு
பெருமையாம்ப் புந்திதனி லதுயெ ழும்பி
வாரான ஈரலுள்ளே புண்ணு மாகி
வலிமையாய்ச் சுவாசமோ ரிழுப்பு மாகிச்
சீரான திரேகஞ்சமூல மாகிக் காய்ந்து
சிவசிவா மதுஉடம்பு எல்லாம் வீசும்
வீறான சுவாசமது திட்டு முட்டாய்
வெகுளியாய் மயக்குஞ்சிங் கேனம் பாரே.

## சிங்கு மாந்ததுக்கு அமிர்தாதிக்குளிகை

38. சிங்கேனப் பிள்ளைகட்டுச் சுரமி தாகும்
சிவசிவா மாந்தசுர மிதுதா னென்பார்
சிங்கிகண மாந்தசுர மேதென் றாக்கால்
சீரகற்றி பதின்மூன்று பிராய மட்டும்
சிங்கேண மாந்தமது இருப்பி டந்தான்
சிவனென்ற பிள்ளைகட்குஇச் சுரத்தி னாலும்
சிங்கிகணம் மாய்ப்பதற்கமிர் தாரி தன்னைச்
சண்மதிலே விள்ளு கிறோம் இதனைப் பாரே.

39. இதனைப்பார் அதிமதுரம் கோஷ்டம் ஏலம்
சிறந்தகோ ரோசனையும் சாஸ்திர வேதி
இதனைப்பார் சண்பகப்பூ மாசிக் காயும்
இலவங்கப்பூ பூரமொடு வகைக்குக் கால்தான்
இதுவெல்லாம் பார்த்துக்கல் வத்தி விட்டு
வெட்டிவேர் மாசிபத்திரி வேரி னோடும்
இதனைப்பார் விலாமிச்சைக் கருந் துளசி
இன்பமாதாய் நால்வகையுஞ் சார்பி ழிந்தே.

40. பிழிந்துமே கலுவத்தில் வார்த்த ரைப்பாய்
பலமாக இருசாமம் விடாதே யாட்டு
கழித்துமே குண்டுபோ லுருண்டை செய்து
கண்மணியே நிழலுலர்த்திச் செப்பில் வைத்து
வழித்துமே வாலைமனோன் மணியைப் போற்றி
வகையான மாசிபத்திரி கியாழந் தன்னில்
அழித்துமே ஒருகுளிகை கொடுத்துப் போட்டால்
யரகரா முன்சொன்ன மாந்தம் போமே.

### கணத்தின் ரோகம்

41. மாந்தம்போம் இலவங்கப்பூ இயாழந் தன்னில்
மகத்தான மாந்தசுரம் வாந்தி தீரும்
மாந்தம்போம் முலைப்பாலில் கொடுப்பீ ராகில்
பகைத்துவரும் குடல்பவநீர் பாண்டு தீரும்
மாந்தம்போம் கறப்பானுடன் வறட்சி தீரும்
மன்னவட்டாய் வயிறெரிவு சுரமுந் தீரும்
மாந்தம்போம் உப்பிசமும் இருமல் போகும்
அமிர்தமெனுங் குளிகையுட மருத்துவம் பாரே.

42. பாரே கணத்தைப் பகருவன்கேள் பகரும் உடம்பில்
சுரம்வீசும்
பாரே யுள்சுர மிதுதான்பார் பகரும் கணமல முன்சோர்ந்து
பாரே முலைமார்க குண்டேழும் பதமாய்த் திரேகம்
மிகவற்றிப்
பாரே வாயும் மிகநாக்கும் பதமாய் மலமும்
வெட்டையென்றே.

43. வலமுஞ் சலமும் மிகத்தீஞ்சு மாறல் சூக்குமச் சுரங்காயும்
வலமும் வாயும் மிகயெரியும் வளமாய்த் தலையும்
மிகமயக்கும்
சலமும் வளர்த்தி தொன்குறையும் சாண்டா ளம்போல்
உள்சுரமாம்
தளமாம் பன்னிரெண் டாண்டு மட்டும் தனதாய் வாக்குங்
கணமிதுவே.

44. கணமான கணமிதற்கு மருந்து சொல்வேன்
கிருகையென்ற வல்லாரை மாசி பத்திரி
குணமான வில்வமொடு விளாவின் சாறும்
கொடியான அத்திப்பால் ஆலம் பாலும்

கணமான உள்ளிச்சார் நிம்பச் சாறும்
திறமான முலைப்பாலும் ஆவின் பாலும்
கணமான ஆவின்நெய் வெள்ளாட்டின் பாலும்
கேள்மகனே கொம்புத்தேன் கோவைச் சாரே.

45. சாறிதெல்லாம் வகைக்குப்படி யரைதான் வாங்கிச்
சமத்தான தென்னங்காய்ப் பாலும் நாழி
சாறிதெல்லா மொருசட்டி தன்னி லூற்றிச்
சாதிக்காய் சாதிபத்திரி ஏலங் கிராம்பு
சாறிதிலே திரிகடுகு திரிப லாதி
சடமாஞ்சி யதிவிடையம் மாசிக் காயும்
சாறிதிலே வகைக்குப்பல மொன்று வாங்கிச்
சன்னமாய்த் தூளிடித்து வைத்துக் கொள்ளே.

46. வைத்துக்கொள் சந்தனத்தால் அறுகன் கட்டை
வளமான வெட்டிவேர் விலாமிச் சோடு
கைத்திறமா யிடித்துவகைப் பலந்தான் வாங்கிக்
கால்படி நீரதிலே யிதனைப் போட்டு
மைத்துப்பார் கியாழமதில் பாதி வாங்கி
மைந்தனே சாறதிலே யொன்று வார்த்து
ஆத்துப்பார் அடுப்பேற்றி யெடுப்பீ ராகில்
அச்சமாம் நீர்சுண்டி நெய்போ லாமே.

47. நெய்போலாம் பதத்தினிலே மருந்தைக் கொட்டு
நேசமுடன் பூரணமாய்க் கிண்டு கிண்டு
நெய்போலாம் குழம்பாகும் பதத்தைக் கண்டு
நேசமதா யிறக்கிவைத்துத் தேவி தன்னை
நேயமென்ற வாலைதனைப் போற்று போற்று
நினைவாக இலட்சமுரு நீதா னோது
நெய்யிதுதான் வலுத்துமே போச்சுப் போச்சு
நிகரில்லா சஞ்சீவி இதுதான் பாரே.

### தேரைக் கணம்

48. பாரேதான் கரண்டிநிறை மண்டலமே கொண்டால்
பாழான முன்சொன்னகண மெல்லாம் போகும்
பாரேதான் வாதத்தில் எழுந்த நோய்கள்
பன்பனி யோடுமையா பின்பா ராமல்
பாரேதான் புளிக்கப்பம் வாய்வுப் பண்டம்
பற்றரள மாகாது தள்ளிப் போடு
பாரேதான் தேரைகணம் தேரை போலே
பழுதில்லை எட்டாண்டு மட்டுண் டாமே.

49. உண்டாமே அந்நோய்க்கு இந்த நெய்யை
உற்பனமாய்க் கொடுத்துவிடு பறந்து போகும்
உண்டாமே வாதபித்த சிலேத்துமம் மூன்றும்
ஒடுங்கியே மூலத்தின் கணமே யாகி
உண்டாமே யுறுதிபத்திக் கமல மெல்லாம்
ஓகோபுண் ணாகியுள்ள சுரந்தான் வீசும்
உண்டாமே உடம்பிளைக்கும் பித்த வெட்டை
உத்தமனை யெரிகுணமாம் உசந்து போமே.

50. உசந்துபோம் தாதுடைந்து திரேகம் பாழாம்
உற்பனமாம் மன்னரச பற்ப மாகும்
உசந்துபோம் முப்பத்து இரண்டு மட்டும்
விடாதய்யா இந்தகணம் ஓகோ பாரு
உசந்துபோம் ஆறாண்டு பிராயம் மட்டும்
உறுதிப்படும் முப்பத்து இரண்டுக் குள்ளே
உசந்துபோம் இந்நோய்க்கு முன்னே யதனை
உட்கொள்ள மண்டலத்தி லோடிப் போமே.

51. ஓடிப்போம் பத்தியந்தா ளிச்சா பத்தியம்
ஓகோகோ நெய்யினுட யதீதம்மெத்த
ஓடிப்போங் கண்ரோகந் திரேகக் கூறு
ஒசந்தகண மிந்நெய்யி லசைந்து போகும்
ஓடிப்போ மிந்தவகை யாருஞ் சொல்லார்
ஓங்காரப் பீடத்தின் அதீதப் போக்கு
ஓடிப்போம் யானுரைத்தே னெவருஞ் சொல்லார்
உத்தமியா ளம்பிகையின் அதீதம் பாரே.

## மூலக்கணம்

52. அதீதம்பார் மூலக்கண மேதென் றாக்கால்
அஸ்தியிலே வாதபித்தம் அதிக மாகி
வதீதம்பார் சீதமுடன் இரத்தம் ஊற்றும்
அதிலுளைச்சல் ஆசனமுங் கடுத்து ஓங்கி
மதீதம்பார் சுரமுடனே வயிற்றெ ரிச்சல்
பாகாது தலைநோயும் விட்டி டாது
சதீதம்பார் சண்டாள மூல ரோகஞ்
கண்ணுமையா பத்தாண்டு மட்டும் பாரே.

53. பார்க்கவே யதிவிடயங் கடுக்காய்ச் சுக்கு
பரங்கிக்காய்ச் சக்கையுடன் விலாமிச் சோடு
பார்க்கவே சந்தனத்தூள் சாதி பத்திரி
பண்பான நெல்லியொடு சித்தா முட்டி
பார்க்கவே செம்பருத்தி வில்வ வேரும்
பதமாக வகைக்குபலம் நிறுத்தி டித்து
பார்க்கவே சூரணித்து வைத்துக் கொண்டு
பண்பான கற்கண்டு பலம்இரண் டாமே.

54. பலம்இரண்டாம் அஞ்சுபலம் ஆவின் நெய்யைப்
பக்குவமா யடுப்பேற்றிச் சட்டியிலே வார்த்துப்
பலம்இரண்டாங் கொதிக்கையிலே மருந்தைப்போட்டு
பதமாகச் சீரகமும் பலந்தான் போட்டு
பலம்இரண்டாங் கற்கண்டு பொடித்துத் தூவ
பதம்பார்த்துக் கிண்டிவரில் கிரத மாகும்
பலம்இரண்டாம் இம்மருந்தை இறக்கிக் கொண்டு
பாலகனே பூசித்துப் பணிந்து போற்றே.

55. பணிந்துமே பாக்களவு உள்ளுக் கேற்று
பண்பாக ஏழுநா ளுண்ணும் போது
பணிந்துமே ஓடிவிடும் மூலக்கண மெல்லாம்
பதறாதே பத்தியந்தா னிச்சா பத்தியம்
பணிந்துமே முன்சொன்ன ரோக மெல்லாம்
பஞ்சுபோல் பறந்துவிடும் பாரு பாரு
பணிந்துமே யிந்நூலைப் பணிய வேணும்
பார்ப்பதுவு மிந்நூலைப் பாரு பாரே.

### மாந்த குணம்

56. பாரே சீதம் பலமுடனே பதமாய்க் கழியும் பலவிதமாய்த்
தேரே கெட்டப் பாலதுபோல் தெளிந்து தண்ணீர்
போலவுமே
வாரே கழியுங் கொண்பாரு மாகி யுள்ளங் கால்கையும்
நீரே குளிர்ந்த தண்ணியைப்போல் நிசந்தா னிந்தக்
கூர்பாரே.

57. பார்க்க வெதும்புங் கணைஞ்சூழலும் பனிபோல் தாக
மிகவெடுக்கும்
பார்க்க முகமும் பலவிதமாய்ப் பனிங்குபோலக்கண்விழிக்கும்
பார்க்க இந்தக் கூர்பார்த்துப் பக்குவ மெல்லா
மறிந்துகொண்டு
பார்க்க இந்தக் கூறதனைப் பண்பாய் மாந்த மென்றுரையே.

## மாந்தக் குளிகை

58. உரைப்பேன் பூரம் பலமரைதான் ஓகோ லவங்கம் ஏலமுடன்
திரைப்பேன் வசம்பு சீரகந்தான் திறமாய் மாசி அதிவிடயம்
கரைப்பேன் வகைக்குப் பலங்கால்தான் கனமாய்ப் பூரஞ் சுத்திபண்ணி
மரைப்பேன் கல்வ மதில்போட்டு மாசி பத்திரி வேர்சாறே.

59. வேர்சார் சாம மென்றுரைப்பாய்
விஷ்ணு காந்திச் சார்சாமம்
வேர்சார் நன்றா யரைத்துக்கொண்டு
விதமாய்க் கொத்தமல்லி யதனைப்போல்
வேர்சாரில் குளிகை பண்ணிக்கொண்டு
விளங்கு நிழலுணர்த் திடீர்மாற
வேர்சார் செப்பில் குளிகைவைத்து
வேதப் பொருளை மனத்தெண்ணே.

60. எண்ணவே குளிகையொன்று யெடுத்துக் கொண்டு
என்மகனே மாந்தின்கிஷா யத்தி லீய
எண்ணையிலே ஓடிவிடும் மாந்த ரோகம்
இயம்பினேன் முன்சொன்ன தெல்லாம் போகும்
எண்ணையிலே இந்தமொழி யார்தான் சொன்னார்
எடுத்துரை யாடுமிந்த முன்னூல் பாரு
எண்ணவே முன்சொன்ன மாந்த மெல்லாம்
என்னசொல்வேன் பறந்தோடும் இதனால் பாரே.

## நாய் முள்ளுக்கு

61. பாரென்றால் அரியவையர்தம் வயிற்றி னுள்ளே
பாலனாய் முன்னாளில் ஜென்மிக்கும் போது
பாரென்றால் அந்நாளின் தோஷத் தாலும்
அரிவையர்தம் பசியாலும் வருத்தத் தாலும்
வாரென்றால் குளவிகொட்டும் நாய்முள் தோஷம்
வலுத்ததையா இந்நோயின் வலிமைப் பாரு
மாரென்றால் விம்மிவிம்மி மேல்மூச் சுண்டாம்
மைந்தனே இருகண்ணீர் சொரியும் பாரே.

62. சொரியுமப்பா தலைவலியும் சுரமுண் டாகும்
சொற்பனமாம் பொறிகலங்கி முலையுண் ணாது
அரியுமப்பா விலாவினிலே அள்ளெ டுக்கும்
ஆகாகா வாயெல்லாம் நாய்முள் ளாகும்

வரியுமப்பா தொண்டைபத்தி மிகவே முள்ளாய்
வலுத்ததையா விதியினுட வலிமை தன்னால்
மரியுமப்பா தலைநடுக்கம் பேச்சொட் டாமல்
மகாதொண்டை சேதந்தான் மருவிப் பாரே.

63. மருவிப்பார் இருகண்ணும் விழித்தி ருக்கும்
மகாபாவ சண்டாள நாய்முள் தோஷம்
மருவிப்பார் இந்தக்குணம் அறிந்து கொண்டு
மகத்தான நோயிதென்று மனதி லெண்ணி
மருவிப்பார் மனதடங்கிப் பாரு மைய்யா
மைந்தனே நோய்களைத்தான் சோதித் தேறி
மருவிப்பார் நாய்முள்ளின் தோஷங் கண்டு
இலட்சணத்தில் இந்நோய்தான் தீரா தென்னே.

## செங்கிரந்தியின் குணம்

64. என்செயலால் செங்கிரந்தி வருங்கூர் கேளு
தேசத்தில் தன்பலமுந் தவிழ்ந்த போதில்
அவன்செயலா லவர்அடங்கி விம்மிக் கொண்டு
அழுகுரல்தான் பூனைக்குரல் போலே யாகும்
மன்செயலால் வலங்கட்டி நீருங் கட்டி
மாயமென்ற பெண்போலே கிடக்கும் பிள்ளை
சிவன்செயலால் நெற்றியது உசந்து வீங்கும்
சிவசிவா செங்கிரந்தி இதுதான் பாரே.

## கருங்கிரந்தியின் குணம்

65. பாரேதான் கருங்கிரந்தி பகர்வோம் பிள்ளாய்ப்
பனிபோலே சீறிவிழும் முலையுண் ணாது
பாரேதான் முறிமுறிந்து யுடல்வெ தும்பும்
பரியநா வறட்சியுடன் கண்வி ழிக்கும்
வாரேதான் அம்மலரும் விழித்தி ருக்கும்
வல்வினையாம் வத்துரும்புமுள் வினையின் பாவம்
மாரேதான் மைந்தனஞ்சு நாளில் சாகும்
மகாபாவம் கருங்கிரந்தி உரைத்தோம் நாமே.

## மலவாதம் - குணம்

66. உரைப்போம் கேளும் மலவாதம் ஒகோ கண்ணே யுருளுதிதே
கரைப்போம் நாக்கு கையும்காலும் கண்ணுக்கு மித்து
வின்பார்க்கும்

முரைப்போம் முச்சி யடிதங்கி மேலே வைத்ததை
வலிப்பிக்கும்
மரைப்போம் தூங்கா மஞ்சனிக்கும் முன்ன முலையை
விரும்பாதே.

### வாலைக் கறப்பான் - குணம்

67. விரும்பாதே மலக்கட்டு மலவா தந்தான்
இந்நோய்தான் மலவாதம் முனியோர் சொன்னார்
கரும்பாதே மலவாத மிதுதா னென்று
காட்டினோ மருவிநீயுங் கண்டு பாரு
துரும்பாதே வாலையென்ற குழந்தைக் கெல்லாம்
தொடுக்குமே இடுக்கும்வந்து தடரிப் பின்னும்
விரும்பாதே கண்டத்தில் வெடித்துப் புண்ணாய்
விஷக்கட்டிப் போலவுந்தான் பனிநீர்ப் பாய்ந்தே.

68. பனியான விகாரமுற்று அனேகங் கூறாய்ப்
படைபடைத்துத் திரேகமெல்லாம் சொறிபோ லாகி
பிணியான் சாரையுடல் மேலே காணில்
பிணிவாயில் விழிஇவந்து உதிரம் போலத்
தினியான கோலமவக் குதிர்வி ழிந்து
திசைதாது பீடமெல்லாம் நடுந டுங்கி
வனியான தீக்குணங்கள் கண்டு தானால்
வாலைக்கறப்பா னாமென்று இயம்ப லாமே.

### வாலைக்கறப்பான் - நெய்

69. இயம்புவேன் இந்நோய்க்கு நெய்தா னொன்று
இன்பமாய்ச் சொல்வோமசு வனியே மைந்தா
இயம்புவேன் பூவரசம் பட்டைச் சாறு
இன்பமுடன் ஆனதொரு படிதா னய்யா
இயம்பவே சித்தரிட எண்ணெய்படி யொன்று
இயல்பாக இது இரண்டும் சேகரித்து
இயம்பவே கசகசாப்பால் படிதா னொன்று
இருசீர கத்தினிடச் சாறு காலே.

70. காலான இலவங்கமுடன் ஏலமாஞ் சீரகம்
கரிசாலை நுணாவேர் வகைப லந்தான்
நீனவாக நிழலுலர்த்திச் சூரணமே பண்ணி
நீடிஞ்சி பலமஞ்சு நிறத்தொன் றாக்கி

வாலான சாரெண்ணெய் அடுப்பி லேற்றி
வகையான கடுகுதிரண்டால் சூரணத்தைக் கொட்டு
போலான கிண்டடியதை நெய்ப்பதம்போ லாக்கி
மெய்யான நெய்யதனை வடித்துக் கொள்ளே.

71. வடித்துமே கரண்டிநிறை யுள்ளுக் கேற்ற
வாலைகறப் பானெல்லாம் வகைகெட் டோடும்
தடித்துமே ஏழுநாள் கொள்ளும் போதில்
தவறான புளிகசப்பு இறைச்சி மீன்கள்
மடித்தயெள் கொள்ளுபா வக்காய் தள்ளு
மற்றதெல்லாம் நோய்க்காகும் மருவிக் கூட்டு
அடித்துமே மேலுக்குக் கடுகைப் பூச
அசதியாஞ் செவ்வாய்ச்செங் கறப்பான் போமே.

## எட்சிதோஷ குணம்

72. போமேதான் எட்சிதோஷக் குணந்தான் கேளு
பேறான உதிரத்தில் சூடு கொண்டு
வாமேதான் மயக்கிவைக்கும் தலையெ டாமல்
வறண்டுமே கண்பூளை கட்டி மூடும்
காமேதான் திரேகம் வற்றிக் கனல்மீ றாமல்
கர்மத்தி வினையிதுதான் சிசுவிக் கெல்லாம்
ஆமேதான் விதவிதமாய் மேனி வற்றி
ஆகவும்நீ எட்சிதோஷ மதுதான் பாரே.

## ஞானம்

73. பாரென்று வயித்தியத்தில் யோக மாச்சு
பருவமாம் ஞானமுதல் சித்தி முத்தி
பாரென்ற மனமல்லோ சத்து ருப்பல்
நாமமெல் வரமனதி லெண்ண வேண்டும்
பாரென்ற எழுவகையாம் தொத்தந் தண்ணில்
பருதிமதி நாற்காலின் செனத்த தோற்கு
பாரென்ற கோடியிலே யொருவா யய்யா
பசுங்குலமா மனிதர்வர மிருக்க மல்லா.

74. அல்லடா அவன்தனக்கு அறிவோ மெத்த
ஆதியிலே சாஸ்திரமோ அவருக் கிட்டும்
வெல்லடா புதன்சித்த மகன்இ ராசி
பத்துஇரண்டும் சென்மக்கூ றவர்க்கு மைந்தா

மெல்லடா ஏழையிலும் எளியோன் மெத்த
பாரகத்தில் தெய்வகண மவனா மய்யா
கல்லடா கற்றோமே என்று எண்ணான்
கற்றவரை யடுத்தவனும் கல்வி கேட்பான்.

75. கல்வியென்ற அவர்செயலால் நல்லோர் காண்பார்
கற்றவர்கள் பொருளாளி யென்று சொல்லார்
தெல்வியென்ற சித்தனடா இந்த சித்தன்
தேறினால் சித்தரவர் எதிர்க்க மாட்டார்
மெல்லிபமாம் ஆண்மையில்லை பொறுமை யாளி
மேடத்தின் தறுஉரையோன் விசுவா சத்தாற்
துல்லிபமாம் சுளிமுக்கு வலம்பி ரத்தில்
சாய்வு-கொண்ட அவன்வாக்கு சுழின வாக்கே.

76. வாக்கான என்னூ லாஞ் சோசி யத்தில்
வகுத்துரைத்தேன் இலட்சணங்கள் வளமாய் மெத்த
வாக்கான அம்மொழியைச் சோதித் தோரில்
வழியோடே நடைக்கருவில் வளமாய் நில்லு
வாக்காகப் பிறந்துபிறப்ப தில்லை விந்து
வாழியது பிறப்புஉண்மை யுண்மை யாகும்
வாக்காகக் கர்மதர்மம் அதிலே தோணும்
வாக்குமொழி இலட்சணங்கள் வளமாய்ப் பாரே.

## குழிதோஷம் குணம்

77. பாரே வுச்சிக் கண்குழியும்
பரிவாய்ப் பள்ளம் வளர்த்திருப்பார்
தாரே கழிச்சல் மிகவுண்டாம்
தனல்போல் திரேக மிகக்காயும்
வாரே குய்யும் பின்னாகும்
வளமாய்த் திரேகம் மிகவற்றும்
மாரே துன்பம் மிகப்படுவார்
மனையாள் ஆள்குழி தோஷமிதே.

## குழிதோஷம் - நிவர்த்தி

78. தோஷமிது தழுதாழைக் கொம்பு மஞ்சள்
குட்டிவிளா வேம்போடு வசம்பு சுக்கு
வாசமிது அரைப்பரைத்து வைத்துக் கொண்டு
வாகையிலே போட்டுநீர் காய்ச்சிக் கொண்டு

தேசமிது தாய்ப்பிள்ளை இருவ ருக்குந்
தேய்த்துமே முழுக்காட்டிச் சொல்வேன் மைந்தா
பாசமிது முக்கேணித் தண்ணீர் மொண்டு
பசுமஞ்சள் அரைத்ததிலே கலக்கி டாயே.

79. கலக்கிடாய் மங்கரியும் ஐயும் சவ்வும்
கண்மணியே அறுகாலை நூற்றெட் டோதி
வலுக்கிடாய் மேல்தெளித்துக் கடிகை வாறு
வாசமுறு திரேகமப்போ பசும்பொன் வீசும்
அலக்கிடாய்ச் சூரிவேர் பிடுங்கி மைந்தா
அன்பாகப் பஞ்சுநூ லால் குளிச மாடி
மலக்கிடாய்ப் பாலனுக்குக் கட்டிப் போடு
மகத்தான குழிதோஷம் பறந்து போமே.

80. போமென்ற குழந்தை மேனி பொன்னிறம் வாடி வேறாய்த்
தாமென்ற வயிற்றின் நாப்பல் தங்காமல் அப்பால் பொங்கும்
வாமென்ற தலையில் சேத்துமம் வந்தே கண்ணும்
குவிந்துநிற்கும்
காமென்ற பாத வீடாய்க் காணுமே எழுத்தின் கூறாய்.

81. கூறான முத்தினமந் திரத்தி னாலே
குளிர்ந்ததண்ணீர் மொண்டுநீ வேப்பிலையால் ஓதி
ஓறான தாய்ப்பிள்ளை இருவ ருக்கும்
ஓதியே இருவேளை சாந்தி செய்யில்
சீறாக இப்படியே யேழுநாள் செய்யில்
சிவசிவா பறந்தோடும் தோஷந் தானும்
வேறான மந்திரமோ டதுவோ தில்லை
வெகுவான நோயெல்லா மோடிப் போமே.

## பட்சிதோஷம்

82. போமே யுச்சிக் கண்குழியும் புசித்த பாலுந் தங்காது
போமே பச்சை வயிறுநீர்போம் பறவைக் குரல்போல்
சீறியழும்
தாமே குருகுத் தோஷமெனத் தானே தனியாய்ச் சீறியழும்
காமே புருஷள் தனைக்கூடில் கருவி லுதித்த தோஷமிதே.

83. புருஷனென்ற உடும்பினிட நாக்கு வாங்கிப்
பேறான எருக்கன்நார்க் குளிச மாடிப்
புருஷனென்ற தாம்பூலம் பூசை வைத்துப்
பெருமையதாய்ப் பூசைபண்ணிச் சொல்வேன் மைந்தா

புருஷனென்ற நயவசிம நூற்றெட் டோதி
பூமுலையாள் பாலனுக்குக் கட்டு கட்டு
புருஷனென்ற பாலனுக்குக் கட்டும் போதில்
பொலியோணான் கொடுத்துக்கட்டு தோஷம் போமே.

84. தோஷமென்ற குடித்தபால் எதிர்யெ டுக்கும்
தொல்லைவினை கண்மயக்கும் தலைதான் நோகும்
தோஷமென்ற உறவழிந்த பாச மாகில்
கொடுத்தவர்கை யெடுத்தவர்கை இருக்காப் பிள்ளை
தோஷமென்ற கடுகடுத்து வயிறு போகும்
நுரைபோலே சாந்தியதாய்ச் சீதளமே லூறுந்
தோஷமென்ற பட்சியுட தோஷக் கூறு
சொல்லார்க ளிக்குறியைத் தொடுத்துக் காணே.

85. காணவே செம்போடத் தகடு வாங்கி
கண்மணியே எண்கோண மதின்மேல் வட்டம்
பூணவே கிங்கிறியும் சிறியும் சிவவும்
பூட்டடா எண்கோணம் நடுவே பூணு
தோணவே மைந்தாநீ ஐயும் என்று
தோத்தரிப்பாய் எண்கோணம் நடுவில் போட்டு
மாணவே போட்டதிலே பஞ்சு நூலால்
மைந்தனே சுற்றிநன்றாய்க் குளிச மாடே.

## எட்சிதோஷ குணம்—நிவர்த்தி

86. ஆடுகிற யுருந்தோடு யமுது போட்டு
இச்சமர சமைத்து ஒருபாண்டந் தன்னில்
வாடுகிற எருக்கிலையில் சாதம் வைத்து
வளமாக மூவிளக்கு மாவா லேற்றி
நாடுகிற மந்திரத்தால் நூற்றெட் டோதி
நயமாகச் சாந்திசெய்து குளிசங் கட்டு
பாடுகிற தில்லையப்பா பட்சி தோஷம்
பலத்தநோய் பயந்தோடும் வித்தை பாரே.

87. வித்துந் திரேகம் மிகநாறும் மெல்லி முலையு மரித்திழுக்கும்
சத்தே வயிறு தான்கழியும் சண்டா ளன்போல் சுரங்காயும்
கத்தும் தானாய்க் கண்டாலே கவன மதுவாய்ச் சீறியழும்
மற்றுங் கண்ணைத் தான்பிசைந்து மண்ணில் புரண்ட
பாலனிதே.

88. மண்ணில் புரண்ட மீனைப்போல் மடித்து மடித்து
தான்புரளும்
சன்னி குழந்தை தானென்பார் சண்டாள மான சிசுரோகம்
வெண்ணி யேநான் தன்வந்திரி விளம்பு மிதனால்
கண்டுகொள்ளு
எண்ணிப் பறக்கும் எட்சியென்னும் இயல்பாந் தோஷ
மிதுதானே.

89. தானே சுக்கிர வாரந்தனில் தணிந்த அசுவ கெந்தியைத்தான்
மானே காப்பு ஈந்திட்டு மநசி வயவென் றுருவேற்றிப்
பானே நூற்றெட் டுருவேற்றிப் பண்பாய் வடக்கின்
வேர்பிடுங்கித்
தேனே பட்டின் குளிசமிட்டு தேவிநிறுத்தி யருகில் வையே.

90, வையே பூசை நேமமதாய் வாழைக் கனிகள் அதுபடைத்துத்
துய்ய செம்பில் சலமொன்று தோஷநீர் வார்த்துத்
தான்செய்து
தையல் தேவி தனைநினைந்துத் தண்ணீர் ஓதி தான்
தெளித்து
மையக் குளிச மதையெடுத்து மைந்தன் தனக்குக்
கட்டிடாயே.

### பறவை தோஷம்

91. கட்டே நெஞ்சில் உள்நாக்கு கனக்க வீங்கி வளர்ந்திட்டால்
தட்டே பாலுந் தங்காது தனது உடம்பு மிகுநோகும்
மட்டே கக்கும் பாலதனை மரத்தின் கசப்பு போல்நாறும்
வட்டே கால்கை அழுக்கேறி வருத்தும் பறவை தோஷமிதே.

92. வருத்தும் வெள்ளைக் குண்டியதை வளமாய்ப் பொலியும்
பொங்கலிடு
மருத்த சாபம் நிவர்த்திசெய்து மகிமை வடக்கின் வேர்
வாங்கிக்
கருத்த செவ்வாய் நாளதுதான் கனக்க மறளைக்
குறிசமிட்டுக்
கருத்த குளிச மதைக்கட்டிக் கழிப்புங் கூடக் கழித்திடிரே.

### விறப்புள் தோஷம்

93. களித்த பாலன் மேல்வற்றிக் கண்ணின் விழிகள் நீர்கலங்கித்
துளித்து ளியாய்க் குளிர்த்துமிகத் தொண்டை நாவு
மிகவறண்டு
வாயால் குடிக்க மிகத்தவிக்கும் மைந்தன் சோர்ந்து
மயங்கிவிடும்

அரலே அஞ்சித் தானழுகும் அன்ன திரட்ட விடாய்போல
எரலே யவன மானேகேள் எண்ணில் விறப்புள் தோஷமிதே.

94. என்றில் வட்டை நரிமிரட்டி வியாழந் தன்னில் காப்பு
கட்டித்
துண்டின் சேவல் பலிகொடுத்துத் தோஷநீ தீர வேம்பளிந்து
குன்றின் மைந்த ரிலுஞ்சோதிக் குழந்தை யதனைக்
குளிப்பித்து
வன்ற வேரைப் பிடுங்கிக்கட்ட வந்த தோஷம் பறந்திடுமே.

## நீர்ப்புள் தோஷம்

95. இடுமே நெஞ்சு தான்வறண்டு
இனிதாய்க் கண்கள் தான்குளிர்ந்து
எடுமேப் பெடுத்த மூச்சுவரப்
பேறாகண்கள் தான்வெளுத்துப்
படுமே பாலுங் குடியாது
பஞ்சைப் போலே மிகயிளைத்துக்
கெடுமே கஞ்சன் முகமாதே
கெடுக்கும் நீர்ப்புள் தோஷமிதே.

96. தோதே முதலைக் கொழுப்போடு துருவ வட்டத் துத்தியின்
வேர்
மாதே யிதனைக் குளிசமதில் மருவ போட்டுக் கட்டினபின்
கோதே தோஷ மந்திரத்தால் இருநூற் றெட்டு செபித்
திடுவாய்
பாரே நீர்ப்புள் தோஷமிது பறந்து பறந்து ஓடிடுமே.

## தூங்குபுள் தோஷம்

97. ஓடும் ஒக்க மயக்கமுடன்
ஓகோ வாந்தி வயிறுகழியும்
படுமே சிரசு பள்ளமதாய்ப்
பாங்காய் மேல்மூச் சேறிட்டு
வாடும் பாலன் எந்நேரம்
வகையாய் அழகும் முகம்வேறாம்
தேமே யன்ன விழியாலே
தூங்கு புள்ளு தோஷமிதே.

## பட்சி தோஷம்

98. தோஷந் தணியகோ ரோசனமும் அதிவய மஞ்சள்
வசம்பேலம்
வாசம் வேம்பின் இறகோடு வகையாய் ஓமம் விளாவோடு
பாச மதுவா யரைப்பரைத்துப் பாலன் றனக்கு
முழுக்காட்டிக்
கோச மதுவால் நூற்றெட்டுக் குணமாய்ச் சாந்தி
தான்செய்யே.

99. செய்யக் கண்ணு மிகச்சோரும் சித்தந் தண்ணீ ராய்க்கழியும்
மைய்ய மேனிக் கறுப்பாகும் மாங்காய்ப் போலு மரசினமாம்
வய்யத் திரேகம் மிகவிளைக்கும் வா னம் போலே வயிறாகும்
தையல் பட்சித் தோஷமிது தீரா தீரா தென்றுரையே.

100. தோஷமிது அதன்வகையைச் சுருக்கிச் சொன்னோம்
துரோகியாம் பாவிகட்கு இந்நூ லாகா
வேதாந்த தர்மத்தோர் பார்க்க வேணும்
நீதிநெறி யில்லாதார்க் கீய வேண்டாம்
நிச்சயமாம் தர்மசிவ யோகிக் கீய்நீ
வாசமிகு இந்நூ லார் கொடுக்கப் போறார்
... ... ... ... ......
அவ்விசையாய் ஏதகத்தோர்க் கெய்தும் பாரே.

101. பணிந்ததுவே யிந்நூலைப் பார்க்க வேணும்
பணிவதுவும் வயித்தியத்தைப் பணிய வேணும்
பணிவதுவும் வயித்தியமோ பிரம்ம மூலம்
பாராட்டால் ஒன்றுமில்லை பாவி பாவி
பணிவதுவும் மெய்ஞ்ஞானி வயித்தியஞ் செய்தால்
பரமசித்தர் குருசித்தர் வயித்தியஞ் செய்தார்
பணிவதுவும் அறிவாலே வயித்தியஞ் செய்தால்
பாவமில்லை தர்மமிது நிமையில் கூட்டும்.

102. நிமையான தோஷம்சரு வாங்க மெல்லாம்
நிமைப்பொழுதில் தீர்மூல மதனைச் சொல்வேன்
வகையான வநசிமய வென்று மைந்தா
வங்சிங் கென்றுஞ்சிவ யநம வென்றும்
தொகையான தோஷமது நிவர்த்தி யாச்சு
சொல்லவுமே போமோசூட் சாதி சூட்சமம்
கிமையான தோஷம்ந வர்த்தியாச் சென்று
கிலேசமுற்று நீகாட்சிப் பெருகு வாயே.

103. பெருகுவாய் யிந்நூல்முந் நூறு போல
பேசார்கள் பெரியோர்கள் கருவாய்க் கண்டு
........................................
தையல்பட்சி தோஷமிது திராதென் றுரையே.

104. தோஷமிதன் வகைநன்றாய்ச் சுருக்கிச் சொன்னோம்
தோஷாதி தோஷமெல்லாம் சுருக்சிச் சொன்னோம்
வேஷமென்ற பாவிகளுக் கிந்நூ லாகா
வேதாந்த தருமத்தோர் பார்க்க வேணும்
கூசமென்றிச் சங்கோர்க்கு யிந்நூல் வேண்டாம்
குணமுள்ள தருமசிவ யோகிக் கீய்நீ
வாசமுள்ள யிந்நூலார் கொடுக்கப் போறார்
வரிசையாய்க் கற்றோர்க்கு எய்தும் பாரே.

105. பணிவதுவே யிந்நூலைப் பார்க்க வேணும்
பணிவதுவும் வயித்தியத்தைப் பணிய வேணும்
பணிவதுவும் வயித்தியமோ பிரம மூலம்
பாராட்டால் ஒன்றுமில்லை பாவி பாவி
பணிவதுவும் மெய்ஞ்ஞான வயித்தியஞ் செய்தால்
பரசித்த குருசித்தர்ப் படிக்கண் டுக்கொள்
பணிவதுவும் என்னூல்முந் நூற்றைச் சொன்ன
மருமத்தைக் கண்டுவிரித் திட்டேன் தீரே.

### வாய்வு பிடிப்புக்குப் பற்று

106. தீர்த்திட வாய்வுப் பிடிப்புடனே
திரவும் நானொரு பத்துசொல்வேன்
பார்த்திட சூதம்விரா கன்இரண்டு
பண்பாய் வங்கப் பொடியிரண்டு
கார்த்திட இரத்தப் பழமுடனே
கண்டு பறங்கிக் குன்றிவித்து
சார்த்திடச் சஞ்சீவி யரளிவிதைச்
சண்டாள மூதேவி எட்டிவித்தே.

107. வித்தே யண்ட வெண்கருவால்
விட்டரைச் சாமம் ஆட்டின்பின்
சத்தே நல்லெண்ணெய்க் கொஞ்சம்விட்டுச்
சடாட்சரக் காயும் விராகன்லோட்டுப்
பத்தே கொண்டு அறப்பரைத்து
மைந்தா வினைமேல் பூசிடவே
கத்தே கத்தரிடம் ஓடிடுமே
கர்ம வினையுடன் ஊழ்வினேயே.

108. கர்ம பிடிப்பு வீக்கமுடன்
கன்னியர் கர்ப்பக் கால்வீக்கம்
கர்மக் குடைச்ச லிடுப்புளைப்பும்
தண்ணிவிட் டேங்கின் மேகவாய்வு
மர்ம அறையி லாப்புடனே
மகிழ்ந்த நரம்புத் துடைவாழை
வர்ம வைப்புச் சூனியமும்
வாராதென்று உரைத்தோமே.

## மச்சகேந்திர வாய்வு குணம்

109. வாரா மச்ச கேந்திரவாய்வு
வருங்கு ணத்தை பகருவன்கேள்
நாறா கர்மப் பாவிகட்கும்
ஞானம் தெரியா மூடருக்கும்
ஏறா யில்ல மளித்தோர்க்கும்
எளியோர் நிந்தை செய்தோர்க்கும்
தேறா மச்ச கேந்திரவாய்வு
தீர்த்து துரத்திச் சண்ணுமென்னே.

110. கண்ணும் சீதள வாய்வுபண்டஞ்
சண்டாளக் கார்த்திகைச் செவ்வாயில்
விண்ணுமந் நாளில் கொண்டுவின்ற
விருதாவில் மாத விடாய்ப்பெண்ணைக்
கண்ணு நிமையில் மோகமதாய்க்
கண்டு புணர்ந்த பாவிகட்கு
மண்ணு மச்சகேந் திரவாய்வு
மண்டலத்தி லேறி நிற்குமென்றே.

111. நிற்கு மென்ற வாய்வுநிலை நீடு மருங்கு முறிந்ததுபோல்
தற்குந் திரேக மொடுபிறந்தான் சத்தையைப் போலும் சுத்துவில்லை
மற்க மடித்த செத்தையைப்போல் மாண்ட பிணம்போல் கிடப்பான்பார்
கிற்கு மொருகண் மிகச்சுழலும் சிறுப்ஞ் சடைந்தார் சாயையென்றே.

## துவாலைத் தயிலம்

112. ஒன்றும் வாய்வு மிகக்கேளு ஒத்தப் பிணத்திலும்
செத்தப்பிணம்
கண்டு மொருபுறங் கால்கையும் கனத்த தூசதுபோல்
கிடக்கும்
மன்றான் மச்சை தனிற்பிறந்த மாபாவ சண்டாள
வாய்விதுதான்
தொன்று மிதுதனைத் தீர்ப்பதற்கு துவாலைத் தயில
முரைப்பேனே.

113. உரைப்பேன் எந்தன் குருவருளால் ஒகோ மக்கா
ளுங்களுக்காய்த்
திரப்பேன் வேம்பின் எண்ணெயுடன் விச்சிப் பாலும்
எட்டியெண்ணெய்
கரைப்பேன் கண்டங் கத்தரிப்பால் கஞ்சன் வெள்ளெ
ருக்கின்பால்
முரைப்பேன் குன்றி வித்தின்பால் ஒக்கச் சரியா
யடுப்பேற்றே.

114. ஒக்கப் பிணியாம் ரோகிணியும் ஒகோ காயங்
கோவெண்ணெய்
தக்கச் சரியா யரைத்ததனைத் தருவா யெண்ணெய்
அதில்கரைத்து
வெக்க நீர்போகக் காய்ச்சிநன்றாய் வேதாந்த தேவி
பூசைபண்ணி
வக்கர மொருபிரபஞ்சக மூலமதாய் வழித்துத் தேய்த்துத்
துவாலையிடே.

115. பூசைப் பொன்னின் பணியாளைப்
பூசைப் பண்ணு வயிற்றுநோயும்
அணுகாது வாராதென் றோடிவிடும்
பிரமாந்த மச்ச் கேந்திர
வாய்வும் அடியோ டோடிடுமே.

## திரிலோக செந்தூரம்

116. ஓடுந் திரிலோக செந்தூ ரான்கேள்
ஒகோ மக்காள் உங்களுக்காய்த்
தேடும் லோகத் தோர்கம்பி
வாங்கித் திரமாய்ச் சுத்திசெய்து

வாடும் மண்டை யோடெடுத்து
வந்து வகையதாய்ச் சுத்திபண்ணி
ஓடுஞ் சுத்தகங் கையிலிட்டு
நன்று யரைத்ததின் மேல்பூசே.

117. பூசி யெட்டிக் கனிவாங்கிப்
போற்றத் தமரு மதைச்செய்து
வாசத் தார்முன் போற்றலையும்
வகையா யரைத்து அதில்பூசி
மசைகக் கம்பி யதிலடைத்தங்
கமருயிரு எட்டுத் தரமடைத்து
அசையாமல் சீலை அஞ்சுசெய்து
அரகரா எண்ணூறு எருவில்போடே.

118. போட்டெடு யசுவனி யென்மகனே
பெற்றசெந் தூர மென்னசொல்வேன்
தீட்டே செந்தூர மதீதமெத்தத்
திரிலோக மெச்சுமிச் செந்தூரம்
கட்டே காலனைப் போல்வந்த
கருமம் மச்சகேந்திர வாய்வோடும்
மட்டே இந்நூல் மகா நூல்தன்
வந்திரி சொன்ன மகிமையிதே.

## உத்தாமணி கற்பம்

119. மானந்தச் செந்தூரம் வைத்துக் கொள்ள
மகிமையுத்தா மணிக்கர்ப்பம் வரையக் கேளு
வானந்த வேலிப் பருத்திச் சாறும்
வகையிஞ்சிச் சாறுடனே கத்தா ழைச்சார்
ஆனந்தக் கேசரிப்பா லுடனே சேர்த்து
அக்கிராப் பூண்டுத் தயில முடன்காண்
காணந்தக் கொம்புத் தேன்வ கைக்குக்
கண்டுமே கால்பங்குச் சேர்ந்து வாங்கே

120. வாங்கியே அடுப்பி லேற்றியதை
வளமைச் சிறுதீ யாகமுட்டி
வாங்கியே திரிக டுகுடனே
ஆயிர மாண்டு வேட்பின்பட்டை
தாங்கிய சன்ன ராஷ்டகமும்
தண்ணீர்ப் பதம்போல் தூளிபிடித்துப்
பாங்கியே பாகுப் பதந்தனிலே
பதமாகக் கொட்டிநீர் கிண்டிடீரே.

121. கிண்டிடீர் லேகிய மதைக்கொள்ளக்
கேந்திர வாய்வு பறந்திடும்பார்
அண்டிடும் நோய்க ளெல்லாம்தான்
அகன்றிடும் தேவி யருளாலே
அண்புடும் அசுவனி யென்மகனே
யிந்த நூலைப்பணிந் திடும்மக்காள்
சண்டியைப் போல்வந்த வாதரோகம்
சங்கை யருளென் றோடிடுமே.

122. ஓடிடும் ஆனந்தக் கற்பனமும்
உண்மையதன் விபரம் சொல்வோம்பார்
தேடிடும் கரும மூடருக்கு
இணையதாய் மீளுங் கொள்ளிச்சுட்டன்
பாடிடும் சருவ திரேகமெல்லாம்
பஞ்சைப் போலும் செச்சையதாய்
நாடிடும் அத்திக் காயதுபோல்
நானில மெல்லாம் மிகவெடித்து.

123. வெடித்துடன் மிக்கச் சீழ் சொரியும்
வெண்மை யதுபோல் திரேகமெல்லாம்
படித்துடன் மிஞ்சிப் பாவிரண
பதத்தை அறிந்து பரவிநிற்கும்
கடித்துடன் உள்ளம் கருகிநிற்கும்
கர்ப்பிணி தானும் ஆகாது
தடித்த உடம்பு குஷ்டசொறி
தன்போல் எரியும் திரேகமென்றே.

**சஞ்சீவி லேகியம்**

124. எரியுமென்ற சஞ்சீவி லேகியந்தான் கேளு
என்னசொல்வேன் என்னசொல்வேன் லேகியத்தின் மார்க்கம்
குறியென்ற சஞ்சீவிக் கொடிதான் வாங்கி
குவலயம்போல் மேல்தோலை எடுத்துப் போட்டுச்
சிறியதுண்டாய் வெட்டியதை ரவியு லர்த்திச்
சிவசிவா தூளித்துவடி கட்டிக் கொண்டு
கரிமுகனை வணங்கியதைச் சுத்தி பண்ணிக்
கரிசாலை யத்தற்குநிகர் சூரணமே சேரே.

125. சூரணஞ்சேர் சாதிக்காய் சாதி பத்திரி
சுகந்தமல்லி செண்பகப்பூ கற்கடக சிங்கி
சூரணஞ்சேர் குங்குமப்பூ சந்த னத்தூள்
தீஞ்சான இலவங்கமுடன் சுக்கோ டேலம்
சூரணித்துச் சேர்வகைக்கு கால்பலமே சேர்த்துச்
சூரணித்துச் சூரணத்தோ டொக்க சேர்த்துச்
சூரணஞ்சேர் அஞ்சுபலம் கற்கண் டிட்டு
கோவெண்ணெய்க் கூட்டிடியே யரைத்தி டாயே.

## உள்மாந்தை எண்ணெய்

126. அரைத்திடவே யமுர்தாதி லேகி யந்தான்
யரகரா மேகவெட்டை மேக சாந்தி
விரைத்திடவே யோடும்பார் பீலிகைக் குஷ்டம்
விதமான யனுபான முன்செந் தூரம்
கரைத்திடவே லேகியத்தின் செயலே மெத்தக்
கண்காணா தேயெல்லாம் கன்றிப் போகும்
உரைத்திட்ட யுள்மாந்தை எண்ணெய் சொல்வேன்
உத்தமனே சிறுநாகம் பெரும ருந்தே.

127. மருந்தான வசம்புசீ ரகம் இரண்டும்
மைந்தனே நாரத்தம்வேர் பூண்டு காயம்
விருந்தான யிதுவகைக்குப் பலங்கால் வீதம்
விளம்பொண்ணா தக்காளிச் சார்விட் டாட்டி
குருந்தான எண்ணெய் சேரில் கலக்க
குருவை யனுதினமும் போற்றி போற்றி
திருந்தான அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொண்டு
நீமகனே கரண்டிநிறை மூன்று நாளே.

## சலமாந்தை எண்ணெய்

128. மூன்றுநாள் வாடவேஉள் மாந்தை தானும்
முறிமுறிந்து கொண்டோடும் உண்மை உண்மை
மூன்றுநாள் பத்தியமும் புளிப்பு ஆகா
உத்தமனே சலமாந்தை எண்ணெய் கேளு
மூன்றான வெதுப்படக்குச் சிறுபச் சரிசி
உண்மையிது பீநாறி நுணாவின் சாறும்
மூன்றான சாரணைக் கையின் சாறும்
முறைவகைக்குப் படிகாலாய் அளந்து கொள்ளே.

129. அளந்துநாழி எண்ணெயிலே கலந்து கொள்ளு
அரைப்பலமாய் வசம்புள்ளி மஞ்சள் சேர்த்து
அளந்தூற்றி தீமுட்டிக் கலந்து காய்ச்சி
அடிக்கடி திரண்டுவர இறக்கிக் கொண்டு
அளந்தெண்ணெய்க் கரண்டிநிறை வார்த்தீ ராகில்
அலைந்தோடும் நோயெல்லாம் பத்தி யங்கார்
அளந்தஆ வாரம்வேர் சரக்கொன் றைதான்
அரிவிஷ்ணு கிரந்திநிலக் குமிழம் வேரே.

130. வேரோடு அம்மாம்பச் சரிசி யேலம்
சீரகம் யானைக்கால் வணங்கி பூண்டு
நாரோடு வகைக்கு—அரை பலமே வாங்கித்
தாரணியில் சித்தரண்டத் தெண்ணெய் ஒன்றில்
கூரோடு ஆவின்பால் விட்டி ழைத்துக்
குறிசொல்வேன் கலக்கியெண்ணெய் எரித்து வாங்கிச்
சீரோடு கரண்டிநிறை மண்டலங் காலாகச்
சீறாய்இச்சா பத்தியமாய்க் கொள்ளச் சொல்லே.

## கணத்தெண்ணெய் பிள்ளைக் கழிச்சலுக்கு

131. கொள்ளவே கணப்பாண்டு கணச்சு ரங்கள்
கொடிதான அஸ்திவெட்டை யிருமல் ரத்தம்
கொள்ளவே பறந்தோடும் எண்ணெய் மார்க்கம்
குறிசொல்வேன் சிறுபிள்ளைக் கழிச்சல் தோஷம்
கொள்ளவே உப்பிலியின் பூண்டு வாங்கிக்
குணமாக ஆவினிட நெய்யும் சேர்த்துக்
கொள்ளவே இரவியில்வைப்பாய்ச் சாமம் நாலு
குருவருளால் பிள்ளைதனக் கீந்தி டாயே.

## வரிகறப்பான் எண்ணெய்

132. குறியான கழிச்சல்வகை யெல்லாந் தீர
குணமுண்டாம் இவ்வகையைக் கூர்ந்து பாரு
வரிகறப்பான் எண்ணெய்தனை வரிசிப் பேன்கேள்
வரிகொட்டைக் கரந்தவேர் செருப்படி யின்வேர்
முரியான நீவியிலை விசிறிப் பட்டை
பூத்தகோ டாசிலையின் பட்டை யின்தோல்
கரியான முள்கரணை வேலிப் பருத்திக்
கறிசாலை பெருங்கிளாப் பட்டை வேரே.

133. வேரான ஆரைவேர் காணிவேர் பட்டை
இதமான பிரமட்டைச் சிறுக்கீ ரையின்
சீரான வட்டத்திப் பிலியின் வேரே
சிவசிவா புலிதுடக்கிப் பட்டைத் தோலும்
காரான பலமுறையாய் நிறுத்து வாங்கிக்
கார்வசம்பு பலமரைதான் அதனோ டொக்க
ஆரான ஏறண்டம் படிகா லாக
அவ்வகையைத் தூளிடித்து அதனில் சேரே.

134. அதனிற்சேர்த்து அடுப்பேற்றிக் கொதிக்கக் காய்ச்சி
அச்சமற வடிக்கட்டி யிறுத்துக் கொண்டு
வத்தநீர்சேர் நாலுநாள் கரண்டி கொள்ள
வரிகறப்பான் உமிகறப்பான் மாண்டு போகும்
கதனிற்சேர் செல்கறப்பான் கதிக றப்பான்
கதறிட்டு ஓடிடும்பார் கண்பா ராமல்
அதனிற்சேர் மண்டைப்புண் கறப்பான் சுட்டு
மகாவெட்டைக் கறப்பனுடன் மயங்கிப் போமே.

## மேலுக்குத்தயிலம்

135. போமென்ற மேலுக்குத் தயிலஞ் சொல்வேன்
புகழான யுறிகடுகு எருக்கன்வேர்ப் பட்டை
வாமென்ற மருக்கலாம் வேரின் பட்டை.
வட்டகிலு கிலுப்பையுத்தா மணியின் வேர்த்தோல்
காமென்ற நல்லெண்ணெய் தனிலே யிட்டுக்
காய்ச்சியே துவலையிடக் கருகிப் போகும்
நாமென்ற இருமூன்று வேளை போதும்
நல்துவலைத் தயிலமிது நல்கு வீரே.

## சுரத்துக்கு, சன்னிக்கு—குளிகை

136. நல்குவீர் நல்லேலேங் கிராம்பு முத்தம்
நல்மதுர மிருவேலிவெண் கடுகு சுக்கு
அல்குவீர் நன்னாரி முந்திரிகோ ரோசனை
அரகரா தாளிசமும் நிலப்பனை யின்வேர்
வல்குவீர் சடாமாஞ்சில் சந்த னத்தூள்
வகையிலுப்பைப் பூவுடனே தேவ தாரம்
மல்குவீர் திப்பிலியும் ரோகணியும் வகைக்கு
மைந்தனே கால்கழஞ்சாய் நிறுத்துக் கொள்ளே,

137. நிறுத்துவை கல்வத்தில் போட்டுப் பின்பு
நிலையான செவ்விளநீர் தண்ணீர் வார்த்து
வறுத்துநீ சாமமிரண்டு விடாதே யாட்டு
வழியமைபோ லாகுமிந்த வரிசை பாரு
குறுத்துமே முலைப்பாலால் சாமம் இரண்டு
தளராமல் அரைத்திட்டு வழித்தெ டுத்துப்
பருத்தகுன்றி யவ்வளவே உருண்டை செய்து
பட்சமொன்று நிழலுலர்த்திப் பதனம் பண்ணே.

## மாந்தகணத்துக்கு மாத்திரை

138. பதனமதாய் முலாப்பாலி லுருண்டை ஈயப்
பறந்திடுமே பழஞ்சுரமும் விடாத காய்ச்சல்
விதானமதாய் அம்மையார் கூந்தல் கொண்டு
விற்பனமாய் கியாழமிட் டதிலே ஈய
மதனமென்ற பதின்மூன்று சன்னி போகும்
மகத்தான விஷத்தோஷம் கதிகெட் டோடும்
அதினமென்ற ஆமைசுரஞ் சுரங்கள் எல்லாம்
சாமத்தே விரண்டோடும் அனலா மென்றே.

139. ஏலாதி மாசிக்காய் திப்பிலியோ டேலம்
இனியகோ ரோசனையும் கோஷ்ட மாஞ்சில்
நீலாதி சீரகந்தா னிரண்டாம் யேனத்
திறத்தோடே கால்பலமாய் நிறுத்து வாங்கி
நீலாதி கல்லிலிட்டு முலைப்பால் வார்த்து
ஒருசாம மூன்றரைத்து யுருண்டை செய்து
ஏலாதி கணச்சுரங்கள் கண்ட பேர்க்கு
எடுத்திடுநீ முலைபாள லீந்தி டாயே.

## சுரம், விஷமாத்திரை, ஏலாதி உருண்டை

140. ஏலாதி யுருண்டையதின் விபரங் கேளு
இனிதான திரிகடுகு சாதிக் காயும்
ஈந்திடால் கிராம்பேலம் ரோகணியும் மஞ்சள்
விதநாபி சரக்குவகை கழஞ்சு ஆகும்
ஈந்திடாய் கல்வத்திலிப் பிடியா விட்டு
மெய்யான பழச்சாற்றால் சாமம் இரண்டு ஆட்டி
ஈந்திடாய்ப் பயிறளவு உருண்டை செய்து
அரிசிமாசி பத்திரி கியாழந் தூட்டே.

141. ஊட்டவே விஷசன்னி சுரங்கள் விக்கல்
ஊணர்வான குளிர்சன்னி யுளற்கெட் டோடும்
நீட்டவே இந்நூலை முந்நூறு பாட்டால்
நிகழ்த்தினேன் குழந்தைகள்தன் னிறசுத் தாலே
கூட்டவே சிசுவின்நோய் திறப்பா ராகில்
குருடுமுடப் பிறப்பளவும் அற்றுப் போச்சு
சட்டமுடன் இந்நூலார் கொடுக்கப் போறார்
சண்டாளப் பிறப்பெனவும் எய்தா தென்றே.

### கஸ்தூரி குளிகை

142. எய்தாமல் கஸ்தூரி கழஞ்சு ஒன்று
இனிதான குங்குமப்பூ கழஞ்சு இரண்டு
எய்தாமல் கோரோசனைதான் மூன்று
இம்மூன்றும் கல்வத்தில் இட்டுக் கொண்டு
எய்தாமல் அமிர்தமெனும் முலைப்பால் விட்டு
இனயிதோர் சாமம் ஒன்றரைத்துக் கொண்டு
எய்தாமல் குன்றியைப்போல் நிழலு லர்த்தி
யெடுத்துநீ செப்புதனி லடைத்தி டாயே.

143. அடைத்திடாய் மாத்திரைதா னொன்றெ டுத்து
அந்த எடைக்கு முலைப்பால்விட் டிழைத்துக் கொண்டு
இடைத்திட்டால் முன்னாவில் இழைத்திட் டாக்கால்
விஷதோசம் விஷசன்னி தான்விட் டோடும்
கடையெழுந்த குளுமைகளும் மானே கேளீர்
குருவருளாங் கஸ்தூரி மாத்திரை தானே.

144. தானெனற் செந்தூரம் திரிபாலைகுங்கு மப்பூ
கஸ்தூரி கோரோசனை திரிகடுகோ டேலம்
வாமேதான் கால்பலமாய் நிறுத்துக் கொண்டு
வகையாகக் கிராம்புவது விராக னொன்று
காமேதான் கல்லத்தில் தாக்கிக் கொண்டு
கருநொச்சிச் சார்விட்டுச் சாம மாட்டி
நாமேதான் சிறுபயிறுபோ லுருண்டை செய்து
நல்துளசி சார்விட்டு நயந்துக் கொள்ளே.

145. நயந்துகேள் கணமாந்தைக் கணச்சு ரங்கள்
நற்பெரிய வயிறுப்பும் பேரா மாந்தை
நயந்துகேள் வாந்திவயி றுப்பி சங்கள்
நாடாது இவ்வுருண்டை நளின மெத்த

நயந்துகேள் என்குருவின் செயலால் சொன்னேன்
நமசிவாய மென்று அவன் நாவி லேத்து
நயந்துகேள் ரிஷியென்றும் பெருண் டாக்கி
நாம்கண்ட பிலனெல்லாம் விலகின் றோமே.

### சுரவில்வாதி மாத்திரை

146. நவின்றசுர வில்வாதிமாத்திரை தன்னைக் கேளு
நல்லபச்சைப் பூங்கா இலவங்கம் கால்தான்
நவின்றிட்டோம் வால்மிளகு சிறுநா கப்பூ
நன்றான ரோகணியும் ஏல மிஞ்சி
நவின்றிட்டோம் சுக்குநல் சீர கங்கால்
நவின்றதனால் செவ்வாலம் பருப்புங் கொண்டு
நவின்றிட்டோம் பொற்கையான் சார்விட் டாட்டி
நவநாள்தான் சென்றபின்பு மிளகுபோ லாக்கே.

147. மிளகுபோல் உருண்டைசெய்து செப்பில் வைத்து
உத்தமனே இஞ்சிதேன் முலைப்பால் தன்னில்
இளகுபோ விழைத்துண்ண இனியென் சொல்வேன்
இனிதான சன்னிசுரம் மாந்தசுரம் போகும்
களுகுபோம் வாதபித்த சிலேத்து மந்தான்
கடந்தசுரங் களாயிரமும் கணமும் போகும்
அளகுபோல் இந்தமுறை இட்ட பேர்க்கு
மகத்தான நந்தீசர் செயல்தான் காணே.

### சஞ்சீவி மாத்திரை

148. செயலான கல்நாறு கிராம்பு பத்திரி
செவியந் திப்பிலி விடயந் தானி
முயலான கருஞ்சீரகமும் அக்கிரா கார
மொடுகடுகு ரோகணியும் சாதிக் காயும்
வயலான பத்திரியும் கடகம் சிங்கி
வசனித்தேன் கோரோ சனையோ டொக்க
......... ....... ....... .......
மதித்திட்ட குங்குமப்பூ சமன் தாமே.

149. சமனுடன் கல்வத் திட்டு இஞ்சிச்சாற் றையுஞ் சாமம்
சமனியங் கையான் சாற்றி லரைத்திடு சாம மொன்று
கமனமாய் நார்த்தம் பண்டு நாழிகை மூன்று மாட்டு
கடிகம பயிறுபோல உருண்டை கனத்தநோய் தனக்கு

சநீ

நமனில்லை எட்சி பார்வை பார்வையும் நீர்ப்புள் தோஷம்
நடுங்கிடும் கழிச்சல் மாந்தம் நளிர்சுரம் இருமல் ஈளை
எமனினை காச மில்லை ஏளியில் பால்சஞ் சீவி
ஏறன் றெடுத்த வாரே.

150. எடுத்தவாறு நந்நீசர் மகிமை யாலே
இருநூறும் முகமாந்தம் ஒருநூறும் இயம்பி னேன்பார்
எடுத்தவா றிந்நூலின் மகிமை கண்டு
எடுத்தாடும் சிரசுவின்நோய் சிறக்க நன்று
எடுத்தாடும் பண்டிதத்தை இயம்பி னோம்நாம்
எதார்த்தம் யோகாந்தம் அறிவா யிந்நூல்
எடுத்தாடும் வல்லையோ பார்க்க வேணும்
ஏதேதோ எவர்காணப் போறார் பாரே.

151. காணவே என்னூலாற் கொடுக்கப் போறோர்
காசினியி லேயதற்குக் கருமிக் கையா
தோணவே நாற்காண்ட மென்னூல் பாடித்
தொகுதிகண்டு நிகண்டாகச் சோடித் தேன்பார்
பானுவென்ற மார்க்கமுடன் சித்தாந்தங் கண்டு
பாடினேன் பயனறிய பார்த்தோ ருக்குத்
தோணமிர்தம் சொரியுமந்த நிகண்டின் போக்குத்
தேவவென உனக்கீடோ செப்பக் கூடா.

152. செப்புதற்கு யோகமுடன் ஞானம் மோக்குஞ்
செயலரிய வாதத்தின் செயலின் மார்க்கம்
ஒப்புதற்கு வயித்தியத்தின் புகழோ மெத்த
ஓகோகோ மாந்திரகக் கருவின் போக்கு
அப்பூவின் பயன்முதலாய் மூப்பின் மார்க்கம்
ஆதாயம் மேல்மூலம் கீஷா தாரம்
வப்புவென்ற வயித்தியத்தின் மூலி மார்க்கம்
வருகாணும் பரிபாஷை வசனித் தோமே.

153. வசனித்தேன் நிகண்டினுட யதீதந் தன்னை
வர்ய்சொல்ல முடியாது வரிசை மெத்த
திசனித்தேன் எண்ணூறாய் நிகண்டின் மார்க்கம்
திரசங்கம் விலாச்சங்க மெனநீர் கோடி
தொசனித்தேன் யஞ்சுக்கா வினையமும் கண்டு
துறைகண்டு மேலேறி தொடுத்திட் டேன்பார்
கொசனிப்பேன் சவுரியத்தை என்ன சொல்வேன்
கவலையத்தி வாறுகேயங் கொட்டி னோமே.

154. கொட்டினசொல் ஏதென்றால் இன்னஞ் சொல்வேன்
கொடியமா சித்துவகை வரிசை நேர்மை
ஓட்டின சொல் போகத்தின் கைபா கங்கள்
ஒடுங்கிநின்ற யோகத்தின் பூசை நேமம்
மட்டினசொல் யார்காணப் போறா ரப்பா
மகத்தான சபதங்கள் மகிமை யாண்டார்
குட்டிநெறி பரிபாஷை வழக்க மாகக்
குறைத்திட்டேன் சவுமியசா கரந்தான் பாரே.

155. நூல்பார்த்தால் பழுதில்லை கிடைக்கும் முத்தி
உன்னிதமாய்ப் பார்த்தவர்க்கு எய்தும் மோட்சம்
கால்பார்த்து நடப்பதற்குக் கருத்தாக வேணும்
கரையேற மதிவிளக்கி அருகில் நின்று
கோல்பார்த்து நடப்பவர்கள் குருட்டு மாண்பர்
கொடியதீ வினையாளி பாவ கர்மி
நாள்பார்த்து நடப்பதற்கு வயதோ யில்லை
நமனுக்கு ஆவலாய்த்து வனமாய்ப் பாரே.

156. வீனமாய்ப் பார்ப்பதற்கு நூலைத் தேடி
தெண்டனிட்டு நூல்கொடுக்கும் புண்ணி யோரே
நோகாமல் மனங்களிக்கப் பணிந்து வாங்கி
நூறுதெண்ட னிட்டுஅவ ரிடத்தி லேகிக்
கவனமாய் எழுப்பிநீ மய்யா வென்று
கைகட்டி உபசார மாக வாங்கிக்
கோபமதாய் மொழிகுளரி வாங்க வேண்டாம்
கொடியதீ வினையேயிது குருவின் ஆணை.

157. குருவறியா சொன்னமொழி யறிவால் கண்டு
கொடூரமதை வையாதே குருவைப் பூசி
திருவறியா நான்சொன்னேன் தேறு வோர்க்குத்
திங்கள்கரு உதித்தவருள் மாய்கை தன்னை
ஒருவகையா யந்தநூ லொருத்துந் தண்ணீர்
ஓங்காரம் பதிப்நிந்து உருவை நாட்டி
அறிவரிய கலைசொன்னேன் ஆத்தாள் பாதம்
அனுக்கிரகம் அவளுடைய மதீதந் நானே.

158. மதீதந்தான் சொல்லக்கே ளாதி மூப்பு
அதையெடுத்து வழலைதன்னை முடித்தால் முத்தி
அதீதந்தான் சாஸ்ருவத மொழியிற் கூட்டில்
வந்தவிதி போனவிதி வணக்கந் தோன்றும்

பதிவான பதிவாசம் பயனாய்க் காணில்
பஞ்சரத்தின் மொழிநேர்மை பணிந்தால் முத்தி
இதையறிந்து நூல்பார்த்தா லெல்லாஞ் சித்தி
சார்கடியின் விரிவிரிந்தால் ஈக மேர்வே.

159. கயிலையின் விரிவிரிந்து கனலைப் போக்கு
கஞ்சனுட பாதத்தூள் முத்திரைதான் பெற்று
மயிலைவெளி யருளகற்றி மனோ கூட்டிதை
மனத்தறிவால் ஒளியே நிழலதில் கூர்ந்து
துயிலைமுடிப் பீடமதைத் தண்ட யேறிச்
சச்சுதா நந்தமென்ற சார்பில் கூடி
பயனரிய பரிபாஷை துலக்கங் கண்டு
பாதத்தூள் தாமரையே பணிந்திடாயே.

160. பணிந்திடீர் பாதத்தூள் பட்ச ணித்துப்
பஞ்சமறை பொரிசூடிப் பதியை நோக்கித்
துணிந்துஅச்ச நாணமதை விட்டு மாறித்
துலக்கமாய்ப் படிகம்போல் துலக்க மாகி
அணிந்துபஞ்ச புட்பத்தா லருச்சித் தேதான்
மய்யாறு தலந்தாண்டி அநாதி கண்டு
கணிந்துவரும் நோய்கரத்தைக் கண்டித் தேதான்
கயிலைகிரி மேவுகின்ற கருத்தைப் பாரே.

161. கயிலையின்கூர் வெளியொளியாய்க் கண்டீர் சூட்ச
கம்பைநதி தும்பைமலர் கணிந்து சூடி
கயிலையின்கூர் இருளகற்றிச் சத்தத் தின்கூர்
கனகசபை நடனஒளி கயிலைத் தீபம்
கயிலையின்கூர் பதிதென்ன வாத்தியத்தின் நேர்மை
கயிலைமச முறுவேதம் கணிந்து பார்க்கில்
கயிலையின்கூர் சித்தோடா னந்த மார்க்கங்
கண்டிவனும் உருவறியார் குருவின் மட்டி.

162. உருவறிய மனோகரத்தை நோக்கு நோக்கு
உற்றவிடஞ் சந்துவிட முருமிப் பாய்ந்து
திருவறியா ரச்சுடரி லேறிப் பார்க்கில்
தீபஒளி நடனகீ தங்கள் தோணும்
கருவறிய கயிலாச மேறின் மார்க்கம்
காண்கிறதும் அரிதுமெத்தச் சட்டு மாண்பாய்
ஒருவழியாய் வினைபழிகள் செறகாய் நின்று
யுற்றறுற்று உய்ந்திடத்தில் உறுதி யுண்ணே.

## கலியாணி லேகியம்

163. உண்ணுதற்குக் கலியாணி லேகி யங்கேள்
உரவான கருப்பஞ்சார் நெல்லிக் காய்நீர்
நிண்ணுதற்குக் கலியாணிப் பூச ணிக்காய்
நீர்தண்ணீர் மிட்டான்கிழங்குநீர் நிலைப்ப னைச்சார்
உண்ணுமிது நெதல்கொட்டி அல்லிச் சார்தான்
ஓரிதழ்த்தா மரைச்சாறும் நேர்சிட் டிச்சார்
பண்ணும்வகைத் தாமரைக் கிழங்கு நீர்தான்
பசுந்தோன்றிச் சாறுடனே முகமு சுக்கை.

164. முசுவான குருவிசிவச் சீர வள்ளி
புளியாரை வல்லாரைக் கீழ்க்காய் நெல்லி
திசுவான திரிசூலி சுவற்ப டித்தான்
சிறுக்கீரை யகத்திகன்னி யாடா தோடை
விசுவான வெள்ளரிக்காய் பசரக் காணி
விரியானை வணங்கிசெவ் விளநீர் தண்ணீர்
உசுவான சாரிஞ்சில்செப்பு நெருஞ்சிச் சார்தான்
உத்தமனே வகைவகைக்குப் படிகால் தூக்கே.

165. தூக்கியதோர் புளிப்பிட்ட மாதளை யின்சார்
தண்ணியபன் னீரும்கொடி மாத ளைநீர்
வகைக்குயிது படிகாலாய் அளந்து சேர்த்து
வசனித்த சீனியொன்று ஆவின் நெய்தான்
பாவித்துக் குயரைவீசை பாவு சேரு
படிப்பவர்க்குக் கடைமருந்தின் பண்பைக் கேளு
ஆக்கியதோர் சோம்புநற் சீர கந்தான்
அதிமதுரந் தக்கோலங் கொத்தமல்லி.

166. மல்லியென்ற யிருபுடலும் பேர ரத்தை
மகாதிரி சாதமுட னங்கோ லந்தான்
வல்லியென்ற சடாமாஞ்சி நன்னா ரிவேர்
வெட்டிவேர் கூனகநீர் அருகைவேர்த் தோலும்
முல்லையென்ற பெருந்துத்தி வராச்சி முக்கி
முடனேற நெற்பொரியுஞ் சந்த னத்தூள்
தில்லையென்ற பருத்திமுத்தஞ் சிரதில் சத்து
தாளிசமுங் கல்நார்கல் மதமுஞ் சேரே.

167. சேர்க்கவே கற்பூரச் சத்துப் பூரம்
செண்பகப்பூ செங்கீரை வச்சிர வல்லி
தார்க்கவே சங்குபற்பம் வாளஞ் சோறு
தான்வகைக்கு பலமரைதான் தூள தாக்கி

மூர்க்கமுடன் சார்நெய்யு மொன்றாய்ச் சேர்த்து
உத்தமனே நீர்வார்த்துக் காய்ச்சும் போது
ஏர்க்கவே சூரணத்தை எடுத்துக் கொட்டி
ஏகமொன்றாய்க் கிளறிட்டு இறக்கி டாயே.

168. இறக்கியே கணேசன்முதல் வயிர வற்கு
ஏகாந்தவாலை மனோன்மணி தாயா ருக்குத்
துறக்கியே பூசித்துத் தியானஞ் செய்து
தொழுதுஇரு கரங்கூப்பி யடிப ணிந்து
பறக்கியமாய்த் தீரும்நோய் விரும்ப யீன
தாபசுர மாதல்சுர சன்னி வாதம்
பித்தசுரம் வயிற்றெரிச்சல் வெங்கிப் போகும்
வெண்பாண்டு வளிகாசம் சயங்கள் போமே.

169. சயங்கள்போம் நீரிழிவு காமாலை மேகம்
சயநீத்தல் புண்புரைகள் நயன காசம்
சயங்கள்போம் அதிசாரம் சோகை பாண்டு
அதிகசுரம் தாபசுபம் அதிக வாந்தி
சயங்கள்போம் மண்டையிடி யன்ன காசம்
சண்டாளப் பீனிசங்கள் சாந்த மாகும்
சயங்கள்போம் சொன்னதுக்குள்ள நோய்கள் தீரும்
சார்பான லேகியத்தின் சார்பி தாமே.

## குங்குமப்பூ லேகியம்

170. சார்பான குங்குமப்பூவெள் ளரிக்காய் வித்து
சாதிக்காய் இலவங்கப்பூ இலவங்கப் பட்டை
எரிவான இலவங்கபத்திரி ஏலக் காய்தான்
இயல்பான நீருள்ளி நிலப்பனை வேரும்
குரிவான குமரிவேர் நெருஞ்சில் செப்பு
கொடியமா துளம்வித்து யானை வணங்கி
திருவான திருவள்ர் நெல்லி முள்ளி
திப்பிலியும் அதிவிடயம் கடுக்காய் சுக்கே.

171. சுக்கான யிந்துஉள்ளி பழமுந் தாணி
கூகையுடன் மிள்குகோ தும்பைச் சத்துஞ்
சுக்கான கோதும்பைப் பருப்போ டேலம்
சப்சாவித் ததிமதுர முனாமலைச் சத்து
சுக்கான தேத்தான்ரோ கணியு மாஞ்சில்
சுகமாக வகைக்குஒரு பலமும் வாங்கிச்
சுக்கனே பனிப்ப பலந்தா னஞ்சு
சுக்குலர்த்த லாயுலர்த்திச் சூர ணித்தே.

172. சூரணித் ததில்பார்க்கச் செந்தூ ரந்தான்
சுத்தமதாய்ச் செய்துகால் பலமே யிட்டுச்
சூரணத்தில் கோவின்நெய் படிகா லாக
வசனித்தேன் கற்கண்டு பலமஞ் சிட்டு
சூரணத்தில் கற்கண்டும் நெய்யுங் கூட்டிக்
காய்ச்சையிலே பாகுவரில் சரக்கைக் கொட்டு
சூரணத்தைக் கிண்டிமெழு காகும் போது
என்னசொல்வேன் லேகியத்தை இறக்கி டாயே.

173. இறக்கியே குப்பிக்குள் பதனம் பண்ணு
என்மகனே தேவிக்கும் வயிர வற்கும்
இறக்கியே சண்முகற்கும் பூசை பண்ணி
ஏகாந்த சேர்வையதாய்ப் பணிந்து போற்றி
இறக்கியே இருவேளை அந்தி சந்தி
எடுத்துநீ சுண்டைக்கா யளவு கொள்ளு
இறக்கியதோர் புகையிலையும் பெண்ணுநீ தள்ளு
இச்சா பத்தியமதாய் எடுத்து உண்ணே.

174. உண்ணபின்பு தீரும்நோய் சொல்லக் கேளு
உத்தமனே வெட்டைநீர் மேகநீர்ப் பாய்ச்சல்
தின்றபின்பு நீரடைப்பு நீர்ச்சு ருக்கு
இரத்தப் பிரமியமும் பெருத்தப் பாண்டு
... ... ... ...
... ... ... ...
... ... ... ...
வாதகுஷ்டம் கிரந்தியெல்லாம் மாண்டு போமே.

175. கிரந்தியுடன் சூலைபதி னெட்டுந் தீரும்
கிறுகிறுப்புத் தலைசுழற்றல் வாய்நீ ரூறல்
கிரந்திபோங் கையெரிவு காலெரிவு மந்தங்
கண்ணெரிவு பித்தவெட்டை அரோகி யங்கள்
கிரந்தியுடன் வாந்திவெள் ளோக்கா ளங்கள்
குன்ம யண்ட விக்கல் போகும்
கிரந்தியுடன் அந்திசுரம் எலும்பு ருக்கி
இரணந்தொத்து மேகமுடன் தாது நஷ்டம்.

### மேகநாதன் வெண்ணெய்

176. நஷ்டமாய் ஆண்பெண்கள் மலட்டு நோய்கள்
நாடாது நாடாது வியாதி யெல்லா
நஷ்டமில்லை அழகுண்டாம் திரேகம் பொன்னாம்
நலமாகும் பத்தியந்தான் ஆவின் நெய்பால்

நஷ்டமில்லை சிறுக்கீரை பொன்னாங் கண்ணி
நல்லவெள் ளாட்டிறைச்சி பனிப்ப யறுதான்
நஷ்டமென்ற கதலிக்கனி தேவ தாஷ்சி
நலம்பெரிய சம்புநாவல் மாதுளங்கா யாமே.

177. ஆமேதான் மேகநாதயெலி செவிகுரும்பைக் காணி
அவிரியும் வல்லாரை மேனிச் சாறும்
தாமேதான் பொடுதலையு மாடா தோடை
தரைதுளசி குட்டிவிளா தூத ளஞ்சார்
கோழிஎன்ற அவரைச்சார் சரக்கொன் றைச்சார்
கொடிதான தகரைகையான் முருங்கைப் பட்டை
வாமேதான் ஓரிதழ்தா மரைபற்பா டகந்தான்
வகையான விஷ்ணுகாந்தி யானை நெறிஞ்சே.

178. நெறிஞ்சான திருகுகள்ளிச் சார்வ கைக்கு
நெஞ்சறிய படிகாலா யளந்து கொண்டு
நெறிஞ்சான ஓடையெண்ணெய்ப் படிதான் இரண்டு
நேசமுடன் கலக்கி யொன்றாய்க் கலந்து கொண்டு
நெறிஞ்சான சாதிக்காய் சாதி பத்திரி
நிகழ்ந்தயிரு சீரகமுங் கரியும் போடு
நெறிஞ்சான துத்தமுடன் துருசு காயம்
நேரான ஈருள்ளிகோரோ சனையா மென்றே.

179. கோரோசனை வகைவகைக்குக் கழஞ்ச தாக்கு
நேராக மருந்தையெல்லாங் கல்வத் திட்டுக்
கோரோசனை மணத்தக்காளிச் சார்விட் டாட்டி
உத்தமனே எண்ணெய்கற்க மொன்றாய்ச் சேர்த்து
கோரோசனை அடுப்பேற்றிக் கடுகைக் கண்டு
ஒருசாமத் துட்படநீ இறக்கி டாய்நீ
கோரோசனை வடுகனுக்கும் ஆத்தா ளுக்கும்
ஒருமனதாய்ப் பூசித்துப் பணிந்தி டாயே.

180. பணிந்திடவே சுரம்போகும் காய்ச்சல் போகும்
பணியில்லை கணம்பதி னெட்டுந் தீரும்
பணிந்திடவே நீர்க்கோழை நீர்க்கா மாலை
பஞ்சரணம் அஸ்திவெட்டை அஸ்தி சுரமும்
பணிந்திடவே கபமீளை சுவாசமு மவலம்
பதினெட்டு வினைகளெல்லாம் பறந்து போகும்
பணிந்திடவே ஈருள்ளி முருங்கைக் கீரைப்
பத்தியந்தான் இதுகண்டு பார்த்தி டாயே.

### பதினெட்டுக் கறப்பானுக்கு எண்ணெய்

181. பார்த்திடாய் இருவேளை செம்ப ருத்தி
பரிவான மணத்தக்காளி பொன்னாங் கண்ணி
வார்த்திடாய்ச் சூரியந்த நாதச் சூரி
ஆகஅம்மான் பச்சரிசித் தகரை பாசி
பார்த்திடாய்க் குட்டிவிளாம் பட்டைப்பா லிளையும்
காரியயிண்டன் செம்முள்ளி கருந்துள சிச்சார்
கார்த்திடாய்ப் பாவட்டைப் பொடுத லைதான்
கருங்காலி கீழநீர் எலைநீ றாமே.

182. வாமேதான் சுரைதுவரை கொன்றைப் பட்டை
அழகான தவசி முருங்கை டேகசாலை
வாமேதான் கத்திகத் தாழஞ் சாரும்
வகையான சின்னிஈ ருள்ளிப் பூண்டும்
காமேதான் இவ்வகைக்குத் தனிச்சார் வாங்கிக்
கடும்பாண்டம் தன்னிலேகால் படிதா னூற்றுத்
தாமேதான் ரவியில்வைத்துக் கடைமருந்தைக் கேளு
தாரணியில் நல்லோமம் சாதிக் காயே.

183. காயோடு பத்திரியும் வசம்பு கோஷ்டம்
கண்மணியே கொத்தமல்லி வெள்ளுள் ளித்தான்
வாயோடு திப்பிலியும் இஞ்சி கூட்டு
வகைவகைக்கு விராகனெடை யஞ்ச தாகும்
தாயோடு ஆமணக்கின் எண்ணெய் தானும்
தப்பாமல் மிளகரணியதால் பிறந்து யாத்தி
மாயோடு சரக்கையெல்லாம் மெழுகுபோ லாட்டி
மைந்தனே கலக்கியிடு மகிமைபாரே.

184. மகிமைபார் எரித்திட்டு எண்ணெய் வாங்கி
மைந்தனே சிறுகுழந்தை ஆண்டீ ரெட்டு.
மகிமைபார் இதுவயதில் கறப்பான் கண்டால்
வகையுடனே பதினெட்டு கறப்பான் போகும்
செகமகிழு மிந்தஎண்ணெய்ச் செப்பக்கூடா
செகத்தினிலே ஊமையென்ற பண்டிதர்க் கீயச்
செகமகிழும் நூலிந்தத் தருமத் தோரைத்
தன்கையால் தான்கூப்பித் தெண்டம் செய்யே.

185. தெண்டனிட்டுக் கடினமதாய் வாங்க வேண்டாம்
திருடருக்கு யீயார்கள் தினமும் போற்று
கண்டபடி மனஞ்சலிக்கப் பேச லாகா
கடுங்கோப மாயவரை மொழிகூ றாதே

பண்டுளப மாலையணி யமைப்பினோர்க்குப்
பருதிமொழி வடமொழியு மவர்க்கெய் தும்பார்
தொண்டுளப மாலையணி மனோன்ம ணித்தாய்
துறைகாண வழிசொல்வார் தொண்டு பண்ணே.

186. தொண்டுபண்ணித் தேரிடுவார் லட்சத்தி லொன்று
துகைநிலை யாதியந்த வரையுங் காண்பார்
கண்டுகண்டு கருவறிந்து கசடாய்ப் போவார்
கருவறியா மூடமதால் கலங்கு வார்பார்
ஆண்டுமட்டும் பறபறப்பா லாவதென்னும்
அசட்டுநினை வோர்தமக்கு யரன்வாக் கில்லை
வண்டுளப மாணிக்கச் சுரூப மான
வாசிதனை தொழுதோர் வாக்கு மென்றே.

### கிராணி மாந்தம்—கியாழம்

187. வாக்கவே சிறுதேக்கு வாய்வி ளங்கம்
வால்மிளகு யேலம்ரோ கணிசுக் கோடே
தாக்கோடே திப்பிலியும் இலவங்கம் தான்றி
தக்கோலம் பொஷிதக் காயி வகைக்கு
மாய்க்கவே கால்பலமாய் நிறுத்துத் தூக்கி
மைந்தனே தூளிடித்துப் பாண்டத் திட்டுக்
காய்த்துமே இருநாழிச் சலமும் விட்டுக்
கடுகெனவே எட்டொன்றாய்க் காய்ச்சி றக்கே.

188. இறக்கியே கொடுத்துவிட மாந்தக் கிராணி
இயலான சுரகட்டி விஷதோ ஷங்கள்
முருக்கியே இசுவுகண்ட மாந்தத் தோடு
உத்தமனே கிராணிசோகை காமாலை போகும்
உருக்கியே கணம்சுரம் கோழைக் கட்டு
நொடிக்கின்ற கொட்டாவி விம்மல் தும்மல்
நீர்களிடும் பித்தகணம் பாண்டு வெல்லாம்
நமனோடிப் போவான்பார் கியாழத் தாலே.

### சுரக்கட்டிக்குக் கியாழம்

189. கியாழத்தால் மாந்தங்கள் போக்கைக் கேளும்
கெடியான மாசிபத்திரி பற்பா டகமும்
கியாழத்தால் நாயுருவி மூக்கா வேளை
கருஞ்சீ ரகமுடனே கோழி யெச்சம்

கியாழத்தால் பற்பமதாய்ச் செய்து கொண்டு
இருவேலி சங்கோடு சுக்கோ டேலங்
கியாழத்தில் ரோகணியும் பறங்கிச் சக்கை
கீனாம்பட் டையோடு மகரவட்டப் பில்லே.

## மாந்தக் கியாழம்

190. பில்லான கடுக்காயும் மாசிக் காய்தான்
பிலமான வசம்போடு தானி முத்தம்
வில்லான தண்ணீர்படி இரண்ட தாகும்
விதமாக எட்டொன்றாய்க் காய்ச்சி யேநீ
கல்லான மாந்தமொடு சுழிமாந் தங்கள்
கைப்பிழிப்பால் வந்தமாந்தம் கழிச்சல் மாந்தம்
மல்லான மாதாவின் பாண்டத் தாலே
மருவிவந்த மாந்தமெல்லாம் மயங்கிப் போமே.

## முழுங்கு மாத்திரை

191. மயங்கிப்போம் முழுங்குமாத் திரைதான் சொல்வேன்
மக்களே சாதிலிங்கம் பூர மெல்லாம்
மயங்கிப்போம் பூங்காவி வகைக்குக் கால்தான்
மைந்தனே கல்வத்தில் போட்டுக் கொண்டு
மயங்கிப்போம் கோதும்பைக் கஞ்சி வார்த்து
மைபோலே சாமம்இரண்டு விடாதே யாட்டு
மயங்கிப்போம் மணிப்பயிறுபோ லுருண்டை செய்து
மரச்செப்பில் வைத்தடைத்து மகத்துவங் கேளே.

192. மகத்துவங்கே ளென்றுபிள்ளை களுக்கு எல்லாம்
அன்னத்தில் பொடித்துண்ண மாந்த மேகும்
மகத்துவந்தான் சிறுகுழந்தை யவர்க ளுக்கு
மாசிபத்திரி கியாழத்தில் யுரைத்தி டாய்நீ
மகத்துவங்கேள் செவ்வாப்புக் கறப்பான் போகும்
மக்களே மாத்திரையின் மகத்து வம்பார்
மகத்துவந்தான் என்னசொல்வேன் என்னூல் போக்கும்
மகத்தான சுருக்கமென மருவப் பூணேன்.

193. பூணுவது ஏதென்றால் இன்னஞ் சொல்வோம்
புனிதமுள குழந்தைவேண்டி புகலு வோங்கேள்
பூணுவது ஈசனுட மகிமை யாலே
புகழ்கின்றேன் பட்சியென்ற கிரகக் கூற்றைப்

பூணுவது பார்வைகுண மறிய வேண்டி
பேரான தோஷத்தின் பலனைக் காண்கில்
பூணுவது தன்வந்திரி கிருபை யெய்தும்
பொல்லாதார் தங்களுக்கு எய்துவ தன்றே.

**நீலியென்ற பேயும் னேயும் குருநிவர்த்தி**

194. எய்தாமல் பிறந்தஎழு நாளு தன்னில்
நீலியென்ற பெண்பட்சி விழிக்கு மாகில்
எய்தாமல் சீறியெழும் கண்ணோரைக் காது
விசிரியமும் விக்கலுடன் வாய்நீர் ஊரல்
எய்தாமல் இக்குணக்கூர் தீர்க்க வேண்டி
இயம்புகிறோம் களிம்புதனை இயல்ப தாக
எய்தாமல் எண்ணெய்ச்சட்டி யொன்றெ டுத்து
என்மகனே மூன்றுவர்ணப் புள்ளி குத்தே.

195. மூன்றுவர்ணப் புள்ளியிட்டு புஷ்பஞ் சாத்தி
உத்தமனே தாம்பூலம் குங்கு மத்தூள்
அன்றுமுதல் பேயினுட நாமஞ் சொல்லி
யநமசிவ நூற்று எட்டு மதனை ஓதி
அன்றுயிதைச் சாந்திசெய்து கால சந்தி
வடதிசையில் கொண்டுவக்கச் சாந்தி யாச்சு
மன்றுபனை ஓலையிலே றீங்கார மிட்டு
மடித்துஅக் குளிசமதைக் கழுத்தில் கட்டே.

196. கருத்தரிய முலைபுண்ணாப் பிள்ளை களுக்குக்
கருக்கோலை தனிலாறு கோண மிட்டு
உருதெரிய சூலமிட்டு நடுவில் மைந்தா
ஓங்கஒன்று ரீங்காரம் நாள தாக்கும்
மருதெரிய மஞ்சளிட்டுக் குளிச மாடி
அதனுடனே உளுந்தடையுஞ் சந்த னம்பூ
வரிதெரியா தாம்பூலம் தூபங் காட்டி
வசனித்த குளிசமதைக் கட்டி டாயே.

**பட்சிதோஷம் - நிவர்த்தி**

197. கட்டவே இன்னங் கேளு கருதுவோம் முனிவர் நாளும்
வெட்டவே வியாதி யெல்லாம் வீரிட்டுப் பயந்தே ஓட
தொட்டிட மூலஞ் சொல்வேன் தோஷத்தின் நிவர்த்தி
கேளாய்
மட்டிடு மாண்ப ருக்கு மங்கையின் மாய்கை தள்ளே.

198. தள்ளியே பார்ப்போர் கேளீர் தவனுகல் அரியும் மிறியும்
வெள்ளிய வறியும் ஸ்ரீரியும் மிக்கமிக் கிறியும் ஐயும்
கள்ளியை நினைப்ப தென்று கருதுநூ றாயி ரந்தான்
தெள்ளிய வசிய மாகும் சீர்பெற தோஷம் போமே.

199. போமென நோய்வ கைக்குரெண் டொன்பது தோஷமாகும்
நாமென தோஷ மெல்லாம் கடுகிடு மூலத் தாலே
காமென களிப்பு மந்தக் கதிர்முகன் சலத்தி லோதி
வாமென சிசுவின் கீடும் வல்வினை தீரு மென்றே.

200. வல்வினை நோய்ம ருந்து வகைவகை யுரைத்தோம் நாமும்
தொல்வினை தீர இன்னம் தோஷத்தின் மூலத் தாலே
கல்வினை உருகா லோதக் கழிச்சல்கலப் பார்வைக் கூர்கள்
வல்வினை யான மூல விருத்தாந்த மின்னங் கேளே.

201. கேளெனப் பஞ்ச வர்ணக் கிளிமுகப் புஷ்பத் தாலே
தோளெனத் தொண்ணூற் றஞ்சு தோத்தரித் தர்ச்சனைகள் செய்து
மாளெனப் பஞ்சாட் சரங்கள் மைந்தனே பூசிப் பின்பாய்க்
கோளெனத் தோஷப் பட்சிக் குலழநீர் மூடம் போமே.

202. கோலமாம் விலகு வில்லு குருமா மரங்கள் பூக்கள்
நீலமா மழிச வர்க்கத்தார் நிளநீல் சித்தி னோர்க்கு
ஆலமாங் கேது ராகு அம்சத்தில் புதன்சுக் கிரன்தான்
பேலமாம் பார்வை யாகில் பலத்திடும் தோஷ மாமே.

### கிரகதோஷ மாரணபட்சி

203. தோஷத்தின் வகையை நன்றாய்த் தொகுதிகண் டுரைப் போம் இன்னம்
வாசமா மதியால் வந்த வல்வினை வருகும் வாறும்
தோஷத்தின் வகையை நன்றாய்த் தெளிந்திட யுரைப்பே னையா
மாசத்தின் பலனும் நல்ல மனமற விளம்ப லுற்றார்.

204. விளம்பிடக் காலன் பட்சி எமன்எம தூதன் மூன்று
குளம்பிடக் காலன் வீச்சுற் கூறுமுத் ததுதா னேமன்
தளம்பிட வல்லூர் தூதன் தரணிவை முழிக்கு மாகில்
மாரணப் பட்சி யென்று மாமுனி யுரைக்க லுற்றார்.

205. உற்றுதான் தனக்கு ஒரு மந்திர மெதுக்கு மில்லை
வித்தந்த விச்ச விண்டு விளம்பிட வேத மில்லை
பத்திந்த வல்லூர் பாவ பட்சிஎம் பிலத்த பட்சி
முத்தன்று இந்தப் பட்சி மும்மூர்த்திக் கீட தாமே.

## கழிபட்சி - நிவர்த்தி

206. இட்டுநா ளடுத்ததிங்கள் யொன்றாண் டுக்குள்
களியென்ற பட்சியது கோபிக் கும்பார்
நட்டுமுட்டி வயிறுபொரும்பும் வாந்தி யாகும்
நல்லகளை சூழ்ந்திருக்கும் கண்மு ழிக்கும்
பட்டுநீதி ரேகங்கால் குளிந்நீம் ருக்குய்
பட்சியுட பிலத்திலே வருகுங் கூர்தான்
அட்டிதனை சோறுடனே பொரியு மன்னம்
படையிரண்டும் பிண்ணாக்கும் உலர்ந்த மச்சம்.

207. மச்சமென்ற மத்துக்கறியு மதுவும் வஸ்து
மாவேளையில் படைத்துவைநீ பிணிக ளெல்லாம்
குச்சமின்றி மேடைமேல் கொம்பு சீவி
குஞ்சரமே சந்தனத்தூள் இரண்டுஞ் சேர்த்து
வஞ்சமின்றித் தூபமிட்டுத் தாய்பிள் ளைக்கு
வசனித்தேன் சாந்திசெய்து வடக்கில் வைநீ
மச்சமென்ற பட்சியின்கூர் தோஷ மெல்லாம்
மதிகெட்டு ஓடிவிடும் மருவிச் செய்யே.

## மாந்த எண்ணெய்

208. செய்திட மாந்தஎண்ணெய் என்ன சொல்வேன்
திடஇஞ்சி சங்குடனே சின்னி தானும்
அய்திடக்கா ணிக்கரந்தை வன்னி தானும்
நெய்திடஎல் லாம்நிகராய்ப் பிழிந்தி டாயே

209. பிழிந்தபின் சித்தண் டத்தின் எண்ணெய்தான்
கலந்து நீயுகக் காடைபோல் தீயிடு
சிலந்தி காய்ச்சி இருக்கட்டும் இந்த நோய்
விலந்து தீர விளம்புறோம் கேளிடே:

210. கேளிடு மாந்தமல பந்தமாந் தங்கள்
சேலிடு சலத்திற் சென்னிசிற் மாந்தங்கள்
பழிவரா துண்மைதான் பறந்திடும் பாருநீ
வாலிடு வெய்யச் சீதளம் போகுமே.

211. போகவே யின்னம் புகட்டுறோங் கேளு
யாக மருளக் கிழங்குடன் புள்ளிதான்
தேக வேநிம் பழச்சார் வாங்கி
வாகிலி யெண்ணெய் வரிதெரிந் துண்டிடே.

212. உண்ணுங் கணங்க ளோடிடு மையா
மண்ணுமே மாந்த மரணநோ யபவுமே
கண்ணிலே காணாக் கதறிடும் பாருநீ
எண்ணுமே யிந்த யெண்ணெய்செய் வீரே.

213. செய்திட வேயின்னம் செப்புறோங் கேளும்
உய்திட மாஞ்சில் மணமுத்தம் சீந்திதான்
கைதிடக் காஞ்சிசூறக் கறியி டித்துநீ
செய்திட யெண்ணெயில் சரியாய்க் கலந்திடே.

214. கலக்கி டுகனல் காட்டிடு மூன்றுநாள்
விலக்கிடு யெண்ணெய் யஞ்சுநாள் கொண்டிடு
துலக்கிடு நோயைத் தோணாது பாருநீ
கலக்கிடு யிந்த மகிமையைக் கண்டிடே.

215. கண்டிடா நாமும் கதறினோம் இன்னந்தான்
வண்டிடா யிந்த வாழ்க்கையைப் பாருநீ
தொண்டிட கொஞ்சி தோழலை யாகுவார்
பண்டித பந்த பறிக்குசி பார்த்திடே.

### பறவை தோஷம்

216. குஞ்சியும் உடம்பு லர்ந்து குடல்தனில் பால்தங் காது
நெஞ்சையும் சுழியில் வாங்கும் நேரமோர் வர்ண மாகும்
மிஞ்சியே குடிகெட் டேங்கும் மேதினியில் முலையுண்
ணாது
பஞ்சின்மேல் அடியி னாளே பறவையின் தோஷந் தானே.

### பட்சிதோஷம்

217. உச்சி முலையுந் தனைப்பற்றி யுடல்மே லெங்கும்
வெதுப்புண்டாம்
அச்ச மாக உலர்ந்ததுவும் அதிலே கண்ணும்
வெளுப்பெய்தும்
பச்சை மஞ்சள் முறிந்தாற்போல் பசும்பொன் னிறமாய்
முகமிருக்கும்
இச்சை புரிந்த குழல்மடவீர் இதுவே பட்சி தோஷமிதே.

218. இந்தநோய்த் தோஷத்தோர்க் கியம்பி னோம்நாம்
பறிதகட்டி லறுகோணம் வரையீ ராறு
நிகழ்ந்தயிரு பத்தஞ்சு வீட்டுக் குள்ளே
நினைவோடே யசிமநவ என்று மாரி

யகந்துஅதின் நடுவணையைப் பிடித்து மாரி
அதனுள்ளே பெண்ணெழுத்து-யமசி-மட்டும்
மகிச்சயென்ற அறுகோண கிலியும் பூட்டி
மயேஸ்வரியைப் பூசைபண்ணிக் கட்டிப் போடே.

219. தேயா நிற்கும் மேல்வெளுக்கும் தீதே வெளுப்பு
மலமொழுகும்
தாயார் முலையில் வாய்வைத்துச் சற்றே யுண்ணும்
திகைத்திருக்கும்
காயா துடம்பு கண்பிரையும் கண்டால் இதுதான் அறியீரே
பேயால் கண்ட நோயெல்லாம் பெண்ணாட் குரிது
கண்டதுவே.

220. கனமா யதனைக் கண்டுணர்ந்து கயிலை மேவி யிருவேளை
குணமா யோது சடாட்சரத்தைக் குருநீர் தனையே
மேல்தெளிக்க
வனமா யிந்நோய் வர்க்கமெல்லாம் வாறிப் போடு
மிதுதன்னால்
தினமு வேண்டா மூவஞ்சுக் குணந்தான் தெளிக்க
நோய்போமே.

## எட்சி தோஷம்

221. தேயு முடம்பு விடைநாறும் செல்லு முலையு மறிவிக்கும்
தாயைக் கண்டா லுற்றுற்றுச் சற்று வயிறு தானேரகும்
பாயும் புலிபோல் பதறியழும் பாலரைக் கண்டால்
பார்த்திருக்கும்
பாயும் விடையோன் தான்றியப் பழுதாய் மெச்சிப்
பகையென்றே.

222. பகையைத் தீர்க்கும் சடாட்சரந்தான் பதும நிலையு
மதுகாட்டும்
துகையாய்த் தீர்க்கும் நோயெல்லாம் துன்ப மில்லை
யிதுவாலே
சிகையைக் கொண்டு யிழுத்தால்ச் சடலம் காண்பார்
மீனத்தோர்
பகையு மில்லைப் பறவைக்குணம் பார்க்கப் பொடியா
யிதுபாரே.

### நீர்மாந்தகுணம்

223. தலையது நோவாய் முகம்மின்னி தண்ணீர் போலே
மெய்குளிர்ந்து
முலையதும் முகமும் உடம்பெல்லா முத்துப் போலே
நீர்பாயும்
குயைது மூட்டி நீரெங்கும் கூறுகி றேன்பின் வயிறுவிடும்
மலையத் திரண்டுடை முலைநல்லாள் வகுத்துச்
சொன்னோம் நீர்மாந்தம்.

224. மாந்தம் போகக் கருநீலம் மகத்தாஞ் செவியக் கியாழம்மிட
வந்த நோவு நீர்மாந்தம் வணங்கி யோடும் பண்டிதரே
சொந்த மிதுதா னறிவீர்கள் சொன்ன மொழியும் தப்பாது
எந்த நூலும் இம்மொழிபோல் எவரும் சொல்லார்
அசுவினியே.

225. எந்த நோவும் வரும் விதமும் இனித்த வெல்லமுத்
தினதேங்காய்
சொந்த மவனெடை வழுவிலையும் சொறுகும் வாலை
விறால்கெண்டை
சந்தி மேதை பாவிறைச்சி சிறகு தண்ணீர் புளிமோர்தான்
வந்த பகல்சேர் கைகதலி வருகு மாந்த மிதுதன்னால்.

### தலைமாந்தம்

226. தலையுங் கனத்துக் குடலூதிச் சரீரந் தனிலே
அரிப்புண்டாம்
குலையும் வலித்துத் துள்ளிவிழும் குளிரும் சுரமும்
வெந்துவிடும்
சிலையும் புருவம் தலைதிமிராய்ச் சேஷ்டை மிகவே
வலியுண்டாம்
மலையும் பறந்து தனத்தாளே வாதைப் படுத்தும்
தலைமாந்தம்.

227. மாந்தமென்ற வகைதீர ஏலாதி யுருண்டை
மைந்தனே காட்டிடவே மயங்கிப் போகும்
எந்தவகை நோயெல்லாம் ஏலாதி தன்னால்
எதிர்க்கவந்த விதிப்பயனை அறியீர் ஆனால்

வயித்தியர்கள் வாதத்தில் கெட்ட லைந்து
வயித்தியத்தைப் பார்ப்பார்கள் சொந்த மாகக்
கொண்டாடிப் பண்டிதத்தைச் சருக்காய் என்றும்
பாரார்கள் பாரார்கள் களுகி தாமே.

### மாந்தம் வருங்கூறு

228. வயிறு கழியும் விதவிமாய் மார்பை வலிக்கும் பால்கட்டும்
பயிறு கடித்ததாற் போல்தந்தம் பதறிக் கிடக்கும்
இசுப்பெடுக்கும்
கயிறு முறுக்கி விட்டாற்போல் காலுங் கையும் தானிழுக்கும்
எழுந்து இருக்க மாட்டாது இறங்கா அன்னம் தண்ணீரே.

229. தண்ணிமையால் நோய்தீரும் வராத வெண்ணில்
தன்வயது பத்தெட்டு நாளுக் குள்ளே
யுண்ணிமைக்குள் கூணியினால் கருமத் தாலும்
உடலிலுள்ள சூட்டாலும் வினையி னாலும்
வெண்ணிமையாய் நோல்தீர்த்த வாறி தாகும்
விபரமென்ன காந்தாதி கியாழஞ் சேர்த்துச்
சொன்னிமைக்குள் ஓடிவிடும் இந்தக் கூறு
சூதில்லா நூலிதுதான் முந்நூ றென்றே.

230. கடக்கவே பெருக உந்தி உசிதமாய்ச் சிம்முந் தோன்று
முடக்கலு முகமும் பார்க்கும் மூரிகொட் டாவி யுண்டாம்
விடக்கமாய்ச் சரப்பெடுத்து விரைவிரை யழிந்தி ருக்கும்
அடக்கவும் தலைமாந் தத்தை அறிந்துமே அடக்க வல்லார்

### ஞானம்

231. வல்லோர்கள் நூல்பார்த்தால் வாய்க்கும் யோகம்
வழிகாண்பீர் வகையறியா தொழிலுங் காண்பீர்
துல்லோர்கள் மீதலத்தோர் வாய்த்தி னோர்க்குத்
துருவமென்று மேருவங்கே தோன்றுநீ தோன்றும்
நல்லோர்கள் என்னூலைக் கண்ணில் காண்பார்
நாதாந்தம் வேதாந்தம் நல்க வல்லோர்
வெல்லுவது கைமுறையாய் மருந்தைச் செய்து
விப்ரமாய் நோய்க்கிய விரண்டு போமே.

### காந்தாதி கியாழம்

232. விரண்டோடக் காந்தாதிக் கியாழஞ் சொல்வோம்
மெய்யுநகம் பெருமருந்து சித்த ரண்டம்
மிரண்டோட நறிமிரட்டிக் கொட்டான் சின்னி
மேலான கடுக்காயும் மாசி பத்திரி
திரண்டோட பற்படாகம் தாணி முத்தம்
திரிபாலை யதிவிடயம் ஊசி பாலை
கரண்டகம்போல் கறுக்கியதைக் கொட்டிப் போட்டுக்
கருநீலி நிலவேம்பு பொஸ்தக் காயே.

233. காயோடு பத்திரியும் தாளி சந்தான்
கருவேப்பி லைமுத்தம் சித்தா முட்டி
யேகமாய்த் தூளிடித்து அதனில் போட்டு
இரண்டுபிடி தண்ணீர்விட்டு எட்டொன் றாக்கிக்
கந்தாதி பயிரவனுங் கூடச் சேர்த்து
கடுகெனவே யெடுத்தீயக் கண்ரோ கங்கள்
வாயோடே பேசாமல் சருச ரோகம்
வணங்கிகெட் டோடுமிது வன்மை பாரே.

### கருநீலி கியாழம்

234. பாரேநீ கருநீலி கியாழ வன்மை
பார்தனிலே விள்ளார்கள் விண்டேன் உண்மை
பாரேநீ செவ்வந்தி விஷ்ணு காந்தி
பரும்பாளி திருத்துமா சணங்கிப் பூண்டு
பாரேநீ புங்கோடு மாசி பத்திரி
பனையீர்க்கு நுணாயீர்க்குப் வேப்பன் ஈர்க்குப்
பாரேநீ புரசுமுத்தம் கொத்த மல்லி
பஞ்சமோ தகத்துடனே யொன்றாய்ச் சேரே.

235. சேர்த்தந்த மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்த்து
சிவசிவா பெரும்பாண்டந் தன்னி லிட்டு
வார்த்தந்த மணலூற்றின் தண்ணீர் தானும்
வாரதிலே யிருநாழி யளந்தி டாய்நீ
கார்த்திட்ட மயேசுபரனைத் தியானம் பண்ணி
காய்ச்சியதை யிருவொன்றாய் இறக்கி டாயே.

236. இறக்கியே காசியென்ற குமரிக் கேற்றி
யென்னசொல்வேன் பெருமையிதின் பிள்ளாய்க் கேளு
இறக்கியந்த குப்பியதைப் பதனம் பண்ணி
என்னசொல்வேன் இதன்நேர்மை மக்காள் மக்காள்
இறக்கியதோர் நோய் வகையை இயம்பு வேன்பார்
எழிலில்லா கணப்பாண்டு கண்கா மாலை
வாய்பேசா தோடிடும்மா மஸதி வெட்டை
மாமுனியோர் உரைத்தகதை மாசில் லாதே.

## குடல் வாதம்

237. இல்லாப்பண்டு பலம்பத்து வனத்தின் கடுகு பலம்பத்து
கல்லாக் குழியின் தயிரமிதைக் கடுக எடுத்துப் பதப்படுத்திப்
பொல்லா நோய்கள் குடல்வாதம் போதும் போதும்
துவளையிட
வல்லாப் பிள்ளை உறம்விழுந்தால் வளைபோல் பூசு
உறம்விடுமே.

238. அருவைப் பார்க்கும் ஆண்பிள்ளை அக்கினம் தோஷ
மேதென்றால்
கருவா மஞ்சு மாதத்தில் காணி கலந்த தாய்முகத்தைப்
பெருவா எந்தப் பிள்ளைக்கு மேனி சுளுக்கும் வயிறுவலியும்
கருகு முகமே பேயின்குணம் கண்டு மருந்து செய்வீரே.

## அரிவை தோஷம்

239. செய்யவே பஞ்சவர்ண மலரெடுத்துச்
சேகரமாய்ப் பஞ்சவர்ணமலரே யன்னஞ் செய்து
மய்யமே பாலாலே யஞ்சுவெள்ளிப் பணம்வைத்து
அதினுடனே தூதிபம் நெய்விளக்கு மேற்றி
வையமென்ற கதலியிலை உருவு எழுதி
வரைதோறும் சாம்பிராணி வத்தி நட்டு
பொய்யல்ல நான்சொன்னேன் பண்டிதரே அய்யா
பொதுவாக முச்சந்தி யதில்வைப் பீரே.

240. வைத்திடவே தோஷமெங்கே கிரகந்தா னெங்கே
வலியெங்கே நோயெங்கே பறந்து போகும்
நய்யடியாம் சிசுவடியின் பருவந் தன்னை
நாட்டமுடன் கண்டறிந்து கருத்தில் பூண்டு

மெய்யுள்ள வஷ்டனைப்போல் பெருமை பண்ட
மேலான பத்துகுணச் சரம் வோர்க்கு
பழியில்லை மோட்சமுண்டு நகரம் போச்சு
பாதகர்க்கு இந்நூல்தான் கிட்டா தன்றே.

## குன்மம்

241. ஏது நான்கிரு லட்சண குன்மமும்
போதவே கெண்டை பிரட்டுவாய் வாய்வது
ஏதுமில் வாமலே இயம்பிய மாமுனி
சூதுசெய் வோர்பட்சம் தோன்றிடும் குன்மமே.

242. தோன்றிய குன்மம் துலங்கவகை யெண்ணில்
பான்றிய சூதம் பகர்கெந்தி லிங்கமும்
வேன்றிய கழலமாம் பருப்புடன் நாபியும்
இந்துப்பு காரம் ஏயசீனக் காரமாம்
மாலரி தாரமும் மகாதிரி பாலையே.

243. வால்மிளகு சுக்குடன் திப்பிலி யேலம்
வகைச்கு விராகனும் இரண்ட தாகும்
காலை யகலிக் கொழுந்தின்சார் விட்டு
.................
மாலையுங் காலை மருமுன்று மாட்டியே.

## குன்மம் நிவர்த்தி

244. ஆட்டி யுலர்த்திய மாந்த பறபத்தை
ஏட்டில் கோவெண்ணெய் இமைத்துநாள் மூன்றுகொடு
கெட்டந்த நோய்வகை யெட்டுமே பாடு
பாட்டுப் பறந்திடும் பாரும் பாருமே.

## நவமூலம் ஒன்பது

245. பாரும் சிசுவகை பாவத்தைச் செய்தபேர்
யாரு மறிய யான்சொல்வேன் கேள்மக்காள்
நீறும் அபானத்தில் நின்று பொத்திக்கொண்டு
காற மூலமதில் சூடுமட் டாகுமே.

246. உண்டா வலித்ததுவும் ஒடுங்கி வொளிப்போம்
தண்டா மூவரும் திகைத்திடநிற் பார்கள்பார்
கண்டோ மதுவொன்றால் காட்சி யானேகமாம்
விண்டு உண்மையே விளம்பு மின்னங்கேள்
நன்று நவமூலம் நாசம தாகுமே.

247. ஆக்கிய மூலம் ஒன்பதும் ஓடிட
பாக்கிய மொன்று பண்பாய்ப்பிறந் ததுகேள்
தாக்கிய பூரமும் தளர்ச்சியிலைக் காரமும்
வாக்கிய கல்நார் கேளுக் களந்துமே.

248. அளந்து ஒருபல மாக நிறுத்துநீ
சீந்திக் கொடிக்கள்ளிப் பாலைவிட் டாட்டிடு
வந்தநாள் சென்றபின் வழித்துக் குகையினில்
சிந்துவாய்ச் சீலை தடித்தமண் போட்டிடே.

249. போட்டிடு குக்குடம் பொருந்துஞ் சரக்கது
ஆட்டிடும் கல்வத்தில் ஆவின்பால் கன்னிப்பால்
வாட்டிடு சாமம் இரண்டது பரியவே
நிட்டில சம்பழச் சார்வார்த் தாட்டிடே.

250. சார்வாங் குமரிகை யாந்தக ரைச்சார்
தூர்வா யரைத்துத் தூதளங் காய்போல்
மறவா யுலர்த்தி மண்டலங் கொண்டிட
தயவா யொன்பதும் தாண்டிடும் பாருமே.

251. பார்தனிலே நவமூலம் பறந்துப் போச்சு
பயனறிய யின்னமொன்று பகரு வேன்கேள்
ஆர்த்திவார் இந்நூலோ மூன்று நூறு
அவனிதனில் கிட்டாது கிட்டி லையா
பேரரிய தர்மசிவ யோகி யென்ற
பேறுநீ லோகத்தில் பெறுவா யையா
மார்த்தியபே ரற்றார்கள் இந்நூல் மார்க்கம்
மகத்தானதவம் பூசையோக் கிட்டு மென்றே.

252. கிட்டினா லாவ தென்ன நூல்பாத் தென்ன
கிரியைகற்றும் பொருளிருந்தும் பலந்தா னென்ன
மட்டில்லா ஈவிரக்க மில்லா தோர்க்கு
வாய்த்தென்ன மாய்ந்தென்ன வரிசை யில்லார்

தொட்டிடமும் விட்டிடமும் ஏதோ யேதோ
துலங்குரத்தின் மாணிக்கயம் மாவு போர்த்த
மட்டதிறம் குள்ளாய வகுத்து ரைத்த
மகபதியைக் கண்டுணர்ந்து வணங்கு முத்தே.

### ரவிதக்காளி கியாழம்

253. வணங்குமுறை யாவரும் பேர்கள் ஒருமுறையை
விதனத்துடன் ரவிதக்காளி கியாழமதைச் சொல்வோம்
வணங்குமரி கொடிவேலியும் சிறுதேக்குடன் முத்தம்
வண்டோதரி சீதேவியும் கண்டங்கத்திரி வசம்பு
வனங்குன்றியும் வறவானையும் தழுதாளையும் சின்னி
வசிப்பாளையும் முப்பாலையும் நீறாறியும் நெருப்பு
வனசங்குடன் கிருவாதமும் பெருபாதமும் ஒக்கப்
பனிதாங்கியும் நாய்ப்பாகலும் அமையவேலி வாங்கே.

254. கெடிவாலுடன் நெடிமாதுளை கொடிராசையு மரத்தை
கோதும்பையும் தாளிசமும் கொத்தமல்லி மிளகு
நெடிலாவையும் பலமொன்றதா நிறையாகவே வாங்கி
நீரும்படி பத்தாகவே பாண்டந்தனி லூற்றி
வரையாகவே தீமூட்டிடுநீ வடுகனைப் பூண்டு
வசனித்ததில் ஒன்றாகவே சாடிதனில் ஊற்றிக்
குறையாயதின் திரகபலம் கொடியேயதின் பட்டைக்
கொண்டேஅதில் மருவாயிலில் தூய்மையது செய்யே.

255. செய்தந்த சரமதனி லதனை ஊற்றி
சயம்பெறவே பதனமதாய்ப் பண்ணு பண்ணு
கொய்யதிலே கரண்டிசலம் உள்ளே கொள்ளு
கொடியமகோ தரநீராம் பலப ரச்சல்
வையகத்தில் உஷ்ணங்கள் குஷ்டம் மற்றும்
வாசமுடன் அக்கினியா மாந்தத் தோடு
சையாசம் செய்தசண் டாள ரோகம்
கண்ணுண்டு போகுமிது சத்தியம் பாரே.

256. பாரென்ற சொன்னாமொழி யிந்நூல் மார்க்கம்
பார்தனிலே காட்டார்கள் பலியா தென்ன
சீரென்றார் இரத்தினமாஞ் சுருக்கந் தன்னை
சிமிட்டுவித்தை யென்றெண்ணி செகத்தில் போட்டார்
யாரென்ற காலரிந்து குலத்தைப் பார்த்து
அவன்குணத்தை முழுதிலுந்தான் சோதித் தேறி
வாரென்ற அய்னுதயமாங் காலந் தன்னில்
வசையுள்ள பாலரென்றால் ஈவார் பாரே.

257. ஈயாத மூடருக்கு ஈந்தா யாகில்
எழில்நரக மதனில்விழுந்து யலைவார் பாவி
ஈயாத கசடருக்கு ஈய வேண்டாம்
ஏத்தியே பொருளதனை நினைக்க வேண்டாம்
ஈயாத மூர்க்கருக்கு ஈய வேண்டாம்
ஈந்தாக்காலி நரகெய்தும் சொன்னேன் சொன்னேன்
ஈயறிய பொருளதனைச் சொன்னேன் சொன்னேன்
ஈயாத காரியங்கள் செய்யா தென்றே.

258. ஈயாத ருநரிதா ளிசையை இயம்புதற் கரிது
ஈயா பொருள்கள் லாவையே யம்பையது கூடார்
ஈயா நேரினோ யாளியைப் பார்பார்ப்பதுவும் மெளிது
ஈயா வைனோய் கண்டது அகலாது பாரே.

### மூதண்டகியாழம்

259. பாரேயினி மூதண்டமே பகரயினி மக்கா ளயறு
காறமதுவ குரசா லமேயது கண்டதை வாங்கும்
மறுவேன்றறை வடவாலை யுமிளகோ டதுசுக்கே
...............................................................

260. சுக்காகிய மதுரத்துடன் கோஷ்டமது காரம்
வக்காகிய திரிபலையும் வனமாவிஷ்ணு காந்தி
இருக்காகிய பெருமுட்டியுஞ் சிறுமுட்டியும் கூட்டி
மருக்காகிய குருக்காயதை மடியஅதை யிடியே.

261. இடியேசலம் படிமூன்றதாய் அளந்துகுட மூற்றிப்
படியேஎண் பங்கிலொரு பங்காயதை வடித்துக்
குடியேயந்தி காலையிலு மாலையிலு மாக
ஒருமண்டலம் நேராகவே யுண்ண அதின்குணமே.

262. குணமாம்பயித் தியவினை குணமாம்வினை பாண்டு
குணமாமொரு சயமெட்டுடன் கோறைநீ ராம்பல
குணமாமது வாய்வொன்பது கொடியவினை மூலம்
குணமாமது கியாழவகை கூறஒண் ணாதே.

### எண்ணெய்

263. ஒன்றாகிய யினியொன் றெண்ணெய் யோகோயினி
சேளும்
ஒன்றாகிய வல்லாரையும் பொன்னாங்கண்ணி கையான்
ஒன்றாகிய நருவளியும் குமரியுடன் கோவை
ஒன்றாகிய புளியாரையும் உத்தாமணி சுண்டே.

264. சுண்டையுடன் ஒன்றாகவே படியாகவே அளந்து
கொண்டைநெய் கொடிதேனுடன் கோவின்பால்
வெண்ணெய்
பண்டையது அதிலூறிய வெல்லத்துடன் பாவும்
தண்டையது கடையுள்ளது சரக்கேயினி கேளே.

265. கேளப்பா கிராம்பேலம் சாதி பத்திரி
கெஞ்சாவித் ததிமதுரம் வெளப்பால் முத்தம்
கேளப்பா இந்தரமாம் மகரப் பூச்சி
கேள்மகனே சாதிக்காய் இலவங்கப் பட்டை
கேளப்பா மிளகுசுக்கு சீரகத்தி னோடு
கெடிக்கொட்டை சந்தனத்தூள் வெட்டிக் கொச்சி
கேளப்பா அக்கிரா காரம்சித்த ரத்தை
இதுவெல்லாம் வகைக்குஒரு பலந்தான் தூக்கே.

266. தூக்கியே இளவறுப்பாய் வறுத்தி டித்து
அப்பாவில் தேனுமண் கொட்டிக் கிண்டு
காச்சியே பாகுதனை இறக்கிக் கொண்டு
கணபதியை வாலைபக்கம் வணங்கிப் பூசி
போக்கியே கிறதமிதைப் பூசி யேதான்
பூவைக்கும் மனோன்மணிக்கும் போற்றி செய்து
பாக்கியந்தான் இதையெடுத்துக் கடிகை யுண்ணப்
பறந்தோடும் வினையதனைப் பகரு வோமே.

267. பகரயிலே மேகமொடு கிரந்தி சூலை
பறங்கிப்புண் அரையாப்பு வாலை சூலை
நகரயிலே பவுத்திரங்கள் ஆசினமாம் புத்து
நாசமாம் கன்னவிப் புருதி சூலை
மகரயிலே சூலைரணம் சூலை வாய்வு
வாய்பேசா தோடிடுமே மருந்தில் பாரே.

268. மருந்துதான் சூட்சம மகுத்துவங் கோடி
யறிந்தே யிதுதனை யாடி யப்பணம்
பொரமுழு தும்மே லேற்கமுறை யிடுமே
பேர்பழுது வாராது பாத்திடும் மக்களே.

அரிவை மேகம்

269. பார்த்திட இன்னம் பகருவோம் சூட்சம்
ஆர்த்திட லோகம் அரைப்பொடி சீனம்
கார்த்திடக் காரங் கடுங்காரச் சுண்ணமும்
வார்த்திடு அண்ட வள்ளைவிட் டாட்டிடே.

270. ஆட்டிட உலர்த்திய கல்வில் போட்டந்த
ஏட்டையில் தீயெழு சீலை செய்திடு
காட்டிமூட் டந்தக்கா டாக்கினி போலவே
மாட்டி யுடைத்து மறுதரம் ஆட்டியே.

271. ஆட்டிடு இந்திட்டு அரைப்பது சாமம்
காட்டிடு கெந்தியும் கடுஞ்சூத வீரமும்
மாட்டிடும் பொரத்தலை அரைத்திடு சாமமாய்
வாட்டிக் கோணலில் வதக்கிடு குக்குடம்.

272. குக்குடம் போக்குநீ குருமுருக் கம்பார்
ஒப்பு முடியாது லோகசெந் தூரந்தான்
பக்கஓ ராயிரம் பங்குற சீதத்தில்
தாக்குவோர் யங்கில்இத் தரணிகொள் ளாதே.

273. கொள்ளா மகிமையைக் கூறுவோ மின்னங்கேள்
எல்லா மலடென இயம்பு இயம்பு மனிதர்கள்
சொல்லை யறியநீ தொட்டிடு காசெடை
கல்லி லும்பரம் கதறுமிதில் பாரே.

274. பணவெடைக் கொண்டிடப் பாதக ரோகம்
கனவிலுங் காண கிடையாது பாருநீ
அணுகிய கியாழ மரிவைதன் மேகமும்
வணங்கிய வெட்டைப் படைகளு மாறுமே.

### வங்கச் செந்தூரம்

275. ஆறிட இன்னம் அறையுறேன் கேட்டிடு
பாரிடு வெள்ளிப் பொடியுடன் லோகமும்
காரிடத் தங்கமும் கால்பல மாகவே
வாரிய கல்வில் வதட்டி யரைத்திடே.

276. ஆட்டிடு சூதம் ஐய்ந்துப்பு செகத்தைக்
காட்டிடு சம்பழம் கால்படி வார்த்தரை
வாட்டு யெடுத்து வழியாகு கையினில்
மாட்டிடு சீலைமண் ணையைந்து செய்திடே.

277. செய்துமே முட்டைக் கெசப்புடம் போட்டிடு
மையது மேமாரி யனலது முட்டே
காளைசெந் தூரம் கதிர்மதி யோவவர்
வேலையென் சொல்வேன் விதமறி வீரே.

278. விதமி தாலே விரண்டிடும் நோய்வகை
காலால் கொண்ட சயமுடன் ஈளையும்
வாதி கனதிரேகம் வல்வினை சேத்துமம்
போதவே நீர்க்கட்டு சதைக்கட்டு உமிக்கட்டே.

279. கட்டு மலத்தைக் கனத்தநீர்ப் பந்தத்தைத்
தொட்டு நீர்சுட்டக் கிரந்தி பிரமியம்
வெட்டைக் கிரந்திகள் வித்தையினி போர்த்திகழ்
சட்டு பட்டேனவே சதையுமிது தின்றால்.

**செந்தூரம் - வேறு**

280. தின்றிட இன்னமும் செந்தூர முரைக்கிறோம்
கன்றிட வங்கம் கடிய மனோசிலை
வென்றிட சத்து வீரமும் தாரமும்
மன்றிய மைய்ந்தும் ஒருபலம் வாங்கிடே.

281. வாங்கிய கல்லில் வகையிதைப் போற்றிடு
தாங்கிய ரைக்கத்தக் காளியே விட்டுநீ
ஓங்கி யொருசாம மரைக்க அரைத்திடு
பாங்கி மேனிச் சாறதைக் கூட்டிடே.

282. கூட்ட யண்டநீர் குலுங்க ஆட்டிடு
பாட்டினில் வில்லைப் பணம்போலே செய்திடு
காட்டிக் கனலில் கதறவ தாட்டிடு
ஏட்டினில் மில்லை யகலினில் பாய்ச்சிடே.

283. பாய்ச்சியே மண்ணைப் பதுங்காய்ப் பூசிடு
காட்டு வேனதைக் கதிர்மதி வைய்த்திடு
வாட்டி நிலத்தை வறப்புடம் போட்டெடு
தேட்டி னிலந்த செந்தூ ரங் கண்டிடே.

284. காணவே வெண்ணெயில் கடுகுபோல் தின்றிடத்
தோணு மதுமேகம் தோன்றுதீர்ப் பாய்ச்சலும்
கேண மோபித்த வெட்டைக் கிரந்தியும்
தானு மேயண்டத் தலைவலி பீசமே.

285. வலியொடு குன்மம் வாய்நீர்க் குணமும்
பலியிடும் இரத்தக் கிருச பாளையும்
மதனித னய்யர் சயித்தியம் சேத்துமம்
வலியொடு கண்ட புருதியும் போக்குமே.

286. போகவே பெருமை வாகடத்தை யானும்
வாழவே சொன்னோம் வரிசை யறிந்திடு
பார்க்கவே மூவரும் பதுங்க வாரித்தால்
யார்க்கும் அறியவே அறஞ்செயல் கண்டிடே.

287. கண்டிடக் குன்றிக் காயை யரைத்துநீ
தின்றிடு நல்லெண்ணெய் செந்தூர மும் வைத்துநீ
கொண்டிடு கெட்டக் கரசலாங் கண்ணிகள்
நன்று நகைப்பார் நளினமில் லாகத்தால்.

288. பெண்டுகள் கெட்ட பேதை கன்னியரால்
துண்டுகள் பண்ணும் துலக்கி ரசத்தினி
கண்டு நகைக்கச் செடமெடுக் காதேநீ
முன்னமே சொன்ன மொழியதைத் தின்றிடே.

289. தின்றிடு மூவகைச் சாதியாங் கன்னிகள்
அண்டிட உனைவிட்டார் அல்லும் பகலுமே
கண்டிடும் சுக்கு லதம்பனம் போலவே
என்று மொருவா யியம்பார் பாருமே.

290. பாருசெந் தூரத்தைப் பணவிடை யாகவே
காருமே மண்டலம் குன்றியில் கொண்டிடு
தாது மேபத்து இறுகிடும் பாருமே
மாதமே சென்று மறையுரை யாருமே.

291. யாரு மறியவே யன்னசொல் போக்கெல்லாம்
நேரறி யாதவர் நிறயலப் பாவிகள்
பேரை யுரைக்கப் போகாத ததுநீ
ஞான மறிகின்ற நன்மையுள் யோர்க்கிதே.

292. நன்மையுந் திண்மையும் ஞானமு மார்க்கமும்
வண்மையுந் தண்மையும் வஞ்சனை பேதமும்
யுண்மையே யொன்றதாய் உகந்து செய்தவர்
நன்மைக் கிடமதாம் நன்றியா முத்தியே.

### செந்தூரம்—வேறு

293. முத்தியொன் றின்ன முண்டுவோ தக்கேளு
பத்தியமாய் வெங்கலப் பாறையை வாங்கிநீ
வெத்தியாம் வீரம் விளங்கிய பூரமும்
சத்தியம் விந்துவும் சிங்கியும் காரமே.

294. காரமாம் சீனம் கடுகவே யிந்துப்பு
வார அபயத்தின் நடத்தி னோடதும்
சேர எளியோர்க்குச் செய்பல மொன்றதாய்க்
கூறை இனிக்கல்லில் கறைய அரைத்திடே.

295. அரைத்திடு வேடைக் கருயஞ்சு நாள்மட்டும்
கரைத்திடுச் சம்பழச் சாற்றினில் சாமந்தான்
அரைத்திடு பொத்தலை ஆறுநாள் மட்டுமே
தரைத்திடு காசிபோல் தகட்டிய ஒட்டிலே.

296. ஒட்டொடு கானலில் ஒருசட்டி மூடியே
போட்டிடு மண்ணும் பெருஞ்சீலை செய்திடு
காட்டெரு விதனில் கடுகப் புடமிட்டுச்
சீட்டியா மைங்கரன் சேவடி போற்றியே.

297. போற்றி யெடுத்துப் பூவையைப் பூசிநீ
மாற்றிச் செந்தூரம் உண்ணஒப் பாகுமோ
பேட்டி நோய்கொண்ட பீலிகைக்கு ஈந்திடக்
காட்டில் தீக்கொண்ட கடையொப் பாகுமே.

298. ஒப்பான எண்பதும் ஓடிடும் பாராய்
முப்பான தந்தநோய் முப்பத்தாறுமே யோடிடும்
அப்பால் நேர்த்தியில் வியாதி யனேகமும்
சொற்பப் படிகண்டுச் சுழன்றிடும் பாருமே.

299. பாருமே நாசியில் பண்புடன் புற்றுகள்
தேரைநோய் கண்ட கிரசேலை மாத்திக்கும்
யாரு மறியவே யான்சொன்ன உண்மைகள்
பாரு மிதுதனைப் புண்டிதஞ் செய்வோரே.

300. செய்வேன் இன்னஞ் செகசால வித்தைகள்
பொய்யல்ல சொல்வேன் புனிதாரம் யோகிக்கும்
மய்ய மேதர ஆண்மையும் வீரமும்
எய்து நூல்முறை ஓதுவேன் மேலுமே.

301. மேலதா யாகத்து மெளிதற்கு மிவ்விடம்
காலதாய்த் தேடக் குழந்தைய ராகுவர்
மூல மதுவே மொழியநீ கேளு
கோலம தாகிய கொத்துடன் ஆடுமே,

302. ஆடவே யின்னம் ஆந்தைக்கண் பூனைக்கண்
மாடவே காகம் மலையோணான் பித்ததும்
நீளவே நாலும் நிகழ அரைத்துநீ
கொள்ளவே தூசில் கொடியிதை யப்பிடே.

303. அப்பிற வித்தில் ஆறுநாள் போட்டிடு
தப்பித மில்லைதாள் தவமதாய்ச் செருஅண்ட
ஒட்டை யண்ட மாமிக் கொண்டு
நிரப்பிய சயச்சேலை யகலிதில் போட்டிடே.

**4**

**தொகுப்பு**

# குழந்தை நோய்கள்
# குணமும் மருந்தும்

# குழந்தை நோய்கள்
# குணமும் மருந்தும்

**1. கிரந்தி** *7—10; 64, 65.*

குழந்தை பிறந்ததுமுதல் மூன்று மாதங்கள் வரையிலும் உள்ள பச்சைக் குழந்தைப் பருவத்தில் குழந்தைக்கு வரக்கூடிய நோய்களுள் ஒன்று கிரந்தி. இந்நோய் கருவிலேயே தோன்றுவ தாகும். இது செங்கிரந்தி, கருங்கிரந்தி என இருவகைப்படும், செங்கிரந்தியை செவ்வாப்பு எனவும், கருங்கிரந்தியை கருவாப்பு எனவும் கூறுவர்.

**செங்கிரந்தி:** குழந்தை இடைவிடாது அழும். தொண்டை அடைக்கப் பூனைக்குரல் போன்ற குரலில் விம்மி விம்மி அழும். மலமும் நீருங்கட்டிவிடும், நெற்றி உயர்ந்து வீங்கும். குழந்தை செயலற்று மயங்கிக் கிடக்கும். உடல் சிவந்து காணப்படும்.

**கருங்கிரந்தி:** குழந்தை மிகவும் வீறிட்டுஅழும். பால் உண்ணாது. சுரம் இருக்கும். உடல் வெதும்பி மயங்கும். நாவரண்டு காணப் படும். கண்ணை விழித்துப் பார்க்கும். வேதனை மிகுதியாகி மிகவும் அலறும். ஐந்து நாட்களில் இறந்துவிடும் என்று கூறும் நிலை ஏற்பட்டுவிடும்.

**இவற்றிற்கு மருந்து:** ஆமணக்கு எண்ணெய், பூவரசம்பூ, காய் இவற்றின்சாறு, மணத்தக்காளிச்சாறு மூன்றும் சமஅளவு சேர்த்து காய்ச்சி, சுக்கு, இலவங்கம், ஏலக்காய், திப்பிலி, மிளகு, பூரம் ஆகியவை நான்கு நான்கு கிராம் எடை பொடிசெய்துசேர்த்துக் காய்ச்சிப் பதமாக இறக்கிக் கொள்ள வேண்டும். கணபதியை வணங்கி ஒரு துட்டு எடை மூன்றுவேளை நாக்கில் தடவ வேண்டும். தாய்க்கு மீன், மாமிசம் முதலியவை ஆகாது. பூசணிக்காய், எள், கொள்ளு, எருமைப்பால், நெய் முதலியவை நீக்கவேண்டும்.

**2. தோஷம்:** *72; 77—105; 197-207; 216-222; 240-243*

கண்ணால் தொடுதல், உடலால் தொடுதல், காற்று, நிழல் போன்றவற்றால் தொடுதல் ஆகியவற்றால் ஏற்படுவது தோஷம் எனப்படும் நோய். மூன்று மாதம் முதல் ஓராண்டு வரையுள்ள குழந்தைக்கு இந்நோய் எளிதாகத் தோன்றும்.

தோஷம் இருபத்து ஐந்து வகைப்படும்.
அவற்றை எட்டுப் பிரிவுகளாகப் பிரிப்பர். அவை

| | | | |
|---|---|---|---|
| 1. பட்சி | 2. பறவை | 3. புள் | 4. எட்சி |
| 5. எச்சில் | 6. பெண் | 7. ஆண் | 8. தேரை |

என்பனவாகும். அவற்றுள்,

1. ஆண் பட்சி, பெண்பட்சி, மலட்டுப்பட்சி, அலிப்பட்சி எனப் பட்சி தோஷம் நான்கு வகைப்படும்.

2. வீங்குபுள், தூங்குபுள், விளக்கொளிக்கண்புள், வெங்கண் புள், கருட்கண்புள், செங்கண்புள், வரட்புள், பேய்க்கண்புள், அந்திப்புள், நீர்ப்புள் எனப்புள் தோஷம் பத்து வகையாகிறது.

3. ஆணுடன் கூடிய பெண், மாதவிடாய் கண்டபெண், பிள்ளையை விரும்பிக் குளிசங்கட்டிய பெண், குளித்த பெண், கருச்சிதைவு ஆன பெண், பெண்கையால் எடுக்கும் தோஷம் என பெண்தோஷம் ஆறு வகைப்படுகிறது. இவற்றின் தொகையாகக் காண முறையே,

| | |
|---|---|
| 1. பட்சிதோஷம் நான்கு, | 2. பறவைத்தோஷம் பத்து, |
| 3. பெண்தோஷம் ஆறு, | 4. பிற ஒவ்வொன்றும் என இருபத்தைந்து |

வகைகள் காணப்படுகின்றன,

அவற்றின் சிலவற்றின் குணங்களும் அவற்றை நீக்குவதற்காம் முறைகளும் நூலுள் காணப்படுவனவற்றின் தொகுப்பு இங்கு தரப்படுகிறது.

**எட்சி தோஷம்:** *72; 86—90; 221—222*

குழந்தையின் இரத்தம் சூடாகி மயக்கம் ஏற்படும். தலை தூக்காது. கண்வரண்டு பீளைகட்டும். கண்திறவாது. உடல் இளைக்கும். சூடுமிகுவதால் உடல்நிறம் மாறும். உடல் நாறும். தாய்ப்பால் உண்ணாது. வயிற்றுப் போக்கு ஏற்படும். சுரம் மிகுதி

ஆகும். புலிபோலப் பதறியழும். கண்களைப்பிசையும். மண்ணில் மீன்போலப்புரளும். சன்னிதோன்றும். இவை எட்சிதோஷத்தின் குணங்களாகும்.

**நிவர்த்தி :** வெள்ளிக்கிழமையில் அமுக்கராங் கிழங்குச்செடி உள்ள இடத்திற்குச் சென்று இடத்தை சுத்தம் செய்து செடியில் மஞ்சள் நூல் காப்புக்கட்டி 'மநசிவய' என்று நூற்று எட்டுமுறை செபித்துக் கற்பூர தீபம் காட்டவேண்டும். பிறகு வடக்குத் திக்கு நோக்கிச் செல்லும் வேரினை எடுத்துச் சிறிதளவு நறுக்கிப் பட்டு நூலால் குளிசமாக ஆக்கவேண்டும். பார்வதி தேவியின் உருவம் அமைத்து, பழம் முதலிய படைத்து தூய செம்பில் நீர்வைத்து மேல் சொன்ன மந்திரத்தை ஓதி நீர் தெளித்து அந்தக் குளிசத்தைத் தூய்மை செய்து குழந்தைக்குக் கட்டவேண்டும்.

**பட்சி தோஷம் :** *82-85; 91-105, 197-202; 206-207; 216-220.*

குழந்தையின் உச்சியும் கண்ணும் குழிவிழும். குடித்தபால் தங்காது. நீர்போல் கழியும். பறவைக்குரல்போல் அலறி அழும். கண்மயங்கும். தலைவலி ஏற்படும். குழந்தை கையில் தங்காது துடிக்கும். நுரைபோல் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

**பெண்பட்சி தோஷம் :** கண்சோர்வடையும். நீர்போல் கழியும், உடல்கறுக்கும், வயிறு உப்பும், உடல் இளைக்கும்.

**பட்சிதோஷக் குளிசம் :** உடும்பின் நாக்கை எடுத்து எருக்கன் நாரினால் குளிசமாடி 'நயவசிம' என்னும் மந்திரத்தை நூற்றெட்டு முறை ஓதி முறையாகப் பூசை செய்து, ஓணான் பலி கொடுத்துக் குளிசத்தைக் குழந்தைக்குக்கட்ட வேண்டும்.

**குளிசம் வேறு:**

சதுரமான செப்புத் தகட்டில் எண்கோணச்சக்கரம் வரைந்து அதன்மேல் ஒரு வட்டம் வரைய வேண்டும். எண் கோணத்தில் சுற்றிலும் சிங்ஹ்ரீயும், ஸ்ரீயும், சவ்வும் என்பவற்றைப் பொறிக்க வேண்டும். ஐயும் உன்பதை இடையில் போட வேண்டும். ஐந்து நிற நூலால் குளிசமாடி மஞ்சள் பூசவேண்டும். அரிசி, உளுந்து இவ்ற்றைக் கலந்து பொங்கி, எருக்கிலையில் அப்பொங்கலை வைத்து, பச்சரி மாவால் மூன்று மாவிளக்குச்செய்து நெய் விட்டு நூல்திரி போட்டு விளக்கேற்றி முறையாகப் பூசை செய்து நூற்றெட்டு முறை வநசிமய என்னும் மந்திரத்தைச் சொல்லித் தூப தீபம் காட்டவேண்டும். அதனைக் குழந்தை முகத்தில் சுற்றிச் சாந்தி செய்து குழந்தைக்குக் கட்ட வேண்டும்.

**குளிசத்திற்கு மந்திரம் வேறு :**

அரியும், இரியும், வறியும், ஸ்ரீரியும், கிறியும், ஐயும்-ஆயிரத் தெட்டு முறை ஒதவும் இதனைச் சூரிய உதய காலத்து நீரில் நின்று ஒதுவது உத்தமம் பஞ்சாட்சரமாந்திரத்தை தெண்ணூற் றைந்து முறை ஓதி தேவிக்கு அருச்சனைசெய்து குளிசம் காட்டு வதாலும் பட்சிதோஷம் விலகும்.

**குளிசம் வேறு :** செப்புத்தகட்டில் அறுகோணம் வரைந்து குறுக்கும் நெடுக்குமாக ஐந்தைந்து கட்டங்களாக இருபத்தைந்து வீடுகள் அமைக்க வேண்டும். யமசி என்னுப் பெண் எழுத்தை இடைவீடுகளில் அமைத்து, யசிமநவ என்னும் எழுத்துகளை மாறிமாறி நிரப்ப வேண்டும். முறையாகத் தேவியைப்பூசித்து, சாந்திசெய்து குழந்தைக்குக் கட்டவேண்டும்.

**பறவை தோஷம் :** *91, 92, 216*

நெஞ்சு கட்டும். உண்ணாக்குவீங்கும். பால்தங்காது. உடல் வலி ஏற்படும். கக்கியபால் கசப்பு நாற்றம் அடிக்கும். கை, கால் அழுக்கேறும். வேளைக்கு ஒரு நிறமாக உடல் மாறும்.

**குளிசம் ;** வெள்ளைக்குன்றிமணிக்குச் செவ்வாய்க்கிழமையில் பொங்கலிட்டுப் பலிகொடுத்துச் சாபத்தைப் போக்கவேண்டும். பின் வடக்கே செல்லும் வேரிணைஎடுத்து ஐந்து நிறமுள்ள நூலால் குளிசமாடிக் கழிப்புக் கழித்துக் குளிசத்திற்குத் தூபதீபம் காட்டிக் குழந்தைக்குக் கட்டவேண்டும்.

**வறப்புள் தோஷம் (வரட்புள்)** *93-94*

குழந்தையின் உடல் வற்றிக் காணப்படும். கண்ணில் நீர் கலங்கித் துளிக்கும். நாவும் தொண்டையும் வறண்டுகாணும். அதனால் வாய்திறந்து குடிக்க முடியாது தவிக்கும். சோர்வும் மயக்கமும் காணப்படும்.

**குளிசம் :**

குழந்தையின் தாய்க்குக் கொம்பு மஞ்சளை மந்திரம் ஓதிக் கொடுத்துப் பூசிக்குளிக்கச் செய்யவேண்டும். வட்ட நரிமிரட்டி என்னும் செடிக்கு மஞ்சள் நூலால் காப்புக்கட்டிச் சேவல் பலி கொடுத்து அதன் வேரை எடுத்துக் குளிசம் செய்து முறையாகக் குழந்தைக்குக் கட்டவேண்டும். இதனை வியாழக்கிழமையில் செய்வது சிறந்தது.

**நீர்ப்புள் தோஷம்** 95-96

குழந்தையின் நெஞ்சு வறண்டு போகும். கண்கள் குழிந்து காணும். பெருமூச்சு உண்டாகும். கண்கள் வெளுத்துப்போகும். பால் குடிக்காது. முகம் அழகு கெட்டுவாடும்.

**குளிசம், மந்திரம்** : வட்டத்துத்தியின் வேரில் முதலைக் கொழுப்பைப் பூசி, ஐந்து நிற நூலால் குளிசமாடி நூற்றெட்டு முறை மந்திரமோதி அக்குளிசத்தைக் கட்டக்குழந்தைக்கு நீர்ப்புள் தோஷம் நீங்கும். வேர் எடுத்தல், குளிசம் கட்டல் ஆகியவை உரிய முறையில் பூசையுடன் நடைபெற வேண்டும்.

**தூங்குபுள் தோஷம்** : 97-98

மயக்கம், வாந்தி, வயிற்றுப் போக்கு, தலைக்குழி, மேல் மூச்சு, எப்பொழுதும் அழுதல், முகவாட்டம் ஆகியவை தூங்குபுள் தோஷக் குறிகளாகும்.
**சாந்தி** : கோரோசனை, மஞ்சள், வசம்பு, ஏலம், வேம்பின் ஈர்க்கு, ஓமம், விளாவின் ஓடு ஆகிய ஏழு பொருள்களையும் சரி எடை எடுத்து அரைத்துக் குழந்தையின் மேல் பூசிச் சிறிது நேரம் ஊறவிட வேண்டும். இளஞ்சூடான நீரில் குளிப்பாட்டி மந்திரம் சொல்லிச் சாந்தி செய்ய வேண்டும்.

**கூளிபட்சி தோஷம்** : 206. 207.

வயிறு பொருமல் ஏற்படும். வாந்தியாகும். உடல் சில்லிடும். சாந்தி : சோறு, பொரி ஆகியவற்றோடு, பிண்ணாக்கு, கருவாடு, மதுபானம் போன்றவற்றை வைத்துப் படையலிட்டு சந்தனத் தூள் தூபம் போட்டு தாய்க்கும் குழந்தைக்கும் சாந்தி செய்ய தோஷம் விலகும்.

**குழிதோஷம்** : (குளிதோஷம்) 77-81.

உச்சியும் கண்ணும் குழிந்து காணும். கழிச்சல், சுரம், உடல் இளைப்பு போன்ற குணங்கள் குளிதோஷக் குணங்களாகும்.

**நிவர்த்தி** : தழுதாழை, கொம்புமஞ்சள், குட்டிவிளா, வேம்பு, வசம்பு, சுக்கு இவற்றை அரைத்து தாய், குழந்தை இருவருக்கும் பூச வேண்டும். வாகைஇலை போட்டுக் காய்ச்சிய வெந்நீரில் குளிக்கச் செய்ய வேண்டும். பிறகு மூன்று கிணற்று நீர்கொண்டு வந்து மஞ்சள் அரைத்துப் போட்டுக் கலக்கிக் கொண்டு ரியூம்,

ஐ, சவ்வு என்று நூற்றெட்டுமுறை ஓதி அந்நீரைத் தெளிக்க வேண்டும்.

சூரி வேரினை முறையாகப் பிடுங்கி நூலால் குளிசமாடிக் குழந்தைக்குக் கட்டலாம்.

**வேறு :** குழந்தையின் மேனி நிறம்வாடி, பால்தங்காமல், கண் குழிந்து, தலையில் சிலேத்துமம் காணும் குறிகள் ஏற்படலாம். இதற்கு, குளிர்ந்த நீர்மொண்டு வேப்பிலையால் மந்திரம் ஓதி தாய், பிள்ளை இருவருக்கும் சாந்தி செய்ய தோஷம் விலகும்.

**அரிவை தோஷம்** : *238-230*

ஐந்துமாதக் கர்ப்பிணியானவள், சேர்க்கையிலிருந்து வந்த ஆணையோ பெண்ணையோ கண்டால் அவள் வயிற்றிலிருக்கும் கருவுக்குத் தோஷமுண்டாம். அத்தோஷத்தால் குழந்தை பிறந்தவுடன் அதற்குச் சுளுக்கு ஏற்படும். வயிறு வலிக்கும். முகம் கறுத்துக் காணும்.

தோஷக் கழிவு : மாவினால் அந்தக் குழந்தையைப் போல் உருவம் செய்து வாழை இலையில் வைத்து, ஐந்து நிற மலர், ஐந்து நிறச் சோற்றுருண்டை, ஐந்து வெள்ளிக் காசு இவற்றை வைத்து மாவிளக்கு ஏற்றிப் பூசை செய்து, சாம்பிராணி தூபம் போட்டு, வத்திக் கொளுத்தி அவ்வுருவத்தில் எல்லா இடத்திலும் செருக வேண்டும். மாலை நேரத்தில் அதைக் குழந்தைக்குச் சுற்றிக் கழிப்பு செய்து முச்சந்தியில் கொண்டுபோய் வைத்துவிட வேண்டும். இதனால் தோஷம், பாலகிரகம், வலி, நோய் அனைத்தும் விலகும்.

## 3. கரப்பான் நோய்

குழந்தைகளின் தாலப் பருவமுதல் வருகைப் பருவம் வரையிலான நான்கு பருவங்களிலும் குழந்தைகளுக்குக் கரப்பான் என்னும் நோய் வரக் கூடும். முன்பின் வருவது அதிகமாகாது.

உடலில் திமிர், தினவு, சொறி, புண், தடிப்பு, வெடிப்பு, நீர்க்கசிவு ஆகிய தன்மைகள் உண்டாகும். உடலின் நிறத்தை வேறுபடுத்தும்.

கரப்பான் பதினெட்டு வகைப்படும் : அவை,

| | |
|---|---|
| 1. அரிகரப்பான் | 2. அழல்கரப்பான் |
| 3. ஊதுகரப்பான் | 4. ஐயக்கரப்பான் |
| 5. ஓடுகரப்பான் | 6. கருங்கரப்பான் |

7. கொள்ளிக்கரப்பான்
8. சட்டைக்கரப்பான்
9. குலைக்கரப்பான்
10. செங்கரப்பான்
11. தோடக்கரப்பான்
12. பொரிக்கரப்பான்
13. மண்டைக்கரப்பான்
14. வாள்கரப்பான்
15. வரிக்கரப்பான்
16. வாலைக்கரப்பான்
17. வீங்குகரப்பான்
18. வெடிக்கரப்பான்

**பதினெட்டுக் கரப்பானுக்கும் எண்ணெய் :** *181- 186*

நாய்வேளை, தைவேளை, செம்பருத்தி, மணித்தக்காளி, பொன்னாங்காணி, நத்தைச்சூரி, அம்மான்பச்சரிசி, தகரை, பழம் பாசி, குட்டிவிளாம்பட்டை, பாகல், கருந்துளசி, செம்முள்ளி, இண்டு, பாவட்டைகருங்காலிபுள்ளடி, சுரை, துவரை, கொன்றைப் பட்டை, தவசு முருங்கைப்பட்டை, கோடகசாலை, அகத்தி, குமரிச்சாறு, சிறுசின்னி, ஈருள்ளி, பூண்டு ஆகிய இவ்விருபத் தொன்பது பொருட்களின் சாறு வகைக்குக் கால்படி எடுத்து ஒரு மண்பாண்டத்தில் விட்டு அதில் குறுணி (5.3 லிட்) ஆமணக்கு நெய்விட்டு சூரிய வெப்பத்தில் வைத்து அதில் ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வசம்பு, கோட்டம், கொத்தமல்லி, காட்டுச்சீரகம், திப்பிலி, இஞ்சி ஆகிய ஒன்பது பொருட்களையும் வகைக்கு ஐந்து வராகனெடை எடுத்து அரைத்துக் கலக்கி எரித்துப் பதத்தில் வடித்துக் குழந்தைகளுக்கு கொடுத்து வர எல்லாக் கரப்பானும் நீங்கும். இதைப் பதினாறு வயது வரைக்கும் வரும் கரப்பா னுக்குக் கொடுக்கலாம்.

**வாலைக் கரப்பான் :** *67 - 71*

கால் கடுக்கும், கீல்கள், கழுத்து இவ்விடங்களில் வெடித்துப் புண்ணாகும். கடிவிடங்களில் தடிப்புப் போல் காணும். அதில், நின்றும் பன்னீர் போல் நீர் பாய்ந்தும் வற்றியும் நாறும். குழந்தை இளைக்கும். குழந்தையினது உடம்பெல்லாம் சொரி போல ஏற்படும். உடம்பெல்லாம் புண்கள் ஏற்பட்டு குருதி வடி யும். உடல் இளைத்து அழகிழந்து போகும். உடம்பு சக்தி இழந்து நடுக்கம் உண்டாகும்- ஆகிய இக்குறிகுணங்கள் காணப் பட்டால் வால கரப்பான் என அறியவும்.

பூவரசம் பட்டைச் சாறு, சிற்றாமணக்கெண்ணெய் ஆகிய இவ்விரண்டும் வகைக்கு 1.3 லிட் சேர்த்து அடுப்பேற்றிக் கடுகு திரள பாகமானதும், நற்சீரகம், கருஞ்சீரகம், கார்கோலரிசி ஆகிய இம்மூன்றிலும் வகைக்கு காற்பலம் எடுத்து, ஏலரிசி கிராம்பு, சடாமஞ்சில், கரிசாலை, நுணாவேர் ஆகிய ஐந்தையும்

வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்துப் பொடி செய்து, அதை ஐந்து பலம் சருக்கரையுடன் கலந்து கிண்டி, நெய் பாகப்பட்ட வுடன் வடித்து சிறு கரண்டி வீதம் காலையில் ஏழு நாள் மட்டும் கொடுக்க வாலகரப்பான் நீங்கும். கடுகை மேலுக்குப் பூச செவ் வாப்பும், செங்கரப்பானும் நீங்கும். இதை உபயோகிக்கும் காலத்தில் புளிப்பு, கைப்பு, இறைச்சி, மீன், எள், கொள், பால் இவைகளைத் தள்ளவேண்டும்.

**வரிக்கரப்பான் (அரிக்கரப்பான்)** *132 - 135*

இலிங்பப்புற்று, யோனிப்புற்று, உடலில் ஆறாப்புண், அரிப்பு, உடலுருவு மாறல், இக்குறிகளுடன் இரு துடைகளின் இடையில் மிகுந்த புண்ணாகி அதிலிருந்து அதிக நீர்வடியும், புண்ணில் தசைமிகக் கரைந்து வலியுண்டாகும். நாட்பட விருந்து உடல் வாடும், இளைக்கும் ஆகிய இக்குறிகணங்கள் காணப்பட்டால் அரிக்கரப்பான் என அறியவும்.

கொட்டைக்கரந்தை வேர், செருப்படை வேர், பசரியிலை, நீலி வேர்ப்பட்டை, மிளகரணை வேர்ப்பட்டை, உத்தாமணிச் சமூலம், கரிசலாங்கண்ணிச்சமூலம், பெருங்களா வேர்ப்பட்டை, ஆவாரை வேர், பொன்னாங்காணி வேர், பிரமட்டை வேர், சிறுகீரை, வட்டத்திருப்பி வேர், இண்டங்கொடியின் வேர்ப் பட்டை, வசம்பு ஆகிய இப்பதினாறு பொருட்களையும் தனித் தனியாக இடித்து வகைக்கு அரைப்பலம் எடுத்து, அத்துடன் காற்படி சிற்றாமணக்கு நெய் சேர்த்துக் காய்ச்சி வடித்து உச்சிக் கரண்டிவீதம் ஏழு நாள் கொடுக்க அரிக்கரப்பான் முதலியன நீங்கும்.

**மேற்பூச்சு :** உள்ளி, கடுக்காய், எருக்கம்பட்டை, மருக் காரை வேர்ப்பட்டை, வட்டக் கிலுகிலுப்பை வேர்ப்பட்டை, உத்தாமணி வேர்ப்பட்டை ஆகிய ஆறு பொருட்களையும் வகைக்கு அரைப்பலம் எடுத்துப் பொடித்து அத்துடன் பதி னைந்து பலம் எள்நெய் கூட்டிக்காய்ச்சி ஆறு வேளை மேலுக்கும் தடவி மேலுக்குத் துவாலையிட அரிகரப்பான் தீரும்.

## 4. மாந்தம் *23-29; 37-41; 56-60; 126-130; 187-193; 208-215; 223-230*

மந்த இயல்புடைய தன்மையை மாந்தம் என்பர். குழந்தை யின் முதல் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டுவரை தோன்றக் கூடும். இதில் பலவகை உண்டு. ஆயினும் பெருவாரியாக இரு பத்தொரு வகையைப் பல நூல்களும் சுட்டுகின்றன. அவை,

அழல், ஊதல், எரி, ஐயம், கணம், சந்நிசுரம், சுழி, செரியாமை, தலை, துலை, நீர், பால், போர், முக்கு, வலிப்பு, வளி, வாலை, விடம், வீக்கம் என்பனவாகும்.

தாயினது உயல்சூடு, தாய் உண்ணும் மந்தப் பொருள்களாகிய எருமைப்பால், நெய், வாழைப்பழம், மாம்பழம், கடலை, வெல்லம், பருப்பு, மாமிசம், உளுவைமீன், வரால்மீன், கெண்டை போன்றவை அதிகமாவதாலும் தாய்ப்பால் உண்ணும் குழந்தைக்கு மாந்தநோய் வரும். உணவு உண்ணும் நிலையில் இப்பொருள்கள் மிகுதியாகக் குழந்தைக்குக் கொடுத்தாலும் இந்நோய் வரும்.

**குணம்:** சீதம்சீதமாகவும், பால்போலவும், தண்ணீர் போலவும் பலவிதமாக மலங்கழியும். உள்ளங்கை, உள்ளங்கால் இவை சில்லென்று ஆகும். மயக்கம் உண்டாகும். கண்நிலையாக இருக்காது. தாகம் மிகுதியாகும். முகம் வெளுக்கும். கண் குழி விழும். இவை பொதுவாக அனைத்து மாந்தங்களுக்குமுள்ள குணங்களாகும்.

**மாந்தகுளிகை:** இரசக்கற்பூரம் கிராம் 20, இலவங்கம், ஏலம், சுட்ட வசம்பு, சீரகம், மாசிக்காய், அதிவிடயம் ஆகியவை 10 கிராம் ஆகியவற்றை நன்றாய்ப் பொடி செய்து கொண்டு, மாசிப்பத்திரி வேர்ச்சாறு விட்டு மூன்று மணி நேரம் அரைத்துப் பிறகு விஷ்ணு காந்திச் சார்விட்டு மூன்று மணிநேரம்அரைத்துக் கொத்தமல்லி விதை அளவில் குளிகை செய்து கொள்ள வேண்டும். நிழலில் உலர்த்திச் செப்பில் அடைத்து வைக்கவும். இதனை நோயுக்கு ஏற்பச் சொல்லப்படும் நீர், கியாழம் போன்றவற்றில் கொடுத்தால் மாந்தம் குணமாகும்.

**மாந்த எண்ணெய்:** இஞ்சி, சங்கிலை, சின்னிஇலை, கரிசாலை, விஷ்ணுகரந்தை. வன்னிஇலை இவற்றின் சாறும் சிற்றாமணக்கு எண்ணெயும் வகைக்கு 335 மி. லிட். எடுத்து ஒரு மண்சட்டியில் ஊற்றி, ஒரே இனவிறகால் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும். இதனால் பலவகை மாந்தமும் விலகும்.

**ஊதுமாந்தம்:** உடல் முழுவதும் வீக்கம் ஏற்படும். சுரம் இருக்கும். கைகால் சோர்வு, மூச்சுத் திணறல்ஆகியவை காணும். நீர்முள்ளி, இண்டன்வேர் காய், தேங்காய்ப்பால், கையாந்தகரை, கண்டங்கத்திரி, மாதுளம்பழம், ஓரிலைத்தாமரை, செங்கழுநீர் தாமரை, வல்லாரை, சூரத்தாவாரை, செங்கத்திரி, முருக்கன் இவற்றின் சாறு கால்படி சமனாய்ச் சேர்த்து ஒருபடி விளக்கெண்ணெய்

ஊற்றிக் கலந்து கொள்ள வேண்டும். காயம், வசம்பு, ஏலம், வெட்பாலை அரிசி, திப்பிலி. பர்ப்பாடகம், விளாம்பிசின், இலவம்பிஞ்சு, கடுக்காய், மாசிக்காய், திரிவிடயம், மிளகு, சாதிப்பத்திரி இவை வகைக்குக் கால்பலம் சேர்த்துப் பொடித்துச் சாற்றுக் கலவையில் இட்டுக் காய்ச்சிக் கடுகு திரண்டுவரும் பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

இந்த எண்ணெயை ஒரு துட்டு எடை மூன்றுவேளை கொடுக்க ஊதுமாந்தம் விலகும். புளிப்பு, எள் முதலிய சிலைப் பண்டம் நீக்க வேண்டும்.

**சிங்குமாந்தம்:** (சிங்கிமாந்தம்)

உந்தியிலிருந்து சூடு எழும்பும். அதனால் ஈரல் வெந்து புண்ணாகும். மேல்மூச்சு, இழுப்பு, உடல்வறட்சி, சுரம், துற்நாற்றம், மயக்கம் இவை உண்டாகும்.

**குளிகை:** அதிமதுரம், கோஷ்டம், ஏலம், சாத்திரபேதி, சண்பகப்பூ, மாசிக்காய், இலவங்கப்பூ ஆகிய இவ்ஏழு பொருள்களையும் வகைக்குக் கால்பலம் எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். பிறகு கோரோசனம், வெட்டிவேர், மாசிப்பத்திரிவேர், விலாமிச்சவேர், கருந்துளசி இவற்றையிட்டு 6 மணிநேரம் அரைத்துக் குன்றி மணியளவு உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி மாசிப்பத்திரிக் கியாழத்தில் கொடுக்க சிங்குமாந்தம் குணமாகும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுக்கவும்.

இம்மாத்திரையையே இலவங்கக் கியாழத்தில் கொடுக்க மாந்த சுரம், வாந்தி விலகும். முலைப்பாலில் கொடுக்க, குடல் படுவன். நீர்ப்பாடு, கரப்பான், நாவரட்சி, வயிற்று எரிச்சல், அன்னவிடாய்ச் சுரம், மாந்தம், வயிற்று உப்பிசம், இருமல் ஆகியவை குணமாகும்.

**உள்மாந்தம்;** (உளைமாந்தம்)

கடைச்சரக்குகளான வசம்பு, சீரகம், பூண்டு, காயம், நாரத்தம் வேர் இவை வகைக்குக் கால்பலம் எடுத்துத் தக்காளிச் சாற்றில் அரைத்து எட்டு பலம் எண்ணெயில் கலந்து காய்ச்சி ஒரு கரண்டி அளவு மூன்று நாள் கொடுக்க உளைமாந்தம் தீரும்.

**சலமாந்தம்:** வெதுப்படக்கி, அம்மான்பச்சரிசி, பீநாறி, நுணா, சரணாக்கி, இவற்றின் இலைச்சாறு வகைக்குக் கால்படி எடுத்து ஒரு நாழி ஆமணக்கு எண்ணெயில் கலந்து கொள்ளவும். வசம்பு,

உள்ளி, மஞ்சள் இவை வகைக்கு அரைப்பலம் எடுத்து இந்தச் சாறுவிட்டு அரைத்து ஒன்றாக்கிக் காய்ச்சிக் கடுகு திரளும் பாகத்தில் இறக்கிக் கொள்ளவும். நாளைக்கு ஒரு வேளை ஒரு கரண்டி வீதம் மூன்று நாள் கொடுக்கச் சலமாந்தம் தீரும்.

**கிராணி மாந்தம்:** சிறுதேக்கு, வாய்விளங்கம், வால்மிளகு, ஏலம், ரோகணி, சுக்கு, திப்பிலி, இலவங்கம், தான்றிக்காய், தக்கோலம் பொசதக்காய் இவை வகைக்குக் கால்பலம் எடுத்து இடித்து இரு நாழி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகவற்ற இறக்கவும். இந்தக் கியாழத்தைக் கொடுக்கக் கிராணிமாந்தம், சுரக்கட்டி, விஷதோஷம், சோகை, காமாலை, கணம், சுரம், சோழைக்கட்டு, விம்மல், தும்மல், பித்தகணம், பாண்டு யாவும் விலகும்.

**நீர்மாந்தம்:** தலைவலி, குலைவலி, உடல்குளிர், முகமினுமினுப்பு உடலில் வியர்வை, வயிற்றுப் போக்கு ஆகியவை காணும்.

கருநீலி என்னும் அவுரிவேர், செவ்வியம் வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்துப் பொடித்து, இரண்டு ஆழாக்கு நீரில் போட்டு கால் ஆழாக்காக வற்றுமாறு காய்ச்சி இறக்கு. வேளைக்கு ஒரு பாலாடை வீதம் இருவேளை—நான்கு நாள் கொடுக்க நீர்மாந்தம் குணமாகும்.

**தலைமாந்தம்:** தலை கனக்கும். உடல்உப்பும்.அரிப்பு உண்டாகும். குளிர்ச்சுரம், குலைவலி, தலைநிமிர முடியாத தொல்லை, வலி ஆகியவை இதன் குணங்களாகும்.

ஏலாதி உருண்டையை முறையாகக் கொடுக்க மாந்தம் விலகும்.

**ஏலாதி உருண்டை:** ஏலம், கிராம்பு, கோரைக்கிழங்கு, அதிமதுரம் வெட்டிவேர், கடுகு, சுக்கு, கொடிமுந்திரிப்பழம், கோரோசனம், நன்னாரிவேர், நிலப்பனங்கிழங்கு, தாளிசபத்திரி, சடாமஞ்சில் சந்தனத்தூள், இலுப்பைப்பூ, தேவவகைக்கு கழஞ்சு கால் வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டு செவ்விளநீர் விட்டு இரண்டு சாமம் அரைத்துப்பின் முலைப்பால் விட்டு மேலும் இரண்டு சாமம் அரைத்துக் கன்றியளவாக மாத்திரைஉருட்டி பதினைந்து நாள் உலர்த்தி பதனஞ்செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

ஒருமாத்திரையை காலையிலும் மாலையிலுமாக முலைப் பாலில் இழைத்துக் கொடுத்தால், பழஞ்சுரம், நஞ்சுக்காய்ச்சல் நீங்கும். அம்மையார் கூந்தல் குடிநீரில் கொடுக்க பதின்மூன்று

சந்நி பாதங்களும், நச்சுத்தோடம், ஆமசுரம், கணைச்சுரம் நீங்கும்.

## 5. கணம்:8—22;30-36; 41-55; 131, 138-139

கர்ப்பச்சூடு என்பதையே கணம் என்பர். மாந்தம் முழுமை யாகக் குணமாகாத நிலையில் விட்டுவிட்டால் முற்றிய நிலையில் ஏற்படுவதே கணம் ஆகும். குழந்தையின் மூன்றாம் ஆண்டுமுதல் ஏழாம் ஆண்டுவரை தோன்றக்கூடும்.

இது இருபத்து நான்கு வகைப்படும். அவை,

அந்தகம், அழல், இரத்தம், ஊது, எரி, ஐயம், கொதிப்பு, சிங்கி, சுழி, சூலி, தேரை, நீராமக்கணம், நீர், பிரளி, பிற பேராமகணம், மகா, மந்தாரம், மாந்தம், முக்கு, மூலம், வளி, வாள், வீக்கம் என்பனவாகும்.

**கணத்தின் பொதுக்குணங்கள்:** உள்சுரம், கடுஞ்சுரம், உடல் இளைத்தல், வாய்நாற்றம், மலம்கட்டல், வாய்எரிவு, தலை மயக்கம் ஆகியவை கணத்தின் குணங்களாகும்.

**கணத்துக்கு நெய் :** வல்லாரையிலை, மாசிப்பத்திரி, வில்வ இலை, விளாஇலை இந்நான்கின் சாறும், ஆலம்பால், அத்திப் பால், வெங்காயச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, முலைப்பால், பசுவின் பால், பசுநெய், வெள்ளாட்டின் பால், கொம்புத்தேன், கோவைச்சாறு இப்பத்தும் வகைக்கு அரைப்படி எடுத்துத் தேங் காய்ப்பால் ஒரு படி எடுத்து இவைகள் எல்லாவற்றையும் கலந்து ஒரு மண் சட்டியிலூற்ற வேண்டும். அத்துடன் சந்தனத்தூள், அறுகங்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஆகிய நான் கிலும் வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்து வேறு மண்பாண்டத் தில் போட்டு காற்படி தண்ணீர்விட்டு அரைக் காற்படியாகக் காய்ச்சி வடித்து அந்தச் சாற்றுடன் கலக்க வேண்டும். அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலரிசி, இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி வற்றல், சடாமஞ்சில், அதிவிடயம், மாசிக்காய் இப்பதிமூன்றை யும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து இடித்து வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்படி கலந்து வைத்தவைகளை அடுப்பி லேற்றி எரித்து நெய்போலாகும்பதத்தில் மேற்படித்தூளைத் தூவிக் கிண்டிக் குழம்பாகும் பக்குவத்தில் இறக்கி வடித்துக் கொண்டு காலை மாலை இரண்டு வேளை உச்சிக் கரண்டியளவு நாற்பது நாள் கொடுத்து வந்தால் எல்லாக் கணங்களும் நீங்கும்.

அத்துடன் வளியால் உண்டானகணங்களும் அதனால் உண்டாகும் பிறநோய்களும் தீரும். அன்றியும் எட்டாண்டு வரைக்கும் யாதோர் பழுதும் நேரிடாதபடி தேரையைப்போல் தேய்ந்து போகின்ற தேரைக் கணத்துக்கும் இந்நெய்யை நோய் வன்மைக்குத் தக்க அளவு கொடுத்து வந்தால் அந்நோயும் தீரும்.

இந்நெய்யைக் கொடுக்குங் காலத்தில் புளியையும் புளிப்புப் பொருள்களையும் வளி நோயை விளைவிக்கும் பொருள்களையும் கட்டாயமாக நீக்கிவிட வேண்டும்.

**தேரைக் கணம் :** தேரை போன்று மெலிவு ஏற்படும். இந்தக் கணத்திற்கும் மேற்குறித்த வல்லாரை நெய்யையே கொடுக்கக் குணமாகும்.

**மூலக்கணம் :** வாதமும் பித்தமும் மிகுந்து சீதமும் இரத்தமுமாய் பலம் போகும். வயிற்று உளைச்சல், ஆசன வாய்க்கடுப்பு, வயிற்றுஎரிவு, சுரம், மிகுந்த தலைவலி ஆகியகுறிகள் காணும்.

**மருந்து :** அதிவிடயம், கடுக்காய்த்தோல், சுக்கு பறங்கிச் சக்கை, கசகசா, விலாமிச்சம்வேர், சந்தனத்தூள், சாதிப்பத்திரி, நெல்லி வற்றல், சிற்றாமுட்டி, செம்பருத்தி, வில்லவேர் இப்பன்னிரண்டு பொருட்களையும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து வறுத்து இடித்து பொடியாக்கி, ஐந்து பலம் பசு நெய்யை சட்டியிலிட்டு அடுப்பேற்றி கொதிக்கும்போது மேற்படித் தூளையும், இரண்டு பலம் கற்கண்டைற்ம் ஒரு பலம் சீரகத்தூளையும் பொடித்துச் சேர்த்துக் காய்ச்சி பக்குவத்தில் இறக்கிக் கொள்ள வேண்டும். இதில் தினந்தோறும் காலை மாலை ஆகிய இருவேளையும் பாக்களவு வீதம் ஏழுநாள் சாப்பிட்டால் மூலகணம் தீரும். இதற்கு இச்சா பத்தியமிருக்க வேண்டும்.

**சூலிகணம் :** மேல்மூச்சு, இருமல், வயிற்றுவலி, நெஞ்சுவலி, தொண்டைவலி, முகநாற்றம் ஏற்படும். பால் உண்ணாது.

**மருந்து :** சிற்றாமணக்கு எண்ணெய் கால்படி, துளசி, நிலத்துளசி, கஞ்சாங்கோரை, மாசிப்பத்திரி, வில்வம் இவற்றின் சாறு வகைக்கு ஆழாக்கு, இவற்றில் சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு இவை வகைக்கு இரண்டு வராகனெடை எடுத்துத் தூள் செய்து சாற்றில் கலந்து ஆழாக்குத் தேன்விட்டுக் காய்ச்சிக் கடுகு திரளும் பக்குவத்தில் எடுத்து வடிக்கவும். காசு எடை காலை ஒரு வேளை கொடுக்கச் சூலிகணம் தீரும், ஓராண்டுக்குட்பட்ட குழந்தைக்கு ஐந்துநாள் மேற்பட்ட குழந்தைக்கு நாற்பது நாள் கொடுக்கவும், இதற்கு இச்சாபத்தியம் இருக்க வேண்டும்,

**முக்குகணம் :** நாக்கு வெந்த புண் ஆகும். சுரம், தலைவலி, நாவறட்சி, வயிற்றுக்கடுப்பு, உடல்கறுத்தல், ஆசனக்கடுப்பு, தாகம், சீதரத்த மலம் போதல் ஆகிய குணங்கள் காணும்.

**மருந்து :** வில்வம், விலாமிச்சை, விஷ்ணுகிரந்தி: கோரை, ஓரிதழ்த் தாமரை, இவற்றின் வேர், முருங்கைவித்து, துளசி விதை, கோங்கம்பிசின், ஆவாரம்பிசின், கோஷ்டம், அதி மதுரம், அக்கரகாரம், தாளிசப்த்திரி ஆகியவை வகைக்கு நான்கு பலம் இடித்துக் கொள்ளவும். கற்றாழைச்சாறு தாய்ப்பால் இவை வகைக்குக் கால்படி பழச்சாறு ஆழாக்கு எண்ணெய் ஒரு படி ஆகியவற்றைக் கலந்து காய்ச்சி கடுகுபதத்தில் வடித்துக் கொள்ளவும். இவ்வெண்ணெயை ஒரு காசி எடை வீதம் காலையில் மட்டும் மூன்றுநாள் கொடுக்கவும்.

ஒருபலம் சீரகத்தை மலரப் பொரித்து, ஒருபலம் இண்டந் தண்டை நறுக்கிக் கால்படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாக காய்ச்சி வேளைக்கு ஒருசங்கு அளவு மாலையில் கொடுக்கவும் முக்குகணம் விலகும்.

**மாந்தகணம் :** ஏலம், மாசிக்காய், திப்பிலி, கோரோசனை, கோஷ்டம், மாஞ்சில், சீரகம், தானிக்காய் இவை வகைக்குக் கால்பலம் எடுத்து தாய்ப்பாலில் ஆறுமணி நேரம் அரைத்து, உருண்டைச் செய்து, உலர்த்தி தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க மாந்தகணம் விலகும்.

**ஆமகணம் :** நெஞ்சுதுடிப்பு, சிறுநீர்மஞ்சளாதல், உடம்பு கடுத் தல், கண்டம், உடல் இவை நிறம் வேறுபடுதல், உடல்கனத்து ஊதுதல், இருமல், வயிற்றுளரிவு, மேல்மூச்சு, உடல் இளைத்தல் ஆகியவை இதன் குணங்களாகும்.

**நெய் :** இண்டன் வேர்ச்சாறு, இண்டந்தண்டுச்சாறு வகைக்கு ஒரு படி; குமிழன், மாசிப்பத்திரி, புங்கு, நிலத்துளசி, உள்ளி, முடக்கொற்றான், தூதுவளை, நுணா, வல்லாரை, கஞ்சாங் கோரை இவற்றின் சாறு வகைக்குக் கால்படி; ஒருபடி சிற்றா மணக்கு எண்ணெய், சாதிக்காய், வசம்பு, கிராம்பு, கடுகு ரோகணி, கடுக்காய்த்தோல், வால்மிளகு, ஓமம், சுக்கு இவை வகைக்கு ஒருபலம்; இவற்றை வறுத்து இடித்து சாறு, எண் ணெய்களில் கலந்து காய்ச்சிக் கடுகுதிரளும் பக்குவத்தில் இறக்க வேண்டும். காலையில் ஒருவேளை ஒரு கரண்டி வீதம் ஐந்து நாள் கொடுக்கவும். மாலையில் நிலத்துளசியைப் பிட்டவித்துப் பிழிந்து வடிகட்டிய நீர் இருகரண்டி கொடுக்க ஆமகணம், வலி மாந்தம் ஆகியவை நீங்கும்.

### 6. சுரம் : சன்னி. *136-137; 140-141; 146-147, 189.*

சுரம் மூன்று வகைப்படும். அவை அழல், ஐயம், வளி என்பன. அழல் சுரமாகில் தோலிலும், ஐய சுரமாகில் எலும்பிலும், வளி சுரமாகில் தசையிலும் சேர்ந்து உடலை வெதுப்பி வருத்தும். **குளிகை :** ஏலம், கிராம்பு, முத்தம், அதிமதுரம், இருவேலி, வெண்கடுகு, சுக்கு, நன்னாரி, முந்திரி, கோரோசனை, தாளிசப் பத்திரி, நிலப்பனை வேர், சடாமாஞ்சில், சந்தனத்தூள், தேவ தாரம், திப்பிலி, ரோகணி ஆகியவை வகைக்குக் கால்கழஞ்சு எடுத்து செவ்விள நீர் தண்ணீர் வார்த்து, ஆறுமணி நேரம் அரைக்கவும். மைப்போல ஆகும். இதனை தாய்ப்பாலில் ஆறு மணி நேரம் அரைத்து, வழித்து எடுத்து, குன்றிமணி அளவு உருண்டைச் செய்து, பதினைந்து நாள் நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். இதனை தாய்ப்பாலில் இழைத்துக் கொடுக்க பழஞ்சுரம், விடாதகாய்ச்சல் யாவும் விலகும். கியாழத்தில் இழைத்துக்கொடுக்க பதின்மூன்று வகை சன்னியும், விஷ தோஷங்களும் விலகும்.

**வேறு மாத்திரை:** திரிகடுகு, சாதிக்காய், கிராம்பு, ஏலம், ரோகணி, மஞ்சள், இவை வகைக்கு ஒரு கழஞ்சாக எடுத்து, பழச்சாற்றால் இரண்டு சாமம் அரைத்து, பயிறளவு உருண்டைச்செய்து உலர வைக்கவும். இதனை மாசிப்பத்திரி கியாழத்தில் இழைத்துக் கொடுக்க விஷசன்னி, குளிர்சன்னி, விக்கல் போன்ற யாவும் விலகும்,

**சுர மாத்திரை—வேறு:** பச்சைக்கற்பூரம், இலவங்கம், வால்மிளகு சிறுநாகப்பூ, ரோகணி, ஏலம், இஞ்சி, சுக்கு, சீரகம், செவ்வாலம் பருப்பு ஆகியவை வகைக்கு கால்பலம் வீதம் எடுத்து, பொற்கை யான் தகரைச் சாறுவிட்டு ஆட்டி, ஒன்பதுநாள் சென்றபிறகு மிளகு அளவில் உருண்டைச் செய்து உலர்த்தி வைக்கவும். இதனை இஞ்சி, தேன், தாய்ப்பால் இவற்றில் ஏதேனும் ஒன்றில் இழைத்துக்கொடுக்க சன்னிசுரம், மாந்தசுரம் ஆகியவை நீங்கும்.

### 7: வாதம்: *66, 236-239*

**மலவாதம்:** கண்கள் உருளும். நாக்கு, கை, கால், கண் இவை களைக் குவிக்கும், அடிவயிற்றை வலிப்பிக்கும். மலக்கட்டு ஏற்படும். கண்டத்தில் புண் ஏற்படும். தாயின் பாலை விரும்பிக் குடிக்காது. விஷக்கட்டி போல தொண்டையில் ஏற்படும். இவை மலவாதத்தின் குணங்களாகும்.

**மருந்து:** பூண்டு, வனக்கடுகு ஆகியவை வகைக்குப் பத்துபலம் சேர்த்து தையிலமிறக்கி, பதப்படுத்தி துவலையிட குடல்வாதம், மலவாதம் முதலியன நீங்கும்,

## 8. வாய்வு: *106—115*

கர்மம்செய்தவர்கள், ஞானம் இல்லாதவர்கள், எளியோரை பழித்தவர்கள் ஆகியோருக்கு வாய்வுத் தொல்லைகள் ஏற்படும். கால் வீக்கம், கால்பிடிப்பு, குடைச்சல், இடுப்புளைப்பு ஆகியவை இதனால் ஏற்படும் குணங்களாகும்.

**பற்று:** சூதம், வங்கப்பொடி, ரத்தப்பழம், கண்டு பரங்கி, குன்றி வித்து, அரளிவிதை, எட்டிவிதை ஆகியவற்றில் இரண்டு வராகனிடை எடுத்து, முட்டையின் வெண்கரு சேர்த்து, அரைத்து நல்லெண்ணெய் சிறிது சேர்த்துப் பற்றுப்போட இவ் வாய்வு விலகும்.

இதே மருந்தினைப்பற்றுப்போடமேகவாய்வு, துடைவாழை, அரையாப்பு போன்றவையும் விலகும். வைப்புச்சூனியமும் நெருங்காது.

**மச்சகேந்திர வாய்வு:** சீதளப் பொருள்கள், வாய்வுப் பண்டங்கள் போன்றவற்றை மிகுதியாகச் சேர்ப்பதாலும், மாதவிடாய் பெண்ணைக் கூடுவதாலும் இவ்வாய்வு ஏற்படுகிறது.

இதனால் உடல் முரிவதுபோல் காணும். மடித்த செத்தையைப் போலவும், மாண்ட பிணம் போலவும், கண் சுழன்று பஞ்சு அடைய சாய்வான்.

**இவ்வாய்விற்குத் தைலம்:** (துவாலைத் தைலம்)

வேம்பின் எண்ணெய், எட்டி எண்ணெய், விச்சுப்பால், கண்டங்கத்திரிப்பால், வெள்ளெருக்கின் பால், குன்றிவித்தின் பால் இவற்றைச் சமஅளவில் சேர்த்து, ரோகணி, காயம் இவற்றை வெண்ணெயில் அரைத்து அனைத்தையும் கரைத்து நீர்வற்றுமாறுக் காய்ச்சி, அதனைத் தேய்த்துத் துவாலையிட வாய்வு வகை அனைத்தும் நீங்கும்.

## 9. அச்சரம் (அக்கரம்)

மூலச்சூடு மிகுந்து, நாளில் வேக்காட்டை ஏற்படுத்தும். நாவில் மாவைப் போல் நீறுபூத்து இரணமாகும். இதனால் நாமுள் தோன்றுதனும், நாநாற்றம் அடித்தலும் ஏற்படும்,

முதல் வகையே நாமுள் நோய் எனப்படுகிறது. இவ்அச்சரம் எட்டு வகைப்படுகிறது. அவை, சூலி, நீதி, சோதி, வீமி, குண்டி, கபாலி, குமரி, உள்அச்சரம் என்பனவாகும்.

**நாமுள்:** *61-63* அச்சரவகையில் ஒன்று நாமுள் என்பது. தாயின் வருத்தம், பிறக்கும் போது ஏற்படும் தோஷம், தாயின் பசி, உடல் வருத்தம் இவற்றால் இந்நோய் குழந்தையைப் பாதிக்கும்.
**குணம்:** குழந்தை விம்மி அழும். மேல்மூச்சு, கண்ணீர் சொரிதல், தலைவலி, சுரம், கனவு, கலக்கம், பால் உண்ணாமை, விலாக்களில் அள்ளெடுத்தல், நா, தொண்டை, வாய் உட்புறம் எல்லாம் முள்உண்டாதல், தலைநடுக்கம், வாய்பேசமுடியாமை, கோழை மிகுதல் இவை இதன் அறிகுறிகளாகும்.

**மருந்து:** ஒரு கடுக்காய்த் தோலைப் பொடிசெய்து, சீரகப் பொடி ஒருவராகன் எடை சேர்த்து ஒரு சங்கு அளவு கற்றாழைச் சாற்றில் சேர்த்து, ஒரு நாளைக்கு இரண்டு வேளையாக மூன்று நாள் கொடுக்கவும்.

### 10. குன்மம் : *241-245*

சூது, வாது நிறைந்தவருக்குத் தோன்றும் குன்மத்திற்கு மருந்தாவது: சூதம், கெந்தி, லிங்கம், மாம்பருப்பு, நாபி, இந்துப்பு, காரம். சீனககாரம், அரிதாரம், மகாதிரிபாலை, வால் மிளகு, திப்பிலி, சுக்கு, ஏலம், வகைக்கு இரண்டுவராகன் எடுத்து அகலிக் கொழுந்து சாறு விட்டு காலைமாலை நன்றாய் அரைக்கவும். அதனை உலர்த்திப் பற்பாக ஆக்கவும். பசு வெண்ணெயில் இழைத்து மூன்றுநாள் கொடுக்க எண்வகைக்குன்மமும் ஓடிவிடும்

### 11. நவமூலம் : 246 - 252

பூரம், காரம், கல்நார் இவை ஒரு பலம் வீதம் எடுத்துக் கொள். சீந்தில், கொடிக்கள்ளி இவற்றின் பாலால் ஆட்டி, வழித்துச் சீலை செய்யவும். எலுமிச்சம் பழச்சாறு வார்த்துக் கல்வத்தில் அரைத்து எடுக்கவேண்டும். தூதுவேளைக் காயளவு உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு மண்டலம் உண்ண நவமூலம் அறும்.

## பொதுவான குழந்தை மருந்துகள்

### 1. கஸ்தூரிக்குளிகை. *142-145*

கஸ்தூரி ஒரு கழஞ்சு, குங்குமப்பூ இரண்டு கழஞ்சு, கோரோசனை மூன்று கழஞ்சு, இவற்றை முலைப்பால்விட்டு மூன்று மணி நேரம் அரைத்து, குன்றிமணி அளவு உருட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

மாத்திரை எடைக்குத் தாய்ப்பால் விட்டுக் குழைத்து முன் நாவில் தடவவும். விஷசன்னி, பிறசன்னிவகைகள் யாவும் விலகும்.

### 2. சஞ்சீவிமாத்திரை. *148-149*

கல்நார், கிராம்பு, பத்திரி, செவியம், திப்பிலி, விடயம், தானிக்காய், கருஞ்சீரகம், அக்கிராகாரம், கடுகுரோகணி, சாதிக்காய், கடகம், சிங்கு, கோரோசனை, குங்குமப்பூ இவற்றையைச் சமஎடை எடுத்து, இஞ்சிச் சாற்றில் ஒரு சாமமும், கையாந்தகரைச் சாற்றில் ஒருசாமமும், நாரத்தம்பழச் சாற்றில் மூன்று நாழிகையும் அரைத்துப் பயிறுஅளவில் உருண்டைசெய்து உலர்த்தவும். தோஷவகை, மாந்தம், சுரம், ஈளை, இருமல், காசம் ஆகிய எல்லா நோய்களும் விலகும்.

### 3. சஞ்சீவி லேகியம் : *124-125*

சஞ்சீவிக் கொடியின் மேல்தோல் சீவிச் சிறிய துண்டுகளாக நறுக்கி உலர்த்திக் கொள்ளவும். பின் அதைத் தூளிடித்துச் சலித்துக் கொள்ளவும். சாதிக்காய், சாதிப்பத்திரி, மல்லி, சண்பகம்பூ, கற்கடகம், சிங்கி, குங்குமப்பூ, சந்தனத்தூள், இலவங்கம், சுக்கு, ஏலம் வகைக்குக் கால்பலம் சேர்த்து முன்போலச் சூரணம் செய்து கொள்ளவும். இருசூரணமும் சமஅளவில் எடுத்து ஐந்துபலம் கற்கண்டு போட்டு பசுவெண்ணெயில் அரைத்து எடுக்கச் சிறந்த லேகியமாகும். சஞ்சீவி மாத்திரையின் பயன் இதற்கும் உண்டு.

### 4. கலியாணி லேகியம் :

கரும்பு, நெல்லி, கலியாணப் பூசணி, தண்ணீர்மிட்டான் கிழங்கு, நிலப்பனை, கொட்டி, அல்லி, ஓரிதழ்த்தாமரை, சிட்டி, தாமரைக்கிழங்கு, பசுந்தோன்றி, முசுமுசுக்கை, குருவியிலை, சிரவள்ளி, புளியாரை, வல்லாரை, கீழ்க்காய்நெல்லி, சிறுக்கீரை, அகத்தி, ஆடாததோடை, வெள்ளரிக்காய், பசரக்காணி, யானை வணங்கி, செவ்விளநீர், நெருஞ்சி, புளித்த மாதுளை, கொடிமாதுளை இவற்றின் சாறும் பன்னீரும் வகைக்குக் கால்படி சேர்க்கவும்.

சோம்பு, சீரகம், கொத்தமல்லி, அதிமதுரம், தக்கோலம், இருபுடல், பேரரத்தை, மகாதிரிசாதம், சடாமாஞ்சில், நன்னாரிவேர், வெட்டிவேர், கூகைநீர், அறுகண்வேர், பெருந்துத்தி,

வராச்சி, நெற்பொறி, சந்தனத்தூள், பருத்தி, முத்தம், தாளிசம், கல்நார், கல்மதம், பூரம், செங்கீரை, சண்பகப்பூ, வச்சிர வல்லி, வாளம், சங்குபஸ்பம் இவை வகைக்கு அரைபலம் சேர்த்துத் தூளாக்கவும்.

சார்வகைகளோடு சர்க்கரை, பசுவின்நெய் ஒவ்வொன்றும் அரைவீசை சேர்க்கவும். இவற்றைக் காய்ச்சி நன்றாகக் கொதிக்கும்போது தூள் வகைகளைக் கொட்டிக்கிளறி லேகியபதத்தில் இறக்கவும்.

இந்த லேகியத்தால் தாபசுரம், சன்னிசுரம், சன்னிவாதம், பித்தசுரம், வயிற்றுளரிவு, வெண்பாண்டு, சயங்கள், நீரிழிவு, காமாலை, மேகவகை, புண்புரைகள், சோகை, பாண்டு, வாந்தி, சயங்கள், மண்டையிடி, பீனிசங்கள் யாவும் தீரும்.

## 5. குங்குமப்பூலேகியம் : *170-175.*

குங்குமப்பூ, வெள்ளரிவிதை, சாதிக்காய், இலவங்கப்பூ, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலக்காய், நீருள்ளி, நிலப்பனைவேர், குமரிவேர், நெருஞ்சில், மாதுளம்வித்து, யானை வணங்கி, நெல்லிமுள்ளி, திப்பிலி, அதிவிடயம், கடுக்காய், சுக்கு, உள்ளி, தானி, கூகை, மிளகு, கோதுமைப் பருப்பு, சப்சாவித்து, அதிமதுரம், ரோகினி, மாஞ்சில் இவை வகைக்கு ஒருபலம் எடுத்து சூரணிக்கவும். கால்படி நெய்யும் ஐந்துபலம் கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சி அதில் சூரணத்தைக் கொட்டி மெழுகு பதத்தில் இறக்கவும்.

காலை, மாலை இருவேளை சுண்டைக்காயளவு உண்ணவும். இச்சாபத்தியம். வெட்டை, மேகநீர், நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, இரத்தப்பிரமியம், பாண்டு, வாதகுஷ்டம், கிரந்தி, பதினெட்டு சூலை, கிறுகிறுப்பு, வாய்நீர்ஊறல், கை, கால் எரிச்சல், கண் எரிவு, வாந்தி, ஓக்காளம், விக்கல், குன்மம், எலும்புருக்கி, மேகம் யாவும் தீரும்.

## 6. காந்தாதி கியாழம் : *232-233*

ஈசுரமூலி, சிற்றாமணக்கு, கிலுகிலுப்பை, நாய்க்கோட்டான் சின்னி, கடுக்காய்த்தோல், மாசிப்பத்திரி, பர்ப்பாடகம், தான்றி, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், ஊசிப் பாலை இவற்றைச் சரி எடை எடுத்துச் சிறுநீரில் நனைத்து இடித்துக் கறுக்கிக் கொள்ளவும். அவற்றோடு நீலி, நிலவேம்பு,

பொசத்தக்காய், தாளிசபத்திரி, கரிவேப்பிலை, கோரைக்கிழங்கு சிற்றாமுட்டி இவற்றின் தூள் வகைக்கு ஒருவராகன் சேர்த்து இரண்டுபடி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுண்டுமாறு காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இக்கியாழத்தில் வயிரவ மாத்திரையை இழைத்துக் காலையிலும், கியாழத்தை மட்டும் மாலையிலும் கொடுக்கத் துலைமாந்தம் நீங்கும்.

# 5

## விளக்கம்

மூலிகை
சான்றுகள்
கடைச்சரக்கு
சான்றுகள்

# மூலிகை விளக்கம்

**1- அகத்தி:** Grandiflora-Sesleauia Grandiflorapers-papilionaceae

முனி, கரிரம், அச்சம் என்னும் வேறு பெயர்களை உடையது,

இது செடி இனத்தைச் சேர்ந்தது. இதில் பலவகை உண்டு. ஆனால் வழக்கமாக உணவில் கொள்ளும் வெள்ளைப்பூ கொண்ட அகத்தியைத்தான் குறிப்பிடுவது வழக்கம்.

இதன் வேர் அதிதாகம், மேகவாய்வு, கண், காது, மூக்கு, வாயில் தோன்றும் எரிச்சல் இவற்றை நீக்கப் பயன்படும். இலை பயித்திய தோஷம் நீங்கப் பயன்படும்.

**2. அத்தி:** Cluster Figtree

ஆனைக்கன்று, அதவு, அதம், கோளி, சுப்பிரதஷ்டம், தந்தி என்பன இதன் வேறு பெயர்கள்.

யானையின் சருமம் போன்று சொர சொரப்பாகவும், கருமை கலந்த சாம்பல் நிறமாகியப் பல பிளவுகளுடனும் காணப் படுவதால் 'ஆனைக் கன்று' என்ற பெயர் வந்திருக்கலாம் என்று மூலிகைமணி ஆசிரியர் கூறுகிறார். அடிமரம் நாவல் மரம் போன்று இருக்கும். காய் பச்சையாகவும், பழம் செம்மண் நிறச் சிவப்பாகவும் இருக்கும். காயின் மேல் பட்டுப் போன்ற மெல்லிய சுணை இருக்கும். பால் தரும் மரங்களில் அத்தி சிறப்புடையது.

அத்தியின் பிஞ்சு, காய், பழம், பட்டை, பால் அனைத்தும் மருத்துவப்பயன் உடையவை. அத்திப்பிஞ்சு பேதி ஆசனக் கடுப்பு, மூலச்சூடு, மூலவாய்வு, இரத்தமலம் முதலியனவும், அத்திக்காய் வாதசூலை, உடல் சூடு, திரேககணம், மேகநோய்கள் முதலியனவும் நீங்கப் பயன்படுகிறது. பழம் நீரிழிவு, நா வறட்சி நீங்கப் பயன்படும். வேர் சரும நோய்கள், ரணம்,

வெட்டைச்சூடு இவைப் போக்கப் பயன்படுத்தப்படுகிறது. வேரி லிருந்து மது இறக்குவார்கள்.

**3. அம்மான் பச்சரிசி:** Euphorbia pillulifera

இது எம்பெருமான் பச்சரிசி, சித்திரைப் பாவாடை என்றும் வழங்கப்படும்.

திருமாலுக்குப் படைக்கும் பச்சரிசிப் பொங்கலுக்கு என்ன சக்தி உள்ளதோ, அதே சக்தி இந்த எம்பெருமான் பச்சரிசிக்கு உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது மூலிகை மணி ஆசிரியர் கருத்து. செடி வகையைச் சார்ந்தது. இவை மிளகாய்ச் செடி இலைபோல ஜதை ஜதையாக இருக்கும். ஒன்று முதல் இரண்டு சாண் நீளம் வளரும். காம்பைக் கிள்ளினால் பால் வரும் பூ பழுப்பு நிறமாக முத்துக் கொட்டை அளவு இருக்கும். இதில் தரையோடு வளரும் சிறிய அம்மான் பச்சரிசியும் உண்டு.

இந்த பச்சிலை உடல் எரிச்சல், மலபந்தம், உடலில் ஏற்படும் தடிப்பு, பிரமேகம், நமைச்சல் இவற்றை குணப்படுத்தப் பயன் படுத்தப்படும்.

**4. அரசு:** The Peepul Tree

திருமரம், அசுவத்தம், சுவலை, கணவம், சராசனம், பணை பிப்பிலம், பேதி என்பது இதன்வேறு பெயர்கள்.

மரங்களுக்கு எல்லாம் ராசா அரசுதான். இலைகள் கீழ் நோக்கு இருக்கும். பழம் சிறியதாக துவர்ப்பும் இனிப்புமுடைய தாக இருக்கும்.

அரசம்வேர்ப்பட்டை கரும இரணத்தையும், விதை சுக்கிலக் கெடுதியையும், கொழுந்து வாட்டுகின்ற தாகத்தையும், மகரந்தம் தேகஉஷ்ணத்தையும் திரிதோஷத்தையும் நீக்கப்பயன் படுகின்றன.

**5. அரளி:** Sweet Scented oleander

இது கரவீரம், அலரி என்றும் வழங்கப்படும்.

சிறிய மரமாக வளரும். அகலமில்லாத, நீண்ட இலைகளை உடையது. இரண்டு அல்லது மூன்று அங்குல நீளமுள்ள மஞ்சள் நிறப் பூக்களை யுடையது. குண்டுவடிவில் பச்சைநிறக் காய்கள் இருக்கும். கெட்டியான கொட்டைகளையுடையது. எந்தப் பாகத்தை உடைத்தாலும் பால்வடியும். இதில்சிகப்பு, வெள்ளை ஆகிய நிறப்பூக்களையுடைய செடிவகையும் உண்டு. அது மருந் திற்கு ஆகாது.

கண்நோய்க்குச் சிறந்த மருந்து. சுரம், அரோசகம், குஷ்டம் விதாகம், புடைகிரந்தி, இரத்தக்கட்டி, பித்த நோய், தலைவலி இவற்றைப் போக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

## 6. அல்லி : The Lily-Nymphaea Rubra

இது சந்திரமைத்திரி என்றும் வழங்கும்.

இது தாமரை இனத்தைக் சேர்ந்த நீர்த்தாவரம். கனத்த துவாரமுடைய தண்டால் ஆன கொடி வகையைச் சேர்ந்தது. முட்டை வடிவ வட்டமான இதன் இலைகள் ஒருபுறம் பிளவு பட்டிருக்கும். மெல்லிய செந்நிற மலரை உடையது. நீண்ட இதழ்கள் அடுக்காய்க் காணப்படும்.

அல்லிப்பூவால் இரத்தப் பிரமேகம், வெகு மூத்திரம், தாகம், உட்சூடு நீங்கும். இது அறிவை மேம்படச் செய்யும். நீரிலுள்ள பிற மூலிகைகளை விட அல்லி அதிகப் பயனுடையது.

## 7. அவரை: Dolichos Lablab

இதுகொடி வகை. மும்மூன்று இலைகள் ஒருகாம்பில் இருக்கும். அவரையில் வெள்ளை, நீலம், வெளுர்நீலம் ஆகிய நிறப் பூக்களை உடைய பலவகை உண்டு. பட்டை, உருண்டை ஆகிய பல வடிவக்காய்களையுடைய வகைகள் உண்டு.

அவரைப்பிஞ்சு அரச உணவாகப்பயன்படும். பத்தியத் திற்கும் பயன்படுகிறது. இலை சிரஸ்தாபநோய் கிராணி, விஷம் சிரோகம். சிரங்கு இவை விலகப் பயன்படுகிறது.

## 8. அவுரி : Indigo Plant

நீலி, அவரி என்ற வேறு பெயர்களையுடையது.

குத்துச்செடி இனத்தைச் சார்ந்தது. சாயத்திற்காகவே இதனை முற்காலத்தில் பயிர் செய்தார்கள்.

அவுரி இலை தாவரக் கந்தமூல விஷயங்கள் பதினெட்டும், வாதசுரம், மாந்தம், சீதளம், சன்னிபாதங்கள், சீல்வாதம், சர்ப்ப விஷம் ஆகியவையும் நீங்கப் பயன்படுகிறது. வேர் விஷம், வயிற்று நோய் நீங்கப் பயன்படுகிறது.

## 9. அறுகன் Gynodon Dactylon pers

இதற்கு மேகாரி, முதண்டம், பதம், அறுகு, தூர்வை என்ற பெயர்களும் உண்டு.

'அகரம்புல்' என்று ஆதியில் வழங்கியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மொழி திரிபுகளால் அருகம்புல் என்று மருவி விட்டிருக்கக் கூடும் என்கிறார் மூலிகை மணி ஆசிரியர். அறுகம் புல்லில் இருவிதமுண்டு. ஒன்று குத்துச்செடியாக வளரும். இது பசுமையாக இருக்கும். மற்றொன்று கொடியாகப் படரும். இதன் நிறம் சாம்பல் கலந்த பசுமை. வேர் பூமியில் அடர்த்தி யாகப் படரும்.

நீரில் அலசிச் சுத்தி செய்ய வேண்டும். உடல் வெப்பத்தைப் போக்கி வறட்சியை நீக்கும். சிவப்புரத்த அணுக்களைக் கட்டுப் படுத்தி வீணாகக் கழியும் இரத்தத்தை நிறுத்தும். சிறுநீர் பெருக்கியாகவும், கோழையகற்றியாகவும் வேலை செய்கிறது. வெட்டைச்சூடு, கண்ரோகம், சீதபேதி, சர்மரோகம், ரச பாஷாண மருந்துகளின் வேகங்கள், எலிகடி, ராசபிளவை ஆகிய நோய்கள் அறுகம்புல் கொண்டு செய்யப்பட்ட மருந்துகளால் நீங்கும்.

## 10. ஆடாதொடை: Adatoda Vasica

இதனை வாசை என்றும் கூறுவர்.

பித்த சிலேத்தும வியாதிகளைக் கண்டிக்கும் சக்தி உள்ள படியால் முன்னோர்கள் இதற்கு இப்பெயர் வைத்திருக்கக்கூடும். இது பெரும் செடி இனத்தைச் சேர்ந்தது. தன்னிச்சையாக வளரக் கூடியது. நுணா இலை போன்று ஆனால் அதைவிட பச்சை நிறமாக இருக்கும். இலை சிறு கசப்பாக இருக்கும்.

இது சுவாச உறுப்புக்களான நுரையீரல், சுவாசக்குழல்கள், குரல்வளை இவற்றில் வேலை செய்யக் கூடியது. இதன் இலை இருமல், சீதபேதி, கபம், சளிசுரம், காசரோகம், ஆகியவை நீக்கப் பயன்படுத்தப்படுகிறது. வேர் இழுப்பு, கன்னி, கரப்பான், கிரந்தி, விக்கல், வாந்தி இவற்றைப் போக்கப் பயன்படும். இளம் பிள்ளைவாதம் நீங்க நல்லதொரு மூலிகை. ஹோமியோபதி மருத்துவர் ''ஐஸ்டிசியா ஆடாதொடை'' என்பர்.

## 11. ஆரை: Marsilea Quadrifolia

ஆரைக்கீரை, ஆறாக்கீரை, நீர் ஆவாரை என்னும் பெயர் களை உடையது.

சிறிய கீரை இனத்தைச் சேர்ந்தது. இரண்டு முதல் மூன்று அங்குலம் வளரும், நான்கு இதழ் இலைகளை உடையது. பூவும் காயும் இல்லை,

ஆரை நீரைக்கட்டும் குணமுடையது. நீரிழிவு வியாதி, பயித்தியரோகம், பலஹீனம், அதிகதாகம், மேகநீர்ஒழுக்கு முதலியன நீங்கப் பயன்படுத்தப்படும்.

## 12. ஆல்: Banyan Tree

வானோங்கி, ஆலமரம், இயக்குரோதம், கோளி, காமரம், தொல்மரம், பழுமரம், பூதம், வடம் என்னும் பெயர்களை உடையது.

ஆலமரத்தில் இருவிதமுண்டு. ஒன்று கல் ஆலமரம். இது அடி மரம் பருத்து நீண்ட இலைகளுடன் இருக்கும். விழுது இருக்காது மற்றொன்று நல்லஆலமரம். இதற்குவிழுதுண்டு. நல்ல ஆல்மரம் தான் மருந்துக்குப் பயன்படுவதாகும்.

ஆலமரத்தின் பால், விழுது, பழம், விதை, பூ, பட்டை, இவை ஆகியவை மேகவயிற்றுக்கடுப்பு, மேகநீர் நீங்கப் பயன்படு கின்றன. ஆலம்பால் பிரமேகம் நீங்கவும், தாதுபுஷ்டி, ஆடும் பற்களை இறுக்கவும் பயன்படுகிறது.

## 13 ஆவாரை: Tanner's Cassia

ஆகுலி, தலபோடம், ஏமபுட்பி, மேகாரி, ஆவிரை என்ற பெயர்களை உடையது.

சிறுசெடி இனத்தைச் சேர்ந்தது. செடி மூன்றடி முதல் ஐந்தடி வரைவளரும். இலை இருக நிலக்கடலைச் செடியின் இலை போன்று பசுமையாக இருக்கும். பூ, உருண்டையாக ரோஜா இதழ்போல இருக்கும். ஆனால் மஞ்சளாக இருக்கும். காய்கள் நீண்டு கொத்தவரங்காய் போல அகலமாக இருக்கும்.

பூ மேகவட்டை, உடல்சூடு, துர்நாற்றம் இவற்றைப்போக்க பயன்படும். இரத்தநாடி நரம்புகளில் உண்டாகும் கோளாறு களை நீக்க ஆவாரைப் பிசினும், விதையும் பயன்படும். பட்டை சரும வெடிப்பு, வறட்சி, எரிச்சல் இவற்றை நீக்கப் பயன்படும்.

## 14. இஞ்சி: Ginger Root

வேர்க்கொம்பு, அதகம், சௌவர்ணம், சுண்டி, கடுபத்திரம், சுச்சு, இலாக்கொட்டை, மதில் என்ற பெயர்களாலும் குறிக்கப் படும்.

ஒரு செடியின் கிழங்காகும்.

பித்தம், பித்தவாய்வு, பித்த சீதளம், இருமல், வாந்தி குடல் கோளாறுகள், நீரிழிவு, தலைவலி, ஆசனநோய், பல்வலி. காது குத்தல் இவை அனைத்தும் நீங்கப் பயன்படுத்தப்படுகிறது,

**15. இலவு:** Silk Cotton Tree

சான்மலி என்றும் பெயர் உண்டு.

இது உயர்ந்து வளரும் ஒருவகை மரம். இதன் காயிலிருந்து மெல்லிய பஞ்சு கிடைக்கிறது.

இலவமரம் வாதசுரம், தந்து மேகம் இவை நீங்கவும், சுக்கிலமும், இரச தாதுவும் பலப்படவும், இலவம்பிசின் பிரமேக வெள்ளை, மூத்திரக் கடுப்பு, உட்சுரம், பேதி இவை நீங்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**16. இலுப்பை:** Basia Datifolia

இதுவும் பெரிய மரமாக வளரும். குண்டு வடிவத்தில் வெண்ணிறம் பூக்களை உடையது. ஒருவகை மணமுடையது. கோவைக் காய் போலச் சிறிது குண்டான காய்களை உடையது. இதன் கொட்டை பலாக்கொட்டை போல, கெட்டியான தோலோடு காணப்படும்.

இலுப்பை நெய் கறப்பான், கடிவிஷம், சிரங்கு, வாதம் முதலியன நீங்கவும், இதன் பிண்ணாக்கு பீஜவீக்கம், திரிதோஷம், கடுவன் ஆகியவற்றைப் போக்கவும், இதன் விதை அந்தர வாயுவையும், இதன் வேர் விரணம், புரை, வயிற்றுக் கடுப்பு, அதிமூத்திரம், இரத்த கிரணி, அக்கினி மாந்தம், வாத சூலை முதலானவை நீங்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**17 ஈருள்ளி:** Onion

வெங்காயம், காயம், உள்ளி, ஈரவெங்காயம், பலாண்டு, நிச்சியம், கிரந்தம், சாம்பார் வெங்காயம் என்னும் பெயர்களை உடையது.

இது உரிக்க உரிக்கத் தோலுரியும். இடைவிடாமல் பசுந்தாள் வைக்கோல் போல வளர்ந்து வெள்ளைப்பூ பூக்கும்.

நாட்டு வெங்காயப் பூ சாமானிய வாதம், முதல் மூன்று இன்ம ரோகங்களையும், குடலைப்பற்றிய வாதநோயையும் போக்கும். தேக உஷ்ணம், மூலம், சிரங்கு, இரத்தநோய், பித்தம், கண்டகம், தாகம், உஷ்ண பேதி இவை நீங்கவும் பயன்படுகிறது.

**18. உத்தாமணி: Dacmia Extensa**

வேலிப்பருத்தி, உத்தமக்கன்னி, உத்தமமாகாணி என்று வேறு பெயர்களை உடையது.

கொடி இனத்தைச் சார்ந்தது. கொடியின் காம்பு சாம்பல் பூத்த வெண்ணிறமாக இருக்கும். இலை பூவரசு இலை போல் ஆனால் நுனி குறுகி பசுமை கலந்த வெண்ணிறமாக இருக்கும். இலைக்காம்பைக் கிள்ளினால் பால் சுரக்கும். பூ புளியம்பூ மாதிரி இருக்கும்.

இதன் பால் பற்பங்கள், சுண்ணங்கள் செய்யப் பயன்படும். வீக்கத்தில் பாலை அடிக்க நீங்கும். இதன் வேர்சாறு வாதம், விஷக்கடி, மாந்தக்கண சுரம், சுளி இவை நீங்கப் பயன்படும்.

**19. ஊசிப்பாலை: The Iron-wood Tree**

இதனைப் பாலை என்றே கூறுவர்.

பாலையிலை வெயில், பனி இவற்றால் உடல் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப் பயன்படுகிறது. பிரமேகம் விலகவும், தேக புஷ்டி உண்டாகவும் பயன்படுத்தப்படுகிறது.

**20. எட்டி: Nox Vomica, Strychnine**

காஞ்சிரம், விடமுட்டி என்ற பெயர்களை உடையது.

மரவகையைச் சார்ந்தது. சிறிது வட்டவடிவமான இலைகளை உடையது. காய் குண்டான வடிவத்தில் பசுமை நிறத்தோடும் பழம் நல்ல சிவப்பு நிறத்தோடும் இருக்கும். கொட்டை தட்டையாக வட்டவடிவில் பச்சை நிறத்துடன் இருக்கும். கசப்புடையது.

எட்டிக்கொட்டை கருமேகம், சன்னி, விஷக்கடி, குஷ்டம் வாதவலி, கரப்பான், மூர்ச்சை இவை விலகப் பயன்படுத்தப்படுகிறது. இதன் வேரால் மகாசர்ப்ப விஷங்களும், பயித்தியமும் குணமாகும்.

**21. எருக்கு: Mudar-calogropis giganter-r-br**

அருக்கன் எருக்கன் என்றும் கூறுவர்.

சூரியனுக்கும் சிவனுக்கும் அருக்கன் என்ற பெயர் உண்டு. இந்த அருக்கனுடைய சக்திகொண்ட மூலிகைக்கு அருக்கன் செடி என்று பெயர். இரு எருக்களாக மாறிவிட்டது என்பது மூலிகை மணியின் கூற்று. இலை கை அகலம் உடையதாக இருக்கும்.

செடி, காம்பு, இலை பசுமையோடு பால் நிறச்சாம்பல் பூத்து இருக்கும். காம்பில் பால் சுரக்கும். பூ சித்திர வேலைப் பாடமைந்து காணப்படும்; காய் நீளமாகச் சோமாஸ் பண்டம் போல் இருக்கும். நீல நிறப்பூவை உடையது. வெள்ளைநிறப் பூவையுடையது என்று இருவகை உண்டு.

எருக்கு பற்களில் வரும் நோய் விலகவும், இதன்பால் வாத நோய், சன்னிபாதம், ஐவகை வலி நீக்கவும், இலை எலிவிஷம் பெருவியாதி, சிலேத்தும நோய், கிரும ரோகம், அக்கினி மந்தம், மலக்கட்டு முதலானவை விலகவும் பயன்படுத்தப்படுகின்றன.

## 22. எள்: Seasamum Indicum

இதற்குத் திலம் என்ற பெயரும் உண்டு.

செடிவகையைச் சேர்ந்தது. வெண்ணிறப் பூவை உடையது. எண்ணெய் வித்துக்களில் இது முதன்மையானது. விதை மிகச் சிறியதாக கருமையாக இருக்கும். இதன் நெய்யே எள்+நெய் எண்ணெய் என்று பெயர்பெற்றது. பிறகு அதுவே பொதுப்பெய ராயிற்று.

இதன் நெய் தேகபுஷ்டி, குளிர்ச்சி இவற்றை உண்டாக்கும். நேத்திர நோய், கானரோகம், கபால உஷ்ணம், காசம், விரணம் நீங்கவும், எள் உஷ்ணம், கபம், காசரோகம் இவற்றைப் போக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

## 23, ஓரிதழ்த் தாமரை : Viola Suffruticosa

இதற்கு ரத்தின புருஷ், சூரியகாந்தம் என்னும் பெயர்களும் உண்டு.

சிறு செடியினத்தைச் சேர்ந்தது. ஆறுமுதல் ஒன்பது அங்குலம் உயரம் வரை வளரும். தும்பை இலை போல் நீளமான இலைகளை உடையது. இலைக்கணுவில் ஒரு இலை, ஒரு பூ அரும்புவிடும். ஒரே இதழ் கொண்டது. காய் பச்சை நிற முடையது.

சுரம், சுவாச நோய், மேக நோய் இவற்றைப் போக்கப் படுத்தப்படுகிறது. உடலுக்கு வலிமை தரும்.

## 24. கஞ்சா: Indian Hemp

கோரக்கர்மூலி, சுற்பத்தி, சித்தர் மூலி, ஞானி என்னும் வேறு பெயர்களை உடையது.

இது செடி வகையைச் சேர்ந்தது. இதன் காய் உருண்டை வடிவில் வெளுர்ப் பச்சையாக இருக்கும். காயைக் கீறிவிடுவர். அதிலிருந்து வடியும் பால் உலர்ந்து பிசின் போல காயிலேயே ஒட்டியிருக்கும். அதனைப் பிரித்து எடுப்பர். அக்காயினுள் உள்ள விதையே கசகசா எனப்படுகிறது.

கஞ்சா மூலவாய்வு, கிரகணி, நீடித்த அதிசாரம், அதிதூலம் கபாதிக்கம், கறப்பான் இவைகளைப் போக்கவும், கூன்நிமிரவும் பயன்படுத்தப்படுகிறது.

**25. கஞ்சாங்கோரை : Indian Tea - Ocimum Album**

இது சங்கர துளசி, நாய்த்துளசி என்றும் வழங்கப்படும்.

குத்துச்செடி இனத்தைச் சேர்ந்தது. துளசிச்செடி உயரம் வளரும். இதன் கதிர்கள் பெரியதாக அடுக்கடுக்காக நீண்டு இருக்கும். இவை பசுமையாக, சிறிய தேக்கரண்டி அளவு முனை கூராக இருக்கும். இச்செடி நெடிசல் மணம் உடையது.

கஞ்சாங்கோரை மாந்தபேதி, அக்கினிமந்தம், கணச்சூடு, பிரமேகம், காசம் இவை நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

**26. கண்டங்கத்திரி : Solenum Xanthocorpum**

கண்டங்காரி, முள்கொடிச்சி, நாமத்தி, கபநாசினி, இலை கத்திரி, பழம்பொன்னிறத்தி, கன்னங்கத்திரி, நித்திகம் என்னும் பெயர்களை உடையது.

சாதன மூலிகையில் மூன்றாவது இடத்தில் உள்ளது. படர்ந்து வளரும். செடிவகையைச் சார்ந்தது. இலை தூதுவளை இலை போன்று அமைந்துமுள் குட்டையாக வளைந்து இருக்கும். பூ நீலநிறமுடையது. சிறிது அகலமான, கத்திரி இலை போன்ற இலையையுடைய ஒரு வகையும் இதில் உண்டு.

கண்டங்கத்திரியினால் காசம், சுவாசம், சயம், அக்கினி மாந்தம், சீதச்சுரம், சன்னிபாதம், தோஷங்கள், வாதரோகம் முதலானவை விலகும். இதன்காய் சிலேஷ்மநோய், சீதங்கலந்த மலம் போக்கவும், இதன் பழம் இருமல், இரைப்பு, சயம், பல்லரணை நீங்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**27. கதலி : Banana, Plantain Tree**

சேகிலி, திரணபதி, ஓசை,அரம்பை, கவர்அம்பணம் வாழை என்னும் பெயர்களையுடையது.

வாழையில் பலவகை உண்டு. பழம் மலத்தை இளக்கும். உஷ்ணத்தைப் 'போக்கும். தண்டு மூத்திர தாரைகளில் குற்றங் களைப் போக்கும். இலை, வெந்த, தீப்பட்ட புண், குணம் உண்டாக பயன்படுத்தப்படும். பூ விரமேகம், வெள்ளை ஒழுக்கு, பைத்தியரோகம், கைகால் எரிச்சல் இவற்றைப் போக்கவும், பிஞ்சு பத்தியத்திற்கும் இரத்த மூலக்கடுப்பு, அடி வயிற்று இரணம் நீங்கவும், காய உஷ்ண இருமல், பித்தவாந்தி நீங்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

## 28. கத்தாழை Indian Alue

இது குமரி, குறத்தி, நாறி, சோதி, ராக்ஷசி, மலத்தளிச்சி, மங்கை, தாழை, கன்னி என்னும் பல பெயர்களால் குறிக்கப்படு கிறது.

''கன்னியாகுமரியில் ஏராளமாக வளர்வதால் 'குமரி' என்று இதை வழங்குவர்'' என்பர் மூலிகை மணி ஆசிரியர். இதன் மடல் அடி கனத்து சதைப்பற்றுள்ளதாகப் பசுமையில் வெண்மை கலந்து காணப்படும். மடல்கள் ஒன்றரை அடி நீளம் வரை இருக்கும். இதன் ஓரங்களில் முட்கள் காணப்படும். பூ மஞ்சள் நிறமாகவும், சில சிகப்பு நிறமாகவும் இருக்கும்.

சிறுநீர் உறுப்பு, ஜனனேந்திரியங்கள் வேலை செய்யவும், அடிவயிறு உஷ்ணம், வாயு கோளாறு, மலசிக்கல் இவற்றைப் போக்கவும் பயன்படுகிறது. சாறி வயிற்றிவலி, இரணம், குன்மக் கட்டி, புளிஏப்பம், பொருமல் இவற்றைப் போக்கப்பயன்படும். மடல் மைதயாரிக்கவும் வேர் உஷ்ணவியாதிகளைப் போக்கவும் பயன்படும். ஹோமியோபதி ஆலோஸ்சக்கோட்ரைன் என்றழைக் கிறது,

## 29. கரிசலாங்கண்ணி: Eclepita crecta

இது கையாந்தகரை, திருமால், சுட்டோன்புதல்வன், கண்ணன், பொற்றலைப்பாவை, கரிப்பான், கையான், தேக ராஜம், கைவீசிஇலை, கைகேசி, கரசனாங்கண்ணி, கரிசாலை, கரியசாலை, பொற்கொடி என்னும் பல பெயர்களை உடையது.

கரிசல் என்றால் தங்கம் என்று பொருள். கரிசலாங்கண்ணி யில் நான்கு வகை உண்டு. அதில் பொற்கொடிதான் மருத்துப் பயன் அதிகம் உள்ளதாகக் கூறுவர். அறுகம்புல் போல் கணுவில் வேர்விட்டு வளரும். இலை மாதுளை இலை போன்று கனமாக வும் சொறசொறப்பாகவும் இருக்கும். செடி லேசான சிவப்பு

நிறமுடையது. பூ மஞ்சள் நிறச் சாமந்தி போல இருக்கும். இம் மூலிகையைப்பலவித வசியங்களுக்கும் பயன்படுத்தலாம் என்பது நம்பிக்கை.

**30. கருநீலி:** Indigo plant

இது அவுரியையே குறிக்கும்.

**31. கருங்காலி:** Ebony

கருங்காலிப்பிசின் மேகமூத்திரம் நீங்கவும்,பட்டைப் பிரமேக மூத்திரம், தந்த மூலரோகம், இருமல், சுவாசம் நீங்கவும், வேர் குஷ்டம், இரத்தபேதி நீங்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**32. கருந்துளசி :** Hog basil (Black)

துளசி செடி இனத்தைச் சேர்ந்தது. இதில் பலவகை உண்டு. அதில் ஒன்று கருந்துளசி. கருந்துளசி காசம், இரைப்பி, கிருமி, நீர்க்கோவை, மார்பு சளி, சுரம், சன்னிபாதம் இவற்றை நீக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**33. கருவேப்பிலை:** Bergera Konigil

இது கறிவேம்பு, கறியபிலை, கரிப்பிலை, கறிவேப்பிலை என்னும் பெயர்களை உடையது.

காய்கறி பதார்த்தங்களுடன் இதனைச் சேர்ப்பதால் இதற்கு கறிவேம்பு, கறிவேப்பிலை என்று பெயர் வந்திருக்கலாம். சிறுமர வகையைச் சேர்ந்தது. இதற்குத் தனி மணமும் குணமும் உண்டு.

இதனால் அரோகம், சீதபேதி, வயிற்றுளைவு, புராதன சுரம், பயித்தியதோஷம் ஆகியவை நீங்கும்.

**34. கல்யாண பூசணிக்காய்:** Bennicasa cerifera

வெள்ளைப்பூசணி, சாம்பாற்பூசணி என்னும் பெயர்களை உடையது.

இதனை பித்தரோகம், உட்காய்ச்சல், சாரமேகம், பேய்ச் சொறி, பிரமேகம் ஆகியவை விலகப் பயன்படுத்தப்படுகிறது.

**35. கள்ளி:** Milk hedge

இதில் பலவகை உண்டு. கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, திருகு கள்ளி போன்றவை மருத்துவத்துக்கு உதவுவன. அனைத்தும்

செடி வகையைச் சேர்ந்தவையே. எல்லாவற்றிலும் பால் வடியும் தன்மை உண்டு. உயர்ந்து வளருவதால் மரம் என்றும் கூறுவர்.

கள்ளிப்பட்டை நரம்புசிலந்தி, கபவாதம், தொந்த சன்னி பாதம், வாதப் பிரகோபம் ஆகியவை நீங்கப் பயன்படுகிறது.

## 36. கீழ்க்காய்நெல்லி: Phyllanthusniruri

கீழ்க்காய் நெல்லி, கீழ்வாய் நெல்லி, கீழாநெல்லி என்று பலவாறாக வழங்குவர்.

இலைகளுக்குக்கீழே காய்ப்பதாலும் செடியின் சக்தி, மர நெல்லிக்கு ஒத்த குணமுடையதாக இருப்பதாலும் இதற்குக் கீழ்க்காய்நெல்லி, கீழ்வாய்நெல்லி என்று பெயர் வந்திருக்கலாம் என்பது மூலிகை மணி. இது ஒரு மாந்திரீக மூலிகை. பூண்டு இனத்தைச் சேர்ந்தது. இலை, காம்புகள் போலவே நீண்டு இரு பக்கமும் வரிசையாக துவரம் பருப்பு அளவில் இருக்கும். இலைகளுக்கு அடியில் காம்புகளில் காய்கள் இருக்கும்.

குளிர்ச்சியுண்டாக்கவும், மத்திர ரோகங்களைப் போக்கவும், காமாலை, பித்தபாண்டு நீக்கவும் பயன்படும். மாலைக்கண், பெண்களின் சூதகப்பெரும்பாடு, காமாலை நோய்கள். மண்டை பீனிச ரோகங்கள் தலைவலி இவை நீங்கப் பயன்படும். பல வாதம், கல்லீரல் வியாதிகள், காதில் சீழ் வடிதல் இவற்றைப் போக்கவும் பயன்படும்.

## 37. குப்பை மேனி: Acalypha Indica

திரிபுரமெரித்தோன், கரியரியுரித்தோன், காலாக்கினியோன் மசக்கி, மாற்சால மோகினி, கொரி, பூனைவணங்கி, குப்பா மேனி, மேனி என்னும் பல பெயர்களையுடையது.

செடி இனத்தைச்சேர்ந்தது. ஒன்றுமுதல்ஒன்றரையடிஉயரம் வளரும். சில இடங்களில் இலை பச்சையாகயும், சில இடங்களில் மஞ்சள் நிறப் புள்ளிகள் கலந்ததும் காணப்படும். இலை வட்டமாக, ஓரம் ரம்பம் போன்று பற்கள் இருக்கும். பூக்கள் வெண்மையாகவும், காய்கள் முக்கோண வடிவில் பச்சையாகவும் இருக்கும். மண் போக நீரில் அலசிக் காயவைத்து உபயோகிக்கலாம்.

ஆசனப் பௌத்திரம் சகலமும் இதனால் நீங்கும். வயிற்றுப் பூச்சி, சிறுகடிவிஷம், தலைவலி இவற்றிற்கு இதன்வேர் மிகப் பயன்படும். ஹோமியோபதி வைத்தியர்கள் இம்மூலிகையை "அகாலிபா இண்டிகா" என்பர்.

**38. குன்றி:** Jecuirity seeds

கருத்தமுகச்சி, வெளுப்பி, மலைக்குருவி, குணக்காரி, நஞ்சிக்கி, கொடிச்சி என்னும் பெயர்களையுடையது.

கொடிவகையைச் சார்ந்தது.

குன்றிவித்து கண்ணோய், பித்தநோய், மூர்ச்சைச் சுரம், சிலேஷ்ம கோபம் இவைகள் விலகப் பயன்படுகிறது.

**39. கொத்தமல்லி:** Coriander luds

கீரைவகையைச் சார்ந்தது. இதன் விதையைச் சிலர் தனியா என்பர். நல்ல மனமுடையது.

இதனால் உட்சூடு, நளிர்ச்சுரம், பயித்தியம், அசீரணம், வாந்தி, விக்கல், நாவறட்சி இவைகள் நீங்கும். உடம்பினை வலிமை அடையச் செய்யும்.

**40. கொடிவேலி** Plumbago Zylancia, White lead Wort

சித்தர்மூலம், சித்ரமூலம், கொடுவேலி, வெண்கொடி வேலி, கருங்கொடி வேலி, செங்கொடி வேலி, கொடிமூலி என்ற பல பெயர்களை உடையது.

உடலுக்குப்பிணி வராதபடி காக்கும் மூலிகை இது. சித்தி பெற மூலாதார மூலிகை சித்தர் மூலம் என்பர். குத்துச் செடியினத்தைச் சேர்ந்தது. நாயுருவி உயரம் வளரும். இளம் இலை குருத்துவாழை இலை போலச் சுருண்டு, பின்விரியும். இதில் மூன்று விதம் உண்டு.

**41. கொன்றை:** Indian Luburnam

சரக்கொன்றை, கொண்ணை, தாமம், பெருங்கொன்றை, கடுக்கைத்தாமம், இதழி, ஆக்குபதம், கிருதமாலம் என்னும் பெயர்களை உடையது.

மரவகையைச் சேர்ந்தது. சிவனுக்குரிய மலர். கொன்றை இனம் அனைத்தும் ஆவாரைக் குடும்பத்தைச் சேர்ந்தது. இலை ஆவாரை போன்று இருக்கும். பூ ரோஜா நிறமாக இருக்கும்.

மேகநோயைக் போக்கும். பிசின் மேகம், வெட்டை, இவை விலகப் பயன்படுத்தப்படுகிறது.

**42. கோவை :** Cphalandra Indica

மண்ணுமுழுங்கி, அண்ணல்வல்லி, அதரம்பழத்தி, நாமத்தி கோட்டுறுகன்னி என்னும் பெயர்களை உடையது.

கொடி இனத்தைச் சேர்ந்தது. கொடி முசுமுசுக்கைக் கொடி போன்று, ஆனால் ரோமங்கள் இல்லாமல் வழுவழுப்பாக இருக்கும். காய் முசுமுசுக்கைக்காய் போல், ஆனால் அதைவிட பத்துமடங்கு பெரியதாக பச்சைநிறமாக இருக்கும். பழம் சிவப்பாக இருக்கும்.

கிழங்கு சீதளம், வாதம், திரிதோஷம், பித்தகோபம், குஷ்டம், இரைப்பு, கோழை, மதுப்பிரமேகம் நீங்கவும், காய் வெப்பம், சுரகபதோஷம் போக்கவும், இலை சிரங்கு, நீரடைப்பு, பெருவிரணம் போக்கவும் பயன்படுத்துகின்றன.

**43. சங்கு :** Conch

இதனை காக்கணம்கொடி, காக்குநட்டை, கால்கணம், காக்கணத்தி, காக்கட்டான் என்றெல்லாம் வழங்குவர்.

கொடி இனத்தைச் சேர்ந்தது. இலை மேசைகரண்டி அளவு இருக்கும். இதன்பூ சங்குபோல தோற்றமளிக்கும். காய் ஆவாரை, பீன்ஸ்போன்றும், காய்ந்தவுடன் கருப்பாக காராமணி போன்றும் இருக்கும். சங்குபுஷ்பம் இரண்டுவிதம் உண்டு. ஒன்று வெண்சங்குபுஷ்பி, மற்றொன்று மருஞ்சங்குபுஷ்பி.

இதன்வேர் சுரம், தலைவலி, உஷ்ணவியாதி, பிரமேகம், தந்திமேகம், வெள்ளைப்போக்கு, வாதநோய், ஆகியவை நீங்கப் பயன்படும். இதன் விதை யானைக்கால் வீக்கம் நீங்கப் பயன்படும். இதன்இலை பார்வைக்கோளாறு, கண்வலி, ரத்தக் கட்டிகள் நீங்கப் பயன்படுத்தப்படும்.

**44. சடாமாஞ்சில் :** Musk Root

குஷ்டம், சிலந்தி விஷம், பழையசுரம், உட்சூடு, வாயுபேதி, விழிநோய், காசம், இரத்தபித்தம், சுவாசம் ஆகியவை போக உபயோகப்படுகின்றது.

**45. சண்பகம் :** Golden or Yellow Chamba

வண்டுணா என்றும் வழங்குவர்.

மரவகையைச் சேர்ந்தது. உயரம் முப்பதுஅடி முதல் நாற்பது அடி வரை இருக்கும். பூ அனேக இதழுடையது. பூக்கள் சிறிய காம்புடையது. மஞ்சள் நிறம் உடையவை. வாசனையாக இருக்கும்.

சண்பகமரத்தின் வேர் உஷ்ணம், சுரம், நேத்திரதோஷம் முதலானவை விலகவும், பூ வாதபித்தம், குன்மம், காரம், பிர

மேகம், அஸ்திசுரம், தோஷசுரம், முதலானவை நீங்கவும் பயன் படுத்தப்படுகின்றன. விதை பூச உப்பிசத்தைப் போக்கவும், வேர் கட்டிஉஷ்ணம், சுரம், கண்ணோய் நீங்கவும், இலை புண் நீங்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**46. சம்பழம் : Acid Lime Fruit**

இது அரசகனி எலுமிச்சைப் பழம், எலுமிச்சை, ராஜகனி, பழம், கனி, சான்றோன் மூலி என்று வழங்கப்படும்.

இலைகளிலும், காய்களிலும் எண்ணெய்ப்பசுமை நிறைந்து காணும். இதில் பன்னிரெண்டு வகை இருப்பதாகக் கூறுவர்.

எலுமிச்சை பித்தம், வாதம், கபம், போக்கப் பயன்படுத்தப் படுகின்றது. பசி உண்டாடும். எலுமிச்சங்காய் திரிதோஷம், சூலை, குன்மம் பித்த உஷ்ணம் விலகவும் பயன்படுத்தப்படு கின்றது.

**47. சரக்கொன்றை : Pudding Pipe Tree**

கொன்றை என்றும் வழங்குவர்.

இதன் காய் முருங்கைக்காய் போல் நீண்டும், திரண்டும் இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறத்தில் சரம்சரமாகத்தொங்கும்.

இதுபெருவியாதி, கிருமிரோகம், சூலை, வாதகபதொந்தம், ஆரோகம் இவற்றைப் போக்கப் பயன்படுகின்றது. வேர் சுரம், சூலை, அரோசிகம் நீங்கப் பயன்படும். கொன்றைக்காய்க் குள்ளிருக்கும் பசையுள்ள சதைப்பற்று குழந்தைகளுக்கு மலச்சிக் லைப் போக்கப் பயன்படும்.

**48. சிவதை: Indian Jalap**

பகன்றை, மலம்போக்கி என்றும் கூறுவதுண்டு.

இதில் கருஞ்சிவதை, வெள்ளைச்சிவதை என்று இருவகை சிவதையைப் பசும்பாலில் அவித்து உலர்த்த சுத்தியாம்.

சிவதை பல மூலவாயு, சுரம், சீழ்ச்சிரங்குகள், வயிற்றுவலி, மலக்கட்டு முதலானவை விலகப் பயன்படுகிறது. இதன் சத்து வேரின் அல்லது வேரின்பட்டையில்தான் உள்ளது. எனவே இதன் வேர்ப்பட்டைத்தான் உபயோகிக்கப்படும்.

**49. சிறுகீரை: Amapanthes Gengeticus Linn**

குப்பைகுடையாள், கூற்றுவன் தங்கச்சி, அப்பைச்சுருக்கி, ஆரோக்கியகாரி, நப்பைக் குடைச்சி, காயசித்திச்சி, சில்லி என்ற பெயர்களைக் கொண்டது.

சிறுகீரையால் தூம்பிரநோய், காசம், படலம், மூத்திர கிரிச்சம், வீக்கம், பித்தநோய், விஷம், கபால கிரந்தி முத லானவை விலகப்பயன்படும்.

**50. சிற்றாமுட்டி: Pavonia Zeylancia**

குறுந்தொட்டி என்ற பெயர்பெற்றது.

வேர் அஸ்திசுரம், பித்தநோய் போன்றவை தீரப்பயன் படும். கண்ணுக்கு ஒளி தரும்தயிலத்திற்கு உதவும்.

**51. சிறுதேக்கு: Clerodendron Serratlfolium**

கண்டுபரங்கி, காண்மூலிகை என்றும் வழங்குவர்.

சுவாசகாசம், பயித்தியம், சுரவாதம், நாசிநோய், சலதோஷம், முந்நீர்க்கோவை, பீன்னீர்க்கோவை, குளிர்சுரம், உடல்வலி, உடல்காந்தல் இவற்றைப் போக்குவதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

**52 சிறுநாகப்பூ: Mesua Ferra**

ஆண்குறியில் விழுகின்ற வெள்ளை, மார்க்கந்தப்பிய ஆவிருதவாதம், காசரோகம் இவற்றை நீக்கப் பயன்படுத்தப் படுகிறது.

**53. சீந்தி: Heart Leaved Moonseed**

இது அமுதவல்லி, சஞ்சீவி என்ற வேறு பெயர்களையும் உடையது.

சீந்தில் கொடிவகையைச் சேர்ந்தது. நற்சீந்தில், பொற் சீந்தில் என இருவகைப்படும். மரத்தின் மேல் வெகுதூரம் படரும் கொடியினம். வேப்பமரத்தில் படர்ந்திருப்பது சிறப்பானது. சீந்திற் கிழங்கினால் சர்வமேகம், ரத்தபித்தரோகம், சூட்சை மாந்தசுரம், பேதி, பித்தகணம், சர்ப்ப விஷம் ஆகியவை நீங்கும்.

**54. சுண்டை: Solanum Pubescens**

கடுகி என்றும் இதனைக் கூறுவர்.

சிறு மரவகுப்பைச் சேர்ந்தது. இருபிரிவு உண்டு. மணச் சுண்டை எனவும் பால்சுண்டை எனவும் கூறுவர். பத்துப்பதி னைந்து அடி உயரம் வளரும். இலைகாய் தூதுவளை இனத் தைச் சேர்ந்தது. காம்புகளில் முட்கள் இருக்கும். பூ வெண் ணிறம் உடையது.

மார்புச்சளி, கிருமிரோகம்; வாதாதிக்கம் விலகப் பயன் படும். இதன் வேர் தும்மலை உண்டாக்கும்.

**55. செங்கீரை :** Red Pot — Herbs

சிவப்புக்கீரை எனவும் கூறுவர்.

செங்கீரைத்தண்டு தீராத பித்தநோய், பெண்களின் பெரும் பாடு, சன்னி, சுரம் முதலியவற்றை நீக்கப் பயன்படுத்தப் படுகிறது.

**56. செம்பருத்தி :** Shoe Flower

இதற்குத் தாசாணி, தாசவானபூ என்னும் பெயர்களும் உண்டு.

ஜெபத்திற்குரிய மலர் எனவே இதற்கு 'ஜபம்' என்ற பெய ரும் உண்டு. செடி வகையைச் சார்ந்தது. பத்துஅடிவரை வள ரும். இலைகள் பசுமையாக, வெற்றிலை போன்று இருக்கும். மலராத மொட்டு புகையிலைச் சுருட்டுபோல இருக்கும். பூ சிகப்பு நிறமாக இருக்கும்.

பூ இருதய சம்பந்தமான கோளாறுகளைத் தடுக்கும். மரப் பட்டை, வேர்ப்பட்டை மலமிளக்குவததோடு பொதுவாக வறட்சியைப் போக்கும். இவை சிறுநீர் நோயைத் தீர்க்கும்.

**57. செம்முள்ளி :** Barleria Prionitis

இது கபப்பெருக்கம், கணமாந்தம், சுவாசம், குழந்தை களுக்கு உண்டாகின்ற சுரதோஷம் இவை நீங்கப் பயன்படுத்தப் படுகிறது.

**58. செருப்படை :** Glimus Laloids

சிற்றிலைபாதம், தேகச்சோதி, புள்ளடி, சாம்பல்வருணி, முற்றலைசத்தி, கோடைவாசினி, செருப்படி என்ற பெயர்களை உடையது.

பூண்டு வகையைச் சேர்ந்தது. இதன் பெயரைக்கொண்டு ஆதிகாலத்தில் செருப்பு அணியும் பழக்கம் முதலே இருந்தது என்பது தெரிகிறது. வறண்ட இடங்களில் வளரும். தரையில் படரும். சாம்பல் கலந்த வெண்ணிறப்பச்சைநிறம் கொண்டது. செருப்பின் அளவு இருப்பதால் 'செருப்படி' என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம். இலைகள் காம்மை மறைத்துக்கொண்டு புதுக்காசு அளவு இருக்கும். காய், பூ, நெருஞ்சில் பூ, காய் போல் இருக்கும்.

சூலை, குன்மம், வாதகோபம், மர்தாக்கினி இவற்றைப் போக்கப் பயன்படும்.

**59. செவ்வந்தி : (சாமந்தி) Chrysanthemum Indicum**

சீமைச் சாமந்திப்பூதான் மருந்துக்கு உபயோகப்படுகிறது. செவ்வந்தி ஒன்பது வகைப்படும்.

செவ்வந்திப் பூவால் மூர்ச்சையும், தலைச்சுழலும் நீங்கும். கண்ணுக்கொளியும், உரோமச்செழிப்பும் உண்டாகும்.

**60. தகரை : Cassia Tora**

கையாந்தகரை என்பது இதுவே.

படர்தாமரை, சொறி, அக்கினிமாந்தம், அஸ்மாதுசுரம் முதலானவை விலகப் பயன்படுத்தப்படும்.

**61. தண்ணீர்விட்டான் : Asparagus Recemosus**

இதில் நாட்டினம், சீமையினம் என இருவகையுண்டு.

கிழங்கு வெகுமூத்திரம், புராதனசுரம், சோமரோகம், வெள்ளை நீரிழிவு, அஸ்திசுரம், பிரமேகம், உட்சூடு நீங்கப்பயன் படுகிறது.

**62. தவசிமுருங்கை : Justicia Tranque Bariensis**

ஊன், பிண்ணாக்குப் பூண்டு, நரிமுருங்கை என்னும் பெயர்களை உடையது.

வாதபீனிசம், வாதரோகம், தொந்தநோய், கபம், சுவாசம் பொடியிருமல் ஆகியவற்றைப் போக்கப் பயன்படுத்தப்படுகிறது. குழந்தைகளுக்கு அம்மை கண்டால் இதைக் கொடுப்பதுண்டு.

**63. தழுதாழை : Clerodendron Phlomoides**

இதற்கு ஆதிநாராயணன், வாதமடக்கி, வாதங்கரசசி, வாத நாராயணன் என்னும் பெயர்களும் உண்டு.

மரவகையைச் சேர்ந்தது. ஆதிநாராயணன் என்று பெயர் நல்ல சமயத்தில் உதவி செய்து காக்கும் அனாதி வஸ்துவைக் குறிக்கின்றபடியால் ஏற்பட்டிருக்கலாம் என்பது மூலிகை மணி. இது கருஞ்செம்பை இலை போன்றே தோற்றமளிக்கும்,

பக்கவாதம் முதலிய எண்பது வாதரோகங்கள், சிலேத்தும பீனிசம், புரைகிரந்தி, ஆவிருதவாதம், மந்தகபசுரம், தேகக் குடைச்சல் இவற்றைப் போக்கும். ஆனால் பித்தத்தை உண்டாக்கும்.

**64. தாமரை : Red Lotus (Eygytian)**

இதற்குத் தபனனன், நட்பு, கமலம், அம்புசம், பதுமம் என பலவேறு பெயர்கள் வழங்குகின்றன.

இது கொடியினத்தைச் சேர்ந்தது.

நீர்க்கோவை, காமாலை, வாந்தி, விக்கல், கபம், இவற்றைப் போக்கப் பயன்படுத்தப்படும். கிழங்கு வயிற்றுக்கடுப்பைப் போக்கவும், பூ ஔஷதவேகம் எட்டும், உஷ்ணமும் நீங்கவும், விதை சர்வதோஷங்களையும் நீக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**65. தும்பை : Lencus Cippalotus**

இது வைகுண்டம், துரோகம், ஐமுகனார், வெற்றி என்னும் பெயர்களாலும் குறிக்கப்படும்.

இது ஒரு கற்பக வஸ்து. செடி இனத்தைச் சேர்ந்தது. ஒன்று முதல் இரண்டடி வளரும். இதன் தண்டுமெல்லிய பட்டைக்கம்பி கள் போல நீண்டு கணுக்கள் விட்டு இருக்கும். இலை இரண்டங் குல நீளம், கால் அங்குல அகலம் இருக்கும். பூக்கதிர்கள் நவீன காத்ணிகள் போல இருக்கும். பூ கால் அங்குல நீளம் வெள்ளை நிறமாக ஒரே இதழோடு காணப்படும். பாதம் கீழ் நோக்கி இருப்பது போலத் தோன்றுவதால் 'பாதமலர்' என்றும் கூறுவர்.

இலையினால் விஷப்பூச்சிக்கடிகள், பாம்புக்கடிகள் குண மாகும். சொறிசிரங்கு, நமைச்சல், காமாலை, பித்தபாண்டு, சோகை யாவும் நீங்கும். மண்டையிடி, தலைவலி, பீனிசம், மூக்கின் ஒழுக்கு, கபம் ஆகியவை தும்பை இலைச்சாறு இரண்டு துளி மூக்கில் விட நீங்கும். பூவினால் ஜலதோஷம், தலைபாரம் நீங்கும்.

**66. தூதுவளை : Caper**

முள்ளுக்கொடிச்சி, மூதண்டக்கன்னி, வனத்தி, நயனசஞ்சீவி, கபநாசினி, தூதுணம், அளர்க்கம், சிங்கவல்லி என்ற பெயர் களை உடையது.

கொடி இனத்தைச் சேர்ந்தது. இலை, கத்தரிக்காய் இலை போன்று சிறியதாகவும் இருக்கும். முட்கள் நிறைந்திருக்கும். பூ செந்நிறம் கலந்த நீல நிறமுடையது. காய் கண்டங்கத்திரி போன்று சுண்டைக்காயளவு பச்சை நிறமாகவும், பழுத்தால் செந்நிறமாகவும் இருக்கும். இதன் பூ, இலை, காய், பழம், வேர் ஆகியவை உடல் உஷ்ணத்தைக் கொடுத்துக் கோழையை அகற்றி, தேகத்தைத் திடப்படுத்தும். இலை, காசம், மார்ச்சளி, விஷசுரம் போக்கப்பயன்படும். காய் உன்மத்தம், பைத்தியம், பிதற்றல், இருதய பலஹீனம் ஆகிய நோய்கள் நீங்கப்பயன்படும் வேர், கொடி இவை இரைப்பு, சுவாச காச சளி, இருமல் நீங்கப் பயன்படும். பழம் பாம்புக்கடி, சளி, சுவாசகாசரோகம் நீங்கப் பயன்படும்.

## 67. தென்னை: Coconut Palm

தென்னம்பிள்ளை, பூலோக கற்பக விருட்சம், தாழை, தெங்குமரம், இலாங்கனி, தென், நாளிகேரம், கோசிகம் என்ற பல பெயர்களை உடையது.

தென்அகமரம் என்பது தென்னைமரம் என்று மருவிவிட்டது என்று மூலிகை மணி ஆசிரியர் கூறுகிறார்.

தென்னையால் சேத்துமம் போகும். வேர் காசம், இருமல், சயநோய் தீர பயன்படும். தென்னங்குருத்து கபவுபத்திரம், ரத்த மூலம் இவற்றை நீக்கும். மது சுக்கிலப்பெருக்கம், பாண்டுரோகம், வாத பித்தம், ரத்தக்கழிச்சல், கரப்பான், இவற்றை உண்டாக்கும். பூ பிரமேகம், உட்காய்ச்சல், ரத்தப் பித்தம், விஷபாக நோய் விலகப் பயன்படுகிறது.

## 69. தேத்தான் : Clearing Nut Tree

இதனை இல்லம்என்றும் கூறுவர்.

கொட்டை பிரமேகம், வெட்டை, உட்சூடு, ஜடராக்கினி, வயிற்றுக் கடுப்பு, இரணம் நீங்கவும், பழம் வாத இருமல், இரைப்பு, மலக்கட்டு, திரிதோஷம் நீங்கவும் பயன்படுகின்றன.

## 69. தேவதாரம்: Cedrus deodara

செம்மணத்தி என்றும் கூறுவர்.

சிறு மரவகையைச் சேர்ந்தது.

தேவதாருக்கட்டை நாசிரோகம், பழையசுரம், சலதோஷம், சரீரவெப்பம் ஆகியவை நீங்கப் பயன்படுத்தப்படுகிறது. சந்தனத்திற்குப் பதிலாக இக்கட்டையைப் பயன்படுத்தலாம்,

**70. தொட்டால் சிணுங்கி: Mimosa Pudica, Sensitive plant**

இலச்சகி, காந்தமூலி, தொட்டால் வாடி, தொட்டாற் சுருங்கி, தொட்சுணங்கி என்னும் பெயர்களை உடையது.

இது ஒரு காந்த மூலிகை. தரையோடு படரும் செடி இனத்தைச் சேர்ந்தது. புளியன் இலைபோன்று ஆனால் அதை விடச் சிறியதாக இருக்கும். காம்பில் முட்கள் இருக்கும். பூ இளம் சிவப்பு நீலமாக இருக்கும்

மேகமூத்திரத்தை நீக்கும். வாதத்தடிப்பைக் கரைக்கும். கை, கால், மூட்டு வீக்கம் போம்.

**71. நரிமிரட்டி : Leucus Aspera**

கருந்தும்பை, வட்டக்கிறுகிறுப்பை இரண்டிற்கும் நரிமிரட்டி என்ற பெயர் உண்டு.

**72. நாயுருவி : Rough Chaff Tree**

நாயறைஞ்சி, நாக்குருவி, மாமுனிசேகரி, கேசரிகம், செகரிகத், சகரிகம், கொட்டாவி, கிருஷ்ணபன்னி, நாய்க்கு உருவி, நாய் குருவி, சவானம், சிறுகடலாடி, காமஞ்சரி, கதிரி, சனம், சிக்கிசிரம், காஞ்சரி என்ற பல பெயர்களைஉடையது.

நாய்க்கு உள்ள விஷத்தன்மையை உருவிக்கொண்டு வரும் சக்தியுள்ளதால் இப்பெயர் வந்திருக்கக்கூடும்! என்பது மூலிகை மணி. செடி வகையைச் சேர்ந்தது. ஒரு நாயின் உயரத்திற்கு மேற்படாமல் வளரும். இலை மேசைக்கரண்டி அளவு வளரும். நீண்ட குச்சிப்போன்ற கதிர்களை விடும். ஆறுஅங்குலம் முதல் 15 அங்குலம் நீளம் இருக்கும். இது ஒரு அஷ்டகர்ம மூலிகை யாகும்.

வேர் முகவசிகரமாக்கும். இலைஇரத்தமூலம், அதிசாரம், கபநோய், வியர்வை, தந்தி, பிரமேகம் போக்கும். விதை பசியைப் போக்கப் பயன்படுகிறது. வெறிநாய்க்கடி, பாம்புக்கடி, கண்ணோய், சருமநோய் போக்கவும் பயன்படும். வேர் பல்வலி, கருகலைக்க, முறைசுரம் போக்கப்பயன்படும். இதன் சமூலச் சாம்பல் பிரசவித்த பெண்ணின் உதிரச் சிக்கலைப் போக்கப் பயன்படும்.

**73. நாய்ப்பாகல் : Bryonia Maysorensis**

காட்டுப்பாகல் என்றும் கூறுவர்.

பீனிசத்தை நீக்கவும், சாதிலிங்கத்தையும், பாஷாணத் தையும் சுத்தி செய்யவும் இது பயன்படுத்தப்படுகிறது.

## 74. நாரத்தம் : Citrus Aurantium

இதில் அனேக வகை உண்டு.

நார்த்தங்காய், வாதநோய், மலமிருக்கி நீங்கவும், பசி, தேக சுத்தி உண்டாகவும், பழம் தாகம், அரோகம், வாய்க்கசப்பு, நீங்கவும் பயன்படுகின்றன. கொளுஞ்சி நார்த்தம்பழம் பிரமேகம், நாவறட்சி விலக உபயோகப்படுகிறது.

## 75. நிம்பம் : Neem Tree

வேம்பு, சாகாதமூலி, விஷபக்ஷணி, மதுரகசப்பி, பராசக்தி, பாரிபத்ரம், வாதாரி, பிசுமந்தம், நாதம், தித்தை, அரிட்டம், மாறன் தார் என்னும் பலபெயர்களை உடையது.

மூலிகைகளில் மகாசக்தி வாய்ந்தது இது. மர வகையைச் சேர்ந்தது.

வீரியத்தை விருத்தி செய்யவும், வலிமை தரவும், பயன் படுத்தப்படுகிறது. வேப்பநெய் மகாவாதம், கிரந்தி, சுரம், கரப்பான், சிரங்கு இவற்றைப்போக்கும். இதன் பிண்ணாக்கு வாதரோகம், திரிதோஷம் முதலானவை நீங்கவும், இலை புழுக்கள், பெருவியாதி, மகாவிஷம், சுரரோகம் இவை நீங்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

## 76. நீர்முள்ளி : Hygrophilla Spinosa

துரகதமூலம், இக்குரம் நிதகம், முண்டகம், காகண்டம், என்னும் பெயர்களை உடையது.

பூண்டினத்தைச் சேர்ந்தது. எங்கும் கிடைப்பது அரிது. காசினிக்கீரையின் இலைபோல இதன் இலை இருக்கும். கணுக் களில் சிறு இலைகளும் உண்டு. ஊதா நீர்முள்ளி, வெள்ளைநீர் முள்ளி, பேய் நீர்முள்ளி என்று மூன்று வகை உண்டு.

நீர்முள்ளி சலக்கோவை, மூத்திரச்சிக்கல், வீக்கம் முதலானவை நீங்கப்பயன்படும். வித்து பிரமேகம், அதிகாரம், கபசோகை, ஆயாசம் நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

## 77. நுணா : Morinda Citrifolia, Indian Mulberry

மஞ்சநீராட்டி, மஞ்சணத்தி, தணக்குநுணவு, மஞ்சணாத்தி என்னும் பெயர்களை உடையது.

மஞ்சநீராட்டி என்பது நாளடைவில் மஞ்சனாட்டி என்றும், பின்பு மஞ்சனாத்தி என்றும் மருவி இருக்கலாம்! என்பது மூலிகை மணியின் கூற்று. மரவகுப்பைச் சேர்ந்தது. அடிமரம் மங்கியு

கரு மஞ்சள் நிறமாகவும், மரப்பட்டை பாளம்பாளமாக வெடிப்புடையதாகவும் இருக்கும். இலை 4, 5 அங்குலம் நீளம், இரண்டு அங்குலம் அகலம் உடையதாகப் பசுமையாக இருக்கும். பூ வெண்மையாக ஒற்றை அடுக்கு மல்லிகை போல, ஐந்து இதழ்கள் விரித்து வாசனையாக இருக்கும். காய் உருண்டையாக, பச்சை நிறத்துடன் அதில் சிறுகண்விழி அமைந்தது போன்று இருக்கும். பழம் கருமை நிறமுடையது.

பட்டை கரப்பான், கபச்சுரம், புண்கிரந்தி விலக்கவும், இலை மந்தம், மேகம் போக்கவும் பயன்படுகின்றன. இடுப்பு வலிக்கு இலைச்சாற்றைப் பூச குணமாகும்.

## 78. நெருஞ்சில்; Tribulus Alatus

யானை வணங்கி, சுதம், கோண்டம், கிட்டிரம், சுவாது கண்டம், கோண்டம், காமரசி, சுவதட்டம், அசுவசட்டிரம், தும்புதிறிதண்டம், திரிதண்டம், திரிகண்டகம், கடாசலக்கண்டி, பாதாளம் என்னும் பலபல பெயர்களை உடையது.

தரையோடு தரையாகப்படரும் செடி வகையைச் சார்ந்தது. இலை புளியம் இலையைப் போல ஆனால் சிறியதாக இருக்கும். பூ மஞ்சளாக, ஐந்து இதழ்களுடன் விளங்கும். காய், கடலை அளவுடையதாக நட்சத்திர வடிவில் கூரிய முட்களுடன் இருக்கும். நீரில் அலசிச் சுத்தம் செய்ய வேண்டும். உடல் உஷ்ணத்தைத் தணிக்கும். இரத்தத்தில் இருந்து நீரைப் பிரிக்கும் சிறுநீர் குண்டக்காய்கள், சிறுநீர்க் குழாய்கள், சிறுநீர்ப்பை, சிறுநீர்த் தாரை இவைகளில் அடைப்பு ஏற்பட்டால் சரிபடுத்தும். காய் வெண்குஷ்டம் நீங்கப் பயன்படும். துணிகளுக்குச் சோப்பிற்குப் பதிலாக இச்செடியைப் பயன்படுத்தலாம்.

## 79. நெல்லி; Embellic Myroballun

இது ஆழலகம் என்னும் வேறுபெயர் உடையது.

மரவகையைச் சேர்ந்தது.

நெல்லிக்காயினால் பயித்தியம், கபநோய், பீனிசம் வாய் நீர்ச்சுரப்பு, வாந்தி, பிரமேகம் இவை நீங்கும். வேரினால் வாந்தி, திரிதோஷ கோபம் முதலானவை நீங்கும். வேர் வாந்தி, அருசி, மலச்சிக்கல், சுரதோஷம் போக்கவும் பயன்படுகிறது. இலை வாய்ப்புண் ஆறவும் பயன்படும்.

**80. நெல்லிமுள்ளி; Dried Embellic**

நெல்லிமுள்ளி உட்சூடு, சோமரோகம், ருதுதோஷம், ரத்த வித்தம், பயித்தியம், பித்தவாந்தி, பிரமேகம் முதலானவை நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

**81. நொச்சி; Chaste Tree, Vitex Negundo**

நிற்குண்டி, சிந்துவாரம், சுவேதசுரசம், ஐந்திலை நொச்சி என்னும் பெயர்களை உடையது.

பதினெண் மூலிகையிலொன்று.

நொச்சிப் பட்டையானது சன்னிபாதத்தாற் பிறந்த வாதத்தைப் போக்கப் பயன்படுகிறது. வீக்கம், சுரம், நீர்க் கோவை, போக்கவும் பயன்படுகிறது. வேர் சுரம், கோழை, நீக்கவும், இலை பீனிசம், சுரம் இரைப்பு, தந்தவலி, இருமல் போக்கவும், வேர்ப்பட்டை மூத்திர அழற்சி, வாதப்பிடிப்பு போக்கவும், பூ வாந்தி, ஈரல் நோய் மார்புவலி போக்கவும் பயன்படும்.

**82. பருத்தி; Cotton**

இதற்குத் தறிமுதற்கிரிகை, காற்பாசம் என்னும் பெயர் களும் உண்டு.

செடிவகையைச் சார்ந்தது, பல இனங்கள் உண்டு.

பருத்தி உடல்சூட்டைத் தடுக்கவும், களைப்பு, கபம் நீங்க வும் பயன்படுகிறது. உடல் அழகையும், விழிகளுக்கு ஒளியையும் உண்டாக்கும். இலை, மொக்கு, மேகநோய், வெட்டைச்சூடு, பித்தரோகம் போக்கவும். இதன் பஞ்சு ஆங்கில வைத்தியத்தில் பலவிதமாகத் தயார் செய்து, காயம், ரணம் முதலியவற்றிற்குக் கட்டப்பயன்படுத்துவர்.

**83. பற்பாடகம் : Oldenlandia corymbosa, Mollugucarviana**

சீதம்பொப்படம், பப்படம், பற்படாம் என்பனவும் இதனையே குறிக்கும்.

பூண்டு இனத்தைச் சேர்ந்தது: சுமார் அரைமுதல் ஒரு அடி உயரம்வரை வளரும். ஊசி போன்ற இலையையும், குண்டூசி போன்ற கதிர்களையும் உடையது.

சீதவாதசுரம், பித்தகாசரோகம், உன்மத்தம், பித்த தோஷம் இவற்றைப் போக்க பயன்படும். சுரத்திற்குவிசேஷமாய் பயன்படுத்தப்படும்.

## 84. பாகல்: Bitter Gourd

கூரம், கூலம், பாவுக்காய்ச்செடி, பாவிரி, காரவல்லி என்ற பெயர்களும் இதனைக் குறிக்கும்.

பாகலிலை கிருமிநோய், திரிதோஷகோபம் நீங்கவும், பழம் இருமல், இரைப்பு, மூலம், குஷ்டம், மலமிருக்சி, மலகிருமி முதலானவை போக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

## 85. பிரம்மபத்ரம் : Tobbaco

இது புகையிலை, கானாநந்தி, பிரம்மம், பிரம்மபத்ரி என்னும் பெயர்களாலும் வழங்கப்படும்.

பிரம்மாவிற்குரிய மூலிகை. செடி வகையைச் சார்ந்தது. செடி வாழைமடல் போல் இருக்கும். காய்ந்த பிறகு தான் இதற்கு வாசனை ஏற்படும்.

நாவறட்சி, துர்பலம், பித்தாதிக்கம் இவற்றை உண்டாக்கும். பத்தியத்தை முறிக்கும்.

## 86. புங்கன் : Indian Beach

புன்கு, கரஞ்சகம், பூந்தி, கரஞ்சம் என்ற வேறு பெயர்களும் இதற்கு உண்டு.

இது மரவகையைச் சேர்ந்தது. பால் உள்ளது. இலை பசுமை யாக இருக்கும்.

புங்கமர வேரினால் வாதக்குடைச்சல், திரிதோஷம், தாப சுரம், வாயுகுன்மம், சர்ப்பவிஷம் ஆகியவை நீங்கும். விதை கழல்விரணம், கிரந்தி கரப்பான், சன்னி இவை நீங்கவும், நெய் கரப்பான், சொறி சிரங்கு நீங்கவும் பயன்படுகிறது.

## 87. புளி : Tamarind

சிந்தம், சிந்தூரம், எதின் ஆம்பிரம், சிந்தகம் என்னும் வேறு பெயர்களை உடையது.

வருடத்திற்கு ஒரே முறை காய்க்கும். பல்லாண்டு நின்று வாழக்கூடிய மாபெரும் மரங்களில் புளியமரம் ஒன்று.

புளியம்பிஞ்சு பித்த கோபத்தையும், புளியங்கொட்டை சுக்கில மேகம், பித்தாதிசாரம், அதிவிரணம், மூத்திரக்கடுப்பு, வெள்ளை ஆகியவற்றையும், புளியம்பட்டை குன்மநோய், அசீரணம் ஆகியவற்றையும் போக்கும். புதுபுளியம்பழம் உடலுக்கு நன்மை செய்வதைவிட தீமை செய்வதே அதிகம்.

## 88 : புளியாரை : Brown Indian Hemp

இதனை புளிச்சி, தோஷம்நீக்கி, சடைச்சி, பிலாவாரை, கற்பத்தி, தாகமடக்கி என்ற பெயர்களாலும் வழங்குவர்.

இது ஒருவகைக் கீரை.

இதன்கீரை பித்த மயக்கம், வாதகபமீசிரம், ரத்தமூலம் இவற்றைப் போக்கப் பயன்படுகின்றது.

## 89. பேராமுட்டி : Pavonia Odorata

அதிபலா, குருவிச்சிப்பூடு, பேரமட்டி, பேரமுட்டி என்ற பெயர்களும் இதற்கு உண்டு.

வேர் வாதசுரம், தாகரோகம், மாந்தகணம், குளிர்சுரம், பித்தரோகம் ஆகியவை விலகப் பயன்படுகிறது.

## 90. பொடுதலை : Lippia Nodiffora

இதற்குப் பூற்சாதம் பொடுதலை, பொடுதலங்கீரை என்னும் பெயர்களும் உண்டு.

பூண்டு வகையைச் சேர்ந்தது.

ஆண், பெண் என்ற இனம் உண்டு என்பர். கொடியாகப் படர்ந்து வளரும் இலை செருப்படி இலையைப்போலப் பச்சையாக, ஓரங்களில் அரிவாள் பல்வெட்டு போல காணும். பூ மிகச் சிறியதாக, ஐந்து சிறிய வெள்ளை இதழ்களைக் கொண்டிருக்கும். காய் ஒரு அங்குலம் இருக்கும். சீதபேதி, இருமல், அதிகாரம், குலைநோய், வாதநோய் இவற்றைப் போக்கப் பயன் படுத்தப்படுகிறது.

## 91. பொன்னாங்காணி: Lippia Nodiffora

இதனை கண்ணுக்கினியாள், சீதளத்தி, பகல் நட்சத்திரந் தோற்றி, விண்ணுக்கு மூர்த்தி, காயசித்திச்சி, சீதை என்றெல் லாம் கூறுவதுண்டு.

பொன்னாங்கண்ணி நேத்திரத்திற்கு ஒளியைத்தந்து, நேத் திர சுவாசம், கபம், வாதம் இவற்றைப் போக்கப் பயன்படுத்தப் படுகிறது. மூலரோகம், தேகச்சூடு இவற்றைப் போக்கவும் பயன்படுகிறது.

**92. மஞ்சள்: Turmeric**

காஞ்சனி, நிசி, பீதம், அரிசனம் என்னும் பெயர்களும் இதற்கு உண்டு.

தேவலோக விருச்சங்களில் மஞ்சளும் ஒன்று.

இதன் கிழங்கு உடம்பின் அழுக்கு, துர்நாற்றம் நீக்கப் பயன் படுகிறது. ஜலதோஷம், தலைவலி, மண்டப்பீனிசம், கால்ஆணி, சேத்துப்புண், இருமல் இவை நீங்கப் பயன்படுகிறது.

**93. மணத்தக்காளி: Solanim Nigrum**

மணித்தக்காளி, காகவாசி, வாயாசம், உலகமாதா, விடைக் காந்தம், சுக்கிட்டிக்கீரை என்றெல்லாம் வழங்குவர்.

தூதுளை இலைபோல் ஆனால் முள் இல்லாமல் பச்சைநிற மாகச் சிறிது நீண்டு இருக்கும். காய் மிளகளவு பச்சை நிறமாக வும், பழம் நீலநிறக் கருமையாகவும் இருக்கும்.

மணத்தக்காளிக்காய் சிலேட்டும ரோகம் நீக்கவும், இலை நாப்புண், வேக்காடு நீக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

**94. மருளக்கிழங்கு: Sansivicria Roxburgiana**

மருட்கிழங்கு என்றும் வழங்கும்.

கபக்கட்டு, பெருவயிறு, பலவித சோகை, மூலம இவை நீங்கப் பயன்படும். தீபாக்கினி உண்டாகும்.

**95. மாங்காய்: Mango**

இது சூதம் என்றும் வழங்கும்.

மரஇனத்தைச் சேர்ந்தது.

மாங்காயால் சுக்கிலநாசம், மிகுவாயு, சிரங்குதேகம், தந்தங் கூசுதல் இவை உண்டாகும். மாம்பிசினால் மலட்டுத்தன்மை நீங்கும்.

**96. மாதுளம்: Pomegranates**

மாதளை, மாதுலங்கம், கழுமுள். மாதுளம், பீசபூரம் என் னும் பெயர்களை உடையது.

சிறு மரவகுப்பைச் சேர்ந்தது. புளிப்பு, இனிப்பு என்று இரு வகை உண்டு. மலக்குடலுக்கு பலத்தையும், உடல் கட்டும், ரத்த புஷ்டியும், உண்டாகும். பூ வாந்தி, மயக்கம், உஷ்ணம் ஆசனக் கடுப்பு இவற்றைப்போக்கப்பயன்படும். மாதுளம் பிஞ்சின்

சிறப்பை மலக்கழிச்சல், சீதத்தால் வந்த கழிச்சல், சலக்கழிச்சல் சோரியாற் சாரும் பல கழிச்சல் மாளும் புளிப்பான மாதுளம் பிஞ்சால் என்ற அகஸ்தியர் பாட்டினால் அறியலாம்.

பழம் புழுவெட்டினைப் போக்கவும், கண்மை தயாரிக்கவும் பயன்படுகிறது. பழரசம் வாந்தி, மயக்கம், விக்கல், காதடைப்பு ஜீரங்கள், கபால உஷ்ணங்கள் இவற்றைப் நீக்கப்பயன்படுகிறது. தோல்—மாதுளம் பிஞ்சு, பூ, இவற்றின் குணம் உண்டு. விதை சோகை, சிறுநீர்தாரை எரிச்சல், இவற்றை நீக்கும். மரப்பட்டை வேர்ப்பட்டை வயிற்றில் உள்ள புழுக்களைக் கொல்லும். மலடு நீங்கும்.

**97. மிளகரணை: Toddalia Aculeata**

ஒரு வனமூலிகை செடி.

கபம், அசீரணவாயு, பயித்தியசூலை, சயம், காசம், வயிற்று பிசம் இவற்றைப்போக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**98. முக்காவேளை : Boerhavia diffusa**

மூக்குரட்டை, மூக்கரட்டை என்றும் வழங்கப்படும்.

பூண்டு வகையைச் சேர்ந்தது.

நமைச்சல், வாதநோல் இவற்றைநீக்கும். அழகையும், பித்த பிணியையும் உண்டாக்கும்.

**99. முசுமுசுக்கை: Byronia scraba**

இரு குரங்கின் கை, அயிலேயம், மாமூலி, ஓரி என்னும் பெயர்களை உடையது.

குரங்கின் உடலில் மொசுமொசுவென ரோமம் வளர்ந் துள்ளதுபோல, இம்மூலிகைக்கும் ரோமம் போன்ற சுனைகள் இருக்கும். கோவைக்கொடியினத்தைச் சேர்ந்தது. இலை ஐந்து முனையுடையதால் கை என்ற காரணப்பெயர் ஏற்பட்டிருக்க லாம். பிரண்டைக்கு உள்ளதுபோல ஒன்றைப் பற்றிக்கொள்ள உணர்வுக் கம்பிகள் உண்டு. மஞ்சளாகப் புனல்போல இருக்கும். இராமலிங்க அடிகளார் 'க்ஷயமர்தினி' என்று கூறுகிறார்.

முசுமுசுக்கை வேரினால் கோழை, விஷம், ரோகம், மார்பு நோய், குன்மம், பித்தாதிக்கம் இவை நீங்கும்.

**100. முருங்கை : Drumstick**

முருங்கைப்பிஞ்சு திரிதோஷம் நீக்கவும், இலை சுரத்தையும், கண்ணோயையும் போக்கவும் பயன்படுகின்றன. பட்டை

விஷத்தையும், வேர் வாதகோபத்தையும் போக்கும். பூ கண்ணுக்குக் குளிர்ச்சியைத்தரும். பிசின் குஷ்டமேகத்தையும் தொந்த வாதத்தையும் போக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### 101. யானைநெருஞ்சி: Thistle

யானை நெருஞ்சில் என்றும் கூறுவர்.

வெண்குஷ்டம், தேகயெரிவு, உழலைத் தாகம், பித்த மயக்கம் இவற்றைப்போக்கப் பயன்படுத்தப்படுகிறது.

### 102. வச்சிரவல்லி: Vitis Quadrangularis

பிரண்டைக்கொடி, சத்தி, நான்முகன், கொடிச்சி, தந்தி, கனவி என்னும் பெயர்களும் உண்டு.

சதை பிரண்டாலும் சரிசெய்துவிடும் காரணத்தால் மலையாளப் பெயரான பிரண்டை என்பதே நிலைத்துவிட்டது. இதில் பல பிரிவுண்டு. ஆண் பெண் என்ற இருவகை உண்டு. இலை கணுவிற்கு ஓர் இலையாக, தூதுவளை இலைபோல் முள் இல்லாமல் பெரியதாக இருக்கும். கொடி கொம்பில் படர்வதற்குக் கொடிவிழுது இருக்கும். பிரண்டை உப்பு நவ மூலங்களை நீக்கப்பயன்படும். பசியைத் தூண்டவும், பெண்களுக்குச் சூதக சம்மந்தமான வலிகள் நீங்கவும் பயன்படும்.

### 103. வட்டக் கிலுகிலுப்பை: Crotalaria Angulosa

இது சொறிகிரந்தி, கண்டமாலை, சோகை விரணம், அக்கினி மந்தம், விஷசன்னி, பாதரோகம் இவை நீங்கப் பயன்படுகிறது.

### 104. வல்லாரை: Indian penny Wort

குளத்துக்குறத்தி, கசப்பி, வயல்வல்லிச்சி, சிறுக்கி, சாதகச் சித்தி, சரஸ்வதி, சண்டகி, பிண்டரி, யோசனவல்லி என்னும் பல பெயர்களை உடையது.

கீரை வகையைச் சேர்ந்தது, ஒற்றை இலை விடும் இனம். இலை பசுமையாக மிருதுவாக இருக்கும். அரிவாள் மனைக்குத் தலைபுறம் உள்ள தேங்காய் திருகுக் கருவிபோல், அதே அளவு ஓரத்தில் பற்கள் உண்டு. அடிக்காம்பு வெள்ளையாக இருக்கும்.

ரோகம், மலக்கழிச்சல், இரத்தகிராணியால் பிறக்கும் கடுப்பு நீங்கப் பயன்படும்.

**105. வாய்விளங்கம்; Embellia Ribes**

இதனை வரணனை என்றும் வழங்குவர்.

பாண்டு, குட்டம், குன்மம், அதிதூலம், வாயு, சர்ப்பக்கீட தாவர விஷம், வாதரோகம் இவற்றைப் போக்கப் பயன்படும். உலோகங்களை வேதை செய்வதற்கும், இரசத்தைக் கையாடவும் உதவும். இதன் பழத்திற்கு 'எம்பிளி' சத்திருப்பதால் கிருமிகளைக் கொல்லும் குணமுடையது.

**106. விலாமிச்சை; Andropogon**

ஒரு வாசனைப்புல்.

மேகநீர், கண்எரிவு, உதிரபித்தம், தாகம், மூர்ச்சை, பயித்தியம், மயக்கம், தலைவலி, தீச்சுரம் இவற்றைப் போக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**107. வில்வம்; Aegel Marmelos**

கூவிளம், மூவிலைச்சி, முள்விருக்ஷத்தி, ஈசன்பத்திரம், மாலூர், சிவத்துருமம், குசாபி, நின்மலி, மாலூரம் என்ற பெயர்களால் வழங்கப்படும்.

வி + இல்லம் = வில்வம்

தளிர் சலமேகத்தையும், பூ மந்தத்தையும், பிஞ்சு குன்மத்தையும், பழம் கண்ணிருளையும், பிசின் விந்து நஷ்டத்தையும் நீக்கும். வேர் வாதகுன்மம், கபாதிக்கம், பித்தசோகை, சலகோவை, சன்னி பாதம், தேகக்கடுப்பு, உஷ்ணபேதி, விக்கல், ரோகம் முதலானவை நீங்கப் பயன்படுத்தப்படுகிறது. அழகு, தேகபுஷ்டி உண்டாக்கும்.

**108. விளாம்: Wood Apple**

விளவு, கபித்தம், வெள்ளில், கடிப்பகை, விளா என்னும் பல பெயர்களை உடையது. வில்வ மரத்தைப்போல இருக்கும்.

இருமல், இரைப்பு, கதித்த அரோசகம், தாகம், பித்த கபரோகம் நீக்கப்பயன்படும். அதன்பழம் சுவாசகாசம், கபாதிக்கம், பித்ததாகம், பசியின்மை போக்கவும், காயசித்தி பெறவும் பயன்படுத்தப்படுகிறது. இதன்பிசின் இருமல், பேதி, நீரெரிவு நீரழிவு, மேகம், நெஞ்செரிவு இவற்றைப் போக்கப் பயன்படும்.

**109. விஷ்ணுகிரந்தி; Evolvulus Alsinoides**

விட்டுணுக் கர்ந்தி எனவும் கூறுவர்.

தரையில் படரும் ஒரு கொடிப்பூண்டு. பூ நீலநிறமாக இருக்கும்.

அசீரணம், கபம், உட்சூடு, கோழை, இருமல், வாதப்பிணி இவற்றைப் போக்கப்பயன்படும்.

**110. வெட்டிவேர்:** Cuscus grass Black cuscus

குருவேர், விழல்வேர், இருவேலி, வீரணம் என்னும் பெயர்களை உடையது.

புல் வகையை சேர்ந்தது. பூமிக்குக்கீழ் வளரும் வேர்களில் தான் மிகுந்த மருத்துவப்பயன் உண்டு. பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்படுவதால் இதற்கு வெட்டிவேர் என்று பெயர் வந்திருக்கலாம்.

காமாலை, சுரம், தீப்புண், பித்தம், தலைநோய், கழுத்து நோய், சுக்கில நஷ்டம், உன்மத்தம், திரிதோஷ மூர்ச்சை, நேத்திர ரோகம் இவை நீங்கப்பயன்படும்.

**111. வெள்ளரி:** Cucumber

கொடிவகையைச் சேர்ந்தது.

பிஞ்சினால் முத்தோஷங்களும், காயால் வாதமும், நைந்த பழத்தால் கபமும் உண்டாகும். வித்து கடுக்கின்ற நீரடைப்பு, கல்லடைப்பு, பிரமேகம், சிரிச்சுரம் இவை விலகப் பயன்படும்.

# மூலிகைப்பயன் - சான்றுகள்

### அகத்தி

மருந்திடுதல் போகுங்காண் வங்கிரந்தி வாய்வாந்
திருந்த வசனஞ் செரிக்கும்—வருந்தச்
சத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளு
மகத்தியிலை தின்று மவர்க்கு.

### அத்தி

வேர்ப்புறணி யாலுடற்கு மேன்மை யளித்திடலால்
தாற்பொடியாற் சுக்கிலத்தைத் தம்பித்து—வேர்த்திடமெய்
முந்திடவை யாதுரத்தை மூட்டுதலா லெஞ்ஞான்றுநீ
தந்தியர சானவா தம்.

### அம்மான் பச்சரிசி

காந்தல் விரணமலக் கட்டுமேகத் தடிப்பு
சேர்ந்த தினவிவைகள் தேகம்விட்டுப்—போர்ந்தொன்றா
யோடுமம்மான் பச்சரிசிக் குண்மை யினத்துடனே
கூடுமம்மா னொத்தகண்ணாய் கூறு.

### அரசு

அரசம்வேர் மேல்விரண மாற்றுமவ் வித்து
வெருவவருஞ் சுக்கிலநோய் வீட்டுங்—குரல்வறளுந்
தாகமொழிக்குங் கொழுந்து தாதுதரும் வெப்பகற்றும்
வேகமுத் தோஷம்போக்கு மெய்.

### அரளி

தன்னை யிமைபோல தற்காத்துக் கொள்வதுமே
யென்னி லதுவே யிசமானாம்—பின்னு
முறைசெய்வ தென்னவதே யுயர்நேத்ர மூலி
கரவீர மத்தனையுங் கண்.

## அல்லி

மூலிகளிற் செய்யு முறைமைகளி லேயதிகம்
ஏலுகையாற் றாக மிலாமையால்—வாலறிவு
முந்துகையாற் றண்மை முதிருகையான் மற்றதினுஞ்
சந்திர மைத்திரிநீ சம்.

## அவரை

கங்கு லுணவிற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர் — தங்களுக்குங்
கண்முதிரைப் பில்லைநோய்க் காரருக்குங் காழிறையா
வென்முதிரைப் பிஞ்சாம் விதி.

## அவுரி

சந்நிபதின் மூன்றுஞ் சந்தொடித்த வாதமுத
லுன்னு விஷக்கடியு மோடுங்காண்—மின்னுங்
கவுரிநிற முண்டாகுங் காசினி யுளேநல்
லவுரி யிலையா லறி.

## அறுகன்

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டீளை
சிறுக வறுக்குமின்னஞ் செப்பி—லறிவுதருங்
கண்ணோ யொடுதலைநோய் கண்புகை யிரத்தபித்த
முண்ணோ யொழிக்கு முறை.

## ஆடாதொடை

ஆடாதொடைப் பன்ன மையறுக்கும் வாதமுதங்
கோடாகோடிச் சரத்தின் கோதொழிக்கு—நாடின்
மிகுத்தெழுந்த சன்னிபதின் மூன்றும் விலக்கு
மகத்துநோய் போக்கு மறி.

## ஆரை

தின்றா லுரிகைதருந் தீராப் பயித்தியத்தைப்
பொன்றாத நீரிழிவைப் புண்ணாரை—யென்றுமிந்த
ஆராரைச் சாராம லோட்டிவிடு நாவிதலார்
நீராரைக் கீரையது நீ.

## ஆல்

அச்சரம் புண்கிரந்தி யாவதும்ப யந்தோட
அச்சமுற மேகமுந்தீ யாகுமே—இச்சகத்தில்
நாதனென மூவருக்கும் நற்றுணையா மாக்கைக்கும்
பூத மதிபதியைப் போல்.

### ஆவாரை

மேகத்தினால் விளைந்த சலம் வெட்டையன
லாகத்தின் பண்ணோ யருங்கிரணி—போகத்தால்
ஆவாரைப் பஞ்சகங்கொ ளஸ்திசுரந் தாகமும்போ
மைவாரைக் கண்மட மாதே.

### இஞ்சி

விட்டுப் பிரிவார் வெறிகொண்டா ரானாலும்
கெட்டுப் படாதகி லேசத்தால்—துட்டனெனும்
பொல்லாத சேட்பப் புலையனது புன்மையடும்
அல்லரச நல்லமுதை பார்.

### இலவு

நீர்க்கடுப்பு நீரெரிவு நீண்டொழுகு மேகமும்போ
மார்க்கும் விந்தடைக்கு மாண்மையுரும்—பார்க்குள்
நிலவு மதிவதன நேரிழையே ஒப்பா
மிலவு மரத்தா லியம்பு.

### இலுப்பை

கரப்பா னடருங் கடிசிரங்கு புண்ணு
முரப்பா மிடுப்புல்லி யோடு—கரப்பான்
பாகுமொழி மாதே பலமுண்டாந் தூற்பலம்
பேகுமிலுப் பையிநெய்க் கே.

### ஈருள்ளி

வெப்ப மூலக்கிரந்தி வீறிர்த்த பித்தமுடன்
செப்புநா அக்கரந் தீராத்தா்கம்—வெப்புக்
கடிப்பறு மந்தஞ்சன்னி காசம் வயிற்றுப்பல்
தடிப்பேறும் வெங்காயத் தால்.

### உத்தாமணி

உத்தா மணியிலையா லுள்வயிற்றுக் குன்மமொடு
குத்தாம் வலியுங் குளிரும்போம்—பற்றி
யிசுக்கும் வலியிரைப்பு மெத்தடிப்பு மேகும்
பசிக்குமதி மாந்தமும்போம் பார்.

### ஊசிப்பாலை

மேக மகலும் விழிகுளிரு நாளத்தின்
வேக மகலுமங்க் மேனியிடும்—மோகமண
வாசிப் பாலைப் பருவமாந்தரை வீக்குங்கொடியே
ஊசிப் பாலைப்பன்ன முண்.

### எட்டி

பிடிப்பு விடவாதப் பேய்நலிவு செய்யும்
மடிப்பு வினையெவையு மாட்டி—உடற்கதிக
மாஞ்சிலது சித்திகளும் வாய்க்கப் பரவுதலாற்
காஞ்சிரமா காசகுளி கை.

### எருக்கு

மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி னோயகற்றி
உன்னு பிணிப்பனியை யோட்டுதலாற்—சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்க மருக்கனென லாம்.

### எள்

திட்டாந் தரமனிதர் தேக வுதிரமுண்ணப்
பட்டசிந்தா மூடுமெண்ணெய் பட்டாவி—விட்டு
நிலம் திறத்தலரி நீயதைத்தொ டாதே
திலநன்மைக் காட்டுக்குத் தீ.

### ஓரிதழ்த் தாமரை

தாதுவை யுண்டாக்குந் தனிமேகத்தை தொலைக்கு
மாதரவர் மேனிக் கழகுதருஞ்—சீதம்போஞ்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்யமட வனமே
ஓரிதழ்த் தாமரையை யுண்.

### கஞ்சா

நிட்டை யுடையார் நிகழ்த்தியசொற் கேட்டுமிகு
சட்டை யகத்தியநெஞ் சத்திற்கு—வட்டமுறை
ஆர வமுதா யயிலவரு கற்பமெனக்
கோரகையி னாலடங்குங் கூன்.

### கஞ்சாங்கோரை

மாந்தக் கழிச்சலரும் மாந்தஞ் சுரங்கணம்போஞ்
சேர்ந்த மூலத்தின் றினவடங்கும்—பூந்தடக்கை
யன்னமே மேகமறுங் கஞ்சாங் கோரையினை
யுன்ன இருமலிலை யோர்.

### கண்டங்கத்திரி

காசஞ் சுவாசங் கதித்தக்ஷய மந்தமனல்
வீசுஞ் சுரஞ்சன்னி விளைதோஷ—மாசுறுங்கர
வித்தரையு ணிற்கா வெரிகாரஞ் சேர்கண்டங்
கத்தரியுண் டாமாகிற் காண்.

**கதலி**

வங்கத்தை யெல்லாம் வளைத்திடலா லுண்டவரை
அங்கத்தைப் பொன்போ லணைத்திடலாற்—றுங்கி
யுரமுகவிந் தைப்பெருக்கி யுண்மை தரலால்
அரமகளைத் தேயுவென லாம்.

**கத்தாழை**

பொல்லா மேகங்கபம் புழுச்சூலை குஷ்டரச
மல்லார் மத்தம்பகந் தரங்குன்ம—மெல்லாம்விட்
டேகு மரிக்கு மெரிச்சற் கிரிச்சரமு
மாகு மரிக்கு மருண்டு.

**கரிசலாங்கண்ணி**

திருவுண்டாம் ஞானத் தெளிவுண்டா மேலை
யுருவுண்டா முள்ளதெல்லா முண்டாங்—குருவுண்டாம்
பொன்னாகத் தன்னாகம் பொற்றலைக்கை யாந்தகரைத்
தன்னாகத் தின்னாகந் தான்.

**கருங்காலி**

குட்டங் கபரோகங் குன்மம் பெறுவயிறு
நெட்டைப் புழுவுமிரு நீரழிவும்—விட்டே
யருங்கான கத்தேகு மஞ்சுகமே நல்ல
கருங்காலி நீரதனைக் கண்டு.

**கருந்துளசி**

இருமலொடு நெஞ்சி இழுப்புச் சுவாசம்
கிருமிசல தோஷங் கேவல்—மருமச்
சளிரூட்சை சூலைவிஷஞ் சன்னியிவை போக்குந்
தளிரார் கருந்துளசி தான்.

**கறிவேப்பிலை**

மேகமனல் வெட்டைசுரம் வீறுபித்த மூந்தொலையும்
போகமுறு மெய்மருந்தும் பொய்மருந்தாம்—பாகுமொழி
மானே கறிப்பாலை மன்னுமிலை யைத்தினமுந்
தானே யருந்தவர்க்குத் தான்.

**கலியாணப்பூசணி**

பெரும்பூசினிக் காய்க்குப் பித்தமோ டுட்காய்ச்ச
லருஞ்சார நீர்க்கட் டருமே—மருந்திடுதற்
பித்தசுர மஸ்திசுரம் பேய்வறட்சி மேகமும்போ
மெத்த வனிலமூறும் விள்.

### கள்ளி

நரம்புச் சிலந்தி நளிர்வாத சன்னி
யுரம்பெரிய வாதமிவை யோடும்—பெரும்புவியிற்
கள்ளிமரப் பட்டையினால் காரநொச்சிற் பட்டையது
துள்ளு சன்னிவாத மகற்றும்.

### கீழாநெல்லி

கீழாநெல்லிக் குணந்தான் கேளாய் மதுமேகந்
தாழாக் காமாலைகளைச் சண்ணுந்தா—தேழனலுந்
தொக்கி னனலுந் தொலைக்குந் தொன்மேகம்போம்
தக்க விரணங்கெடுக்குந் தான்.

### குப்பைமேனி

தந்தமூலப் பிணிதீத் தந்திடுபுண் சர்வவிஷ
முந்துகுன்மம் வாத முதிரமு—லந்தினவு
சூலஞ் சுவாசா தொடர்பீனிசங் கபம்போம்
ஞாலங்கொண் மேனியத னால்.

### குன்றி

நேத்திரநோய் பித்த நிறமழுமாங் காமாலை
வேர்த்திடு தாபச்சோப வெப்புடனே—கோத்திட்ட
வையமும்போம் விந்துவா மாயிழையே காட்டிலுறை
செய்யகுன்றி யின்விதையைச் சேர்.

### கொத்தமல்லி

சேனாப தியமைச்சர் சேவிக்க நன்முறைமை
ஆனா திடலா லனுதினமும்—ஊனிலையை
நல்ல வலியுடைத்தாய் நாட்டுதலால் நாட்டில்வளர்
மல்லி யரசனுடை மை.

### கொன்றை

பாண்டரங்கர் பூணாய்ப் பறக்கடித்து மேகத்தை
யாண்டரங்கக் கைக்குள்வச மாக்குமே—காண்டற்
குதவிசில செய்துடலை யோம்புமிது நீபார்
இதழியெனுங் கொன்றைபுவி யில்.

### கோவை

கண்ணுங் குளிர்ச்சிபெருங் காசமொடு வாயுவுறும்
புண்ணுஞ் சிரங்கும் புரண்டேகும்—நண்ணுமுடல்
மீதிலார் வெப்பகலும் வீழாநீர்க் கட்டேகும்
சோதிலாக் கோவை யிலைக்கு.

### சங்கு

வீக்கங் கரப்பான் விதாகக் கிரந்திகுன்மம்
மக்குமிகு சூலைவாய் வோடுபித்தந்—தாக்குவிஷம்
வீறுமோ கண்டுலங்கும் வீசுபசி ரத்தமுண்டாங்
கூறுசங்கு வேரிலை கட்கு.

### சடாமாஞ்சில்

குட்டம் சிலந்திவிடங் கோர புராணசுர
முட்டினங்கால் பேதிகண்ணோ யொட்டிருமல்—
கொட்டிரத்த
பித்தமிரைப் பேகும் பெருங்கோரை யென்றுரைக்குஞ்
சுத்தசடா மாஞ்சிதனைச் சொல்.

### சண்பகம்

தீராத வுட்டினத்தைத் தீர்க்குஞ் சுரம்போக்கும்
நேரே பசியெழுப்பு நிச்சயமே—யோருங்கால்
பண்புறுகண் டோடத்தைப் பற்றறுக்கும் வாசமுள்ள
சண்பக மரத்தின்வேர் தான்.

### சம்பழம்

மந்திரிக்கு மந்திரியால் மன்னனுக்கு மன்னனெனத்
தந்திரிக்கு மித்திரன்போற் சாருமே முந்தவரு
கெம்பீர மாய்ச்சரக்கின் கெண்ணியமாய் வாகடர்க்குச்
சம்பீச மாமெலுமிச் சை.

### சரக்கொன்றை

குட்டங் கிருமி கொடுக்குஞ்சூலை வாதமையந்
துட்ட மலமருசி தூரப்போந்—தட்டிச்
சுரக்கின்ற பேதியுண்டாந் தும்யத் துவர்க்குஞ்
சரக்கொன்றைக் காரணங்கே சாற்று.

### சிறுகீரை

கண்புகைச்ச நேத்திரநோய் காசம் படலம்ரசப்
புண்கிரிச் சுரஞ்சோபை பொங்குபித்த—மண்பரவு
தாவர விஷங்களும்போந் தாழாத் திருவுமுண்டாங்
கூறுசிறு கீரைதனைக் கொள்.

### சிற்றாமுட்டி

அத்திசுர முதலனந்த சுரம்பித்த மும்போ
மெத்தவிழிக் கொளியாம் வீறுதயி—லத்திற்காம்
நற்றா மரைதருவு நாடுமெழிற் றிருவே
சித்தர் முட்டித்தூ ரைச் செப்பு.

### சிறுதேக்கு

கண்டுபரங்கி யெனுஞ் சிறுதேக் குண்டேற்
காலெங்கே பித்தமெங்கே கபந்தா னெங்கே
தொண்டுதொட்டுத் தொண்டர்சுவாச காசமெங்கே
சுரமெங்கே வெறியெங்கே தொனிநோ யெங்கே
மிண்டுபுரி பீசநீர்க் கோவை யெங்கே
வெளிநீருண் ணீரெங்கே விரற்கா லெங்கே
யண்டுபடாச் சீதசுரங் கடுப்பு மெங்கே
யழலையக நோயெங்கே யறைகு வீரே.

### சிறுநாகப்பூ

சிறுநாகப் பூவினது செங்கைதனைச் சொல்வோங்
குறியாடு மேகத்தைக் கொல்லு—நெறியைவிட்டுத்
தீதாற்செல் வாயுவைந் தீர்க்குமிரு மற்போகுங்
கோதா யிதையறிந்து கொள்.

### சீந்தி

மேகமெனு மாதபத்தால் வெந்த வுயிர்ப்பயிரைத்
தாக மடங்கத் தணித்தலால்—ஆகம்
அமர ரெனவிருக்க வாததித்த லாலே
அமுதவல்லி சஞ்சீவி யாம்.

### சுண்டை

நெஞ்சின் கபம்போ நிலைகிருமி நோயும்போம்
விஞ்சு வாதத்தின் விளையும்போம் —வஞ்சியரே
வாயைக் கசப்பிக்கு மாமலையிலுள்ள சுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்.

### செங்கீரை

செங்கீரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்
தங்காம லோட்டிவிடுந் தையலர்க்குப்—பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.

### செம்பருத்தி

செம்பருத்திப் பூவழலைத் தீயரத்த பித்தத்தை
வெம்புவயிற் றுக்கடுப்பை விந்துவைநீத்—தம்பெனச்செய்
மேகத்தை வெட்டையை விழுசிமுதற் பேதியையுட்
பாகத்தை யோட்டிவிடுந் தான்.

### செம்முள்ளி

செம்முள்ளி யென்றார் சிலேத்மம் நடுநடுங்கும்
விம்மமுலை மாதே விளம்பக்கேள்— நம்முகின்ற
மாந்தகண மையமிவை மாறுஞ் சிறுவருக்குச்
சேர்ந்தசுர தோஷமும்போஞ் செப்பு

### செருப்படி

கூண்டோடே யற்றுவிழுங் குற்றிருமல் காணாது
மீண்டு மணுகாது மேகங்கள்—பாண்டியன்தார்
சீதை யிவைரசத்தைத் தேனைப் பிரியாத
பாதுகைப்ப தத்தாற்க பம்.

### செவ்வந்தி

அலைமயக்கஞ் சுற்றலறு மட்சிக் கொளியாந்
தலைமயி ருண்டா மலைஞ்சாரும்—நிலைமணமா
மொவ்வந்தி வான்புறையை யொத்த நூதற்றிருவே
செவ்வந்திப் பூவதனைச் செப்பு.

### தகரைப்பாசி

தகரை படர்தா மரையைச் சொறியைத்
தகர வடிக்குமந்தந் தன்னோ—டிகலான
அத்தி சுரத்தையு மதஞ்செய்யு மிம்மூலி
யுத்தமா மென்றே யுரை.

### தண்ணிர் விட்டான்

நீரிழிவைப் போக்கு நெடுநாட் சுரத்தையெலா
மூரைவிடுத் தோட வுறுக்குங்கான்—நாரியரே
வெண்ணீர்பெய் சோமனோய் வெட்டை யனற்றணிக்குந்
தண்ணீர் விட்டான்கிழங்கு தான்.

### தவசுமுருங்கை

தவசு முருங்கைத் தழையதற்குக் கேளா
யவசியம் பீனிச முண்ணாக்கு—முவசர்க்கி
யையஞ் சுவாசகப மண்டாது குத்திருமல்
வையம் விடுத்தேகும் வழுத்து.

### தழுதாழை

சேர்ந்த சொரிசிரங்கைத் திண்வாதக் கூட்டத்தை
யாய்ந்தொழிக்கும் பித்தை யழைக்குமந்த—மோய்ந்திடா
ஐயின் சுரந்தணிக்கு மானதழு தாழையது
மெய்யின் கடுப்பகற்றும் விள்.

### தாமரை

சலதோஷங் காமாலை சத்திவிக்க லான
பலதோஷங் கட்குமிடர் பண்ணுங்—கலையாக்
கபமுரியச் சாடுமிகு காயசித்தி யாகும்
தபனனட் பாகுமம்பு சம்.

### தும்பை

மீளாக் கபப்பிணியை மேலிட்ட சன்னிகளைத்
தூளாக்கித் தூரத் துரத்தலாற்—கேள்நசியக்
கைமுறையா னீரைக் கழற்றலாற் காய்ந்திடலால்
ஐமுகனார் வெற்றிபித்த மாம்.

### தூதுவளை

காதுமந்தங் காதெழுச்சி காசந் தினவுமத
மோதுமந்த முத்தோஷ முட்சூலை—தாதுநட்ட
மீதுளைப் பத்திரியை மேவச்செய் வாராய்தோர்
தூதுளைப் பத்திரியைத் துய்த்து.

### தென்னை

கொஞ்சிக் கனிரசத்திற் கூசாம லூறவைத்தே
அஞ்சுநா ளாகிய பின்பளநீர்—ரிஞ்சியிதிற்
காச மிருமல் சயநோ யகலவென்றாற்
கோசிகமு லத்தையுணுங் கொள்.

### தேத்தான்

வேற்றுமைகள் செய்திடல்போல் வேந்துமுதல் மூவரையுந்
தேற்று மிதுநிசம்பார் திட்டாந்தம் - போற்றுணிமை
சொல்லு மருத்துவர்கள் சோதனைநூ லாதிமுறை
இல்லமண்ம யக்கமுறை யில்.

### தேவதாரம்

தேவதருக் குணந்தான் சேர்த்துவளர் பீனிசத்தை
காவகத்தி லோட்டுங் காப்பலவே - பாவலர்கள்
சொல்லும் புராண சுரமொடுநீ ரேற்றத்தை
வெல்லு மணற்றணிக்கும் விள்.

## தொட்டால்சிணுங்கி

மேகநீரைத் தடுக்கு மேதினியிற் பெண்வசிய
மாகவுன் னிநல்கு மதுவுமன்றிக் - தேகமிடைக்
கட்டாகக் காட்டுகின்ற காலைத்து ரத்துவிடுந்
தொட்டாற் சுருங்கியது சொல்.

## நாயுருவி

மலிகாரங் கைப்புள்ள அபமார்க்கியின் வேரால்
வசியமுண்டா
மிலைமூல வுதிரமந்தம் பேதிகபம் வியர்வுதந்தி யிறங்குமேகம்
மலையேறும் படிபுரியு முள்ளரிய பசிமாற்று மதன்சமூலம்
பலமாதர்க் குள்ளமுக்கை நீக்கும்வங்க சிந்தூரம்
பண்ணுமாதோ. (தேரை)

## நாய்ப்பாகல்

நயேப்பா கலின்குணத்தை நன்றா யுரைக்கக்கேள்
வாப்பான பீனிசத்தை மாற்றுங்காண் - தீப்பாயி
லிங்கமறைச் சுத்திசெய்யு நேரிற்பா ஷாணத்தைப்
பங்கமறச் சுத்திசெய்யும் பார்.

## நார்த்தம்

நன்றி யுறவுலகி னாரத்தால் காயருந்த
வென்றி தரும்புளிப்பான் மெய்ச்சும் - மன்றியுமோ
வாதமொடு குன்மமறும் வாற்கிருமி யும்போகுங்
காதலுறு தீபனமாங் காண்.

## நிம்பம்

புந்தியினைத் தீட்டுவிக்கும் புன்பிணியை யோட்டுவிக்கும்
இந்தியத்தை நன்றா யிசைவிக்கும் - சந்ததமும்
வீறுண்டாங் கற்ப மிகவுண்டா மெஞ்ஞான்று
மாறன்றா ரையமில்லா மல்.

## நீர்முள்ளி

பாண்டு குளுப்பையறும் பாரித்த நீரேற்ற
மாண்டுவிடு நீர்க்கட்டு மாறுங்காண் - பூண்டதொரு
வீக்கமெலா நீதாய் வீடுமேநீர் முள்ளிக்குத்
தாக்கு மயில்விழியாய் சாற்று.

**நுணா**

பட்டை கரப்பனோடு பாரச் சிலேஷ்மசுர
மொட்டிநின்ற புண்கிரந்தி யோட்டுங்காண் - மட்டலரை
யேந்து நுணாவி னிலைமாந்தம் தீர்த்துநல்ல
காந்திதரு மேகமடுங் காண்.

**நெருஞ்சில்**

வாயுபோம் பேச்சு வதறல்போம் துன்மேகத்
தேயுபோங் காயத் திமிரும்போம் - ஓய
விடாதறலி னூரடந்த வேரைமதித் துண்ணக்
கடாசலகண் டிக்கிழுத்த கை.

**நெல்லி**

அமைச்சனெனு மந்திரியை யாளாக்கிக் கொண்டு
கமைப்பை யுயிர்நிலைக்குக் சூட்டி - அமைப்புடைமை
நேம மிகமெய் நிறுத்திவைகு மெஞ்ஞான்றும்
ஆமலக நெல்லியை யா.

**நெல்லிமுள்ளி**

நல்லநெல்லி முள்ளியது நாவுக் குரிசைதகு
மல்லல் விரிபித்த மகற்றுமதை - மெல்லத்
தலைமுழுகக் கண்குளிருந் தாவுபித்த வாந்தி
இலையிழி மேகங்களும்போ மெண்.

**பருத்தி**

பருத்தியிலை மொட்டிரண்டைப் பாலிலரைத் துண்ண
வருத்துகின்ற மேகமெல்லா மாறும்—பருத்த
விரத்த பித்தத்தோடு விரணவீக் கம்போ
மரத்த விதழ்மாதே யறை.

**பற்படாகம்**

சீதவாதச் சுரமுந் தீராத தாகமும்போம்
போதவிரு கண்குளிரும் பொய்யலவே—பூதலத்துள்
வற்பரம பயித்தியமு மாபித்தமுந் தொலையும்
பற்படா கத்தையுன்னிப் பார்.

**பாகல்**

கொற்றவனை மாட்டிக் குணத்தைப் பிறிதாக்கி
மற்றவனையும் பழித்து மற்றதனைத்—தற்றுணையாய்
மேவிவரச் செய்திடலால் மேதினியி லேபுரிய
பாவிரியி லேயறிநுட் பம்.

### பிரம்மபத்ரம்

மருந்தை முறித்துவிடும் வாய்வளறச் செய்யுந்
திருந்து பவவினஞ் சேர்க்கும்—பொருந்துபித்த
முண்டாக்கும் விந்தழிக்கும் மோது புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்.

### புங்கன்

அங்கமழ கிடும்வெற்பாம் புங்கினெய் தனக்குத்
தங்கம்போற் காந்தியது தானுண்டாந்—திங்கண்முக
மானே கரப்பான்போம் வன்சொறி யுஞ்சிரங்குந்
தானே விலகுமெனச் சாற்று.

### புளி

வேந்தனுக்கே சார்பாகி மேலிருவர்க் கும்பயனாம்
சேந்தனுக்குக் காணியிடஞ் செய்யுமே—சாந்தமிலாப்
பாம்பாக வாகம் பருவரலெய் தப்புரியும்
ஆம்பிரம் நோய்க்காகா வாம்.

### புளியாரை

பித்த மயக்கமறும் பேருலகின் மானிடர்க்கு
நித்தமருள் வாதகப நேருமோ - மெத்தெனவே
மூலக் கிராணிவிடு மூல வுதிரமறுங்
கோலப் புளியாரைக் கு.

### பேராமுட்டி

வாதசுரந் தாகம் மதலைக் கணமாந்தஞ்
சீதசுரம் பித்தமெனச் செப்பணங்கு - மோதுநம்மாற்
சேரா முட்டிக்கேகுஞ் செய்ய மடமயிலே
பேரா முட்டித்தூரைப் பேசு.

### பொடுதலை

பொடுதலையின் பேருரைத்தாற் போராமப் போக்கு
மடுதலைச்செய் காரமு மடங்குங் - கடுகிவரு
பேதியொடு சூலைநோய் பேசரிய வெண்மேகம்
வாதமும்போ மெய்யுரக்கும் வாழ்த்து.

### பொன்னாங்காணி

காசம் புவகச்சல் கருவிழிநோய் வாதமனற்
கடசும் பீலிகங்கு தாங்குரநோய் - பேசிவையா
வென்னாங்கர ணிப்படிவ மேமாஞ் செப்பலென்னை
பொன்னாங் காணிக்கொடியைப் போற்று.

### மஞ்சள்

தலைவலி நீரேற்றஞ் சளையாத மேக
முளைவுதரு பீநத்தி னூடே - வலிசுரபபு
விஞ்ச கடிவிஷமும் வீறுவிர ணங்களும்போ
மஞ்சட் கிழங்குக்கு மால்.

### மணத்தக்காளி

காய்க்குக் கபந்திருங் காரிகையே யவ்விலைக்கு
வாய்க்கிரந்தி வேக்காடு மாறுங்காண் - தீய்க்கு
குணக்கடு வற்றலுறு பிணியோர்க் காகும்
மனத்தக் காளிக்குள்ள வாறு.

### மருளக்கிழங்கு

தொண்டைக் கட்டையுந் தொலையு மகோதரமும்
பண்டைப் பல்வீக்கம் பறக்குங்காண் - கெண்டைவழி
மானே மருட்கிழங்கால் மாறுமூலங்க ளெல்லாந்
தானே பசியெழும்புந் தான்.

### மாங்காய்

மலடரிவ ரென்று வையகத்தா ரேசார்
பலரு முமையினிது பார்ப்பார் குலவுபிசின்
மாதப் புறாவெச்சம் வால்மிளகோ டுண்டுவரச்
சூதத்தா லுண்டாகுஞ் சூல்.

### மாதுளம்

வாய்நீரூறல் கசப்பு வாந்திவிக்கண் மந்தமிகக்
காய்வெப்ப நெஞ்செரிவி காதடைப்பு - வோயா
மயக்கமுந் தீர்ந்துவிடு மாதுளம் பழத்தாற்
றயக்கமனத் தேமொழியே சாற்று.

### மிளகரணை

ஐயமகற்று மசீரண வாதம் போக்குஞ்
செய்ய பித்த சூலைதனைத் தீர்க்குங்காண்—பையவரு
பீளையிரும விரைப்புப் பிசந் தொலைக்கு
நாளு மிளகரணை நன்று.

### முக்காவேளை

சீத மகற்றுந் தினவடங்குங் காந்திதரும்
வாத வினையை மடிக்குங்காண்—பேதி
கொடுக்குமதை யுண்டாக்காற் கோமளவே பித்த
மடுக்குமே மூக்குறட்டை யால்.

### முசுமுசுக்கை

கந்தம் பரவு களிச்சளியும் புண்விடமு
மந்தம் பெறுவிடமு வாந்திகளும்—மந்தம்
பெருகுரங்குக் கிச்சூரும் பித்தமு மிருக்கா
திரு குரங்குக்கை வேருக்கே.

### முருங்கை

பிஞ்சாற் றிரிதோஷம் பெரும்பவாற் போக
மிஞ்சுவிழிக்குக் குளிர்ச்சியுஞ் சேரும்—பிஞ்சிலைவெப்
பாற்றுந்தோ நஞ்சறுக்கு மவ்வேர்வாதச் சினத்தை
மாற்று முருங்கை மரம்.

### யானைநெரிஞ்சி

யானை நெருஞ்சி லதுசீ தளமாகும்
மானே யெலும்புருக்கி மாற்றுங்காண்—மேனிதனி
லுள்ள வெரிச்ச லுழலையுட் டாகமொடு
தள்ளுபித் தமும்போகுந் தான்.

### வச்சிரவல்லி

மந்தம் வயிற்றுவலி வாயுவதி சாரமுளை
சேர்ந்த மூலங்கபடமுட் செம்புனற்போக்—கோய்ந்தநடை
யெல்லா மகலு மெழுப்பு மதிகபசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

### வட்டக்கிலுகிலுப்பை

வட்டக் கிலுகிலுப்பை மாறாச் சொறிகிரந்தி
துட்டகண்ட மாலைபல சோபைநோ—வட்டமுலை
மானே விரணவகை மாந்தமுத னோயெல்லாந்
தானே பகற்றுமெனச் சாற்று.

### வல்லாரை

அக்கர நோய்மறு மகலும் வயற்றிழிவு
தக்கவிரத் தக்கடுப்புத் தானேகும்—பக்கத்தி
வெல்லாரையும் மருந்தென் றேயுரைத்து நன்மனையுள்
வல்லாரையே வளர்த்து வை.

### வாய்விளங்கம்

வாதகுரு வாயுடம்பு வாதமறுத் தப்படியே
வேதையுலோ கங்சுளிலே வேண்டினார்—பாத
விரதமுதற் கையாட வென்றா லிசையும்
வரனனையை நீமனதில் வை.

## விலாமிச்சை

மேகம் விழியெரிச்சல் வீறிரத்த பித்தமொடு
தாகமத மூர்ச்சைபித்தஞ் சார்மயக்கஞ்—சோகஞ்
சிரநோ யிழவயேகுஞ் செய்ய விலாமிச்சக்
கெரிகிரமு மின்றெறன் றிசை.

## வில்வம்

பல்லவம் பூபிஞ்சின் பழமியாவும் முறையே
வல்லவம் மேகம் மந்தமாகுன்மஞ்—செல்லுகின்ற
நோக்கமருள் வந்துநட்ட நூறுமடுத் தவர்கட்
காக்கமருள் வில்லுவத்தி லாம்.

## விளாம்

மன்னன்முத லாமுவர் மாறுபா டில்லாமல்
உன்ன நினைத்த துதவுதலால்—பன்னிச்
செபித்த வுடலாண்மை சேர்வித் திடலாற்
கபித்தமவிழ் தக்கற்ப கம்.

## விஷ்ணுகிரந்தி

செய்ய மாலின்கிராந்தி தீராத வல்லசுரத்
தைய மறுக்கு மனற்றணிக்கும்—பையவரு
காச முருமலையுங் கட்டறுக்கும் வாதத்தா
லூசலா டும்பிணி போக்கும்.

## வெட்டிவேர்

பித்தவிதாகஞ் சசிகாமிலங் கறைப்பித்த மனம்
தத்திடுகுட்டஞ் சிரநோய் க்ளமடி தாதுநட்ட
மத்தமனற்புண் டடைப்புண் வண்மூர்ச்சை வரிவிழிநோய்
வித்திரமேகத்தின் கட்டியும்போம் வெட்டி வேரினுக்கே.

## வெள்ளரி

பிஞ்சுவெள் ளரிக்காய்க்குப் பேசுதிரி தோஷம்போம்
வஞ்சியரே முற்றியகாய் வாதமாம்—நைஞ்சகனி
யுண்டாற் சத்தியமா முள்ளிருக்கு மவ்விதையைக்
கண்டாலு நீரிறங்குங் காண்.

# கடைச்சரக்கு-விளக்கம்

1. அக்கிராகாரம்: Pellitory

ஒன்றிரண்டாய்த் தட்டி சிறுக வறுத்தெடுக்க சுத்தியாகும். காலதோஷம், தாகசுரம் ஆகிய நோய்கள் நீங்கும்.

2. அதிமதுரம்: Sweet Wood, Liquorice

வாய்வேக்காடு, இருமல், எலும்புருக்கி நோய், வாத சோணிதம், காமாலை, பித்தம், வலிகளுக்கு மருந்தாகப் பயன் படுத்தப்படுகிறது,

3. அதிவிடயம் (அதிவிடையம்) Aconitum Helerophyllum

முறைக்காய்ச்சல், வாந்தி, கோழை, ரணம் இவற்றைக் குணப்படுத்தப்படுகிறது.

4. அரத்தை: Galanga

இதில் சிற்றரத்தை, பேரரத்தை என இருவகை யுண்டு.

அரத்தை நெஞ்சுக்கோழை, சீதளம், கரப்பான், இருத் ரோகம், ஈளையிருமல், மூலம், வீக்கம், தந்தநோய், வாத சோணிதம், தீச்சுத்தால் பிறந்தகபம், தந்தமூலப்பிணி இவை களை நீக்கும். பசியைத் தரும்.

5. இந்துப்பு: Rock salt

சந்திரனுப்பு, மதிகூர்மை, பனிகூர்மை, ரவியுப்பு, இந்திர சாரம் என்னும் பெயர்களை உடையது.

இந்தப் உப்பைப் பூமியின் அடியில் நிலக்கரி வெட்டிஎடுப்பது போல சிந்து தேசத்திலும், பஞ்சாப் வடமேற்கிலும் வெட்டி எடுக்கிறார்கள். உப்புகளை நீரில் கரைத்து வடித்து நீர்வற்றக் காய்ச்சி எடுக்கவேண்டும்.

மலச்சிக்கல், நரம்புசிலந்தி, அதிகதாகம், காது தொடர்பாக நோய்கள், நரம்புச்சிலந்தி, குன்மநோய்கள் ஆகியவைகுணமாகப் பயன்படுகிறது. அட்டகுன்மம், அலசம், கபபித்தம், நரம்புக் கிரந்தி, திரிதோஷம், மலவந்தம், விஷமசுக்கிலம், கரப்பான் நீங்க பயன்படுத்தப்படுகிறது.

**6 இலவங்கப்பட்டை : Chinnamon bark**

பல்வலி, வயிற்றுக்கடுப்பு, தொண்டைப்புண், பேதி, தலைவலி, இவற்றைக் குணப்படுத்தும்.

**7. இலவங்கப்பூ: Cloues**

கிராம்பு என்பது இதுவே.

காசநோய், கண்ணில் பூ, தலையில் தோன்றும் அனைத்து நோய்கள் முதலானவை நீங்கும்.

**8. ஏலம்: Cardamon**

துடி என்றும் கூறப்படும்.

பெரிய ஏலம், சின்ன ஏலம், காட்டு ஏலம், மலைஏலம் எனப் பலவகை உண்டு.

பித்தம், கபம், வாய்வேக்காடு, உஷ்ண பேதி, இருமல், நெஞ்சில் கோழை, சிலந்திவிஷம்,வாந்தி, அரைப்புக்கட்டி, ரத்த பித்தம் முதலானவை விலகப் பயன்படும்.

**9, ஓமம்: Bishops Weed**

சுண்ணாம்புத் தெளிவு நீரில் ஒரு சாமம் ஊறவைத்து எடுத்து உலர்த்தச் சுத்தியாம்.

கபத்தையும், வாதத்தையும் குறைக்கும் இயல்பு உண்டு. சீதசுரம், செரியாமாந்தம், சுவாசகாசம், சீதபேதி, ஆசனக் கடுப்பு, தந்தரேரகம், முதலான நோய்களைப்போக்கும் தன்மை வாய்ந்தது.

**10. கசகசா: Poppy seeds**

பொஸதக்காய் என்றும் கூறுவர்.

இரசதாது கிருமி, தினவு, சீதரத்தக்கழிச்சல், மலபேதி, சலதோஷம், நித்திரை பங்கம், இவற்றைப் போக்கப் பயன் படுத்தப்படும். தேகத்தில் சௌந்திரியம் தேஜசசுக்கிலம் இவை விருத்தியாகும்.

## 11 கடுகுரோகணி: Picrorrhiza Kurroa

சுரம், கபாதிக்கம், வாதகோபம், கரப்பான், சீதபேதி, இரத்தபித்தம், சூதக்கட்டு, மாந்தம், காய்ச்சல், நீர்க்கோர்வை, முதலான நோய்களைப் போக்கப் பயன்படுகிறது.

## 12. கடுக்காய் : Myroballum

அரிதகி, வனதுற்கி, தாயாள், மலமறுப்பவள், ரவிகுலி, கொடி நோய்க்குப் பண்டிதி என்பன இதன் வேறுபெயர் களாகும். இதில் ஏழுவகை உண்டு.

குமளநீரில் மூன்று நாட்கள் ஊறவைத்தெடுத்து உலர்த்த இது சுத்தியாகும்.

ஆண்மைக்குறைவு, கைகால்எரிச்சல், சீதபேதி, பல் தொடர் பான நோய்கள், மார்பு நோய், கைகால் எரிச்சல், மலச்சிக்கல், வாய்ப்புண், தொண்டைக்கம்மல், நாவறட்சி, காமாலை, வயிற்றுப்பொருமல், கோழைக்கட்டு போன்ற நோய்களை நீக்க பயன்படுகிறது.

## 13. கல்நார்: Asbestoes

கல்லுச்சவளை, சிலைநாரு, சிலைவிந்து, கல்லின்காரம் என்பனவும் கல்நாரைச் சுட்டும் பெயர்களாகும்.

கழுதைநீரில் மூன்றுநேரம் எரித்தெடுக்க அல்லது பசுங் கோமியத்தில் பத்து நாட்கள் ஊற வைத்து எடுக்க அல்லது முள்ளங்கிச்சாற்றில் இரண்டுநாள் ஊறவைத்து எடுக்கச் சுத்தி யாம்.

பித்தகாசம், வாதரோகம், பற்குடைச்சல், பல்லரணை, நீர்க்குறி, எரிச்சல், பித்தவாந்தி, முத்திராத்தம், அஜீரணம், பித்த தாகம் முதலான நோய்கள் நீங்கப் பயன்படுகிறது.

## 14. கல்மதம்: Rock Alum

மலையின்துடக்கு, சிலாமதம், சிலாரத்தம் நஞ்சு என்னும் பெயர்களும் இதற்கு உண்டு.

ஆட்டமுரி அல்லது பசுவின் அமுரியில் ஒரு மணி நேரம் எரித் தெடுத்துக் கழுவி உலர்த்தச் சுத்தியாம்.

அரையாப்பு ரோகம், தந்துமேகம், மூத்திரபிந்து, வாத வஸ்தி, சதையடைப்பு, வாதப்பிரமியம், தாதுநஷ்டம் முதலானவை நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

## 15. கற்பூரம்: Camphor

சலதோஷம், சன்னி, சுரவகைகள் மாந்தம் போன்ற வற்றிற்கு மருந்தாகிறது.

## 16. கஸ்தூரி: The musk

கஸ்தூரி கரிகை, திலகை, குளுந்தை, பிண்டகை, நாசகை, என ஐவகைப்படும். இவற்றில் கரிகை சிகப்பு நிறமும், திலகை எள்ளின் உருவமும், குளுந்தை கொள்ளினது வடிவமும், பிண்டகை கட்டி கட்டியாகவும், நாசகை சிறிய பெரிய உருண்டைகளாகவும் இருக்கும்.

கஸ்தூரிக்குத் தலை நோய், கபந்தமூலம், சன்னி சுரங்கள் போகும். வசியம். தேஜசு, சவுக்கியம், மாந்தர்க்கு நாதவிருத்தி, வன்மை இவை உண்டாகும்.

## 17. கிராம்பு: Cloves

சின்னி, பரங்கிச்சி, கடலடிபுஷ்பம், வன்னி, தாகசாந்தி என்னும் வேறு பெயர்களை உடையது.

மொட்டுப்போல் உள்ள பூவை எடுத்தெறியவும்.

காசநோய், கண்ணில் பூ, தலையில் தோன்றும் அனைத்து நோய்கள் முதலானவை நீங்கும்.

## 18. குங்குமப்பூ: Saffron

சிறுக வறுத்தெடுக்கச் சுத்தியாம்.

சீரணசுக்கிலம், நாவறட்சி, குடல்விருத்தி, மேகநீர், கீல் பிடிப்பு, கபாத்திக்கம், அதிருட்சை, பயித்தியம், விகுணவாதம், மண்டைவலி, கண்ணோவு, வாந்தி, சலபீனிசம் முதலானவை அனைத்தும் நீங்கப் பயன்படுகிறது.

## 19. கெந்தி Brim Stone

இரும்புப் பாத்திரத்தில் பசுநெய் விட்டு கெந்தியிட்டு உருக்கி பசும்பாலில் சாய்க்கவும். இப்படி 10 முறை செய்ய அதிக சுத்தியாகும். வேம்பிலைச் சாற்றில் ஏழுமுறை உருக்கிச் சாய்க்கவும் சுத்தியாகும்.

## 20. கொள்ளு Horse Gram

நறிய கொள்ளுக்கு பீசவாய்வும், பித்தகுன்மம், பயித்தியமும் உண்டாகும். வாதவலி, நீரேற்றம், குளிச்சுரம் இவை போகும்.

கொள்ளும் அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியைக் குடித்தால் அதிகபசி, பலம் வீரியவிருத்தி ஆகியவை உண்டாகும்.

## 21. கோரோசனை : Gall Stone

ஆயுர்வேதம் இருவகை கோரோசனைகளைப் பற்றிக் கூறுகிறது. இது மான் வயிற்றிலும் பசுவின் வயிற்றிலும் பிறப்பதாதும்.

மேகநீர், மேகரூட்சை, பித்த கோபம், உள்மாந்தம், சிசுக்களுக்குண்டாகின்ற கணமாந்தம் முதலிய ரோகங்கள், சிலேஷ்மாதிக்கம் மசூரிகைப்புண்கள் ஆகியவை நீங்கும்.

## 22. கோஷ்டம் : Cortos Speciansas

குஷ்ட நோய்க்கு இது அடிப்படை மருந்து. வெள்ளை வெட்டை, தாதுநஷ்டம், பித்தம், நடுக்கம், விஷம் முதலான நோய்களைக் குணப்படுத்தும்.

## 23. சந்தனம் : Sandal wood

மூன்று வகையான சந்தனங்கள் காணக் கிடைக்கின்றன. அவை சிவப்பு, மஞ்சள், வெள்ளை என்பனவாகும். இவற்றுள் சிவப்பு மருந்துகளுக்கு உத்தமம். மஞ்சள் மத்திபம், வெள்ளை அதமமாகும்.

குளிர்ச்சியும் வெப்பமும் உள்ள குற்றமற்ற சந்தனம் திரிதோஷம், சித்தபிரமை, ரூட்சை, ஒழுக்குபிரமேகம், நாவறட்சி, உட்சூடு, நமைச்சல் ஆகியவற்றைப் போக்கும். சரீரத்திற்குப் பலமுண்டாகும்.

## 24. சாதிக்காய் : Nutmeg

கப்பற்றுறைச்சி, காயலாகிரி, உறச்சி, சிறுகாய்க்கு சத்தி, நல்வாருதி, வோரக்குடிச்சி என்னும் பலபெயர்களை உடையது.

மேல்தோலைச் சீவி நெய்யில் வறுத்தெடுக்க சுத்தியாகும். இருமல், மயக்கம், பித்தம், மேகநோய், உஷ்ணசம்பந்தமான நோய்கள், தலைவலி, இரைப்பு ஆகிய வியாதிகள் போகும்.

## 25. சாதிபத்திரி : Arillus of the Nutmeg

பொற்பூ, லாகிரி, அத்திரி, வாணி, காமச்செல்வி என்பன இதன் வேறுபெயர்கள்

மேகநோய்வலி, உஷ்ணசம்பந்தமான நோய்கள், தலைவலி, இரைப்பு போன்ற நோய்கள் நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

**26. சாதிலிங்கம் : Vermilion**

அதிகாரம், ரூட்சைசன்னிபாதம், அற்புதபுண், அதிமூத்திரம் காணாவிஷம், இருமல், கரப்பான், சிங்கு, மண்டலகுஷ்டம், வாதநோய், மூலரோகங்கள் முதலான நோய்கள் நீங்கப் பயன் படும்.

**27. சாம்பிராணி : Benzoinum**

வேம்பைப் போல் கசப்புள்ள சாம்பிராணி வாதகபம், விழி நோய், நீங்காத சிரநோய், ஜலபீநிசம் இவற்றை விலக்கும்.

**28. சீரகம் : Cuminum Cyminum**

வாசனை கிளம்ப வறுத்தெடுக்க வேண்டும்.
தலைகிறுகிறுப்பு, மயக்கம், பசியின்மை இவற்றைப் போக்கும்.

**29. சுக்கு : Dry Ginger**

இது ஒரு கடைச்சரக்கு. நன்றாகக் காய்ந்த இஞ்சியே சுக்கு எனப்படும். சுக்கை மேல்தோல் நீக்கிச்சுண்ண நீரில் ஒருமணி நேரம் ஊறவைத்து எடுத்துக்கொள்ள சுத்தியாகும்.

செரியாமை, மார்பெரிச்சல், புளியேப்பம், இரைப்பு, காசம், நீர்ப்பீனிசம், நீரேற்றம், கழிச்சல், வாதகுன்மம், வாதநோய், வயிற்றுப் பொருமல், காதுகுத்தல் முதலான நோய்களை இது குணப்படுத்தும்.

**30. செவியம் : Aye Piper Chava, Pepper Root**

முத்திருக்கன் செவியம், சவ்வியம் என்பனவும் இதன் பெயர்களே. மிளகின் வேரே செவ்வியம் என்பது.

குத்தல், அரோகம், சன்னிபாதசுரம், நீடித்த காசம், கோழை, பயித்தியம், சுரசாதம், தொண்டைநோய், எலும்பைப் பற்றி ஏறுகின்ற தாவரவிஷம் இவை நீங்கப் பயன்படும்.

**31. தக்கோலம் : Takkolam**

உயர்சீவி, கேசி, மோகசத்தி, நல்வாகி, அஷ்டசித்தினி, தக்கோலப்பொட்டு என்பனவும் இதன் பெயர்களே.

பாண்டுநோய், சுரம், இருவிதமான வாதங்கள் ஆகிய வற்றைப் போக்கும். பலமும், வீரியவிருத்தியும், மலக்கட்டும் உண்டாம்.

## 32. தங்கம் : Gold

பசுங்குரு, பாருக்குநாயகன் என்பன இதன்வேறு பெயர்கள்.

செம்மண் கவசம் செய்து பழுக்கக்காய்ச்சி எடுக்க சுத்தி யாகும்.

தாவரவிஷம், தேஜசு, மருங்கல், சன்னிபாதம், பித்தசயம், தேகவெப்பு, முதிர்ந்த கபதோஷம், விழிநோய், கோழைக்கட்டு முதலானவை நீங்கும்.

## 33. தாளிசம்: Flacortia Cataphracta

இதனைத் தாளிசபத்திரி என்றும் வழங்குவர்.

வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

பூனிசம், கிளிரோதம், நாள்சென்ற இருமல், இரைப்பு, வாந்தி, வாய்வு, ஓக்காளம், விக்கல், காய்ச்சல், சயம் போன்ற வியாதிகள் நீங்கப் பயன்படுத்தப்படுகிறது.

## 34. திம்பிலி: Piper Root

சித்திர மூலக்கியாடித்தில் அரைநாள் ஊறவைத்து உலர்த்த இது சுத்தியாகும்.

தொண்டைவலி, தலைவலி, மேகக்கட்டி, கபநோய், குன்மம், காய்ச்சல் முதலான நோய்களை விலக்கும்.

## 35. திரிகடுகு: Tirikaduku

சுக்கு, மிளகு, திப்பிலி இவை மூன்றும் சேர்ந்ததுதான் திரிகடுகு.

வாதங்கள், குதாங்கரம், கர்ண ரோகம், பாண்டு, சிரஸ் தாபம், தாவரவிஷம், கபபித்தம், சிக்வாகண்டம், சர்ப்பவிஷம், தேள்விஷம், கோழை, காசம், அரோசகம், அவஸ்மாரம் அற்புத விரணம், நாடிவிரணம் முதலான நோய்களைப் போக்கப் பயன் படுகிறது.

**36. திரிபாலதி:** Terminaliachebula, Phyllanthusemblica, Terminaliabellerica

இதனால், வெள்ளைக்குட்டம், புகையிருமல், குன்மம் பாண்டு, மூர்ச்சை, வயிற்றுநோய் போன்றவை குணமாகும் (கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்)

**37. தேன் :** Honey

சுடவைத்து வடித்துக் கொள்ள சுத்தியாகும்.

பித்த அரோசகம், வாந்தி நீங்கவும், நெஞ்சில் கோழை, கபதோஷம் முதலானநோய்கள் நீங்கவும் பயன்படுத்தப்படுகிறது.

**38. நன்னாரி :** Indian Sarasaparilla, Hemidusmus Indicus

நன்னாரிவேர் அதிகச்சூடு, மூலக்கொதிப்பு முதலானவற்றிற்கும் குழந்தைகள் கணச்சூடு, கிரந்தி, வாய்நீர்சுரப்பி, நீரேற்றம், முதலான நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

**39. நாவி:** Indian Aconite Monks Hood

வெள்ளாட்டு மூத்திரம் அல்லது கோ மூத்திரத்தில் வேக வைத்து எடுக்க சுத்தியாகும். சுத்தி செய்த நாவியினால் அசீரணம் நீங்கும். சலதோஷம் வாதச்கடுப்பு, குண்டம் போன்றவை குணமாகும்.

**40. பச்சைக் கற்பூரம்:** Crude Camphor

பூரம், சந்திரன், கதலிப்பூ, ஊரங்கள், நீராக்கி, பார்மகள், சாரி என்பன இதனைக் குறிக்கும் சொற்களே.

பச்சைக் கற்பூர வகையில் ஈசன், வீமன், பூதாச்சிறையன் என மூவிதம் உண்டு.

பீனிசம், கண்வலி, நாசிநோய், மயக்கம், தாகநோய் ஆகியவை நீங்கும். வசியத்துக்குரிய பொருள்.

**41. பயிறு:** Pulse

இது பனிக்காலத்தில் விளையும் பயிறு. பனியைக் கொண்டு முதிரும் பயிறு.

பித்தம், உஷ்ணம் இவற்றை நீங்கும். வாயுவை உண்டாக்கும்,

**42. பன்னீர் : Rose Water**

சுகசன்னி, சன்னிபாதங்கள், திரிதோஷங்கள் முதலானவை விலகும்.

**43. பிண்ணாக்கு : Oil—Cake**

மாலவகம் என்றும் கூறப்படும்.

எள், தேங்காய், கடலை, முத்து போன்ற எண்ணெய் வித்துக்களின் எண்ணெய் எடுக்கப்பட்ட சக்கை.

**44. மாசிக்காய் : Gall Nut**

பித்தசிசுவாகண்டம், மாறாதஉட்சூடு, சிசுக்களின் கணச்சூடு, பலமேகங்கள் முதலானவை நீங்கும்.

**45. மாணிக்கம் : Ruby**

செவ்வாய்விந்து, கனல், வாணிச்சி மேனி என்னும் பல பெயர்களை உடையது இது.

நவரத்தினங்களில் ஒன்று.

குதிரையின் மூத்திரத்தில் மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து 4ஆம் நாள் காயவைத்துப் பிறகு நீரில் கழுவி எடுக்கவும்.

சரீராதி சுரங்கள், சன்னிபாத தோஷங்கள், திரிதோஷ தாகரோகம், வாதபிரமேகம், கண்ணோய் முதலான நோய் ஒழியும். வசீகரம் உண்டாகும்.

**46. மிளகு : Pepper Nigrum**

பாதமறுக்கி, சிற்பரி, நித்திரைபோக்கி, காதம்பரி, மலத்தை போக்கி, கோபத்தி என்னும் பெயர்களை உடையது.

புளித்தத் தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து எடுத்துக் கொள்ள, அல்லது சிறுதீயில் வாசனை கிளம்ப வறுத்தெடுக்கச் சுத்தியாகும்.

விஷம் முரிக்கவும், வாதபித்தசுரம், தலைகனத்தல், கால்கை அயர்வு, சீதளம், கட்டி, இவற்றைப் போக்கவும் பயன்படுகிறது.

**47. வசம்பு : White Sweet Flal**

இதனைப் பிள்ளை வளர்த்தி என்றே கூறுவர்.

கடுமையான வாந்தி, மூளைநோய், வயிற்றில் கிருமி, இரணம், தொண்டை நோய், வீக்கம், குன்மநோய் இவை நீங்கப் பயன்படுகிறது.

**48. வட்டத்திரும்பி :** Clssampelos Pereia Velvet Leaf

இது விஷம், வாத தோஷம், பித்தம், சிரங்கு போன்ற வற்றைப் போக்கப் பயன்படுத்தப்படுகிறது.

**49. வாய்விளங்கும் :** Embellia Ribes

வரணணை என்றும் வழங்குவர்.

வாதரோகம், பாண்டு, குட்டம், குன்மம், அதிதூலம், வாயு, தாவரவிஷம், சிரசு, நாசு, வயிறு இவைகளில் தோன்றும் பிணி முதலான அனைத்தும் நீங்கும்.

**50. வீரம் :** Veeram

ஆதிரௌத்திரன், வெள்ளைசெந்தூரம், வாதிகெற்பம், வகாரத்தலைவன், பூவிந்து, சேவகன் போன்ற பலபெயர்கள் இதற்கு உரியவை.

முட்டையின் வெள்ளைக் கருவில் ஒரு நாள் ஊறவைக்கச் சுத்தியாகும்.

**51. வெட்பாலரிசி :** Whriti Tinctoria

பயித்திய வாத தொந்தம், கடுவன், குடல் விர்த்தி ரோகம், வயிற்றுப்பொருமல் இவற்றைப் போக்கப் பயன்படுகிறது.

**52. வெல்லம் :** Jaggery

நல்ல வெல்லம் பித்த குன்மத்தை நீக்கும். கபக்கட்டு, மலா சயக்கிருமி, மதுமேகம் இவற்றை உண்டாக்கும்.

**53. வெள்ளிலோகம் :** Silver

பரசி, எருமை நாக்கு, தனிக்கோட்டை ராசன், மதி, இரசிதம், தாரம் என்பன இதன் வேறுபெயர்கள்.

வெள்ளியை மெல்லிய தகடாய்த் தட்டிக்கொண்டு காட்டுப் பாகன் கிழங்கின் சாற்றின் ஏழுதடவை உருக்கிக் காய்ச்சச் சுத்தியாகும்.

நரை, முப்பு இவற்றைக் குறைத்து வலிமையைத் தரும். சுண்வியாதி, ஈளை, வாதப்பிடிப்பு போன்ற சோளாறுகளுக்கு இது பயனுள்ளது.

# கடைச்சரக்கின் பயன்-சான்றுகள்

### அக்கிராகாரம்

அக்கார கார மதன்பே ருரைத்தக்கா
லுக்கிர காலத்தோட மோடுங்காண்—முக்கியமாய்
கொண்டாற் சருமூலங் கொம்பனையே தாகசுரங்
கண்டாற் பயந்தோடுங் காண்.

### அதிவிடயம்

அதிவிடயஞ் சருக்கரார்ப் புதநோய் வெப்பு
கொதிமருவு பேதியொடு கோழை—யெதிர்வாந்தி
யென்றுரைக்கு நோய்க்கட்ட மில்லா தகற்றிவிடுங்
குன்றைநிகர் முலையாய்க் கூறு.

### அரத்தை

தொண்டையிற் கட்டுங்கபத்தை தூரத் துரத்திவிடும்
பண்டைச் சீதத்தைப் பறக்கடிக்குங்—கெண்டைவிழி
